# தமிழர் வாழ்வு

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்
நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம்
சென்னை-102

வள்ளியம்மாள் கல்வி அறம்
F. 40, முதல் பெருந் தெரு
அண்ணாநகர் கிழக்கு
சென்னை-102

# தமிழர் வாழ்வு

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
நிறுவனர், வள்ளியம்மாள் கல்வி அறம்
சென்னை-102

வள்ளியம்மாள் கல்வி அறம்
F. 40, முதல் பெருந் தெரு
அண்ணாநகர் கிழக்கு
சென்னை-102

உரிமைப் பதிப்பு : ஏப்ரல், 1990.
பக்கங்கள் : 180

**விலை : ரூபாய் 16-00**

உரிமை ஆசிரியருக்கே

'விரைவிடை இவரும் நினைப் பிறவாமை
வேண்டுநர் வேண்டுக; மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்'

—சோணசைல மாலை

மாருதி பிரஸ்,
173 பீட்டர்ஸ்ரோடு,
சென்னை-600 014.

விற்பனை :

**பாரி நிலையம்**
**184, பிரகாசம் சாலை, (பிராட்வே)**
**சென்னை-1**

# முன்னுரை

'பசித்தவன் பழங்கணக்கைப் பார்த்தான்' என்பது பழமொழி; அது உண்மையுங்கூட. ஆம்! எனக்குப் பசிதான். தமிழே என் வாழ்வாகத் தமிழ்ப்பணி புரிந்த நான், கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அன்னை வள்ளியம்மாள் பெயரால் அறம் அமைத்து, கல்வித் தொண்டு செய்து வருகின்ற நிலையில், தமிழ்ப் பசியுற்று, தமிழுக்கு ஏதேனும் செய்யவேண்டும் என எண்ணியதுண்டு. எனினும் அறப் பணியிலே அல்லும் பகலும் உழலவேண்டிய நிலையில் அதை நினைக்கக்கூட முடியவில்லை. எத்தனை எத்தனை இடர்கள்—இடர்ப்பாடுகள் —தொல்லைகள்—கொடுமைகள் —நினைக்கமுடியவில்லை. அத்தனையும் ஏற்று—மெல்ல மெல்லக் கடந்து, கடமை வழியே கருத்திருத்தி, இன்று சென்னை அண்ணாநகரில் ஓரளவு கல்வித் தொண்டினைச் செய்துவருகின்றேன். குழந்தைகள் பள்ளியாய்—ஆரம்பப் பள்ளியாய் — உயர்நிலைப்பள்ளியாய் — மேல்நிலைப் பள்ளியாய்—பட்டப்படிப்புடைக் கல்லூரியாய் வளர்ந்து— இன்னும் முதுகலை பயிலும் கல்லூரியாய் வளர என்னை மறந்து செயலாற்ற வேண்டியுள்ளது. செயல்கண்டு நல்லவர் மகிழ்வர்—வாழ்த்துவர். அல்லவர் புழுங்குவர்—பொறாமைப் படுவர். அதனால் விளையும் தொல்லைகள் பல. இறையருளாலும் அன்னையின் அருளாசியாலும் 'தமிழாசிரியனா'கிய நான் ஓரளவு முன்னேற்றம் காண்கிறேன். எனினும் அன்னைத் தமிழுக்கு முன்னைப்போல் தொண்டாற்றமுடிய வில்லையே—நூலாரம் சூட்ட முடிய வில்லையே என எண்ணி எண்ணி ஏங்கியதும் உண்டு.

அந்த நிலையில்தான் இன்று இந்த நூல் வெளி வருகின்றது. பசித்தவன் நிலையிலே பழைய காகிதக் குப்பைகளைக் கிளறினேன். எங்கெங்கோ எது எதற்கோ எழுதிய கட்டுரைகள் கிடைத்தன. சில மங்கியிருந்தன—சில கிழிந்திருந்தன—இரண்டொன்று புதியனவாக இருந்தன. என் கருத்தினுக்கு அரண் செய்யும் வகையில் என் மாணவர் சிலர் இவற்றை நூலாக்கலாமே என்றனர். எனவே உள்ள வற்றுள் சிலவற்றை எடுத்துப் பார்த்தேன். இருபத்தைந்து சிறு கட்டுரைகளை 'ஓங்குக உலகம்' என்ற பெயரில் தொகுத்து வெளியிடமுயன்றேன். பெரிய கட்டுரைகளுள் இருபது எடுத்து ஒரு நூலாக்க நினைத்தேன். அவை அனைத்தையும் ஒருநூலாக்கினால் நானூறு பக்கங்களுக்கு மேலாகி வாங்குவோர் கையையும் பையையும் வருத்தும் என்பதால், முதல் எட்டுக் கட்டுரைகளையே இங்கு வெளியிடு கின்றேன். இருபது கட்டுரைகளையும் 'சொல்விளக்கம்' 'அரசியலும் வரலாறும்', 'சமுதாயம்', 'சமயம்', 'இலக்கியம்' என்று ஐந்து பகுதிகளாகப் பிரித்து வெளியிட நினைத்தேன். அவற்றுள் முதல் இரண்டு பகுதிகளே—ஒன்பது கட்டுரைகளே—இந்நூலில் இடம் பெறுகின்றன. இவையன்றி இன்னும் வானொலிப் பேச்சு முதலியன 200 பக்க அளவில் மற்றொரு நூலாக வரலாம்.

இக்கட்டுரைகள் அனைத்தும்—இரண்டு தலைப்புக்களி லும் தமிழர் வாழ்வு நலம் பற்றியே—அவர்தம் பழங்கால வாழ்வு — வரலாறு — வற்றாவளம் — சமயம்—இலக்கியம் பற்றியே அமைவதால் இந்நூலுக்குத் தமிழர் வாழ்வு எனப் பெயரிட்டேன். அடுத்த பன்னிரண்டு கட்டுரைகளும் 'தாய்மை' என்ற தலைப்பினை உடைய நூலாக உடன் வெளிவருகிறது.

தமிழர் வாழ்வு தொன்மையது. வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் நின்று காணின், அத்தகைய இலக்கணம் மலர்வதற்கு எத்தனை

எத்தனை இலக்கியங்கள், வாழ்க்கை வரலாறுகள் இருந்திருக்க வேண்டும் என்று ஓரளவு உணரமுடியும். அந்த நெடுங்காலந் தொட்டு இன்றுவரை — குமரிக் கண்டக் காலம் தொட்டு இருபதாம் நூற்றாண்டு இறுதிவரை வாழும் தமிழர்தம் வாழ்வை வரையறுக்க முடியாதுதான். எனினும் அக்கால முதல் தோன்றி வளர்ந்து - வாழ்ந்து வரும் இலக்கியங்களும் வரலாற்று மூலங்களும், கலை உருவில் பழம் பெருமை பாடும் கற்களும், இயற்கை, நெறிகளும் பிறவும் தமிழர் வாழ்வை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன அல்லவோ! எனவே அவற்றின் துணை கொண்டே தமிழர் வாழ்வை நான் காட்ட நினைத்தேன்.

தமிழ் செவ்வியமொழி—சொல்லாற்றலும் பொருளாழமும் கொண்டமொழி—வளர்ந்த உலகமொழிகளும் காணாவகை யில் சொல்லும் பொருளும் சிறந்தமொழி. அந்த உண்மை யினை விளக்குவதற்கெனவே பெண்மை, அறிவு, பண் போன்ற ஒரு சில சொற்களை எடுத்து ஆழங்காண முயன்றேன். முற்றும் கண்டுவிட்டேன் என்று சொல்ல முடியாது. இப்படியே அறன், வாய்மை போன்றவற்றிற்கும் உரைவளம் கண்டு விளக்கமுயன்றுள்ளேன். வாய்ப்புளதேல் பின்வரும் நூல்களில் இடம் பெறலாம்.

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும்' என்று தமிழ்க் கவிஞன் பாரதிவிண்ட வேண்டுகோளைத் தமிழ்ச் சமுதாயம் ஏற்றுச் செயல்பட வில்லை. 1985இல் உலகம் சுற்றிய நான் உலகெங்கணும் உள்ள தமிழார்வத்தை நேரில்கண்டவன். (ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் என்ற நூலில் விளக்கமாக எழுதியுள்ளேன்.) ஓரிரு இடங்களில், நன்றி கெட்ட தமிழகம் 'தாய்க் கொலைச் சால்புடைத்தென்பாரும் உண்டு' என்றபடி தமிழைக் கொலை செய்தாலும் இங்கெலாம் மங்காது தமிழ் வாழும் என மகிழ்கின்றேன் எனக் குறிப்பிட்டேன். ஆம்! தமிழகம் உலகில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் வாழ்வு—தமிழ்

நூல்—தமிழ் ஆசிரியர்—தமிழ் வரலாறு போன்றவற்றைத் தரவேண்டும். அரசுகள் வந்துவந்து செல்கின்றன. விழாக்கள் பலப்பல நடைபெறுகின்றன. ஆயினும் தமிழ் மண்ணில் தமிழை இரண்டாவது மொழியாய்—தமிழனை இரண்டாந் தர மனிதனாய் நினைக்கும்—செயல்படும் நிலை உள்ளது. இது 'தமிழர் வாழ்வு' ஆகாது. தமிழக அரசும் மக்களும் தொல்காப்பியர்—சங்கப் புலவர் கண்ட தூய தமிழர் வாழ்வு தமிழகத்திலும் தரணியிலும் உயர உடனே செயலாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் தமிழ் கட்டாயமாக்கப்பெறல் வேண்டும்.

இந்த நூலில் உள்ள எட்டுக் கட்டுரைகளும் தமிழர் வாழ்வினைப் பலவகையில் விளக்குவனவே. எனவே இந்நூல் வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்துக்கு, பழங்காலத் தமிழ் சமுதாய வாழ்வைக்காட்டி, அது சிறக்க வழிவகுக்கும் என எண்ணி அமைகின்றேன்

இந்நூல் வெளிவரும்போது அச்சுப்பிழைகளை ஒப்பு நோக்கித் திருத்தி உதவிய பச்சையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் இரா. மாயாண்டி அவர்களுக்கு என் நன்றி உரித்து.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30
14-4-90

அன்புடன்,
**அ.மு. பரமசிவானந்தம்**

# உள்ளே...


பக்கம்

**I சொல் விளக்கம்**

1. மஞ்சு விரட்டு —1989 ... 9
இலண்டன் மனித இன ஆய்வாளர்
(Dr. Michael yorke—Anthropologist)
அவர்களுக்காக எழுதியது
2. எது பெண்மை? —1979 ... 20
3. எது பண்? 22-12-89 ... 44
தமிழிசைச் சங்கப் பண்ணாராய்ச்சித்
தொடக்க உரை
4. எது அறிவு? ... 67
மதுரை—பழநியப்பர் பவளவிழா மலர்
5. எது உரைநடை? ... 84

**II அரசியலும் வரலாறும்**

6. உலக நாடுகளில் தமிழர் ... 95
உலகப் பயணம் —1985
7. அரசியல்—வள்ளுவமும் சங்ககாலமும் ... 111
மதுரைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவு
8. பல்லவர் கால வரலாறு ... 131
தொல்பொருள் ஆய்வு மாநாட்டுச்
சொற்பொழிவு
9. உலகத்தோற்றமும் லெமூரியா நாடும் ... 169
மொரிசியஸ் உலகத்தமிழ் மாநாட்டுத்
தலைமை உரை —1989

எனது வேட்கை—கவிதை ... 179
1939-இல் தமிழ்க் கலையில் வந்தது.

# 1. சொல் விளக்கம்

## 1. மஞ்சு விரட்டு

தமிழ்நாட்டில் இன்று 'மஞ்சு விரட்டு' என்றும் 'சல்லிக்கட்டு' என்றும் அழைக்கப்பெறும் 'மாடுபிடி சண்டை' வேடிக்கைக்காகவும் விநோதமாகவும்—ஏன்?—சில சமயங்கள் ஒன்றுக்கும் பயன் இல்லாத வீண்வினை யாகவும் நடைபெறுகின்றது. இன்று தமிழகத்தின் தென் பகுதியில்தான் இது அதிகமாக நடைபெறுகின்றது. தமிழ்நாட்டுச் சிறந்த இயற்கையோடு கலந்த வழிபாடான பொங்கல் விழாவோடு இந்த 'மஞ்சு விரட்டு' இணைக்கப் பெறுகின்றது. மாசு அல்லது தூசு போக்கும் போகி விழா, பின் இன்பம் பொங்க வழி காணும் பொங்கல் விழா என அமைய, அடுத்து மாட்டுப் பொங்கலும் கன்றுப் (காணும்) பொங்கலும் வருகின்றன. அந்த மாட்டுப் பொங்கல் நாளில்தான் இந்தச் சல்லிக்கட்டு விழா நடை பெறுகிறது. சிலவிடங்களில் காணும் பொங்கலன்றும் நடைபெறும்.

நல்ல காளை மாடுகளை அன்று குளிப்பாட்டி வேப்பிலை—மாவிலை முதலியன கட்டி, மாலையும் இட்டு, கொம்புகளைக் கூர்மையாக்கி, வண்ணமிட்டு ஒரு வட்ட எல்லையில் விட்டு, அதை அடக்க வரும் 'வீரர்களை' அழைப்பார்கள். அம்மாடுகளின் கொம்புகளில் காசுகளைக் கட்டி, அடக்குபவர் அதை எடுத்துக் கொள்ளலாம் என்பர். மாடுகள் நன்கு காக்கப் பெற்றனவாய் எந்த வேலைகளிலும் பழக்கப்படாதனவாய், இச் சல்லிக் கட்டுக்கே ஆண்டு தோறும் தயார் செய்யத் தக்கனவாகவே பெரும்பாலும் அமையும். எனவே அக்கொழுத்த மாடுகளை அடக்குவது கடினம்தான்.

ஆயினும் அந்த அடக்கும்—அல்லது சில சமயம் உயிரே அடங்கிப் போகும் அந்த வேடிக்கையினைக் காண நூற்றுக்கணக்கில்—சிலவிடங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவர். மாடுகளின் கொம்புகளில் உள்ள சில காசுகளை எடுப்பதற்கு மட்டுமன்றித் தம் வீரத்தைக் காட்டவும் சிலர் முன் வருவர்.

சுற்று வேலியிட்டு, அந்த எல்லையைக் கடவாத வகையில் பல கொழுத்த அலங்கரித்த மாடுகளை விட்டு அக்காளைகளைப் பாய்ந்து அடக்க மனிதக் காளை களையும் உள்ளே விடுவர். ஒரு சிலரே அவற்றொடு ஈடு கொடுத்து வெற்றி காண்பார்கள். சிலர் இந்த வினையில் உயிர் இழப்பதும் உண்டு; சிலர் படுகாயம் அடைவதும் உண்டு. சிலர் சிறுசிறு காயங்களுடன் தப்புவர். மாடுகளோ வேலையற்றுக் கொழுத்தவை; இவர்கள் தம் வாழ்வின் பல பணிகளுக்கு இடையில் இந்தப் பழக்கத் தையும் கொண்டவர். இரு நிலையில் எங்கே ஒருமை காண முடியும். ஆனால் கூடியுள்ள மக்களோ தம் மகிழ்ச்சிக்காக அவர்களைத் தூண்டிவிடுவர். மாடுகளுக் குரியவர்கள் அவற்றை உசுப்பி விடுவர். ஒரே மக்கள் ஆரவாரம்—கூச்சல்—குழப்பம்—வெடி—வேட்டு—பறை முதலிய சத்தங்கள்; இவற்றுக்கிடையில் மாடுகள் மேலும் மூர்க்கமாகி வருகிறவர்களைத் தாக்கும். சுற்றியிருக் கின்ற மக்களோ அவர்கள் வருத்தமறியாது மேலும் கூச்சலிடுவர்—ஆர்ப்பரிப்பர். மாட்டுச் சண்டை மும்மர மாகும். முடிவில் ஒரு சிலரே சில காயங்களுடன் வெற்றி எல்லையை எட்டுவர். மற்றவர் நிலை பற்றி நான் முன்னமே கூறிவிட்டேன்.

'சல்லிக்கட்டு' அல்லது 'மஞ்சு விரட்டு' என்ற பெயர் இதற்கு எப்படி வந்தது? 'சல்லிக்கட்டு' என்பது பிற்காலப் பெயர். இன்றும் கிராமங்களில் மாட்டுப் பொங்கலன்று மாடுகளை அலங்கரித்துக் கொம்பிலும் கழுத்திலும்

மணிகள் அணிவிப்பதோடு, தென்னை, பனை ஓலைகளால் (சல்லி சல்லியாகக் கிழித்து) அழகாகச் செய்யப் பெற்ற தொங்கும் சல்லிகளை அணிவித்து மகிழ்வார். அவ் வோலைச் சல்லிகள் பல வண்ணங்களால் ஆகியவை. மாடு களுக்கு மட்டுமன்றி அவை தங்கும்தொழுவங்கள் முற்றிலும் இந்தத் தென்னை, பனைச் சல்லிகளைக் கட்டி அழகாகப் போற்றுவார்கள். அவற்றைக் கட்டி, அம் மாடுகளுக்குப் பொங்கலிட்டுப் படைப்பதாலேயே இந்த விழாவிற்குச் 'சல்லிக் கட்டு' என்ற பெயர் வந்தது. ஆயினும் இந்த அழகு—ஒப்பனை ஆகியவற்றிற்கும் காளைகள் போருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஆம்! அங்கே போருக்கு நிறுத்தப்பெறும் காளைகளும் இவ்வாறும் இதற்கு மேலும் அழகு செய்யப்பெறும். ஆனால் போராட்டம் எங்கோ ஒரு சில இடங்களில்தான் நடக்கும்.

'மஞ்சி விரட்டு' என்பதே பழைய பெயர். 'மஞ்சு' என்பதற்கு அழகு, ஆபரணம், மேகம், பனி, வலிமை, இளமை போன்ற பொருள்களும் இன்னும் சில பொருள் களும் உள்ளன. 'மஞ்சு' என்பதை 'வலிமை' என்ற பொருளில் 'மஞ்சடங்கிய மார்பகம்' (கம்பர்—இராவணன் வதைப்படலம் 168) கம்பர் எடுத்தாண்டுள்ளார். இப்படி வலிமை, அழகு, மேகம் போன்ற பொருள்களில் பழங் காலப் புலவர்கள் இச்சொல்லை எடுத்தாண்டுள்ளனர். பிங்கலம், திவாகரம் போன்றவை இப்பொருள்கள் உள்ளமையைக் காட்டும். 'விரட்டல்' என்பது உந்துதல், செலுத்துதல், விரைவுபடுத்துதல் என்று பல பொருள்களில் வழங்கப்பெறும். எனவே 'மஞ்சு விரட்டல்' என்பது வலிமையை அல்லது இளமையை உந்துதல்—முடுக்குதல் என்று பொருள்படும். 'மைந்து' என வலிமையைக் குறிக்கும் சொல்லே இந்தத் தொடரில் 'மஞ்சு' என மருவி வந்தது எனக் கூறுவாருமுளர். எனினும், 'மஞ்சு' என்பது மேகத்தைக் குறிக்கும் பொருளிலேயே வழங்கப்

பட்டிருக்கலாம் என்பது, பழைய இலக்கியங்களை— சிறப்பாக முல்லைநிலப் பாடல்களைக் காண்போர்க்கு விளங்கும். 'மஞ்சு'வாகிய மேகம் வரக் கண்டு உளங் களித்துத் தோகை விரிக்கும் மயிலை அதனால்தான் 'மஞ்ஞை' என அழைத்தார்கள் போலும். 'மஞ்சு விரட்டு' என்பதே 'மஞ்சி விரட்டு' என்றாகியது.

இந்த மஞ்சு விரட்டு தமிழகத்தில் மிகப் பழங்காலந் தொட்டே இருந்துவரும் ஒன்றாகும். சங்க கால இலக்கி யங்களும் தொல்காப்பியம் போன்ற பழைய இலக்கணங் களும் பிற்கால இலக்கிய இலக்கணங்களும், 'கொல் ஏறு தழுவல்' என்று இதைப் போற்றிவந்தன. இன்று இதை எல்லாப் பகுதி மக்களும் கொண்டாடுகிறார்கள் என்றாலும் அந்தப் பழைய காலத்திலே, காடாகிய முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் பெருமக்களே இவ் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்று அறிய முடிகிறது. ஆயினும் வெறும் பொழுதுபோக்குக்காகவோ- போர் விளைத்து வினையாற்றி வீழ்வதற்காகவோ இது நடை பெறவில்லை. முல்லை நிலத்து ஆயர்குலப் பெண் களுக்கு நல்ல-வீரமிக்க கணவரைத் தேர்ந்தெடுக்கவே இந்தக் 'கொல்லேறு தழுவல்' நடைபெற்றது எனக் காண்கிறோம். சங்க இலக்கியங்களில் - சிறப்பாகக் கலித் தொகையில்-முல்லைக் கலியில் இதன் தெளிந்த காட்சி களையும் பயன்களையும் வாழ்வின் செம்மையினையும் காண முடியும்.

தமிழர் வாழ்வு காதலும் வீரமும் கலந்த ஒன்று. அகமும் புறமும் ஒன்றிய வாழ்வே அவர்தம் வாழ்வு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்திலே இந்த வாழ்வு சுட்டிக் காட்டப்பெறுகின்றது. நிலத்தினை ஐந்து வகையாகப் பிரித்து, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுத்து, அந்தந்த நிலத்தின் இயற்கைக்கு ஏற்ப அங்குள்ள மக்கள் வாழ்ந்துவந்தனர்.

அவற்றுள் காடும் காடுசார்ந்த இடமும் முல்லை நிலம் எனப் பெயர்பெற்றன. அதில் ஆயர் குல மக்கள் சிறக்க வாழ்ந்துவந்தனர். ஆயர்குலப் பெருமையைச் சிலப்பதி காரம் நமக்கு நன்கு எடுத்துக்காட்டும். அந்த முல்லை நிலத்துக்கு உரிய காலத்தைத் தொல்காப்பியர் இலக்கண முறையில் காட்டுகிறார். 'காரும் மாலையும் முல்லைக்கு உரிய' (அகத். 6) என்பது சூத்திரம், எனவே அந்த நிலத்தில் மேகங்கள் மழை பெய்யும் கார் காலமும் அதிலும் சிறப்பாக மாலைப் பொழுதும் முக்கியமாகக் கருதப்பெற்றன. மஞ்சு என்பதற்கு மேகம், அழகு என்ற பொருள்கள் உள்ளமையின் அந்த மேகங்கள் சூழ்ந்த கார் காலத்திய அழகிய மாலைப் பொழுதிலே நடைபெறும் இந்த் விழாவிற்கு 'மஞ்சு விரட்டு' என்று அன்றைய தமிழர் பெயரிட்டனர். அந்தக் காலத்தில் பிரிந்தவர்கள் கூடவேண்டும் என்பதும் இல்லிருக்கும் தலைவி தலைவர் வரவு நோக்கி வாட, நல்ல சகுனங்களின் அடிப்படையில் தலைவர் வருவார்-வந்தார் எனத் தோழிகள் தலைவியைத் தேற்றுவதும் உண்டு என்பதைப் பத்துப்பாட்டின் முல்லைப் பாட்டைப் பயில்வார் நன்கு அறிவார்கள்.

இந்த அகத்திணையாகிய முல்லைக்குப்புறனாக வஞ்சித் திணை அமைகிறது. 'வஞ்சி தானே முல்லையது புறனே' (புறத்திணை - 6) என்பது தொல்காப்பியம். இதற்கு உரை எழுத வந்த நச்சினார்க்கினியர் 'முதலெனப் பட்ட காடுறை உலகமும் கார் காலமும் அந்நிலத்திற்கு ஏற்ற கருப் பொருள்களும் உரிப் பொருளும் ஒப்பச்சேறலின் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று' என்பர். எனவே புறம் காட்டும் நிலையிலும் அந்தக் காட்டு நிலம்-கார்காலம்-மாலைப் பொழுது அவர் மனத்தை விட்டு அகலவில்லை. ஆம்! அந்த முல்லை நிலத்து ஆயர்களால், மேகங்கள் தவழும் கார்காலத்து மாலைப் பொழுதில் கொண்டாடப் பெற்ற விழாவே இந்த 'மஞ்சு விரட்டு'. இன்று இந்த விழா

தையில் (முன்பனிக் காலத்தில்) நடைபெறுகின்றது. அந்தக் காலத்திலும் இவ்வாறு பிற காலங்களில் முல்லைத் திணைப் பாடல்கள் வந்ததை அகநானூறு காட்டும், அகநானூற்று 264ஆம் பாடல் முல்லையில் கூதிர் காலமாகிய குளிர் காலம் வந்ததையும் 294ஆம் பாடல் முல்லையுள் முன்பனிக் காலம் வந்ததையும் காட்டுகின்றன. எனவே கால மாறுபாட்டை நம் கருத்தில் கொள்ளாது, இந்த மஞ்சு விரட்டின் பயன் என்ன என்பதையே காண வேண்டும், மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, நம் தமிழகத்தில் நடைபெற்ற இம் மஞ்சு விரட்டு நல்ல ஆயர் குலப் பெண்களுக்கு மணாளரைத் தேடித் தரப் பயன் பட்டது என்பதையும் வெறும் வேடிக்கைக்கும் ஆரவாரத் துக்கும் அன்று என்பதையும் தெளிதல் வேண்டும்.

பழங்காலத்திய தமிழ் மகளிர் நல்ல வீரர்களையே தம் மணாளராகக் கொள்ள விரும்பவர். 'புலிப்பல் தாலி' என்பதை நாம் அறிவோம். தம்மை மணப்பவர் புலியை வெல்ல அதன் பல்லினையே தம் தாலியாக அணிய வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். இன்றுள்ள பலர்தம் தாலிகளும் அப் புலிப்பல் போலவே செய்யப் பெறுகின்றன. அப்படியே கொல்லேற்றை அடக்கி, அதன் மீதமர்ந்து வெற்றி கண்ட வீரனையே தமிழ்நாட்டு ஆயர் குலப்பெண்கள் மணமகனாகக் கொள்ள விரும்பினர். தமிழ் நாட்டை ஆண்ட சோழன் நல்லுருத்திரனே இந்த உண்மை நிலையினை நமக்கு முல்லைக்கலியின்மூலம் காட்டுகின்றார். நாடாண்ட நல்ல அரசன், தம் நாட்டின் குடிமக்கள் வாழ்வினை நன்கு அறிந்தவன் அல்லனோ! எனவே அவன் நாட்டின் ஆயர்குலப் பெண்டிர் தம் உள்ளத்து உயர்வையும் அவர்தம் உளம் விரும்பிய காதலர்தம் வீரத்தையும் அழகான பாட்டுகளாக — கலிப்பாவாக வடித்து, மறுமையிலும்கூட, கொல்லேறு தழுவ— கோட்டினைப் பிடித்து அடக்க அஞ்சுவானை விரும்ப மாட்டாள் என்று சொல்கிறார்.

" கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள் "

(முல்லைக்கலி: 3 ; 63 - 64.)

என்பது அவர் வாக்கு. அப்படியே நான்காவது கலியில் பொல்லாத எருதினை அடக்குபவனே ஆயர்மகளைப் பெறும் தகுதி உடையவன் (மற்றவன் பெற மாட்டான்) என்பார்.

" முள்ளெயிற்று ஏஎர் இவளைப் பெறும்; இதோர்
வெள்ளேற்று எருத் தடக்குவான் "

(முல்லை 4 : 18 - 19)

என்பதும் அவர் வாக்கு, எனவே இந்த மஞ்சுவிரட்டல் சங்ககால ஆயர் மகளிர் வாழ்வில் முக்கிய இடம் பெற்று, அவர்களுக்கு உரம் மிக்க நல்ல கணவரைத் தேடித்தந்தது என அறிதல் வேண்டும். இனி, இச் சோழன் நல்லுருத்திரன் பாடல் வழியே ஒருசில கருத்துக்களை—இக் 'கொல்லேறு தழுவல்'—'மஞ்சு விரட்டல்' பற்றிக் கண்டு அமைவோம்.

சோழன் நல்லுருத்திரன் பாடியதாகிய முல்லைக் கலியில் பதினேழு பாடல்கள் உள்ளன. அவற்றுள் முதலில் ஒருசில பாடல்களில் அவர் இந்தக் கொல்லேறு தழுவு தலை—மஞ்சு விரட்டலை நன்கு காட்டி விளக்குகிறார். முதல் கலியில் மாடுகளைத் தழுவுவார் அவற்றால் சிதை வுற, அவர்தம் குடல்களும் நரம்புகளும் அம் மாடுகளின் கொம்புகளில் ஏறி உள்ளமையை உவமைகளாலும் பிற வகைகளாலும் விளக்குகிறார். அந்தக் கொடுமையைக் கண்ட தலைவி, ஒருவேளை, தான் மணக்க இருக்கும் கணவனுக்கும் இக்கதி நேருமோ என அஞ்சுகிறாள். அருகிலிருக்கும் தோழி அவளைத் தேற்றி, தோன்றிய நல்ல நிமித்தங்கள் காரணங்களாலும் தலைவியின் திண்ணிய உள்ள ஆற்றலாலும் அவள் தலைவன் காளையை அடக்கிக் கலியாணம் செய்துகொள்வது உறுதி எனத் தேற்றுகிறாள். தலைவனிடத்தும், அவள் அச்சத்தைக் கூறி, தெளிவு

படுத்தி, எண்ணிய திண்ணியராகப் பெறின் 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்ற குறளின் கருத்தினையும் நினைவூட்டி இருவர்தம் உள்ள உரன் வெற்றியே தரும் என்கிறாள்.

மஞ்சு விரட்டும் தொழுவினுள் அமைந்த உயர்ந்த பரண்களில் பெண்கள் வீற்றிருக்கின்றனர். நன்கு சீவிவிட்ட அழகுபடுத்தப்பட்ட காளைகள் தொழுவிடத்தே விடப் பெறுகின்றன. வீரர்களும் தெய்வங்களை வணங்கித் தொழுவிலே பாய்கின்றனர். ஆயினும் அந்தச் சீற்றமிக்க எருதுகளால் கொல்லப்படுகின்றனர். அந்த எருதுகளின் செயல்களைப் பல உவமைகளால் ஆசிரியர் விளக்குகிறார்.

துரோபதியைத் தொட்ட துச்சாதனனைத் துண்டு துண்டாக்கிய வீமனைப் போலவும், (வரி. 15, 20) ஊழி முடிவிலே கூற்றுவனையும் கூறுஆக்கிக் கூளிக்கு இட்டு ஆர்ப் பரிக்கின்ற உருத்திரனைப் போலவும் (வரி. 21, 26) தன் தந்தையாகிய துரோணரைக் கொன்ற சிகண்டியைச் சிதைத்துத் தலை திருகிய அசுவத்தாமனைப் போலவும் (வரி. 27, 33) அந்த எருதுகள் வென்று நிமிர்ந்து ஆர்ப்பரிக் கின்றன என்கிறார் ஆசிரியர். அவற்றைக் கண்டு அஞ்சிய தலைவிக்கு நல்ல நிமித்தங்களைக் கூறித் தேற்றுவிக்கின்றாள் தோழி.

**" கோளாளர் என் ஒப்பார் இல்லென நம்மானுள்**
**தாளாண்மை கூறும் பொதுவன், நமக்கு ஒரு நாள்**
**கேளாளன் ஆகாமை இல்லை அவற்கண்டு**
**வேளாண்மை செய்தன கண் "** (வரி. 43-46.)

என்பது நல்லுருத்திரன் வாக்கு. அது கேட்டுத் தலைவி தன் தலைவன் வெற்றி பெற்றுத் தன்னை மணப்பான் என்ற திட உளத்தோடு, மற்ற சுற்றத்தாருடன் தன் இல்லம் புகுகிறாள் என்று முதல் பாடலை முடிக்கின்றார் புலவர்.

இரண்டாவது பாடலிலே ஆயர் மகள் விரும்பிய தலைவன், ஏறுதழுவி வென்று வீரனாய் நின்ற காட்சியைத் தருகிறான். தலைவி அத்தகைய வீரனுக்கே மனைவி யாவள் என்பதை,

**" ஒஓ, இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்**
**திருமா மெய் தீண்டலர், என்று கருமமா**
**எல்லாரும் கேட்ப அறைந்தறைந்து எப்பொழுதும்,**
**சொல்லால் தரப்பட் டவள் "**

(9-12)

என்று தோழி கூறுகிறாள்.

**" சொல்லுக, பாணியே மென்றா ரறை கென்றார்— பாரித்தார்**
**மாணிழை ஆறாகச் சாறு "**

(13-14)

என அவர் கூறக் கேட்டுப் பின் தலைவன் சென்று, வெற்றி வாகை சூடுவதை விளக்கி, தான் கொண்ட ஏற்றை வென்று வருத்தினான் எனக் காட்டுகிறார் புலவர். பலர் அத் தொழுவில்புக இவன் வென்ற சிறப்பனை,

**" மலர் மலி புகல்எழ அலர் மலி மணிபுரை நிமிர்ந்தோள் பிணைஇ**
**எருத்தோடு இமிலிடைத் தோன்றினான் தோன்றி**
**வருத்தினான் மன்ற அவ்வேறு "**

(25-27)

என்கிறார்.

பின் குரவைக் கூத்தாடியதும் மணம் நடைபெறுகிறது என்று இரண்டாவது பாட்டினை முடிக்கின்றார்.

**"பொதுவனோடு ஆய்ந்த**
**முறுவலாள் மென்தோள் பாராட்டிச் சிறுகுடி**
**மன்றம் பரந்தது உரை "**

(937-38)

என முடிகின்றது பாட்டு.

மூன்றாவது பாட்டிலேயும் இந்த ஏறுதழுவல் விளக்கமாகப் பேசப் பெறுகின்றது. தொழுவில் ஆயர்மகளிர் கூடியுள்ளனர். தலைவியும் தோழியுடன் சென்றாள். ஏறுகள் சீறிப் பாயும் வகையில் நிறுத்தப்பெறுகின்றன. வீரர்கள் ஆர்ப்பரிக்கின்றனர். கரிய, வெளிய, சிவந்த, பல நிறக் காளைகள் மூன்றாம் பிறை போன்ற சீவிய கொம்புகளை உடையனவாக நிற்கின்றன. எருது மற்றவன் குடர்களைக் கொம்பிடைச் சுற்றி நிற்க, தலைவன் அந்த எருதினை அடக்கி, அந்தக் குடர்களைப் பிடுங்கி வெற்றி கொண்டதனைத் தலைவிக்குத் தோழி காட்டுகிறாள். இவ்வாறே வெற்றி கொண்டார் பலர் அத் தொழுக் களத்திலே உள்ளார் எனவும் குறிக்கின்றார்.

ஒரு தலைவன் வெள்ளை எருதை அடக்கி அதன் உடலோடு ஒட்டிய நிலையினை, வெள்ளிய திங்களில் தோன்றும் மருவுக்கு ஒப்பிடுகிறார் புலவர்.

**"இகுளை இஃதொன்று கண்டை; யிஃதொத்தன்**
**புல்லினத்து ஆயர்மகனன்றே—புள்ளி**
**வெறுத்த வயவெள்ளேற்று அம்புடைத் திங்கள்**
**மறுப்போல் பொருந்தி யவன் "**

(முல்லை 3 : 46-49)

என்பது கவியின் வாக்கு. அப்படியே கம்சன் வரவிட்ட குதிரை வென்ற கண்ணனையும் பிறரையும் உவமையாகக் காட்டுகிறார். இவ்வாறு பல காட்டி, ஆயர் மகள் மணம் கூடும் சிறப்பினைப் போற்றி, அந்நாட்டு மன்னனாம் பாண்டியனையும் வாழ்த்தி, தெய்வத்தைத் போற்றுவதற்காகத் தலைவியை அழைத்துச் செல்கின்றாள் தோழி.

பின் நான்காவது பாட்டிலேயும் இத்தகைய 'கொல்லேறு தழுவுதலை'—மஞ்சு விரட்டலைக் காட்டித் தலைவன் வெற்றி பெற்றமையின் குரவையாடி, அவன் வெற்றியை போற்றிக் கூற, தலைவிக்கு அதுவரை இருந்த அலராகிய பழிச் சொல் நீங்கிய தன்மையினையும் அவள் எண்ணியது நிறைவுற, பின் கூத்துள் பாடி ஆட, தலைவனுக்குத் தலைவியின் சுற்றத்தார் மணக்கொடை நேர்ந்ததையும் விளக்குகிறார். இன்னும் சில பாடல்களும் உள்ளன. விரிவஞ்சி இத்துடன் நிற்போம்.

இவ்வாறே அந்தப் பழைய காலத்தே கொல்வேறு தழுவுதலாகிய மஞ்சு விரட்டு நிகழ்ந்தது என அறிதல் வேண்டும். ஒரு வேளை தலைவி விரும்பியவன் ஏறு அடக்காது, வேறு யாராவது அடக்கினும் அவனுக்கு அவளை மணம் செய்விப்பதும், ஒரோ வழி உண்டு போலும். அதை 'ஆசுரம்' என்னும் மணத்துள் அடக்குவர் நச்சினார்க்கினியர்.

'மஞ்சு விரட்டு' என்னும் 'கொல்லேறு தழுவல்' இவ்வாறு பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டு வீரர் மரபினை விளக்கவும் ஆயர் மணமுறையை அறிவிக்கவும் நடைபெற்று வந்தெனவும். பின் கால இடையீட்டால் பலவகையில் மாறி இன்று 'சல்லிக் கட்டாக', 'மஞ்சு விரட்டாக' வெறும் விளையாட்டு வகையில் அமைந்துள்ள தெனவும் அறிதல் வேண்டும். இடைக்கால—தற்கால இலக்கியங்களில் இந்த முறை அதிகமாகப் பேசப்பெறா விடினும் இது தொன்மையானது—வீரம் பற்றியது,—தமிழர் பண்டை மரபு பற்றியது என உணர்தல் வேண்டும்.

(பிப்ரவரி-1989)

# 2. எது பெண்மை ?

உலகம் தோன்றிய நாள் தொட்டே பெண்மையும் வாழ்ந்து வருகின்றது. பெண்மையும் ஆண்மையும் கலந்த ஒன்றே பேரண்டம். ஆண் முன்போ பெண் முன்போ என்பது அறுதியிட முடியாத ஆய்வாக உள்ளது. அனைத்தையும் படைத்தும் காத்தும் துடைத்தும் அருளும் இறைவனும், ஆணும் பெண்ணும் இயைந்த இருபேருருவும் ஒருங்கமைந்த காட்சியாக வன்றோ தோற்றமளிக்கிறான். இப் பெண்மை ஓரறிவுடைய உயிர் தொடங்கி ஆறறிவுடைய மனிதன் வரையில் சிறந்துள்ளமையை ஆய்வாளர்களும் சமய நெறியாளர்களும் வற்புறுத்தி வந்துள்ளனர். ஆண்மையினும் பெண்மையே உலகை உய்விக்கும் என்ற உண்மையை திரு. ஞானசம்பந்தமூர்த்தி அடிகளார் 'ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கித் திரு ஓத்தூரில் விளக்கிக் காட்டினார். ஆண்பனை காய்க்காது; கனிதராது. அதனால் பயன் என்ன? எனவே அதைப் பெண் பனை யாக்கிற்று அவர்தம் பழுந்த அருளுள்ளம். பனையும் பழுத்தது. பனை போன்றே பகுத்தறியக் கூடிய ஆண், பெண் வேறுபாடுகளை வேறு பிற ஓரறியுடையவற்றிலும் காண முடியும். அப்படியே படிப்படியாக ஒவ்வொரு வகையான உயிரினத்தினும் ஆண் பெண் வேறுபாட்டைக் காண்கிறோம். படைப்பின் உச்சியில்—கூர்தலறத்தின் கோடியில் உள்ள இன்றைய முன்னோடியாகிய மனிதரிடத்திலும் இந்த ஆண் பெண் வேறுபாட்டைக் காண்கின்றோம். இவ்வாறு தோன்றிய நாள்தொட்டு ஆண் பெண் வேறுபாடு இருப்பினும் அவை இரண்டும் இணைந்தே வாழ வேண்டிய நியதி நீக்க முடியாத வரையறுத்த ஒன்றாகிவிட்டது. அவ்வாறு ஒன்றாகா

விட்டால் உலகமில்லை—உயிர் இல்லை— வாழ்வு இல்லை வேறு எதுதான் உண்டு?

வறண்ட பொல்லாத அத்தக் கொடு நிலையை உண்டாக்க இறையுள்ளம் எண்ணுமா? என்றுமே எண்ணாது. தான் படைத்த—கரு நலம் சான்ற உயிர்த் தோற்ற வளர்ச்சி என்றும் நடைபெற வேண்டும் என்பது இயற்கை வகுத்த நியதி. அதன் தன்மை மாறலாம்—நிலைகெடலாம் — தடுமாறலாம்—தகுதி வேறுபடலாம்—ஆனால் அழிவு—முழு அழிவு—என்றும் எங்கும் எதற்கும் கிடையாதே!

தாவரங்கள் எப்படித் தம் இனப் பெருக்கத்தை மேற்கொள்கின்றன என்பதையும் அவற்றிற்கு உறுதுணையாகத் தோழனாகவும் பாங்கியாகவும் அமைகின்ற பிறவற்றையும் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் துருவித் துருவி ஆராய்கின்றார்கள். ஆணின் சேர்க்கை இன்றி, அவர்தம் கருவேற்றுப் பெண்டிர் மகப்பெறும் சிறப்பிலே, வாழக் கற்றுக்கொண்ட மக்கள், ஓரறிவுடைய உயிர்களின் பெருக்கத்துக்கும் பல வெளிப்படையான—மறைந்துள்ள—காரணங்களை ஆராய்ந்து கொண்டே வந்துள்ளார்கள். அவர்கள் ஆராய்ச்சியின் ஒரு கோடியில் தான் உள்ளார்கள் என்றாலும், அவர்கள் அதற்குள் பல உண்மைகளைக் கண்டுள்ளார்கள். பெண்மை மலர்ந்து வண்டின் ஈட்டத்தால் கருவுற்றுக் காய் தாங்கிப் பழுத்துப் பயன் தரும் வழியை உணர்கின்றார்கள். செடிகளும் கொடிகளும் மரமும் பிறவும் புல்லும் பூடும் எவ்வாறு இணைப்பாரற்றே இவ்வாறு உலகெங்கணும் வளர்ச்சி உறுகின்றன என உணர்கின்றார்கள். அவையும் நிலத்துக்கு நிலம்—இடத்துக்கு இடம்—தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ற வாழ்க்கை—இவற்றின் அடிப்படையில் அமைந்து தம்மை மற்றவர் காணா வகையில் கலந்து கருவிருந்து தன் இனத்தைப் பெருக்கி வாழ வைத்துக்கொண்டு வளரும் வரலாறு இன்னும் நன்கு ஆராயப்பெறுதல் வேண்டும்.

ஓரறிவுடைய உயிர்மட்டுன்றிப் புழு தொடங்கிப் பறவை விலங்கு வரையில் அவையெலாம் எவ்வெவ்வாறு இணைந்து — பெண்ணும் ஆணும் கலந்து — வாழ்வை வளமாக்கி—இனப்பெருக்கம் செய்கின்றன என்பதையும் எண்ணி எண்ணிக் காண்கின்றனர் ஆய்வாளர். புழுவும் எறும்பும் தவளையும் பாம்பும் குயிலும் மயிலும் மாடும் குரங்கும் பிறவும் எவ்வெவ்வாறு தத்தம் இனத்தைப் பெருக்கிக் கொண்டு வாழ்கின்றன என்பதைக் காண்கின்றனர். இவ்வாறே மனிதக் கருவின் தோற்ற வளர்ச்சி நிலையின் பல்வேறு கூறுகளை அறிந்து ஆய்ந்து எண்ணி வியக்கின்றனர். கடவுள் நெறியைப் பாடவந்த அப்பரடிகளார் அந்த ஏழாம் நூற்றாண்டிலேயே மனிதக் கருவின் வளர்ச்சியை,

**' கருவாகிக் குழம்பிருந்து கலிந்து மூளை**
**கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன்றாகி**
**உருவாகிப் புறப்பட்டு '** (7-ம் திருமுறை)

எனப்பாடி வியக்கிறார்.

இவ்வாறு பலவகையில் உயிரமைப்புக்களின் வளர்ச்சியும் வளமும் உயர்ச்சியும் நலமும் ஆண் பெண் என்ற இருவேறு அமைப்புக்களாலேயே—அவை இணைந்து வாழ்வதாலேயே உண்டாகின்றன. இந்த அடிப்படை நிலையே உலகை வாழ வைக்கின்றது.

உலகம், அனைத்தையுமே - உயிரற்றவற்றையும் மறைந்துள்ளவற்றையும் - பிறவற்றையும் பெண்மையாகவே காண்கின்றது. பிறந்த பொன்னாட்டைத் தாய் நாடென்றே கூறுகின்றோம். செல்வத்தையும் கல்வியையும் திருமகள் கலைமகள் என்றே பெண்பால் பக்கம் நிறுத்தி ஏற்றம் தருகின்றோம். வெற்றியையும் வீரத்தையும் மகளிராகவே கண்கின்றோம். 'அஷ்ட லட்சுமி' என வடமொழிவாணர் அனைத்தையும் பெண்மையாகவே காண்கின்றனர். கடவுளின் மகனென்

வந்த இயேசுவை உலகுக்கு ஈந்தவர் கண்கண்ட பெண்மை என்பதையே இயேசுவின் அடியவர் கூறுகின்றனர். காணாக் க்டவுள் - புலன் உணர்வுக்கு எட்டாத அப் பெருங் கடவுள் - காணும் தோற்றத்தில் மரியம்மையாய் நின்ற பெண்வழி அவர் மகனை உலகுக்கு அனுப்பினார் என விவிலியநூல் விளக்கிக் காட்டுகின்றது. உலகம் உய்ய அருள் நலம் பாடிய பல வடமொழித் தெய்வப் புலவர்கள் மக்களன்றி - பிற உயிர்ப் பெண்மை வழியாக வந்து சிறப் பெய்துகின்றனர். வற்றா அமுத சுரபி கொண்டு வையத்தை வாழவைததவர் 'ஆபுத்திர'னாக மணி மேகலையில் காட்சி தருகிறார். எனவே பெண்மை நலத்தை எல்லாத் துறைகளிலும் நம்மால் காண முடிகின்றது.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலக நாடுகள் அனைத்தும் பெண்மைக்கு அன்றும் இன்றும் ஏற்றம் தந்தே போற்றுகின்றன. உடன் கலந்து வாழும் 'மனைவி'யின் பெண்மைக்கு மதிப்புத் தராதவர்கள்கூட, உலகம் போற்றும் பெண்மை நலத்தைப் பேணிப் போற்று வதைக் காண்கின்றோம். 'பெண்மை இன்றெறல் வாழ் வில்லை' என்ற உண்மையைத்தான் இவை அனைத்தும் உணர்த்துகின்றன என்பது தெளிவன்றோ!

இத்தகைய பெண்ணினத்தை ஒதுக்கி விட்டு வாழ வேண்டும் எனச் சிலர் நினைக்கின்றன - சிலர் எழுது கின்றனர் - சிலர் பாடுகின்றனர். அவர்கள் பெற்ற தாயை நினைக்க மறந்தவர்களே. பெண்ணைப் பெண்ணாக - பெருந் தெய்வமாக - கற்புக் கனலாக - வையத்தை வாழ வைக்கும் வைப்பாக எண்ணாத முறையே அந்த நினைவுக்குக் காரணம். பெண்ணைப் பேயாக - காமக் கூடமாக - வேறுவகையாக எண்ணுபவரே அத்தகைய கொடு நிலைக்குக் காரணமாகின்றனர். இடைக் காலத்தில் அவர்களை இழித்துரைத்தவர் எத்துணையர் - தீட்டிய

ஏடுகள் எத்தனை - எழுதிய பாடல்களோ பலப்பல. ஆயினும் அவை அனைத்தும் இன்று மறைகின்றன. காலத் தேவன் அவற்றைப் போசுக்கும் அறப்பணியில் ஈடு பட்டுள்ளான் என அறிகின்றோம்.

துறவு நிலையில் உள்ளவர்களும் சில வேளைகளில் நிலைதளர்வர். அவர்தம் தளர்ச்சியைக் கண்டு நாடு நகைக்கும் - சிலசமயம் நடுங்கவும் நடுங்கும். பாவம்! பெண்மை இன்பத்தை விடவும் மனமின்றி - விலகவும் மனமின்றி - போலித்துறவில் வாழும் துறவியர் கோலம் நகைக்கத்தக்கதன்றோ! அறம் உரைத்த வள்ளுவனார் இதனாலன்றோ 'கூடா ஒழுக்கம்' என்ற தலைப்பிலேயே அவர் தம் குறையை உலகுக்குக் காட்டினார். 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று காட்டி, காதன் மனையாளொடு கலந்து வாழும் வாழ்வே மக்கள் வாழ்வு என்பதை விளக்கி, அவர் உலகுக்கு அறம் உரைத் தாரன்றோ! மனிதன் மேற் கொள்ளும் வேண்டாத்துறவு நிலையை - பிற உயிரினங்கள் மேற்கொள்கின்றனவா என்பது ஐயமே. இயல்பாகப் பெண்மையோடு இயைந்து வாழும் வாழ்க்கையே வையத்து வாழ்வு என்பதைக் கூறாத பெரியவர் உண்டா?-காட்டாத சமயம் உண்டா?- கருத்தில் உணர்ந்து உணர்த்தாத உரவோர் உண்டா?

மேலும் ஆண் உள்ளத்திலும் பெண் உள்ளமே நல்லற மாற்றுவதற்கும் கடவுள் உணர்வைப் பெற்று உய்வதற்கும் ஏற்றது என்பதைப் பல அறிஞர்களும் நன்கு காட்டி யுள்ளனர். ஆடவராகப் பிறந்தவரும் ஆண்டவனை அடைய வேண்டுமானால் பெண்ணுள்ளம் பெறவேண்டும் என்பதைத் 'திருவாசகம்' நமக்குக் காட்டவில்லையா! மகனாகப் பிறந்த மாணிக்கவாசகர் தம்மை மறந்து 'மகளா'கி மையல் கொண்டு இறைவனைத் தலைவனாகப் பாடிப்பாடி அவன்பதம் பெற்ற வரலாறு சைவரை மட்டு மன்றித் தம் சமயம் பரப்ப வந்த மேலைநாட்டுக் கிறித்தவப்

பாதிரியான 'போப்' போன்றாரையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைக்கவில்லையா! மறம் சாய்த்து அறம் வாழ வழிவகுத்தவர் அனைவரும் பெண்களே யன்றோ! ஆண்டாள் போன்றார் பெண்களாகவே பிறந்து தெய்வ நெறியைப் போற்றிய நிலை நிற்க, மணிவாசகர் போன்ற ஆடவரும் தம்மைப் பெண்களாக எண்ணிப் பாடிய பாடல்கள் எதைக் காட்டுகின்றன? பெண்ணை வெறுத் தொதுக்கவா! இல்லைச் சிறக்கச் செய்யவா?

பெண் உள்ளம் இரக்க உணர்வு உடையது; பெண் களை 'மெல்லியலார்' என்றே அழைத்தனர். ஏன்? 'நல்லார்' என்ற பெயரே பெண் இனத்தைக் குறித்த ஒன்றுதானே. ஆம்! அவருள் தீயரைக் காண்பது அரிதன்றே! பின் 'தீயினில்தீயராய்' அவர்கள் காட்டப் பட்டமைக்குக் காரணம் ஆடவரன்றோ! ஆடவர் நிலை கெட்டுப் பேயாகி, காமக் களியாட்டத்தை விரும்பிய போதெல்லாம் இப் பெண்மையை வாட்டி வாட்டி, அவ்வினத்திலேயே ஒரு தனிப் பிரிவையும் தம் களியாட்டக் கொடுமைக்கு உள்ளானதாகப் பிரித்து அவல நிலையில் வைத்தவரன்றோ!

**" ஆண்களெல்லாம் கற்பை விட்டு அழிவு செய்தால்**
**அப்பொழுது பெண்மையும் கற்பழிந்தி டாதோ "**

என்று இந்த அவல நிலையை எண்ணித்தானே, இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி பாட்டிசைத்தான். அம்மம்ம! பாரதி பெண்ணின் பெருமையைப் பேசிய நிலையை எண்ண ஒருபுறம் மகிழ்வு பிறக்கின்றது. மற்றொருபுறம் அவன் சமுதாயத்தில் பெண் பெற்ற இழி நிலையைக் காட்டும்போது துன்பம் பிறக்கின்றது. அவன் புதுமைப் பெண்ணை வடித்துக் காட்டுகின்றான். அதில் பழைமையும் புதுமையும் இழைகின்றன. அவன் காட்டும் அத்தனையும் தேவைதானா என்பதற்குக் கால தேவன் விடை கூறுவான். எனினும் பெண்—தன் பெண்

தன்மை கெடாத வகையில் வாழ்வாளானால்—அவள்—தெய்வம் என்பது தேற்றம். தெய்வம் என்றால் கல்லாக்கி வழிபடுவது என்று நான் காட்டவில்லை. உலகம் அவள் உள்ளம் உணர்ந்து—தூய்மை அறிந்து—தாய்மை நிலை போற்றி—அவள் வாழத் தான் வாழ வேண்டும் என்பதையே ஈண்டு நினைவூட்ட விரும்புகின்றேன்.

இன்றைய நாகரிக உலகில், அந்த 'நாகரிகம்' என்னும் பேரால் பெண்மை, தனக்கு இழுக்கைத் தேடிக் கொள் கின்றது என்பது ஓரளவு மறைக்க முடியாத உண்மையாக உள்ளது என்பதை மறுப்பார் யார்? புறத்தோற்றங் களாலும், கோலங்களாலும் அக உணர்வையும் அக அழகையும் மண்மூடச் செய்யும் நாகரிகம் பெண்களைப் பேய்களாக்குகிறது. பெண் பெண்ணாக வாழ வேண்டு மானால் இன்றைய நாகரிக உலகில் சற்றே நின்று நினைத்துச் செயலாற்ற வேண்டும். இன்றைய நாகரிகம் ஆண்களைக் குறை கூறுவதோடு பெண்களைக் குறை கூற வைக்கும் நிலையில் தான் அப்பெணகளை ஈர்த்துச் செல்லுகிறது. உலக நாகரிகங்கள் பலவாக மாறிவிட்டன. நாகரிக அமைப்பு முறைகளும் அவற்றின் வழித் தோன்றிய வாழ்க்கை நிலைகளும் நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றதைக் காண்கிறோம். ஆயினும் பிற நாட்டு நாகரிக அமைப்பை நம் நாட்டு மங்கையர் கொள்கின்றனர் என்பதை எண்ணும்போது தடுமாற்றம்தான் உண்டாகின்றது. மேலை நாட்டு மக்கள் பரந்த பாரதத்தை ஆண்ட நிலையில் பல உட்புகுந்தன. அவற்றுள் அவர்தம் நடையும் உடை யும் நாகரிகமும், அவர்கள் நாட்டை விட்டுச் சென்ற பின்பும் நம்மை விடாமல் பற்றிக்கொண்டன. அவை தேவையா என்பதே நம் சிந்தனைக்குரியதாகும்.

உலக மகளிர் அனைவருமே உயர்ந்தோர்தாமே—யார் யாரைக் குறைகூற முடியும்? எனினும் சில நாட்டுப்

பழக்க வழக்கங்கள் மகளிரை மாசுள்ளவர்களாகக் காட்டு கின்றன. ஏன்?- மாற்றுகின்றன என்றும் சொல்லலாம். 'மதுவும் மங்கையும்' நிலையில் ஒன்றெனப் பேசும் நாகரிகத்தையும் காண்கின்றோம். 'பொன்னையும் பொருளையும் பிறவற்றையும்விட, திருடன் மங்கையின் புன்னகையை மேலாக மதிப்பான்-மதித்து அவள் விழி வழி வீழ்வான்' என்ற செகப்பிரியர் போன்ற பெரும் எழுத் தாளர்களெல்லாம் எழுதி வைத்திருப்பதைப் படிக் கின்றோம். 'நம்மையும் கள்ளும் சூதும் நான் முகன் படைத்தவாறே' என்று தமிழ்நாட்டுப் பெண் ஒருத்தி தம் இனத்தையே கள்ளொடும் சூதோடும் ஒப்பிட்டுப் பாடும் பாடல் நமக்குப் புதியதன்று. இவ்வாறே இன்னும் எத்தனையோ வகைகளில் மகளிர் நிலை கெடுவதைக் காண்கின்றோம்.

இன்று நாட்டில் புதுமை யுகம் காணும் விழைவில் பெண்கள் பூரித் தெழுந்து செயலாற்றுவதைக் காண மகிழ்ச்சியுண்டாகின்றது. இதே நிலையில் பல நூற்றாண்டு களுக்குமுன் மக்கட் பணியே பணி என எழுந்த மணிமேகலை போன்றார்தம் செயலை எண்ணும்போது நமக்கு உண்டாகும் பெருமிதம் இன்றைய மகளிர் பணியில் உண்டாவதில்லை என்பதைக் காண வருத்தமும் உண்டாகின்றது. மகளிர் எல்லாத்துறை யிலும் முன்னேற்றம் காணவேண்டியவர்களே! அவருள்ளும் ஒருசிலர் தம் பெண்மை நலம் கெடாத வகையில்-தூய்மை நலம் துளங்கா வகையில் வாழ்கின்றனர். ஆயினும் ஒரு சிலர் வாழ்வை—வறண்ட—வற்றிய வாழ்வை—வாழ வேண்டாத வகையில் வாழும் வாழ்வைக் காணக் காண வருத்தமன்றி வேறு என்ன தோன்றும்!

மகளிர் பெரும்பாலும் இல்லத்துக்கு உரியவர்களாவர்— பெண்மை இல்வாழ்வை ஓம்பி அதன் வழியே வீட்டையும் நாட்டையும் ஆளவும் வாழவும் வைப்பது. இந்த அடிப்

படையிலேதான் 'இல்லாள்' என்ற சொல் மனைத் தலைவியைக் குறித்து எழுந்ததென அறிஞர் கூறுவர். மங்கையர்க்கரசியும் சீதையும் கஸ்தூரியும் கணவரொடு கலந்து வாழ்ந்தே தங்கள் மேன்மையை உலகுக்கு நிலை நாட்டினர். துறவு நிலையில் வாழ்ந்த எங்கோ விரல் விட்டு எண்ணத் தகுந்த ஒருசில பெண்கள் தவிர்த்து உலக வரலாற்றிலேயே துறவால் வாழ்வில் வெற்றி கண்டவர் களைக் காண முடியுமா? இன்றைய எலிசபெத் இராணியும் அவர் போன்றாரும் கணவரொடு கலந்து வாழ்வதையே 'பெண்மை'யின் பெருமை எனக் கருதி வாழ்கின்றனர்; அதுதான்பெண்மையின் பெரு நெறியானமையின். ஆனால் மணம்புரிந்துகொண்டும்-பெயருக்குக் கணவனெனக் கருதி-தம்மனம் போன வாழ்வில் வாழ்ந்துவருவதை நாகரிகமாக எண்ணுபவரும் இருக்கின்றனர். இன்னும் சிலர் 'மணமே வேண்டாம்' எனக் கூறிக்கொண்டே தனித்த வாழ்வில் தம் காலத்தை தள்ளுகின்றனர். இவர்தம் வாழ்வெலாம் பெண்மையின் தன்மைக்குப் பொருந்துமா என்பதை நாம் ஆராய வேண்டா. அவர்தம் அத்தகைய வாழ்வுக்கு எத்தனையோ காரணங்களைக் காட்டுவர். அவர்களை மணந்துகொள்ள ஆடவர் கேட்கும் 'தண்டத் தொகை' அவர்களாலோ அவர்தம் பெற்றோராலோ ஈடு செய்ய முடியாத ஒன்று. அவர்கள் குடும்பம் இக்குலப்பெண்டிர் வருவாயாலேயே வாழவேண்டிய நிலை. இன்னும் எத்தனையோ காரணங்களைக் காட்டலாம். இவற்றிற்கு ஆண்கள் ஓரளவு பொறுப்பாளிகளே என்றாலும் பெண்கள் தம் பெண்மை நலம் கெடா வகைக்கு அக்காரணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியவைதாமோ என எண்ணிப் பார்க்க வேண்டும். இக்காரணங்களே அடிப்படை உண்மையாயின் வாழ்வும் வளமும் பெற்ற பெண்கள்—செல்வர் வீட்டுச் செல்வியர்—செலவுக்கே தேவையில்லாத மகளிர்—இவர் களும் மற்றவர்களைப் போன்று ஏன் உழல வேண்டும். பெண்மையின் தெய்வ நலம்—தாய்மையின் மேன்மை—

வாழ்வின் அடிப்படைத் தத்துவம் அவர்தம் தூய்மை துலங்கும் சிறப்பு இவை அவருக்குப் புரியாதனவேயாம். இவற்றொடுகூட மனம் போலப் பேசும் சில ஆடவர் களுக்கு அவர்களைப் பழிப்பதும் எளிதாகிவிடுகின்றது. பெருங்காவியம் பாடுகின்ற புலவர்கள்கூட 'ஆடவரிலாமை யினல்லால் பெண்களை நம்புதற்குளதோ' எனக்கூறும் அளவுக்கும் பெண்டிர் இழித்துரைக்கப்படுகின்றனர். இது சரியென்றும் நான் கொள்ள விரும்பவில்லை எனினும் இந்த நிலைக்கும் பெண்கள் தம்மைத் தாமே ஆளாக்கிக் கொள்ளக் கூடாது என்பதே என் எச்சரிக்கை. மேற் சொன்ன கருத்தை எழுதியவர் ஆடவராயினும் அந்தப் பழியை ஒரு பெண்ணின் பேரில் ஏற்றித் தாம் தப்பித்துக் கொள்ள நினைக்கிறார்.

**"ஐம்புலன்களும் போல் ஐம்பெரும் பதிகள்**
**ஆகவும் இன்னும் வேறொருவர்**
**என் பேருங் கொழுநர் ஆவதற் குருகும்**
**இறைவனே எனது பேரிதயம்**
**அம்புவிதனிற் பெண் பிறந்தவர்**
**எவர்க்கும் ஆடவரிலாமையி னல்லால்**
**நம்புதற் குளதோ என்றனள் வசிட்டன**
**நல்லற மனைவியே அனையாள்!**

என்று பாடுகின்றவர் யார் எனத் தெரிகிறதா? ஆம்! பாரதம் பாடிய வில்லிப்புத்தூரார்தாம். அவர் மேல் தவறு இல்லை. பாஞ்சாலியைத் தமிழ்நாட்டுப் பெண் இனத்தோடு இணைத்துப் பார்க்க நினைத்தார். இத் தமிழ் நாட்டின் பெண்ணின் ஏற்றத்துக்கும் பாஞ்சாலியின் வாழ்க்கைக்கும் உள்ள இடைவெளி மிகமிகப் பெரியது எனக் கண்டார். எனவே வாய் விட்டே பாடி விட்டார். பாஞ்சாலிக்கு ஐந்து கணவர் இருப்பினும், மேலும் அவள் ஒருவரை விரும்பினாள். இது கதை. ஆனால் இதை வைத்தே 'எந்தப் பெண்ணையும் நம்பலாகாது' என்று

எப்படி அவர் முடிவு கட்ட முடியும்? எனினும் பாஞ்சாலி தன் உள்ளத்தால் மற்றவரைக் காண்கின்ற காரணத் தாலேயே இவ்வாறு சொல்ல முடியும் என்ற உறுதியால் இவ்வாறு அவள் மேல் ஏற்றிப் பாடி விட்டார். இன்று தவறு செய்யும் சிலர், தம் தவறு வெளிப்படாதிருக்க வேண்டி, அது பற்றியே பிரசாரம் செய்து கொண்டிருப் பதைக் காணவில்லையா! இந்த நிலையில் பாஞ்சாலியை வைத்து, தமிழ்க் கவிஞர் வில்லிப்புத்தூரர் இந்தக் கவிதையைப் பாடிவிட்டார். ஆயினும் அவள் ஏற்றத்தைக் குறைக்காத வகையில் பாட்டின் இறுதியில் 'வசிட்டன் நல்லற மனைவியே அனையாள்' என்று பாராட்டியுள்ளார். ஆயினும் அதே வேளையில் உலகப் பெண்ணினத்துக்கு— சிறப்பாகப் பாரதத் தமிழ்ப் பெண் இனத்துக்கு நான் சொல்ல விரும்புவது இத்தகைய பேச்சுக்கும் ஏச்சுக்கும் அவர்கள் இடங்கொடுக்காத வகையில் நடந்துகொள்வது சிறப்புடைத்து என்பதுதான்.

இன்றும் சில நாடுகளில் வாழ்வில் முரண்பட்டவர்கள் வாழலாம். அவர்தம் நாட்டு வாழ்க்கை முறையும் நாகரிகமும் அத்தகையன. அப்படியே மணமும் விலக்கும் நிமிடத்துக்கு நிமிடம் நடக்கலாம். அது அவ்வந்நாட்டு பண்பாடு என அவர்கள் கூறிக்கொண்டிருக்கலாம். ஆனால் நம் நாட்டுப் பெண்மைக்கு நாம் காணும் பொருள் — உரை — உயர்வு — உணர்வு — உறவு — பண்பு அனைத்தும் வேறுபட்டவை. அவை காலம் மாறினும் மாறாதவை. ஒரு பிறப்பில் மட்டுமன்றி எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்தாலும் இணைந்து வாழத் தக்கவை. அப் பெண்மை அன்பு—காதல் வாழ்வு—தாய்மைப் பேறு வழிவழியாக எத்தனையோ பிறவிகளில் பற்றி வருவது. இதைத்தான் தமிழ்ப் பேரறிஞர் வள்ளுவர்,

**'இம்மைப் பிறப்பில் பிரியலன் என்றேனாக்**
**கண்ணிறை நீர்கொண் டனள்'**

என்று காட்டுகின்றார். தமிழகப் பெண்மை வாழ்வு தலையாயது. உயர்ந்து—உலகம் உள்ளளவும் ஓம்பப்பெற வேண்டுவது.

பெண்ணினத்தில் மற்றொரு வகை மாறுபாட்டையும் நான் அடிக்கடி எண்ணுவது உண்டு, வடநாட்டுப் பெண்மையிடத்தும் தமிழ்நாட்டுப் பெண்மையிடத்தும் அதற்கென ஒவ்வொரு சான்றினையும் நினைத்துப் பார்ப்பதுண்டு. அந்த வாழ்வு சிறந்ததா? என அடிக்கடி எனக்குள் நானே கேள்வி கேட்டுக்கொள்வேன். பெரும் பாலும் முடிவு காண முடியாத ஒன்றே என நான் நினைப்பதுண்டு. ஆயினும் ஒருசில உலக நிகழ்ச்சி களினிடை 'அது'வும் உண்டு என உணர்வதும் உண்டு. ஆயினும் அந்நிலை சரியா தப்பா என என்னால் இன்றும் முடிவு கட்ட முடியவில்லை. சரியாயின் வள்ளுவர் தம் 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்; பெய்யெனப் பெய்யும் மழை' என்ற குறளுக்கு என்ன பொருள் கொள்வது என்ற தடுமாற்றம் உண்டாகின்றது. தப்பாயின் ஞானசம்பந்தர் போன்ற தெய்வ நெறிப் பாட்டிசைத்த புலவர்களும் பிறரும் போற்றும் நிலையை அவர்கள் பெற முடியுமா என்ற ஐயம் உண்டாகின்றது. எனவே இதற்கு விடை காண்பது அரிதுதான் போலும்.

கொண்ட கணவனொடு சிறிதும் கலக்காது இருந்தாள் புனிதவதியார் என்றுகூற முடியாது. அவர்தம் வாழ்வு காதல் கனித்த இல்லற வாழவாகத்தான் விளங்கி வந்திருக் கின்றது. உள்ளம் பொருந்தாவிடினும், உடல் ஒன்றிய வாழ்வு அவர்களுக்கு இல்லை என்று சொல்ல முடியாது. அத்தகைய இல்லற வாழ்வில் இயைந்த ஒரு பெண் கணவனைத் தவிர்த்து வேறு தெய்வத்தை வணங்கினாள் என்பது ஏற்க முடியாததுதான். இங்கே நான் தெய்வமாக வணங்கினாள்-அல்லது-வணங்க வில்லை என்று கூறும்போது கல்லில் கடவுளாக்கிப் புறத்

தொழுக்கம் மாறுபடும் நிலையைக் கூறவில்லை. உண்மையிலே அவர் நம்பித்தான் வாழ்கின்றார். அந்த வாழ்வின் தொடக்கில் கணவன் மனைவி இருவரும் எல்லா இன்பத்தையும் பெற்றே வாழ்கின்றனர். பின் அவர் எப்படி கணவனைத் துறந்து கடவுள் நெறிபற்றி எலும்புருவாகி ஏற்றமுற்றார்? இது புரியாத புதிர் அல்லவா! சேக்கிழார் அதற்கு ஏதோ ஒரு காரணம் காட்டுவர். இளமையிலே 'வண்டல் புனைவன வெல்லாம் வளர்மதியம் புனைந்த சடை அண்டபிரான் திருவார்த்தை அணையவருவன பயின்று' அந்த அம்மையார் வாழ்ந்தார் என்பார். அப்படியாயின் அவர் ஏன் மணத்துக்கு இசைந்தார்? ஆண்டாளைப் போன்றல்லவா மறுத்து 'மானுடவர்க்கு வாழ்க்கைப் படேன்' என்று கூறி உயர்வு பெற்றிருக்க வேண்டும். இதற்குக் காரணம் காட்டா நிலையினைத் தான் 'முன்னை ஊழ்' என்கிறார்கள் போலும். காரைக்காலம்மையாருக்கு 'நேற்று முன்னாளில்' வந்த உறவாகப் பரமதத்தன் கழிய 'மிக நெடும் பண்டைக் காலமுதல் நேர்ந்து வந்த உறவு' பரமசிவன் உறவாக அமைந்து விட்டமைக்கு முன்னைய ஊழே காரணமாக அமையும் போலும். விடைகாண முடியாத புதிர் பெண்மை நலத்தை ஏதோ செய்கிறது.

திருவிளையாடல் புராணத்தில் வரும் கௌரியின் கதையும் இத்தகையதே. சைவனுக்கு மகளாகப் பிறந்து வைணவனுக்கு வாழ்க்கைப் பட்ட கௌரி இல்லறத்தில் தன் கணவனொடு இணைந்து வாழ்ந்தாரா என்பதைத் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. காரைக்காலம்மையாரைப் போன்று அவர்கள் தனியாக இல்லற வாழ்வில் வாழவில்லை என்பது தேற்றமாயினும் கணவனும் மனைவியும் என்ற உண்மை மறுக்க முடியாதது. அவர் இறைவனிடத்து நீங்காப் பற்றுடையவராகி அவராலேயே ஆட்கொள்ளப்பெற்று

அணைத்துக் கொள்ளப் பெறுகிறார். இதற்கு விடை என்ன?

வடநாட்டு மீராபாய் கதையும் இது போன்றதுதானே. கொண்ட கணவன் இருக்க வேற்றுச் சமயத் தெய்வமாகிய பரந்தாமனை எண்ணி எண்ணி உருகி ஓலமிட்ட செய்தி சமய உலகம் அறிந்ததுதானே. மேலை நாட்டு யோசேபு மரியம்மையின் வாழ்விலும் இத்தகைய புரியாத புதிர் தானே இயேசுவைத் தருகிறது. இவையெல்லாம் வெறும் கதைகள் என்று தள்ளவும் கூடவில்லையே. கொள்ளவும் முடியாத நிலையன்றோ! இத்தகைய செயல்களை யெல்லாம் எண்ணும்போது பெண்ணுள்ளத்தில் அரும்பும் 'பாச உணர்வு' பல நிலைகளைக் கடந்த ஒன்று என்பது தான் புரிகின்றது. ஆயினும் அது சரியா தவறா? யார் பதில் சொல்வர்?

கடவுளரொடு கொண்ட தொடர்புகள் இருக்கட்டும். இன்றும் உலகில் எங்கோ ஒரு சிலர் இவ்வாறு மாற்றம் பெற்று ஒருமை உணர்வுபெற்றுக் 'காதல் இன்றேல் சாதல்' என்று மடிவதைச் செய்தித்தாள்களில் படிக்கின்றோம்! மீராவையும் காரைக்காலம்மையாரையும் போற்றிப் புகழும் சமுதாயம் இவர்களை தூற்றக்காரணமில்லை என்பது தெளிவு. என்னவாயினும் இவை விளக்க முடியாதவை - உயர்ந்த நெறியைச் சார்ந்தவை - அல்லது - மனித உணர்வுக்கு அப்பாற்பட்டவை - என்று விதி விலக்கினைச் செய்து மனிதப் பெண்மை இவற்றின் அடிப்படையிலன்றி முன் கண்ட வாழ்வின் அடிப்படையில் அமைதலே சாலச் சிறந்தது எனக் கொண்டு மேலே செல்லலாம்.

இன்றைய உலகச் சூழ்நிலையில் பெண்மையின் வாழ்வுக்கு எத்தனையோ குறைபாடுகள் நேர்ந்த போதிலும் அம் பெண்மையின் அடிப்படையாகிய செம்மை கெடாமலேயே வாழ்கின்றது என்பது உணரக்கூடியதே.

புற நாகரிகங்கள் எத்துணைதான் நம் நாட்டுப் பெண்களை மாற்றிய போதிலும், அவர்தம் அக வாழ்வு 'பெண்மை நலம்' தோய்ந்த நிலையிலே உள்ளமையை நம்மால் உணர முடிகின்றதே. இன்றும் வெளி நாகரிகமாகிய புறநாகரிகம் முற்றும் பரவாத உள்நாட்டு ஊர்களில் மகளிர்தம் பண்பு கெடா வகையில் வாழ்கின்றனர். நகரங்களிலும்கூட எங்கோ ஒருசிலர் தவிர்த்து மற்றைய பெரும்பாலான மகளிர் 'பெண்மை நலப்' பொலிவுடன் தானே வாழக் காண்கின்றோம். மேலை நாட்டுப் படிப்பும் பட்டமும் பிற நடை உடைகளும் பெற்றும் கொண்டும் வாழ்கின்ற பெண்களிலும் பலர் 'பெண் உள்ளம்' உடையவர்களாகவே இருக்கிறனர். ஆகவே பெண்மை முற்றும் அழியவில்லை - அழியவும் அழியாது என்பது உறுதி.

பெண், சமுதாயத்தின் மங்கலப் பொருளாக - வாழ்வுப் பொருளாக - வைப்புப் பொருளாகப் போற்றி மதிக்கப் பெறுகிறாள். மணவாழ்வு அவள் பொலிவை இன்னும் அதிகமாக்குகின்றது. நல்ல நிகழ்ச்சிகளில் மணம் புரிந்து மக்களைப் பெற்றவர்களே நல்ல வரவேற்பினையும் முதலிடத்தையும் பெறுகின்றனர். மங்கலமும் முதலிடமுமின்றி வேறு எத்துணை வளம் பெற்றிருப்பினும் வறண்ட பாலை நில வாழ்வை மேற் கொண்டோடும் மங்கையர் இரக்கத்துக்கு உரியவராகவே அமைகின்றனர். சமுதாயம் அவர்களை ஒதுக்கவே எண்ணுகிறது.

மணம் புரிந்த மகளிருள் சிலர் மகப்பேற்றினை விரும்புவதில்லை எனக் கூறுவர். இது எத்துணை உண்மையோ எனக்குத் தெரியாது. மணம் விருப்பாத மங்கையும் மகவினை விரும்பாத பெண்மையும் உலகில் வாழ முடியுமா என்பது ஐயமே. உயிர் வாழ்வே கூடி வாழத்தான் என்ற உயிர்த்தத்துவத்தை நம்முன் உள்ள ஓரறிவுடைய உயிர் தொடங்கி ஐயறிவுடைய உயிர்வரை வாழ்ந்து காட்டு

வதையும் அந்த வாழ்விலேயே—அதில் பெறும் இன்ப துன்ப நெறியிலேயே உயிர் வாழக் கடமைப் பட்டதென்பதையும் அறியாதவர் யார்? 'மக்கட் பேறு' மற்றெவற்றிலும் மேம் பட்ட தென்பதைத்தானே வள்ளுவர்,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

எனப் பாராட்டிக் காட்டியுள்ளார்.

இத்தனையும் கற்றும் கேட்டும் ஒன்றும் அறியாதவர் போல அனைத்தின்பமும் ஒதுக்கத் தக்கன எனப் பேசுபவர் உளராயின் அவர்களை என்னென்பது? இவ்வாறு பேசுபவர்தம் தனி வாழ்க்கையை ஊன்றிக் காண்போமாயின் நான் முன்காட்டிய குறையினைக் கண்டே தீருவோம்.

இத்தகைய பெண்மை நலம் தோய்ந்த பெண்ணினம் உலகம் தோன்றிய நாள் தொட்டு வாழ்ந்து சமுதாயத்தையும் வாழவைத்து வருகின்றது. சமுதாயத்தை வளர்ப்பதே பெண்ணினந்தானே. அப்பெண்ணினம், தான்வாழும் நாடு, ஊர், சூழல், தட்ப வெப்ப நிலை முதலிய புற நிலைகளுக்கு ஏற்பத் தன் வாழ்வுத்தன்மையை வளர்த்துக் கொள்ளுகிறது. புல் தொடங்கி மனித நிலை வரையில் எல்லா உயிர்களுக்கும் இந்நிலை பொருந்தும். சமுதாய வாழ்வில் எல்லா உயிரினங்களும் சமமே. அதிலும் பெண்மை யாண்டும் நீக்கமற நிறைந்துள்ளது. அதனாலேயே உலகம் செழிக்க 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா' எனப் பாரதி முழங்குகின்றார். ஆம்! பெண்மை வாழ்ந்தால் தான் வையம் வாழும். உயிரினம் ஓங்கும் - சமுதாயம் செழிக்கும் - வாழ்வாங்கு வாழும் நல்நெறி நாட்டிலும் உலகிலும் மலரும். இத்தகைய பெண்மைக்கும் சமுதாயத்துக்கும் உரிய தொடர்பினை இனித் தொடர்ந்து காண்போம்.

சமுதாயம் வேறு பெண்ணினம் வேறு எனப் பிரிக்க முடியாத போதிலும், அனைத்திலும் நானே வல்லவன் என மார் தட்டும் ஆணினத்துக்குமுன் பெண்ணினம் பயனற்றது என்று எண்ணுவாரும் உண்டே என நினைக்கும்போது நெஞ்சம் நெகிழ்கின்றதாகையால் அப் பெண்ணினம் சமுதாய வாழ்வை எவ்வெவ்வாறு வளமாக்கிற்று - வளமாக்குகிறது - வளமாக்கும் என்பதை இனித் தொடர்ந்து காண்போம்.

பெண்மைக்குரியனவாக நம்மவர் நான்கு குணங்களைத் தொகுத்துக் காட்டியுள்ளனர். 'நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு' என்ற நான்குமே அவை. அவற்றிற்குப் பிற்காலத்தவர் தந்தம் மனம்போல் பொருள் கொண்டார்கள் என்றாலும் இவற்றின் உண்மைப் பொருள்கள் இன்னும் நாட்டில் உலர்ந்து போகவில்லை. நாணுதற்கு நாணக் கடமைப்பட்டவர் மனிதர். அதில் தலை நின்றவர் மங்கையர்.

**' கருமத்தால் நாணுதல் நாணு '**

என வள்ளுவர் காட்டும் உண்மை எத்தகையது! தலை கவிழ்ந்து நிலைகுலைந்து எல்லாவற்றையும் அடக்கிக் கிடப்பதன்றே நாணம் என எண்ணுவார் சிலர். அப்படியாயின் கண்ணகி அடங்காப் பிடாரியா? அவள் அடங்கியிருந்தால் என்னவாயிருக்கும்? இன்றளவும் உலகம் கோவலனைத் திருடனாக அல்லவா மதிப்பிட்டுக் கொண்டிருக்கும். அவளுடைய சீற்றமன்றோ உலகுக்கு அறிவுச் சுடரைக் கொளுத்திற்று. அவள் நாணமற்றவளா? தீமை செய்யவன்றோ நாணவேண்டும்?

மடம் என்னும் சொல்லுக்குக் 'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை' எனப் பொருள் கொண்டனர். இது எவ்வளவு மடமை. பழம்பெரும் உரையாசிரியர்கள், 'அறிந்தும் அறியாது போன்றிருத்தலே மடம்' என விளக்கம்

தந்துள்ளனரன்றோ! கணவனுக்கு எதிராக அவன் கூறுமுன் தானே எல்லாம் அறிந்ததாகக் கூறின், ஊரையும் உலகையும் சுற்றிவரும் அவனுக்கு தான் கண்டதைக் கூறும் அவாவினைத் தகைந்ததாகாதோ? அவன் கூறிய அனைத்தையும் அறியாதவள்போன்று கேட்டு அவன்மகிழ்ப் பின் தான் உணர்ந்ததைக் கூறின் அவன் எவ்வளவு மகிழ்வான்—அவர்தம் இல்லற இன்பம் எத்துணை ஏற்றம் பெற்றுச் சிறக்கும்?

அச்சமும் அப்படியே 'பயந்து சாக வேண்டும்' எனப் பொருள் கொள்ளப்படுகிறது. வள்ளுவர் 'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்கின்றாரே அதன் கருத்தென்ன? உலகாளும் மன்னவன் கோலுக்கு முன் அஞ்சாது அறமுரைத்த வீரபத்தினி கண்ணகி, காட்டில் தூர்த்தர் 'உடன் வயிற்றோர்கள் தலைவி தலைவனாவ தெவ்வாறு' என்றபோது எவ்வளவு அஞ்சிக் கவுந்தி அடி களின்பின் ஒதுங்கினாள் என அறிகின்றோம். அந்த அச்சம் இல்லாமையினாலன்றோ இன்றைய மகளிர் சமுதாயம் மங்கி அழிகின்றது.

பயிர்ப்பும் அத்தகையதே, அது மகளிர் தனி உடைமை. அப் பயிர்ப்பே அவர்தம் பண்பினை வாழ வைத்து இல்லறத்தை ஏற்றமுறச் செய்கிறது. இதை உணர்வார் மிகச் சிலரேயன்றோ! இதனாலன்றோ பெண்மை பீடு நடை போடுகிறது.

மலர்ந்த பெண்மையின் இல்வாழ்வைப் பாடாத புலவரே இல்லை. தமிழில் மட்டுமன்றிப் பிற எல்லா மொழிகளிலும் இவ் வாழ்வின் ஏற்றம் பேசப்படுகின்றது. கடவுளைப் பாடவந்த புலவர் குமரகுருபர் உமையின் சிறப்பினை எண்ணி,

**" கனகமார் கவின்செய் மன்றில்**
**அனகநா டகற்கெம் அன்னை**
**மனைவி தாய் தங்கை மகள் "**

(சிதம்பர - செய் - கோவை)

எனக் காட்டுகின்றார். கணவனுக்கு மனைவியாக அமையும் பெண் அதே தலைவனுக்கு என்னென்ன வகையில் எவ்வெவ்வாறு பணி புரிந்தும் உடனின்று உதவியும் உற்றுழி கை கொடுத்தும் வாழ வைக்கின்றாள் என்பதைக் காண முடிகின்றது. தாயன்பாம் தலை யன்பால் கணவனை அணைக்கிறாள். உடன் பிறந்தவளாகவும்-ஏன்? - மகளாகவும்கூட மகிழ்விக்கின்றாள். இந்த நிலை எண்ணிப் பார்க்க முடியாத பெரு நிலைதான். ஏன்? - சிலர் எள்ளியும் நகையாடக்கூடியது எனவும் கூறுவர். பாவம் அவர்கள் அப்பாவிகள். அத்தகைய இன்ப நுகர்ச்சிகளை அவர் தம் வாழ்வரசியிடமிருந்து பெறத் தவறியவர்கள் என்று அவர்களை ஒதுக்கிவிடலாம்.

இந்த அடிப்படை உண்மையை அமைத்தே பிற் காலத்து வந்த வேறு பல புலவர்கள் பெண்மை எவ்வெவ்வாறு தன் கடமையைப் புரிகின்றது எனக் காட்டு கின்றனர். ஒரே பெண் எத்தனை எத்தனை வாழ்வு நிலைகளில்—எத்தனை எத்தனை கோணங்களில்—எத்தனை எத்தனை ஏற்றத்தோடு வாழ்வினை அமைத்துக் கொள்கிறாள் என அப்புலவர்கள் பாட்டிசைக் கிறார்கள். பலப்பல கோணங்களில் தம் உடலின் எல்லாம் பாகங்களையும் புகைப்படத்திலும், திரைப்படத்திலும் தம்மைக் காட்டிக் காசு பறிக்கும் காரிகையாருக்கும் அக்காட்சிகளைக் காண மந்தை மந்தையாகச் செல்லும் காரிகையாருக்கும் இவையெல்லாம் புரியாதவைகளாக இருக்கலாம். ஆனால் பெண்மையை வாழ வைத்துக் கொண்டிருக்கும் நல்ல குல விளக்கங்களுக்கு இன்னும் நாட்டில் பஞ்சம் உண்டாகவில்லையல்லவா! அவர்களை எண்ணியே சதகம் பாடிய அறிஞர்கள் பெண்மையின் தன்னலமற்ற தியாக உணர்வைப் பாட்டில் வடித்துத் தந்துள்ளார்கள். ஒன்று காணலாம்.

**கணவனுக் கினியளாய் மிருது பாஷியாய் மிக்க**
**கமல நிகர் ரூபவதியாய்**

காய்சின மிலாளுமாய் நோய்வழி யிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்க நாண மடம் அச்சம் பயிர்ப்பென்னும்
வருமினிய மார்க்க வதியாய்
மாமிமாமர்க் கிதம் செய்பவளுமாய் வாசல்
வருவிருந் தோம்பு பவளாய்
இணையில் மகிழ்நன் சொல்வழி நிற்பவளுமாய்
வந்திளன் பெயரிலாத வளுமாய்
இரதி யெனவே லீலை புரிபவளுமாய்ப் பிறர்தம்
இல்வழி செலாதவளுமாய்
அணியிழை ஒருத்தி யுண்டாயினவள் கற்புடைய
ளாகு மெம தருமை மறவேள்
அனுதினமு மனதில் நினைதரு சதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே.

என்பது அறப்பளீசுரர் சதகம். இப்படியே எத்தனையோ புலவர்கள் பெண்ணின் வாழ்க்கை நிலையைப் படம் பிடித்துக் காட்டிச் சென்றுள்ளனர்.

"வேசி துயிலும் விறன்மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

என்ற பாடலும் பெண்ணின் பண்புநலத்தைப் பாட வந்ததேயாகும். ஆம்! கொண்ட கணவன் தன்னிடத்தில் எந்த வகையான குறையையும் காணாதபடி நடந்து கொள்ள வேண்டும். சில பெண்கள் இதைக் குறை கூறுவதும் கேட்கிறது. கணவன் எப்படி இருந்தாலுமா? என்று கேட்கிறார்கள். அதுவும் எண்ணத்தான் வேண்டும். பல பெண்களின் நல்வாழ்வு தம் கணவர்தம் நேர்மையற்ற வாழ்வாலேயே மங்குவதையும் காண்கின்றோம். ஆயினும் அத்தகைய கணவரைத் திருத்த வேண்டிய பொறுப்பு அக்கற்புடைய மங்கையரையே சாரும் என்பது மட்டும் உண்மை. அவன் மாறுபட்டால் தானும் மாறுபடுவது எனத் தொடங்கின் பிறகு இல்லற வாழ்வேது?

இன்பமேது? அப்பெண்களிலும் மணம் வேண்டாம் என வாழும் பெண்கள் மேலானவர்களே!

பெண்மை தியாகத்தின் சின்னம் என்பதை மறுப்பார் யாரே! அவளின்றேல் அவனியில் உயிர்த் தோற்றம் இல்லை என்பதை முன்னமே கண்டோமல்லவா! ஆடவனும் தியாகத்தின் அடிப்படையில்தான் வாழ்வை அமைத்துக் கொள்கிறான் என்றாலும் பெண்மையின் தியாகத்தின் முன் அவன் தியாகம் மிகச் சிறியதாகிவிடும். தான் பெறும் இன்பத்தின் பொருட்டென்றாலும், அவள் தன்னினும் கணவன் இன்பமே பெரிதாகக் கருதித்தான் அவன் விருப்பு வெறுப்பு இரண்டிற்கும் உட்பட்டு வாழ்கின்றாள். இந் நியதி இன்றளவும் பிறழா நியதி யாகவே உள்ளமை கண்கூடு.

கணவனுக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்வது ஒரு புறம் இருக்கட்டும். கணவன் வழி அவள் பெற்றெடுக்க நிற்கும்-பெற்றெடுத்துப் பேணி வளர்க்கும் பெருஞ் செல்வ மாகிய மக்கட் செல்வத்துக்காக அவள் செய்யும் தியாகம் எத்தகையது. உலகம் அதை எண்ணிப் பார்த்ததுண்டா? கருவுண்டான நாள்தொட்டு பத்து மாதங்களும் திங்கள் தோறும் நேரிடும் மாறுதல்களுக்கெற்பத் தன் வாழ்க்கை வசதிகளையும் பிற தேவைகளையும் மாற்றியும் குறைத்தும் எவ்வெவ்வாறு தியாகம் செய்ய வேண்டியுள்ளது. குழந்தை பிறந்து விட்டாலோ அவள் முழுத் தியாகி யாகி விடுகின்றாள்.

குழந்தையின் வாழ்வே தன் வாழ்வென உணரும் தாயுள்ளத்தில்தான் இந்த 'உலகம் உயர்ந்தது-அது வாழ வேண்டும்' என்ற தாய்மையும் அரும்பும். எனவே உலகைப் 'பால் நினைந்தூட்டும் தாயாகப்' பாதுகாப்பதே பெண்மை ஒன்றுதான். பெற்ற குழந்தை நோயுற்றால் தான் மருந்துண்டு—அது வாடினால் தான் வாடி— அதன் வாழ்வே தன் வாழ்வு என்று கொள்ளும் நோக்கும் செயலும்

எத்துணை உயர்ந்தது. இந்த உண்மையை ஆடவர் உலகம் ஓரளவாவது உற்று உணர்ந்து எண்ணினால் அப் பெண்மையைத் தெய்வமாக—நான் முன் சொன்னபடி—கடவுளொடு வைத்து எண்ணிப் போற்றவேண்டியதன் கடமையை உணராதா? வெறும் மகப்பேறு இயந்திரம் என மதிக்கும் மடமை நாட்டில் இன்னும் நீங்கவில்லையே. மாறாக மகப்பேறு சமுதாயத்தை—உயிரினத்தை—வையத்தை வளர்த்துக் காப்பதோடு, அத் தாய்மையே உலகம் என்றென்றும் தியாகத்தில் சிறக்க வழிகாட்டுகின்ற தென்னும் உண்மையை உணர்ந்தால் உய்தி உண்டு. உணர வேண்டுவது மனிதனின் தலையாய கடமையாகும்.

## பெண்மையும் சமுதாயம்

பெண்மை வாழ்வொடு பிணைந்தது எனக் கண்டோம். அவ்வாழ்வு செம்மையாவதே இப் பெண்மையால்தான் என்பதும் ஓரளவு உண்மையாயிற்று, அப் பெண்மை சமுதாயத்தோடு எவ்வளவு இயைந்து செல்கிறது என்பதைக் காணின் அதன் இன்றியமையா முழுத் தேவையும் நன்கு புலனாகும் என்பது உறுதி. இச் சமுதாயத் தொடு பெண்மை கலந்து உதவுவதைக் காணுமுன் தனி வாழ்வில் அதன் செம்மையைக் காணல் சிறப்புடைத் தாகும்.

வீட்டில் நான் என் பணியைச் செய்துகொண்டே இருப்பேன். என் மேசை மேல் சிட்டுக்குருவி சிறகடித்துப் பறந்து வந்து உட்காரும். நான் இருப்பதைப்பற்றி அது கவலைப்படுவதே கிடையாது. தனியாகவா! இல்லை. ஆணும் பெண்ணும் இணைந்தே உட்காரும். புத்தக வரிசையும் அடுக்கும் அதன் மெத்தையிட்ட நாற்காலிகள். கொஞ்சமும் அச்சமின்றி அவை என்னிடம் பழகும். நானும் உள்ளத்துக் கரவடம் பூணும் மனிதரொடு பழகுவதிலும் இக்குருவிகளிடம் பழகக் கோடி காலம் தவம் செய்திருக்க

வேண்டும் என்று நினைப்பது உண்டு. அவைகளை நான் சிட்டுக்குருவிகள் என அழைப்பதே இல்லை. வீட்டுக் குருவிகள் என்றுதான் அழைப்பது வழக்கம். என் வீட்டில் மட்டுமன்றி மக்கள் மனைதொறும் அவை வாழ்ந்து—அம் மக்களுக்கு அறிவுறுத்தும் எண்ணற்ற அறிவுரைகளைக் கூறாமல் கூறிக் கொண்டிருப்பதை எண்ணி எண்ணி மனிதன் மகிழக் கடமைப்பட்டவனாகின்றான். அவை ஆணும் பெண்ணும் எவ்வாறு கலந்து வாழ்கின்றன என்பதைக் கண்டவரே அறிவர். அவை துறவைப் பற்றி எண்ணுவதில்லை. இன்பத்திலும் துன்பத்திலும் இணை பிரியாது வாழ்கின்றன. பெண் பிணங்குவதும் ஊடல் செய்வதும் பின் கூடி மகிழ்வதும் அவற்றிற்கு நன்கு தெரிந்தவையே. அவை இரண்டும் பெற்ற குஞ்சுகளைப் பேணி வளர்க்கும் பெருந்தகைமையும் சிறந்ததே. அவற்றைக் கண்டு மனிதன் தன் வாழ்வைச் செப்பம் செய்யக் கடமைப்பட்டவனாவன். சிறப்பாகப் பெண் அச் சிட்டுக்குருவியின் வழி அறிந்துகொள்ள வேண்டியன பல உள்ளன.

பெண் சமுதாயத்தொடு தொடர்பு கொள்ளுமுன் வீட்டுத் தனி வாழ்வின் தேவையை விளக்க இச் சிட்டுக் குருவியாகிய வீட்டுக் குருவியின் விளக்கம் மிக மிக இன்றியமையாது வேண்டப்படுவதாகும். கணவன் மனைவி யராகிக் கலந்து வாழும் வாழ்க்கையில் மாறுபாடு உண்டாயின் கணவனைச் சன்னியாசியாகப் போகச் சொல்லுவர் சிலர்.

> **‘ பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்**
> **எத்தாலும் கூடி இருக்கலாம்—சற்றேனும்**
> **ஏறுமா றாக இருப்பாளே யாமாயின்**
> **கூறாமல் சந்நியாசம் கொள் ’**

என்று ஔவையோ யாரோ பாடியதாக ஒரு தனிப் பாடல் உண்டு. கணவன் ஏறுமாறாக இருந்தால் மனைவி என்ன

செய்யவேண்டும் என்பதற்குப் பதில் இல்லையே! அவளும் துறவியாகப் போகலாமல்லவா? ஆம்! போகலாம், ஆனாலும் இந்தப் பொல்லாத சமுதாயம் தனியாகப் பெண்கள் சென்றால் 'சும்மா' இருக்குமா? இல்லாத கற்பனைகளையெல்லாம் கட்டி விடாதா? அதனால்தான் போலும் அப் பாடலைப் பாடியவர் பெண்களுக்கெனத் துறவைக் காட்டவில்லை. மேலும் மனைவி மாறுபட்டால் வேறொரு பெண்ணை மணந்துகொள்ளும் ஆடவர் சமூகத்தைக் கண்டு அவ்வாறு செய்வது தவறு என இடித்துக் காட்டவும் இப்பாடலைப் பாடி இருக்கலாம் அல்லவா? எண்ணுங்கள்! பெண்மையின் ஏற்றத்தைக் ஓம்புங்கள்.

—1970

# 3. எது பண் ?

(*22-12-83 அன்று தமிழிசைச் சங்கப் பண்ணாராய்ச்சிக் கூட்டத்தில் நிகழ்த்திய தொடக்கவுரை*)

தமிழ்இசைச் சங்கத் தலைவர் அவர்களே! செட்டி நாட்டு அரசர் அவர்களே! செயலாளர் அவர்களே! மற்றுள்ள ஆட்சிக்குழு உறுப்பினர்களே! விழாத் தலைவர் அவர்களே! ஓதுவா மூர்த்திகளாக உள்ள பெரியோர்களே! இசை வாணர்களே! இசையிலும் அதன் இன்ப உணர்விலும் தம்மை மறந்து நிற்கும் பெரியோர்களே! தாய்மார்களே! அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கம்.

இதோ, இன்று, நாம் இங்கே நம் தமிழ் இசைச் சங்கத்தின் நாற்பத்து ஒன்றாம் ஆண்டு விழாவின் இடையில் நடைபெறும் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் தொடக்கத்தில் நிற்கின்றோம். இந்த இனிய ஆராய்ச்சியினைத் தொடங்கி வைக்க என்னைப் பணித்த அனைவருக்கும் என் தலை தாழ்ந்த வணக்கத்தினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் இசைச் சங்கத்தோடு ஆரம்ப முதலே தொடர் புடையவன் நான். ஆண்டு விழாக்களில் தொண்டனாக—ஆய்வாளனாக—பிற பணியாளனாகக் கலந்து மகிழ்ந்தவன் நான். இத்தகைய பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் கலந்து கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டு, உள்ளம் மகிழ்ந்து, இதன் வளர்ச்சியைப் போற்றியவன் நான்—இன்றும் போற்றிக்கொண்டுதான் இருக்கிறேன். எனினும் சில ஆண்டுகளாக 'ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்' என்ற நிலையில் நான் எங்கும் எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்து

கொள்ளாது, எல்லாவற்றையும் விட்டு, எங்கோ ஒதுங்கி நின்று, ஒல்லும் வகையால் தனித்த முறையில் என் பணியினைச் செய்து கொண்டிருக்கிறேன். இத்தகைய ஒதுக்கத்தில் வாழும் என்னை, இத் தமிழ் இசைச் சங்க நிருவாகக் குழுவினர் ஒருமுகமாக 'வருக' என அன்பு கலந்த ஆணையிட்டனர். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்! எனவே அவர்தம் அன்புக் கட்டளையினை யேற்று, உங்கள்முன் இப் பண் ஆராய்ச்சியினைத் தொடங்கி வைக்கும் பணிவழியே நிற்கின்றேன். மறுபடியும் அனைவருக்கும் வணக்கம் செலுத்தி என் கடமையினைத் தொடங்குகிறேன்.

**தலைவர்களை நினைக்கின்றேன்**

இங்கே நிற்கும்போது என் எண்ணம், இத் தமிழ் இசைச் சங்கம் தோன்றிய நாள்முதல் கடந்தகால நிகழ்ச்சிகளையெல்லாம் கணக்கிட்டுச் செல்லுகின்றது. தமிழ் நலம் காக்க நின்ற செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள் இதை முன்னின்று தோற்றுவித்த நிலையினையும், அவருடன் தலைவர்களாக இருந்த கோவை திரு. இரத்தினசபாபதி முதலியார், திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார், திவான் பகதூர் திரு. டி.எம் நாராயணசாமி பிள்ளை ஆகியோர் ஆற்றிய நெடும் பணிகளையும் நெடிது நினைத்து நிற்கின்றேன். அவர்கள் அனைவரையும் நன்கு அறிந்தவன் நான். அப்படியே இன்று தமிழ் நலம் காக்கும்—உள்ளத்தால் தமிழினைப் போற்றும், தமிழ் இலக்கியத்தில் தோய்ந்து திளைக்கும் உயர்நீதிமன்ற நடுவர் மாண்புமிகு திரு. பு.ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் சென்ற ஆண்டு முதல் தலைமைப் பொறுப்பேற்று இதனை வளர்த்து வரும் சிறப்பினையும், அண்ணாமலை அரசரின் இரு கண்களாகத் திகழும் அவர்கள்தம் மக்கள் இருவரும் இதன் வளர்ச்சியினையே வாழ்வின் வளர்ச்சி எனக் கருதி அல்லும் பகலும் அயராது

தொண்டாற்றும் நிலையினையும் எண்ணிப் போற்று கின்றேன். அத்தகைய நல்லவர்தம் விழைவின்படி, அவர்கள் வாழ்த்த, உங்கள் முன் என் கடமையினைச் செய்ய நினைக்கின்றேன்.

**சொல்லும் பொருளும்**

பாட்டு வெறும் பொழுது போக்குக்காக மட்டும் பாடப் பெறுவதன்று; அது உள்ளத்தைத் தொட்டு, உயிரை வளர்த்து, உயர் நிலைக்கு அதை ஏற்றிச் செல்வதாகும். அப்படியாயின் அதன் பொருளைப் பாடுபவரும் கேட்பவரும் உணர வேண்டுமல்லவா! பொருளை உணர்ந்தால்தானே அதில் ஈடுபட்டுத் தம்மை மறந்து, உயிர் உணர்வு பெறுகின்றநிலை தோன்றும். தம்மை மறந்து இறைவனைப் பாடிய மாணிக்கவாசகர் 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர், என்கிறார். தொடர்ந்து 'சிவபுரத்து உள்ளார் திருவடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து செல்வர்' எனத் தம் முதல் அகவலை முடிகின்றார். 'செல்வர்' என்ற சொல்லொடு நிறுத்தி, பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுபவர் இவ்வுலகில் அருட் செல்வராக—பொருட் செல்வராக—செல்வத்தின் செல்வம் பெற்றவராக வாழ்வார் என்று கொள்ளலாமல்லவா! பின் பல்லோரும் ஏத்தத் தம் பணியே அணியாகக் கொண்டு, 'சிவபுரத்தின் உள்ளார் திருவடிக் கீழ்ச் செல்வர்' எனப் பொருள் கொள்ளலும் சாலுமன்றோ! எனவே சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொன்னால்—கேட்டால் இம்மையில் செல்வராக இருப்பத்தோடு, மறுமையிலும் இறைவன் அருளாகிய பெருஞ் செல்வத்தையும் பெற முடியும் என்பது தெளிவு. பெரியோர்களே! இந்த வகையில் இன்றைய தமிழக மேடைகளில் பாட்டுகள் பாடப்பெறுகின்றனவா? பாடு பவருக்கும் கேட்பவருக்கும் சொல், பொருள், இரண்டு மன்றி, அந்த மொழியும் தெரியாத வகையில்தானே

'கச்சேரிகள்' நடைபெற்று வருகின்றன. இந்த அவல நிலையினை நீக்குவதே பணியெனக்கொண்டு வாழ்வனவே தமிழ் இசைச் சங்கமும் பண் ஆராய்ச்சியும். இவை நன்கு சிறந்து, நாட்டு மக்களை இருவகைச் செல்வங்களையும் பெற ஆற்றுப்படுத்தி ஓங்குக என வாழ்த்தி மேலே செல்லு கின்றேன்.

'பண்' என்றபோதே உளம் நெகிழ்கின்றது; உவகையால் களி துளும்புகிறது. நா அதன் தன்மையினை—திறத்தினை—வாழ்வளிக்கும் தன்மையினைப் போற்று கிறது. உடல் அதன் வழியே உற்று நின்று தன்னிலை அறியா வகையில் தடுமாறுகின்றது. இவ்வாறு மூன்றினையும் பற்றி ஈர்க்கும் பண், பண்டு தொட்டு, ஏன்?—மக்களின்பம் மலர்ந்த நாள் தொட்டு—இல்லை—உயிரினம் தோன்றிய நாள் முதல் உலகில் உலா வருகின்றது. உயிர்களை வாழ்விக்கின்றது—வளமாக்கு கின்றது—வளர்க்கின்றது. ஆம், மரம் தன் அசைவிலே—இணைப்பிலே இசை பாடுகிறது; அலை பாடிப் பாடி. 'தரங்கம்பாடி'யாயிற்று; பறவைகளின் இசை எல்லா நாடுகளிலும் பாராட்டப் பெறுகின்றது. எல்லாம் பாடுகின்றன—பரவுகின்றன—பாராட்டைப் பெறுகின்றன. ஆனால்—மனிதன் மட்டும் எங்கோ சென்று கொண்டிருக் கின்றான்.

## பண்ணும் இசையும்

பண் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. ஒருசிலவற்றை இங்கே எண்ணல் ஏற்புடைத்தாகும். 'பண்' என்பதற்கு இசைப்பாட்டு, வீணை, தகுதி (Fitness, adaptation, good quality, Suitableness) அசைவு, தொண்டு (Service), காலம் என்ற பொருள்களும் இன்னும் வேறு பொருள்களும் உள்ளன. இவற்றை யெல்லாம் கண்டு எழுதியவன் தமிழன் என்று எண்ணல்

வேண்டா; தமிழ்நாட்டில் தயாரான எந்த அகராதியும் இத்துணைப் பொருள்களைத் தரவில்லை. எங்கோ இருந்து வந்த 'வின்ஸ்லோ' என்ற அறிஞன் தமிழ் கண்டு, அதன் சொல்வளத்தையும், பொருள் நலத்தையும் உணர்ந்து எழுதி வைத்து அன்று (1862-இல்) வெளியிட்டுச் சென்று விட்டான். அதன் படிகள் கிடைக்காத போதும், அதன் மறுபதிப்பைக் கொணரத் தமிழ்நாட்டில் 'நாதி' இல்லை. எங்கோ வடநாட்டில் தில்லியில் வெளியிட அது இன்று நம் கையில் திகழ்கின்றது. அவரே இப் பண் என்ற சொல் பற்றிக் குறிக்கும்போது, இது நால்வகைப் பண்களை விளக்குவதையும் பகல் பண் ஒன்பது (9), இராப் பண் ஒன்பது (9), பொதுப் பண் மூன்று (3) ஆக இருபத்தொரு பண்களை விளக்குவதையும் சுட்டியுள்ளார். அவர் கேட்டறிந்த நிலையில் தந்த விளக்கம் இவை. 'பண்பு' என்ற சொல்லும் இதனடியாகப் பிறந்த ஒன்று எனக் கொள்ளுமாறு, அதற்குள்ள பல பொருள்களை விளக்குவதோடு, தகைமை (good quality, fitness, Suitability) என்று முன் கண்ட பண் என்ற சொல்லுக்குச் சமைந்த பொருள்களையும் வரிசையிட்டுக்காட்டியுள்ளார். (பக்கங்கள் 721—722—1976 பதிப்பு. —National Educational Service, Delhi) அப்படியே இச்சொல்லின் அடிப்படையாகப் பிறந்த பண்ணானவன் (a man of good manners or habits) பண்படுதல் (being made fit or suitable) பண்ணை (helping service)—திருந்துதல் உதவல் என்ற பிற சொற்களின் பொருள்களையும் காட்டி விளக்குகிறார். அவ்வாறே அப் பண் அடிப்படையில் பிறந்த 'பாண் 'பாண்மகள்', 'பாண் மகன்' முதலியவற்றையும் தொட்டுக் காட்டுகிறார். இந்த அகராதி அடிப்படையிலும் பின் வளர்ந்த நிலையிலும் தற்கால 'லெக்சிகன்' என்னும் பேரகராதி, 'பண்', 'இசை' என்ற இரண்டினுக்கும் ஓரளவு விளக்கம் தந்துள்ளது என ஈண்டுச் சுட்டக் கடமைப் பட்டுள்ளேன். எனவே, 'பண்', 'பயன்' என்ற சொற்கள்

உயிரினத்தினை அழகுபடுத்த, மக்களுக்குத் தொண்டாற்ற, புதுப்புது வாழ்க்கை நெறிகளைத் தோற்றுவிக்க, அணி அணியாகச் செறிவுள்ளதாக்க, தன்னடக்கம் பெற (decoration, service, creation, ornament) வழி காட்டுவன என உணர்தல் வேண்டும். எனவே, உயிரினம் வளரவும் வாழவும் பயன்படுத்துவது இந்தப் பண் என்ற ஒன்றேயாகும். அப் பண்ணே இசையாக பாட்டொடு கலந்ததாகப் பரிணமித்து உலகில் உலவுகின்ற நிலையிலே தான் நம் பண்கள் பலப்பல வகையில் பலப்பல முறையில்—பலப்பல அமைப்பில்—பலப்பல பெயர்களில் விரிந்து நிற்கின்றன.

**பண்**

பண் வாழ்வை ஒழுங்குபடுத்துவது; நேரிய வழியில் செலுத்துவது. எனவே, அதன் வழி வாழ்பவர் பண்பட்டவர் அல்லது பண்பாளர் எனப் பெறுவர். ஒழுங்காகச் செல்லும் ஆடு மாடுகளின் கூட்டத்துக்கே 'பண்ணை' என்று பெயர். 'ஆட்டுப் பண்ணை, 'மாட்டுப் பண்ணை' என்பன உலகறிந்த வழக்குகள். அவை மட்டுமன்றி ஒழுங்காகப் பண்படுத்தப்பட்டு விளையும் நிலங்களும் பண்ணை எனப் பெற்று, அவற்றை உடைய் வனையும் 'பண்ணையார்' ஆக்குகின்றது. 'பண்' என்பது இசையில் மட்டுமன்றி, சமூகத்தில்—நேரிய வாழ்வில்—செம்மை நெறியில் நிலைத்து நிற்கும் ஒன்றாகும்.

இவ்வாறே 'இசை' என்ற சொல் பற்றியும் இத்தமிழ் இசைச் சங்கத்தில் நிற்கும் நாம் எண்ணக் கடமைப்பட்டிருக் கிறோம். இச் சொல்லுக்கும் வின்ஸ்லோ அகராதியும் சென்னை 'லெக்சிகனும்' நல்ல விளக்கங்கள் தருகின்றன. 'வின்ஸ்லோ' (பக்கம் 81) மிக விளக்கமாகப் பல்வேறு வகைப்பட்ட இசை வேறுபாடுகளையும் குரல், துத்தம், கைக்கிளை போன்றவற்றையும் தெளிவுபடுத்தி, அவற்றின்

இசை அளவுகளையும் அவற்றின் வழியே அமையும் பாலைப் பண் முதலியவற்றையும் பிறவற்றையும் விளக்குகிறார்.

'இசை' என்ற சொல்லுக்கு இசை, சொல், புகழ், இசைப்பாட்டு, இனிமை, ஏழிசை போன்ற பொருள்கள் உள்ளன. 'இசைப்பாட்டு' என்பதனைப் பிங்கலம் 'கீர்த்தி மிகுதி' என விளக்குகின்றது. இசைவு, இசைப்பு என்பன பொருத்தம் பற்றி வருவன. அப்படியே இசைமையும் புகழ், கல்வி, தறுகண், இசைமை, கொடை எனப் பலவகையில் அமையும் திறனைத் தொல்காப்பியம் (பொருள்-மெய்-9) விளக்குகிறது. எனவே பண், இசை இரண்டும் உயிரினத்தை—சிறப்பாக மனித சமுதாயத்தை வேறுபாடற்ற வகையில் இணைத்துப் பிணைத்து, உயர்த்தி தொண்டு உளமுடையனவாய்—தூய மன நிறைவுடையனவாய் எல்லாரும் எல்லாமும் இன்புற்றிருக்கும் நல்வாழ்விற்கு நடத்திச் செல்வன என அறிதல் வேண்டும். ஆம், இசையும் பண்ணும் காதுக்கு மட்டும் சுவை ஊட்டுவன அல்ல; கண்ணுக்கும் பிற உறுப்புக்களுக்கும் மட்டும் இன்பம் ஊட்டுவன அல்ல; அவை உள்ளத்துக்கு—உயிருக்கு—உணர்வூட்டி, தன்னலமற்ற தியாக வாழ்வுக்கு மக்களை ஈர்த்துச் செல்வனவே. இந்த உண்மையினை ஆங்கிலப் பேரகராதி (Encyclopaedia Britanica—1927—Edition Vol. XVI P.3) ஓரளவு விளக்கிச் சொல்கிறது. "Music contrasted with the gymnsitic, it includes the culture of the mind as distinguished from that of the body. The philosophers valued music both in the ancient general sense and in our restricted sense, chiefly as an educational element in the formation of charactor" என்பன அதன் அடிகள். எனவே, இங்கே அண்ணாமலை மன்றத்திலே அமர்ந்த தமிழ்இசைச் சங்கத்தின் வழியே பண் ஆராய்ச்சி செய்கின்றோம் என்றால், ஏதோ இது வெறும் பாட்டொலியினைப் பற்றிய ஆராய்ச்சி

மட்டுமன்று என்பதும், மனித சமுதாயம்—உயிரினம் உளத்தால் ஒன்றுபட்டு, பண்புற்று, 'வையத்துள் வாழ்வாங்கு அனைத்தும் வாழ' வழிவகுக்கும் ஓர் உயரிய—தேவையான—தெளிந்த ஆராய்ச்சி என்பதும் உணரக் கிடக்கின்ற நிலை அறிந்து மேலே செல்வோம்.

பண் என்ற சொல்லின் பொருளினையும் பல்வேறு விளக்கங்களையும் கண்டோம். இப்பண்—இசையொடு கலந்த பண்-மிகப்பழங்காலத்தில் சங்க காலத்தும் அதற்கு முன்பும் பொன்னேபோல் போற்றப்பெற்று வந்தது. சங்க இலக்கியங்களில் வரும் பாணனும் பாடினியும் கூத்தரும் விறலியரும் புகாத இடமில்லை; போற்றாத புலவரில்லை; அவர்களை ஏற்றுப் போற்றாத புவியரசரும் இல்லை—எங்குக் கேட்டாலும் 'பண்', 'பாண்' என்ற பேச்சே காதில் விழும். தொல்காப்பியர் இப்பண் ஒட்டிப் பாடும் பாடலைப் 'பண்ணத்தி' என்றே கூறுகின்றார். பண்ணை நத்தி வருவதால் அப் பெயர் பெற்றதென்பர். எனவே, அவர் காலத்துக்கும் முன் நாட்டில் வழங்கி, இலக்கிய மரபாகப் போற்றப் பெற்று, பின் இலக்கணத்திலும் இடம் பெற்ற அந்தப் பண் பற்றிய ஆராய்ச்சியே இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

**பண்-மெய்ப்பாடுகள்**

நான் முன் காட்டியபடி 'பண்ணின்' செவிக்கின்பம் பாட்டோடு கலந்து வருவது மட்டுமன்று என்பதையும், மனித குலத்தை வாழ்விக்க நிற்கும் ஒளி விளக்கு என்பதையும் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் முதல் சூத்திரத்தில் விளக்குகிறார்.

**'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான் கென்ப'**

(மெய்—1)

என்ற முதற்சூத்திரத்திற்கு உரையாசியர்கள் பல வகையில் பொருள் கொள்கின்றனர். 'பண்ணை' என்ற சொல்லுக்கு விளையாட்டு ஆயம் எனப் பொருள் கொள்கின்றனர். இது பொருந்துமா? அறிஞர் ஆராய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்' என்று வள்ளுவர் காட்டும் மரபுப்படி, உள்ளத்து நெகிழ்ச்சியினை வெளியே—மெய்யின்புறத்திலே காட்டும் மெய்ப்பாடுகள் பற்றி விளக்க 'மெய்ப்பாட்டியல்' எனப் பெயரிட்டு அதன் முதற் சூத்திரத்திலே, விளக்கங் காட்டும் மெய்ப்பாடுகள் பற்றிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து விளக்கத் தொல் காப்பியர் இச்சூத்திரத்தினைச் செய்தார் என்றால், அதை வெறும் விளையாட்டு அடிப்படையில் கொள்வது பொருந்துமா? 'பண்ணை உடையது பண்ணை என்றாயிற்று' என விளக்கந் தரும் உரையாசிரியர்கள், பண்ணின் அடிப்படையாகப் பண்ணையும், அதன் வழி யாக முகத்திலும் மெய்யிலும் தோன்றும் குறிப்பினையும் மறந்தது ஏனோ? 'பண்ணை' என்பது கூட்டம், மகளிர் கூட்டம் என்ற பொருளிலும் உள்ளது எனினும் ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணை விலங்கினத்தைச் சுட்டுவது போன்று, மக்கட் பண்ணை எனச் சுட்டுவது மரபு நிலையாகக் கொள்ள இயலுமா?... 'பண்ணை' என்பது 'ஆயத்தார்' என்ற பொருளில் இருப்பினும் அப்பொருள் இங்கே ஏற்புடையதாகுமா? அப்படிக் கொண்டால் அம் மெய்ப்பாடு வெறும் விளையாட்டு விளைவிடம் மட்டும் தோன்றும் ஒன்றாகி நிற்காதா? மேலும் இதற்கு விளக்கம் கூறுகையில் இளம் பூரணர், "அறிவுடையோர் அவைக் கண் தோன்றாமையின் 'பண்ணைத் தோன்றிய என்றார்' என்றும் 'என்னை? நகைக்குக் காரணமாகிய எள்ளல் தோன்றாமையின்—பிறவும் அவை' எனவும் கூறுகிறார். அறிவுடையார்கண் இந்த மெய்ப்பாடுகள் தோன்றா என்றால், செங்குட்டுவன் போன்ற பெரு மன்னனிடத்தும்,

பெருஞ்சித்திரனார் போன்ற பெரும் புலவரிடத்தும், புலவராக வந்த இறைவனிடத்தும் பெரும் முனிவர் களிடத்தும் தோன்றிய மெய்ப்பாடுகளெல்லாம் பொய்யா? 'அழுக்காறு என ஒரு பாவி' என வள்ளுவர் சினந்து கூறுவது விளையாட்டா? அவை யாவும் இன்றேல் இலக்கியம் ஏது? அவற்றின் வழியமைந்த இலக்கணம்தான் ஏது? 'ஐ' என்ற எழுத்துச் சொல்லாக வரும்போது, நுண்மை என்ற பொருளிலும் தலைமை என்ற பொருளிலும் வழங்குவது உலக உண்மை. எனவே பண் என்ற நுண்மை—தலையாய உள்ளத்தெழும் உணர்வோடு பொருந்திய ஒன்றின் நுண்ணுணர்வாலும் தலையாய உணர்வாலும் உடலின் புறத்தே தோன்றும் 'மெய்ப்பாடுகள்' எனத் தொல் காப்பியர் இயலுக்கே தோற்றுவாய் தந்து, பின் மேலே பல வகைகளில் பின்வரும் சூத்திரங்களால் விளக்குகிறார் எனல் பொருந்துவதாகும். 'இசைமை' அல்லது 'புகழ்மை' என்ற தன்மையினைத் தொல்காப்பியர் அடுத்து வரும் சூத்திரத்தின் (9) வழியே பெருமிதத்தில் சேர்க்கின்றார் என்றால் அந்த இசையும் பெருமிதமும் விளையாட்டுப் பண்ணையோடு நிற்க வேண்டியவைதானா? அறிஞர் ஆராய்வார்களாக!

**வள்ளுவரும் பண்ணும்**

இந்தத் தொல்காப்பியத்தின் அடிப்படையிலும், 'பண்' என்பது இசையொடு பொருத்தி, உள்ள நிகழ்வாய், உயிரினத்தின் வாழ்வொடு பொருந்தி நின்று அந்த உயிரின் உணர்வுகளை உலகொடு பங்கிட்டுக் கொண்டு வாழ்தல் என்பதேயாகும். மற்றும் இந்தப் பண் என்ற சொல்லை வள்ளுவர். எத்தனை இடங்களில்? எடுத்தாளுகிறார் அத்தனைக் குறட்பாக்களிலும், ஒரேஒரு இடத்தில்தான் எடுத்தாளுகிறார். அதுவும் உலகியலாகிய கண்ணோட்டம் பற்றிக் கூறும் இடத்தில் மட்டுமே. பல சொற்களை ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில்—பலவிடங்களில்

எடுத்தாளும் வள்ளுவர், இதன் அருமை பெருமைகளை அறிந்து, நூல் முழுவதிலும் ஒரே இடத்தில் மட்டும் எடுத்தாண்டு போற்றியிருப்பது எண்ணி எண்ணி—அதன் சிறப்பறிந்து மகிழ வேண்டிய ஒன்றாகும்.

**'பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்ட மில்லாத கண்'**

(குறள்—573)

இதில் உலகியல் நடைபெற அடிப்படையான கண்ணோட்டம் என்ற ஒன்றினை வள்ளுவர் விளக்கு கிறார். உலகில் அக்கண்ணோட்டம் அருகி விட்ட காரணத்தாலேயே, மக்களுக்குத்தெரிந்தவேறொன்றினைக் காட்டி விளக்க நினைக்கிறார். தெரிந்த பொருளைக் காட்டி, அதே போன்றுள்ள தெரியாத ஒன்றினை விளக்குவது தானே உவமை. இங்கே, 'பண் என்னாம் பாடற்கியைபின்றேல்' என்பது உவமையாகின்றது. எனவே இது உலகறிந்த ஒன்று என்பது தேற்றம். பண்ணொன்றப் பாட்டிசைக்கும் மரபு நாடறி வழக்கு என்பதை வள்ளுவர் சொல்லாமல் சொல்லிவிட்டார். வள்ளுவர் காலத்தில் உவமை கூறும் அளவிற்கு உலகறிந்த தாக இருந்த ஒன்று, பின், காலத்தால் அருகிவிட்டது போலும். சங்க காலத்திலும், வள்ளுவர் காலத்திலும் நாடெங்கும்—ஊரெங்கும் பட்டி தொட்டிகளிலும் பட்டி னங்களிலும் பரவி, மக்கள் உள்ளங்களை மகிழச் செய்த ஒன்று மாற்றார் படையெடுப்பாலும், மாற்று அரசுகளா லும், பிற மொழியும் இசையும் பிறவும் ஆட்சி செலுத்திய மையாலும் மெல்ல மெல்ல மறையலாயிற்று போலும். எனவேதான் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி, மறுபடியும் ஊர்தோறும் சுற்றி உழன்று மக்களிடையில் பண்ணொன்ற இசை பாடி, அப்பண்ணுக்கு உயிர் ஊட்டினார்கள் என எண்ண வேண்டியுள்ளது. எனினும் மறுபடியும் அதன்

நிலை கெட, இன்று இத்தகைய ஆராய்ச்சிகளும் தமிழ் இசைச் சங்கமும் தோன்றி நிற்கின்றன. தேவாரம் பாடிய தெய்வத் திருக்கோயில்களில் இன்று அத்தகைய தீந்தமிழ்ப் பண் இல்லை—பாடல் இல்லை. இசை மண்டபங்களிலும் வேற்றுப் பாட்டொலி கேட்கிறது. பள்ளிகளில் பண் இல்லை; படக்காட்சிகளிலோ சொல்லவே வேண்டிய தில்லை. நாட்டுப் புற இலக்கியங்களிலே—நாளேடுகளிலே-எங்கும் பண் இல்லை. இவ்வாறு வாழ்வின் அடிப்படையான பண்ணின் நிலை மங்க மங்க, அதன் அடிப்படையில் அமைந்த பண்பாடும் பிற நல்லியல்புகளும் நாட்டில் மெல்ல மறைந்து வருகின்றன. நல்ல வேளை, அத்தகைய அவல நிலையினைத் தடுக்க, தமிழ் இசைச் சங்கமும் அதனொடு தொடர்புடைய பிறவும் பண்ணாராய்ச்சியும் வளர்ந்து அவற்றை வாழ வைத்து, அதன் வழியே சமுதாய நலத்தினையும் வாழ வைக்க முயல்கின்றன. அவை 'வாழ்க' 'வெல்க' என வாழ்த்துகின்றேன்.

**பசிப்பிணி மருத்துவன்**

'பண்' என்ற சொல்லின் அடிப்படையில் பல சொற்கள்—பண்பு, பண்பாடு, பண்ணியம், பண்ணத்தி, பண்ணை போன்றவை—உருவாவதைக் கண்டோம். ஆனால் 'பண்' அடிப்படையிலேயே 'பண்ணன் என்ற பெயருடையவன் வள்ளலாகத் தமிழகத்தில்—சங்க காலத்தில் வாழ்ந்தான் என்பதை அகமும் புறமும் நமக்கு உணர்த்தும்போது நாம் நம்மை மறக்க வேண்டாமா? பண் அடிப்படையிலே ஒருவன் இயற்பெயர்—அதுவும் பசிப்பிணி மருத்துவனாகி — தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்ந்த ஒருவன் பெயர் அமைகின்றது என்றால் — நாடாளும் ஒரு மன்னன் சோழன் கிள்ளிவளவனால் பாராட்டுப் பெறும் அளவிற்கு 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' எனத் தன் வாழ்நாளையே தந்து வாழ்த்தும் அளவுக்கு அமைகின்றது என்றால் அப்

பண்ணையும் அதன் வழியே பெயருற்ற பண்ணனையும் இப் பண்ணாராய்ச்சி மண்டபத்தே மறக்க முடியுமா?

அப் பண்ணன் சிறுகுடிக்குரிய — படப்பைக்குரிய சாதாரண மனிதனாக, சிற்றூரின் தலைவனாக இருப்பதைக் காண்கிறோம். ஏதோ ஒதுக்கப்பெற்ற ஓரிடத்தில் — ஒரு சிற்றூரில் அவன் வாழ்ந்தவனாதல் வேண்டும். இன்றும் மலைவாழ் மக்களிடத்தில் பண்ணன், பண்பன், பண்பி போன்ற மக்கட் பெயர்கள் வழக்கத்தில் இருப்பதை நாம் அறிகிறோம். (மலைவாழ் மக்கள் மாண்பு — அ. மு. ப.) இவர்களைப் போன்றே அப் பண்ணனும் எங்கோ சிறுகுடிப் படப்பையில் தங்கி, தன்னை மறந்த பண்பாடும் தும்பியாக — தும்பிகளுக்கிடையில் தானும் பண் பாடும் பண்புடையவனாக வாழ்ந்தவனாதல் வேண்டும். 'அப் பண்ணனைப் பாடேனாயின் எனக்குப் பாண்டியன் வரிசை நல்காது ஒழிக' எனப் பாண்டிய நாட்டுப் புலவர் மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் பாடினார் (புறம்—388) என அறியும்போது மகிழ்ச்சி பிறக்கிறது. மேலும் சோழநாட்டை ஆண்ட மன்னன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' (புறம்—173) எனத் தன் வாழ்நாளையே அவனுக்குக் கொடுப்பதாகக் கூறித் தன்னிலும் தண்ணளியாளன் பண்ணன் நெடிது வாழின் நாடும் உலகமும் நலமுற்று, பண்பாடுற்றுச் சிறக்கும் எனக்காட்டிய நிலையை எண்ணாதிருக்க முடியுமா? எதற்காக அவன் நெடிது வாழ வேண்டும்?' ஏன் நாடாண்ட பெரு மன்னனே அப்படி அவனுக்குத் தன் வாழ்நாளை நல்க முன் வர வேணடும்? ஆம், அப் பண்ணன் 'தனக்கென' வாழாப் பிறர்க்குரியாளன் (அகம்—54) 'பசிப்பிணி மருத்துவன் (புறம்—173). எனவேதான், அவன் சிறுகுடி நாடிச் சென்று பெருமன்னன் அவ்வாறு வாழ்த்துகிறான். மற்றொரு புலவர் கோவூர் கிழார் அவன் நாட்டினை 'நாற்ற

நாட்டத்து அறுகாற்பறவை சிறுவெள்ளாம்பல் ஞாங்கர் ஊதும்' (புறம்—70) நாடாகக் காட்டுகிறார். எனவே அவன் பெயரிலும் ஊரிலும் நாட்டிலும் பண் நடமாடு கின்றது. ஆம், அவன் பண்பாளனாக—மற்ற உயிர்களைத் தன்னுயிர் போல மதித்து உதவுபவனாக—மற்றவர் பசி நீக்கும் மருத்துவனாக அமைந்து, உதட்டாலும் உளத்தாலும் உற்ற செயலாலும் பண்ணினைப் போற்று கின்ற காரணத்தாலேயே பண்ணன் எனப் போற்றப் பெற்றான். மூதாட்டி ஔவைக்கு எங்கோ கிடந் தெடுத்த நெல்லிக் கனியினை ஈந்த அதிகனைப் போற்றும் இத் தமிழகம், ஏனோ இப் பண்ணனையும் அவனுக்குத் தன் வாழ் நாளையே தரத் துணிந்த பெரு மன்னன் கிள்ளி வளவனையும் மறந்துவிட்டது. 'வாழ்க பண்ணன்' என நாம் வாழ்த்துவோம்.

### சமுதாயம் கண்ட வாழ்வு

இதுவரை பண் என்ற சொல்லின் அடிப்படையில் பல கண்டோம். இனி அப் பண்ணும் பண்ணொடு கலந்த இசைப் பாடலும் சமூகத்துக்கு என்ன நன்மை செய்கின்றன எனக் காணல் வேண்டும். இசை சமூகத்தை ஒன்றுபடுத்தி வாழ வைப்பதாகும். நான் மேலே காட்டியபடி, வெறும் காதளவு இன்பம் தருவது மட்டுமன்றி உயிர் வாழ்வின் இன்றியமையாப் பண்பு நலனைத் தருவது அது. மனிதன் மட்டுமன்றி ஓரறிவுடைய உயிர் தொடங்கி எல்லா உயிர்களும் தழைத்துத் தளிர்த்துத் பூத்துக் குலுங்க வழிவகுப்பது அது. 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதே பண்படியாகப் பிறந்த ஒன்றாகும். இந்த உண்மையினைப் பண்வழிப் பாண்மிழற்றும் பாணர் வாழ்வின் அடிப்படையிலும் அவர் மற்றவரை ஆற்றுப் படுத்தும் நெறியிலும் தொல்காப்பியர் விளக்கிக்காட்டுவர்.

**' கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**

பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் '
(தொல் : புறம், 88)

என்ற அடிகளின் படி, பண் வழியும் ஆடல்பாடல் வழியும் நிற்கும் கூத்தரும் பாணரும் பிறரும் செல்லும் நெறியினைக் காட்டுகிறார். அவர்கள் புரவலர்களைப் பாடிப் பரிசில் பெற்று வருகின்றனர். வருபவர் முன் அவர் போன்றே பண் நிறை மக்கள் வருகின்றார்கள். அவர்களைக் கண்டு மறையாமல்—அவர்களை ஒதுக்காமல்—தாமே அவர்கள்முன் வலியத் தோன்றி, தாம் பெற்ற பெருவளத்தினை அவரும் பெறலாம் என ஆற்றுப் படுத்துகின்றனர். பிறர் வளம் கண்டு பொறாமைப்படும் இந்தப் பண்பற்ற உலகத்துக்கு இது புரியாத ஒன்றுதான். எனினும் அன்று பண் நிறைந்து வளர்ந்த சமுதாயம் கண்ட வாழ்வு அது.

மேலும் இந்த இசை வழியே வரண்டவர் வாழ்வு வளமாகும்; வற்றிய மரம் தளிர்க்கும்; இருண்ட உலகு ஒளி பெறும்; இன்னல் நீங்க இனிமை பெருகும். இந்த உண்மைகளையெல்லாம் பரஞ்சோதியார் விறகுத் தலையன் பாடிய இசை வழியாக விளக்குகின்றார்.

' தருக்களும் சலியா முந்நீர்ச் சலதியும் கலியா நீண்ட
பொருப்பிழி அருவிக் காலும்நதிகளும் புரண்டு துள்ளா
அருட்கடல் விளைத்த கீத இன்னிசை அமுத மாந்தி
மருட்கெட அறிவன் தீட்டி வைத்த சித்திரமே ஒத்த
பைந்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்சை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாம் வல்லியம் மருட்கை எய்தித்
தத்தமாறு அறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தலை மாவும் புள்ளும் இசைவயப்பட்ட அம்மா!

**வன்தரை கிழிய வான்போய் வான்சினை**
**கரிந்து நின்ற**
**ஒன்றறி மரங்க ளெல்லாம் செவியறி வுடைய வாகி**
**மென்தளி ரீந்து போது விரிந்து கண்ணீரும் சோர**
**நன்றறி மாந்தர் போல நகைமுகம் மலர்ந்த மாதோ!**

என்று பத்திரன் அடிமை யாம் என்று பாண் செய்து வென்ற இறைவன் பாடலை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். இறைவன் பாடல் மட்டும் அன்றி எல்லாப் பாடல்களையும் யாரும் பண் ஒன்றப் பாடினால் இத்தகைய நல்ல பயன் விளையும் என்பது உண்மை. நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே இசை பற்றிய நல்ல வளர்ச்சியினைப் பயிருக்கு ஊட்டிய தன்மை நாடறிந்த ஒன்று. ஆக, இசையினால் மனிதன் மட்டுமன்றி, விலங்கு, பறவை, மரம், செடி, கொடி அனைத்தும் கட்டுப்படுத்தப் பெற்று, உளத்தாலும், உடலாலும், அகத்தாலும் புறத்தாலும் தூய நெறியில் வளர்க்கப் பெறும் என்பது கண்கூடு. எனவே, மேலே பரஞ்சோதியார் கூறியது வெறுங் கற்பனையாகாதே! அவர் கூறியது கற்பனை அல்ல என்பதை அண்மையில், இந்த அக்டோபர் 27 முதல் 30 வரையில் போபாலில் நடைபெற்ற அனைத்துலக இந்திய இசை பற்றிய கருத்தரங்கு (International Seminor of Indian music at Bhobal) திட்டமாகக் கூறியுள்ளது. அதை (Insight into universal language) என்ற தலைப்பில் 'இந்து' (The Hindu) இதழ் தன் 20-11-83 நாளிட்ட ஞாயிறு வாரப் பதிப்பில் நன்கு விளக்கியுள்ளது. இசை கொடிய விலங்குகளை அடங்கச் செய்யும்; கல்லைக் கனிவிக்கும்; வளையா முறுக்குடை மரங்களையும் வளைந்து கொடுக்கச் செய்யும் என அங்கே காட்டியுள்ளனர். (Music, said the poet, hath charms to sooth a savage beast, to saffere rocks or bend a knotted oak) அத்துடன் ஆங்கில நாடகப் பேராசிரியரான சேக்ஸ்பியர் (Shakespeare) இசை உணர்வற்ற மக்கள் — இசைக்கு

உருகா மக்கள்—கொலைகாரராகி வஞ்சகச் சூழ்ச்சியாளராகி—கொள்ளைக்காரராகி நாட்டில் உலவுவர் என்பதையும் சுட்டியுள்ளார். மேலும் அதே கருத்தரங்கில் உரையாற்றிய பிரான்சு நாட்டு அறிஞர் (Edith Eocoust of France) இசை மனித மனத்தின் நோய் நீக்கும் தன்மையினையும், மனத்தின் பல்வேறு உளைச்சல்களையும் மாறாட்டங்களையும் மாற்றி, பண்பட்ட வழியில் செலுத்துகின்ற நிலையையும் தெளிவாகக் கூறியுள்ளார். (Edith Eocoust of France explained the effect of Music on mind, especially Music theraphy. She explained vividly the different aberrations of the mind and the experiments that are being conducted through music to tackle them.—The Hindu 20-11-83) எனவே, நான் மேலே காட்டிய, இசை பற்றிப் பரஞ்சோதியாரும் பிறரும் சொல்லிய அனைத்தும் உண்மையல்லவா!

**கொடுமை நீக்கும் இசை**

மேலும் இந்த இசை, கொடுமைகளைமயலலாம்களையும் என்பதையும் மாற்றாரை மாற்றும் திறன் உடையதென்பதையும் சங்க கால இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும், காப்பியங்களும் நமக்குக் காட்டவில்லையா?

> **'ஆறலை கள்வர் படைவிட அருளின்
> மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை'**

என்ற அடிகள், வழியிடை வருவாரை வருத்திப் பொருள் பறிக்கும் பாலை நிலைத்து மக்கள் தாம் கொண்ட படையினையும் விட்டு அருளின் மாறுபட்ட மருளின் தன்மையையும் மறந்து, நல்வழிப்பட நடத்தும் தன்மையது பாலைப் பண் என்பதை உணர்த்துகின்றனவே! இத்தகைய பண்புடைப் பண் நாட்டில் நல்ல நிலையில் இருந்தால்—இசைக்கப் பெற்றால் — உருக வைத்தால் எத்தனை

எத்தனை வேறுபாடுகள் இல்லாமல் மறையும் என எண்ணி ஏங்க வேண்டி உள்ளதன்றோ! ஆம்! அப் பண்—இசை—எங்கே? ஏட்டில் இருக்கிறது — இலக்கணத்தில் உள்ளது. ஆனால் நாட்டில் நடமாடவில்லை. நடமாட நாம் விடவில்லை. அதனாலேயே நாட்டில் நாற்பத்தெட்டாயிரம் கட்சிகளும் மாறுபாடுகளும் பிற வேறுபாடுகளும் தோன்றி, ஒருவர் மேல் ஒருவர் வசைப் படை—பழிப்படை—பிற படைகளை விட்டு அழிக்க முற் படுகின்றனர். அண்ணாமலை மன்றத்தில் எழும் இப் பண்ணிசை—பாட்டொலி தமிழ் நாட்டில்—பரந்த பாரதத்தில்—விரிந்த உலகில் அந்தப் பழைய அமைதி நிலையை—ஒன்றிய உணர்வினை உயர்ந்த மனிதப் பண்பாட்டை—உள்ளத்து நல்லுணர்ச்சியினை உருவாக்க வேண்டும் என விரும்புகிறேன். அந்த நல்ல விருப்பத்துக் கிடையில் இப் பண்ணாராய்ச்சி அரங்கினை உங்கள் அனைவர்தம் நல்வாழ்த்தொடு தொடங்கி வைக்கிறேன்.

பண்ணின் வகை, திறன், பிற நிலைகளைப் பற்றி யெல்லாம் இங்கே பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்யும் பெரும் புலவர்களும், இசைப்பேரறிஞர்களும், ஓதுவா மூர்த்திகளும், நல்லறிவாளர்களும், பிறரும் பல்வேறு முறை களில் தெளிவாகக் காட்டியிருப்பார்கள். எனவே, அவற்றின் அடிப்படைகளைக் கூட அறியாத நான் அவை பற்றி விளக்க நினைப்பது தவறாகும் — விளக்கவும் முடியாது — தேவையும் இல்லை. அவை பற்றியே மேலும் கூறி உங்கள் பொன்னான நேரத்தைக் போக்கடிக்கவும் விரும்பவில்லை. எனினும் என் உள்ளத்து எழுந்த ஒரே எண்ணத்தை மட்டும் உங்கள் முன் வைத்து விட்ட பெறுகின்றேன்.

**மக்கள் இயக்கமாக மலர**

கடந்த அரை நூற்றாண்டின் அளவாக இத் தமி இசைச் சங்கமும் அதை ஒட்டிய பண்ணாராய்ச்சி

சிறப்பாக இந்த அண்ணாமலை மன்றத்தில் நடை பெறுகின்றன. நாட்டில் பல ஊர்களில் தமிழ் இசைச் சங்கங்களும் தோன்றியுள்ளன. ஒரு சில இதழ்கள் தமிழிசை வளர வேண்டுமென எழுதுகின்றன. இருந்தும் தமிழ் நாட்டில்-அதன் பரம்பரையான நல்லிசை ஏன் வளரவில்லை? வாழ வேண்டிய வகையில் வாழவில்லை? தமிழ் நாட்டில் தமிழ் இசை—தமிழ்ப் பண் வளரவில்லை என்றால் வேறு எங்கே அது வளரும்? வாழும்? தமிழ் நாட்டில் 'எங்கும் தமிழ்' 'எதிலும் தமிழ்' என்று அரசியல்வாதிகளும் அறிஞர் சிலரும் மேடை தோறும் முழங்குவதையும் கேட்கிறோம். ஆனால், தமிழ் எங்கே வளர்கிறது? அப்படியேதான் தமிழிசையும் வளர்ச்சி பெறவில்லை. மாறாக ஒரு சில ஆண்டுகளுக்கு முன் — நாற்பதிலும் ஐம்பதிலும் — இருந்த தமிழ் உணர்வுகூட இப்போது மங்கி வருவதைக் காண்கிறோம். 'இருந்தமிழே உன்னால் இருந் தேன்' என்று தமிழ்விடு தூதின் ஆசிரியர் கூறியபடி, தமிழால் தம் வாழ்வைப் பெருக்கிக் கொள்பவரைக் காண முடிகிறதேயன்றி, தமிழை வளர்த்து வாழ வைப்பவரைக் காண்பது அரிதாகின்றது. ஏன் இந்த அவலநிலை? காரணம் ஒன்றேதான். இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக வளரவில்லை. இங்கே மண்டபத்தில் ஆண்டுக்கு ஒரு முறையோ அன்றிச் சிலமுறையோ நாம் கூடி ஆராய்ச்சி செய்கின்றோம். இசைப் போட்டிகள் நடத்துகின்றோம். பரிசும் பட்டமும் பாராட்டும் வழங்குகிறோம். ஆனால் தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் இவை பற்றி எண்ணுவார் யார்? நாலு கோடித் தமிழரில் நாலாயிரம் பேராவது இது பற்றி எண்ணுகின்றார்களா? இல்லையே! எந்தக் கொள்கையும் இயக்கமும் மக்களொடு தொடர்பு கொண்டாலன்றி வாழாது—வளராது. மக்களொடு தொடர்பே இன்றி வந்த வேற்று நாட்டுச் சமயங்களும் மொழிகளும் நாகரிகமும் அந்த வகையிலேயே நாட்டில் வளர்ந்தன என்பதைக்கண்டும் நாம் வாளாவிருத்தலாகாது.

மக்களொடு மக்களாக அவர்தம் ஊர்தோறும் நாமே சென்று—வலியச் சென்று—அங்கெலாம் பழங்காலப் பாணர்-பொருநர், கூத்தர் போன்று அவர்களொடு கலந்து பழகி, பாடி நம் இசையை வளர்க்கப் பாடுபட வேண்டும். எங்கிருந்தோ சமயம் பரப்ப வந்த மேலைநாட்டவர், தம்மை, ஐயராகவும், அடிகளாகவும், முனிவராகவும் மாற்றிக் கொண்டு மக்கள் செல்ல அஞ்சிய சிற்றூர்களுக்கும் காடு மேடுகளுக்கும் தாமே வலியச் சென்று தம் சமயக் கொள்கையைப் பரப்பி அதை வளர்க்கவில்லையா! அப்படியே தமிழ்நாடே மாற்றார் படையெடுப்பாலும் ஆட்சியினாலும் நிலைகெட்டழிந்தது என்ற நிலையில்—சென்ற காலத்தில் - ஏழாம் நூற்றாண்டில் அப்பர், சம்பந்தர் போன்ற நாயன்மார்களும் முதலாழ்வார் போன்ற வைணவத் தொண்டர்களும் தோன்றி மூலைமுடுக்குகளிலெல்லாம் சென்று, மக்களைத் தழுவி, அவர்களொடு பழகி அவர்கள் வாடினால் தாமும் வாடி, அவர்கள் வாழக் காசு பெற்று, அவர்களை வாழ வைத்து, இதோ நீங்கள் ஆராய்கின்ற பண்களை ஊர்தொறும் பாடித் தமிழ்நாட்டின் தலைவிதியையே முற்றும் மாற்றவில்லையா! அக்காலத்தே வடக்கே பெருமன்னனாகிய பல்லவனும், தெற்கே பெருமன்னனாகிய பாண்டியனும் பிற மன்னர்களும் மாறுபட்ட நிலையில் இருக்க அவர்களை ஒருசேர மாற்றி, மக்களை உய்வித்து உயர்த்தியது இப் பண்கள் அல்லவா! எனவே இன்று நாம் அவ்வாறு செய்யாமையினாலேயே வேற்று நிலைகள் வேரூன்ற நினைக்கின்றன. இன்று நாமும் அந்த ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்று ஊர்தோறும் உழன்று, மக்களொடு மக்களாகப் பழகி, ஆங்காங்கே பண் ஒன்றப் பாட்டிசைத்து அவர்கள் அனைவரையும் இசை வயப்படுத்த வேண்டும். இவ்வாறு இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக வளர்ந்து, ஊர்தொறும் பட்டி தொட்டிகளெல்லாம் பரவ இத் தமிழ் இசைச் சங்கம் வழிகோல வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

### பரஞ்சோதியாரின் உத்தி

நான் மேலே பரஞ்சோதியார் வழியே விறகுத் தலையன் பாடியதாகக் காட்டிய பண்ணும் இந்த நிலையினையே நமக்கு உணர்த்துகின்றது. பாணபத்திரனை எதிர்த்த ஏமநாதனை இறைவன் மனமாற்றம் செய்திருக்கலாம்; அன்றி மருட்டியோ வேறு வகையிலோ வெளியேற்றியிருக்கலாம். ஆனால் அவ்வாறன்றித் தானே, பண்பாடும் இசைவல்லானாக வந்து பாடினான்—எப்படி? வீரகண்டியும் வெற்றி மாலையும் பட்டும் பூவும் பதக்கமும் புனைந்து வரவில்லை; சாதாரண ஏழைக் குடிமகனாக—விறகு வெட்டியாக வந்தான். ஏன்? அப் பண் உயர்ந்தார் மட்டத்தில் மட்டுமன்றித் தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலேயும்—காட்டிலே விறகு வெட்டி வாழும் ஏழைகளிடத்தும் நல்ல வழக்கில் இருந்தது என்பதைக் காட்டவே பரஞ்சோதியார் இந்த உத்தியினைக் கையாண்டார். சாதாரண விறகு வெட்டியும் அக்காலத் தமிழ்ப் பண்ணை மாற்றார் மருளும் வகையில் பாடினான் என்றால் இதன் சிறப்புக்கும் பரப்புக்கும் வேறு சான்றும் வேண்டுங்கொல்! மேலும் திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பா ணாழ்வார் இருவருமே பண் ஒன்றப் பாட்டிசைத்தும், பாடுவர் பக்கல் நின்று யாழ் வாசித்தும் பரமனைப் பரவியுள்ளார் எனக் காட்டிய பண்டைப் பரம்பரையின் சிறப்பினை வரலாறு உணர்த்தவில்லையா!

சங்க காலத்திலும் பாணரும் பிறரும் தாழ்ந்த குலத்தவராக நாம் கருதும் கீழ்ப்படியில் இருந்தவராகக் காண்கிறோம். அவர்கள் நிலை அதுவாயின், அவர் வழியே அத் தமிழ் இசை அன்று எவ்வாறு பரவி இருந்தது என் உணர முடிகின்றதே! பரிபாடலும் பிற சங்க இலக்கியங்களும் சிலம்பும் பிறவும் விளையாட்டிலும் நீராட்டிலும் பிற செயல்களிலும் வெற்றி முழக்கங்களிலும் இப் பண்—பாடல்—இசை முக்கிய இடம் பெற்றமை அறிவோம்.

இவ்வாறு ஊர்தோறும்—தெருவுதோறும், காட்டிடத்தும், நாட்டிடத்தும், செயல்தோறும், மக்கள் இசையாக— எல்லாரும் போற்றும் பாடும் — பரவும் — பாராட்டும் இசையாக இருந்ததை எண்ணிப்பார்க்க வேண்டும். பாடுவர் பாட, ஆடுவார் ஆட அனைவரும் கண்டும் கேட்டும் கலந்து பாடியும் மகிழ்ந்த தமிழ் இசை இன்று ஒரு சிலராலேயே போற்றப்பெறுகின்றது. இந்நிலை மாற வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் இதை உணர்ந்து போற்றிப் பயின்று, பாடி மகிழும் நாள் வரவேண்டும்.

**செயலே தேவை**

அண்மையில்கூட, தேவார இன்னிசை தெருவு தோறும் ஊர்தோறும் முழங்கிற்று. நான் இளைஞனா யிருந்தபோது, இந்த நூற்றாண்டின் இருபதிலும், முப்பதிலும் கச்சி ஏகம்பன் பெருவிழாவில் நான்கு வீதி களிலும் இறைவன்பின் சுந்தர ஓதுவாமூர்த்திகளும் வேலூர் அப்பாத்துரை ஆச்சாரியார் அவர்களும் பண் ணொன்றப் பாட்டிசைக்க அவர்களைச் சுற்றி ஆயிரக் கணக்கான மக்கள் தம்மை மறந்து அப் பண்வழி ஒன்றி நின்ற நிலையினைக் கண்டவன். திருமயிலையிலும் அப்படியே. சுவாமியிடம்கூட அவ்வளவு கூட்டம் இருக்காது. இவர்களைச் சுற்றி விடிய விடியக் கூடிப் பண் ஒன்றிய பாடலைக் கேட்ட கூட்டம் இன்று இல்லை. ஏழாம் நூற்றாண்டில் தோன்றியவாறு மற்றொரு அப்பரோ, சம்பந்தரோ ஆழ்வார்களோ தோன்றினாலும், தோன்றா விட்டாலும், நாமனைவரும் மக்களிடம் சென்று, நின்று, நிலைத்து அவருடன் ஒன்றி இந்த இசையினைப் பரப்பக் கடமைப்பட்டிருக்கிறோம். இக் கருத்தினைச் சென்ற ஆண்டிலும் செட்டி நாட்டு அரசர் அவர்களும் சீர்காழியார் அவர்களும் வற்புறுத்தினார்கள் என அறிகிறேன். எனவே, இனிச் செயல் தேவை.

**முயல்க! வெல்க!**

இதோ இன்று இங்கே அண்ணாமலை மன்றத்திலே கூடி இருக்கிறோம். பத்து நாட்கள் இன்னிசை மாந்தி நான்கு நாட்கள் பண் ஆய்வு செய்து நம் கடன் முடிந்து விட்டது என எண்ணாமல் ஒவ்வொருவரும் — சிறப்பாக இசை வாணர்களும், ஓதுவாமூர்த்திகளும் மக்களிடையே சென்று பாடி, அவர்களைப் பரவசப்படுத்தி, அவர்களோடு ஒன்றி நிற்கவேண்டும். ஆனால், இன்று அவ்வளவு எளிதன்று அச்செயல் என் நினைக்கலாம். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்', என்ற குறள்வழி வாழும் நமக்கு இது எளிதே. அப்பரும், சம்பந்தரும் வாழ்ந்து தமிழ்ப் பண் பாடிநின்று காட்டிய வழியே நாம் சென்றாலன்றி, இத்தமிழ்ப் பண் வாழ வேறு வழியில்லை. 'எப்படிப் பாடினரோ அப்படிப் பாட நான் ஆசை கொண்டேன்' என்ற அளவிலன்றி அவர்களைப் போன்று ஊர்தொறும் ஓடியாடி உண்மைத் தொண்டு செய்ய வேண்டும். ஆம், முயன்றால் வெற்றி உறுதி, முயலுங்கள்! வெற்றி பெறுங்கள் என்று கூறி விடைபெறுகிறேன்.

**நன்றி**

மீண்டும் என்னை இப்பணியில் இணைத்த தலைவர், துணைத் தலைவர், செயலர், நிருவாகக் குழுவினர் அனைவருக்கும் வணக்கம் செலுத்தி, அனைவருடைய வாழ்த்தினையும் உடன் கொண்டு இப் பண் ஆராய்ச்சிக் கூட்டத் தொடரினை உள நிறைவோடும் இறையருளோடும் தொடங்கி வைக்கிறேன். வணக்கம்!

# 4. எது அறிவு ?

உலகின் உயிர்த் தோற்ற வளர்ச்சி அடிப்படையில் அறிவு வளர்ச்சியினை அமைதிப்படுத்திக் காட்டுவார் அறிஞர். தொல்காப்பியர் ஓரறிவுடைய உயிர் வகை தொடங்கி ஐயறிவுடைய உயிர் வகை வரையில் - புல் முதல்மக்கள், விலங்கு, புள்வரையில்—உயிர் வளர்ச்சி பற்றி விளக்கங் காட்டித் தெளிவுறுத்தியுள்ளார். இந்த ஐவகை அறிவும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற புலன்கள் வழியே 'கண்டு கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும்' செயல்களாக அமைவனவாகும். இவை பெற்றமை கொண்டு, ஒவ்வொரு உயிர் வகையும் பிரித்துப் பகுத்துப் பார்க்கப்பெற்று முறைப்படுத்தப்படுகின்றது. ஆயினும் இவற்றுக்கு மேலாக உள்ள ஆறாவது அறிவைப் பெற்றவர் மனிதர் எனத் தொல்காப்பியர் தொடங்கி, இன்றைய உலக அறிஞர்கள் அனைவரும் கூறுகின்றனர். 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்' பகுத்தறிந்து, வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் இந்த ஆறாவது அறிவைப் பெற்ற மனிதரை 'மக்கள்' எனவும், மனித உடம்போடு கூடியும் இந்த அறிவு இல்லாதவரை 'மாக்கள்' எனவும் பிரிப்பர் நல்லோர். ஆனால் இன்று உலகில் இந்த உண்மையினை ஏற்றுக் கொள்வார் மிகச் சிலரேயாவர். மனிதனாகப் பிறந்தவர் யாவருமே ஆறறிவுடையவர்தாம் என வாதிப்பர். அவர்கள் அந்த ஆறாவது அறிவினைப் பெறாதவர்களேயாவர்.

மனிதனாகப் பிறந்து உண்பன உண்டு உடுப்பன உடுத்து, காண்பன கண்டு காலம் கழிக்கும் இன்றைய மனித இனத்திலே, இத்தகைய தொல்காப்பியரும் பிற தெய்வப்

புலவரும் சுட்டிய ஆறாவதாகிய பகுத்தறிவை உணரக் கூடிய பண்பு ஒரு சிலரிடத்திலே மட்டுமே உள்ளது. அறிவுக்குக் கல்வி அடிப்படை என்ற உண்மையினை வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார். "தொட்டனைத் தூறும் மணற்கேணி, மாந்தர்க்குத் கற்றனைத் தூறும் அறிவு" (396) என்ற குறள், கற்கக் கழிமடம் அஃகி அறிவு வளரும் என்று காட்டுகின்றது. இதைக் காட்டி, எப்படியோ பட்டம் பெற்றுப் படித்தவராகி நிற்கின்ற பலரும் தம்மை அறிவுடையார் எனப் பறைசாற்றி முழங்கு கின்றனர். படித்தோ படிக்காமலோ எழுதியோ பிறரை எழுத வைத்தோ எப்படியோ எங்கிருந்தோ பல்வேறு பட்டங்களைப் பெற்று வாழ்வில் உயர்ந்து வளர நினைக்கும் பலர் தங்களை 'அறிஞர்'களாகக் கூறிக் கொள்ளும் 'நாகரிக'க் காலத்தில் வாழ்கின்றோம் நாம். வாழ்வுக்குத் தேவையற்ற பாடத்திட்டங்களில் தம்மைப் பறிகொடுத்து இளமையை வறிதே கழித்துப் பின் படித்த படிப்புக்குத் தொடர்பல்லாத ஏதோ ஒரு பணியில் தம் வாழ்வை அமைத்துக்கொள்ளும் இன்றைய மனித சமுதாயத்துக்கு உண்மையான கல்வியோ அறிவோ அறிய முடியாதனவாம்; இத்தகைய உலக மக்களை எண்ணி வருந்திய காரணத்தால்தான் வள்ளுவர் கல்வி, அறிவு இரண்டினையும் தனித்தனியாகவும் இணைத்தும் உலகுக்கு உணர்த்துகின்றார். வள்ளுவர் உணர்த்திய உண்மையினை அறியாத காரணத்தினால்தான் உலகம் எங்கோ சென்று கொண்டிருக்கிறது.

இன்று படித்தவர்களாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் தலைவர்களால்தானே உலகில் எல்லாக் கொடுமைகளும் நடக்கின்றன. ஒரு தலைமுறையில் இருபெரும் போர்கள் படிக்காதவர்களாலா தொடங்கி நடத்தப் பெற்றன? உலகில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் பிற வேறுபாடுகளும் சாதிப் போராட்டங்களும் சமயப் போராட்டங்களும் படிக்காதவர்களாலா நடத்தப்

பெறுகின்றன? படிக்காத ஏழைத் தொழிலாளிகளைக் கூட்டி மடக்கி, நாள்தோறும் வேலை நிறுத்தங்களும் பிற கொடுமைகளும் செய்கின்றவர்கள் படிக்காதவர்களா? வஞ்சகமும் பொய்யும் வாழ்விடை விரவ, தாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற கொடிய எண்ணம் கொண்டு, பண்டங்களை முடக்கி, இல்லாத கொடுமையை உண்டாக்கி, விலையினை ஒன்றுக்குப் பத்தாக ஏற்றி விற்பவர் படிக்கத் தெரியாதவர்களா? எதற்கெடுத் தாலும் 'கையூட்டே' கதி என எண்ணி அலுவலகங்களில் அல்லும் பகலும் வருவாரை வழி நோக்கி இருப்போர் படிக்காதவர்களா? இப்படியே பலப்பல வகையில் நல்லவர் உள்ளங்கள் நாடொறும் எண்ணி எண்ணி நைவதை நாம் காண்கிறோம், இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? ஆம்! வள்ளுவர் கல்விக்கும் அறிவுக்கும் காட்டிய விளக்கத்தினைச் சமுதாயம் அறியாத ஒன்றே காரணமாகும். அறிந்தும் செயல்படாத நிலையில் சிலர் வாழலாம்! அவர்களுக்கென இரக்கப்பட வேண்டுவதே.

இன்று பல கோடி ரூபாய்கள் கல்விக்கெனச் செலவாக்கப் பெறுகின்றது. 'ஆழ உழுவதிலும் அகல உழு' என்பது கல்வித் துறையின் புதுமொழியாகின்றது. எல்லோருக்கும் எழுத்தறிவு வேண்டும் என்ற முயற்சியில் எத்தனையோ வகையில் அரசாங்கங்கள் செயல்படுகின்றன. இவை யாவும் வரவேற்கத் தக்கனவே. 'எல்லோரும் எல்லாச் செல்வமும்' - கல்விச் செல்வம் உட்பட - பெற வேண்டுவதே சமுதாய நெறி; ஆனால் அந்த நெறியைப் பின்பற்றுவதில்தான் சங்கடங்கள் உண்டாகின்றன. 'எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு' (392) என்ற வள்ளுவர் வாக்கின்படி 'எழுதப் படிக்க - கூட்டல் கழித்தல் போடக் கற்றுத் தந்தால் மட்டும் போதும்; வள்ளுவர் வாக்கை

நிறைவேற்றி விட்டோம் என்று அமைதி கொள்ளமுடியாது. வள்ளுவர் அக் கல்வியினையும் அதன் வழியே காட்டும் அறிவினையும் விளக்கும் நெறியினை எண்ணி அதன் வழி மக்களை ஆற்றுப் படுத்துவதே அறிவுடைமையாகும். கல்வியை அமைத்து, கேள்வியை அமைத்து, கல்லாமையைச் சுட்டி, அவற்றின் வழி அமையும் அறிவுடைமையைத் தொடர்ந்து காட்டிச் சமுதாயம் வாழ வழி வகுத்த வள்ளுவர் திறனை எண்ணிப் பார்க்க வேண்டும். அத்துடன் அந்த அறிவினை வள்ளுவர் பால்தொறும் பகுதிதொறும் வேண்டும் இடங்களிலெல்லாம் சுட்டி உணர்த்தியுள்ள தன்மையினையும் நன்கு உணர வேண்டும்.

படிக்க வேண்டியதை நன்கு குற்றமறப் படிக்க வேண்டும் என்கிறார். 'கற்க கசடறக் கற்பவை' என்பது குறள். முதலாவதாக அதை நாம் செய்கிறோமா? படிக்க வேண்டாதவற்றையல்லவா ஆயுள் முழுவதும் படிக்கிறோம். பள்ளியிலோ, கல்லூரியிலோ தேவையற்ற பாடங்கள்—என்றோ ஆங்கிலேயன் வகுத்த பாடமுறை—யாராவது 'பெரியவர்' வெளிநாடு சென்று எதையாவது கண்டு வந்து பின்பற்றச் சொன்னால் பற்றும் முறை—பின் வேண்டாமென்று விடும் முறை—தேர்வுகளின் வேடிக்கை. இப்படி நம் நாட்டுக் கல்வி முறை அமைகிறது. '0' எண்களெல்லாம் நூற்றுக்கு எண்பது ஆகும் விந்தை நாகரிகம் வாழ்வின் மேற்படி. இப்படிப் படிக்காததை யெல்லாம் படிப்பதாக நினைக்கும் கல்லூரி—பள்ளி வாழ்வு கழிந்த பின், பெரியவர்களுக்கு எத்தனை எத்தனை வேண்டாத பத்திரிகைகள்—கெடுக்கும் கதைகள்—கவர்ச்சிகரமான படங்கள்—பாடங்கள் உருவாகின்றன! இவற்றையா வள்ளுவர் படிக்கச் சொன்னார்? அவர் சொன்னதைப் படிக்காத காரணத்தினால் நாட்டில் நல்ல கல்வியுமில்லை; அறிவும் இல்லை.

கற்று அறிந்தவர் எப்படிச் சமுதாயத்தோடு ஒன்றி வாழவேண்டும் என்பதை வள்ளுவர் விளக்குவார். கற்று

அறிந்தார் உலகம் வாழத் தாம் வாழ்பவர்—உலகம் வாட அதற்காகத் தாம் வாடுபவர் - உலகம் இன்புறத் தாம் இன்புறுவர். 'தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' (399) என்பது அவர் காட்டிய வழி. 'கற்றார்' என்னாது 'கற்றறிந்தார்' என்று பின் காண இருக்கும் அறிவுக்கு விளக்கமாக முன்னரே இதைச் சுட்டுகிறார். ஆம்! கல்வியும் அறிவும் எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்று அறியா நல்ல நெறியில் மக்களை - சமுதாயத்தை - உயிரினத்தை அழைத்துச் செல்வனவாகும்.

இன்றைய கல்வி இதையா உணர்த்துகின்றது? நல்ல கல்வி அமையாக் காரணத்தால் 'அறிவு'ம் நிலை கெடுகிறது.

இன்றைய கல்வி மற்றவர் வாழத் தாம் வாழும் நெறிக்கு மாறாக, மற்றவர் வாடத் தாம் வாழும் நெறிக்கல்லவா வழிகோலுகிறது. ஒரு பதவிக்கு, நாளிதழில் விளம்பரம், படித்தவர் வேண்டும் எனக் கேட்டு வருகிறது எனக் கொள்வோம். அதற்கு ஆயிரம் படித்தவர்கள் விண்ணப்பம் செய்வர். இருப்பது ஓர் இடம்; நேர்முகத் தேர்விற்கு வர அனுமதி பெற்றவர் ஐம்பதின்மர். அத்தனை பேர் உள்ளத்திலும் என்ன எண்ணம் உருவாகும்? மற்றைய தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பேரும்—நாற்பத்தொன்பது பேரும் கெட, நாம் மட்டும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம்தானே எழும். இன்றைய கல்வி அளிக்கும் மனப்பான்மைதானே இது! ஆக யாவரும் யாவையும் கெட, தான் ஒருவன் மட்டும் வாழ வேண்டும் என்பதற்காகவா—கொடிய சமுதாய அழிவுக்கு வழிகோலும் கல்விக்காகவா—கோடி கோடியாகப் பணம் செலவாகிறது. இது ஒரு மேற்கோள். இப்படிப் பல காட்டலாம். இவற்றையெல்லாம் கண்டுதானே

தாயுமான அடிகளார் 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என இருமுறை கூறி உண்மையைக் காட்டி வலியுறுத்துகின்றார். அமைச்சராகி இருந்த மணிவாசகப் பெருமானும் 'கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்' என முறையிடுகின்றார். எனவே வள்ளுவர் காட்டிய உலகு இன்புறக் காணும் கல்வி நாட்டில் மலரும் நாள் என்றோ அன்றே நாடு நாடாகும்; நாமும் மனிதராவோம். இந்த நற்கல்வியை நாட்டுக்கு அளித்தல் அரசின் கடமையே என்பதை உணர்த்தவே 'கல்வி' என்னும் பகுதியை அரசியலில் அமைத்துள்ளார்.

'அகல உழுவதிலும் ஆழ உழு' என்ற கொள்கையை அரசாங்கங்கள் பின்பற்ற வேண்டும். அகல உழுவதும் இன்றைய ஜனநாயக உலகுக்குத் தேவைதான். ஆனால் ஆழ உழுவது - அதனினும் முக்கியமானது. அப்போது தான் மனிதன் ஆறறிவு பெற்றவனாவான். இந்த 'கற்றனைத்து ஊறும் அறிவு' என்ற அறிவினை எவ்வாறு வள்ளுவர் விளக்குகிறார் என்பதைக் காண்போம். இது தான் இக்கட்டுரையின் அடிப்படை என்றாலும் அதன் மூலமாகிய தொடர்புடைய கல்வியைப் பற்றியும் அதன் அடிப்படையைப் பற்றியும் ஓரளவாயினும் அறிதல் நன்றெனக் கருதி இதுவரை கல்வியைப் பற்றி எண்ணினேன். இனி, அறிவு பற்றி வள்ளுவர் காட்டும் விளக்கத்தினைக் காண்போம்.

வள்ளுவர் கல்வி, கேள்வி, கல்லாமை இவற்றினை அடுத்து அரசியலில் அறிவுடைமையை வைத்திருக்கின்றார். அந்த இயலில் அறிவின் கூறுபாடுகளையும் அதன் செயல்பாட்டு முறையினையும் அதன் ஆக்க நெறியினையும் அதைப் பெற்றார் கொள்ளும் நெறியினையும் அதனால் விளையும் பயன்களையும் அதனால் உலகுக்கு உண்டாகும் நன்மையினையும் பலவகைகளில் விளக்குகிறார். உரையாசிரியர்களும் எண்ணி

எண்ணிப் பல்வேறு வகைகளில் தெளிந்த விளக்க நிலைகளைத் தந்துள்ளனர். மேலும் பொருட்பாலின் அரசியலில் அறிவுடைமை என்ற அதிகாரம் அமைய, அதே பாலில் அங்க இயலில் புல்லறிவாண்மை என்ற அதிகாரத்தையும் இட்டு, ஆளும் அரசருக்கும் அல்லாத அங்கமாகிய உலகுக்கும் அந்த அறிவு அமையவேண்டிய வகையினையும் புல்லறிவினால் நாடு கேடுற்று நலிவதையும் சுட்டிக்காட்டுகின்றார். பின்னும் அறத்துப் பாலில் இல்லறம், துறவறம் என்ற இரண்டு இடங்களிலும் காமத்துப் பாலிலும் இந்த அறிவினைப்பற்றி வள்ளுவர் தொட்டுக்காட்டி, யாண்டும் எல்லார் வாழ்விலும் இந்த அறிவு சிறந்து இருக்கவேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்துகிறார். மேலும் நாற்பதுக்கும் மேற்பட்ட வகைகளில் இந்த 'அறிவு' என்னும் சொல்லைப் பலப்பல விடங்களில் எடுத்தாளுகிறார். அறிதல், அறிகிலார், அறிந்தார், அறியார், அறியாமை, அறிவது, அறிவன், அறிவாளன், அறிவான், அறிவினார், அறிவின்மை போன்றவை அவற்றுள் சில. எனவே உலகம் வாழத் தம் நூலை இயற்றிய வள்ளுவர் இந்த அறிவுக்கே முதலிடம் தந்துள்ளார் என்று கொள்ளல் பொருந்துவதாகும். அதனால் அதுபற்றி நாமும் எண்ணிப் பார்த்தல் அவசியமாகின்றது.

அறிவு என்பது என்ன என்பதை ஒருசில குறள்வழி வள்ளுவர் நமக்கு விளக்குகிறார். ஏதோ படித்தோ படிக்காமலோ பட்டங்கள் பெற்று, அதனால் தம்மை அறிவுடையராகக் கருதிக்கொள்வாரை நோக்கி வள்ளுவர் 'தம்பி, தருக்கி நிற்காதே! நீ நினைப்பதுபோல அறிவு அந்த எல்லையில் நின்றுவிடுவதன்று; கற்றனைத்து அறிவு என நான் சொன்னது உண்மைதான். ஆனால் நீ கற்பவை கற்கவில்லை: ஆகவே அறிவுடையவனுமில்லை. மற்றும் அது அறிவின் அடிப்படைதான். அறிவு எல்லையற்றது; பரந்தது; அளவிட முடியாதது. அனைத்து ஆக்க நெறிகளுக்கும் அரணாவது. இதோ அறிவினைப் பற்றிக்

சில சுட்டுகிறேன். அறிந்துகொள்' என்று கூறுவார் போன்று பின்வரும் குறட்பாக்களை வைக்கிறார்.

**' சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு '** (422)

**' எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு '** (423)

**' எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு '** (424)

**' உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு '** (425)

**' எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு '** (426)

என்பன அவர் தம் வாய்மொழிகள்.

இவற்றிற்கு முன்னாக அறிவு, தன்னை உடையானை அழிவு வராமல் காப்பதோடு மாற்றாரால் செய்யப்படும் எந்தக் கொடுமையையும் தடுத்துக் காக்கும் என்று அறிவின் ஆக்க நெறியைச் சுட்டிப் பின்பே மேலே கண்ட ஐந்து குறள்களிலும் அறிவு என்பது என்ன என விளக்கு கிறார்.

'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்'— என்றார் அறிவுடையார்—உலகநாதர். ஆம்! அந்த நல்ல நெறி அறிவால் வருவது; தீமையை விலக்கி நல்லதன் நலம் காண நம்மைச் செலுத்துவது அறிவு. மேலும் பலர் பல வகையாகப் பலப்பல பொருள்களைப் பற்றிக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் மறைத்தும் பேசுகின்ற உலகில் அக் கூற்றுக்களை எண்ணி ஆய்ந்து மெய்ப்பொருள்களைக் காண்பதுதான் அறிவு என்கிறார். 'பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே' என்று அதிவீரராம பாண்டியர் அடித்துச் சொல்லுவது

போன்று, பலர் பலவகையில் பேசுவதைத் தேர்ந்து தெளிந்தாலன்றி வையத்து வாழ்வாங்கு வாழ முடியாது. அத்தேர்ந்த தெளிவைத் தருவது அறிவாகும். பின் தாம் சொல்வதைக் கூட்டியும் குறைத்தும் சொல்லாமல் தெளிவாகவும் மற்றவர்களுக்கு விளங்குமாறும் சொல்லுவதோடு, பிறர் கூறும் நுண்ணிய பொருள் பற்றிய சொற்களையும் ஆய்ந்து உணர்தலும் அறிவாகும் என்கிறார். மற்றும் அவற்றிற்கெல்லாம் மேலாக அடுத்த இருகுறள்களிலும் அறிவின் செயற்பாட்டினை விளக்கு முகத்தான் வள்ளுவர் உயர்ந்தோராகிய உலகத்தாருடன் கலந்து பயின்று உற்றாராகி அந்த நிலை என்றும் குறையாத வகையிலும் கூடுதலாகி, மற்றவர்க்குத் தீங்கு செய்யாவகையிலும் அமைவது எனக்காட்டுகிறார். ஒட்பம், அறிவு என்பன ஒரு பொருள் சொற்கள். எனவே 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றபடி அந்த உயர்ந்தோர் காட்டும் வையத்தை வாழ வைக்கும் நெறியில் ஒழுகி நின்று—அந்நெறியில் தாழாமலும் தருக்குற்று அழியாமலும் ஒருபடித்தாக நின்று—அவ்வுலக ஒழுகலாறு நிலைகெடாமல் பார்த்துக்கொள்வதே நல்ல அறிவாகும். அந்த நெறி தீதில் நெறியாக அமைவதையும் அதை உலகோடு தழுவிப் போற்றுவதையும் வற்புறுத்துவதற்கென்த் தீதொரீஇ, தழீஇயது என இரண்டிடத்தும் வள்ளுவர் அவற்றை உயிரளபெடையிட்டு உயர்த்திக் காட்டுகிறார். அளபெடை அசை நிறைக்க வருவதாக இலக்கணப் புலவர்கள் கொள்ளலாம். ஆனால் வள்ளுவர் பாடல்களில் அசையோ அசை நிறைவோ இல்லை என்பதையும் ஏகாரம் ஓகாரம் போன்ற அசைகளும் அளபெடைகளும் ஆழ்ந்த பொருட் செறிவுகளை உணர்த்துவனவே என்பதையும் கற்றோர் அறிவர். இந்த உலகம் தழுவும் நெறியினை இங்கே சுட்டிய வள்ளுவர், தழுவாதவர் உலகில் மக்களாக அன்றி அலகையாக—பேயாகத் திரிவர் என்பதைப் பின் புல்லறிவாண்மை

என்னும் அதிகாரத்தில் குறிக்கிறார். 'உலகத்தார் உண்டென்ப இல்லென்பான் வையத்துள் அலகையாய் வைக்கப்படும்' (850) என்பது அவ்வதிகாரத்து இறுதிக் குறள். அதே அதிகாரத்திலே மேலே காட்டிய அறிவு இல்லாதவன், பிற வகையான பல செல்வங்களையும் மலை போலப் பெற்றிருந்தாலும், வறியவன் எனவும் வள்ளுவர் கூறத் தயங்கவில்லை. 'அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை இன்மையா வையாது உலகு' (841) என்பது அவ்வதிகாரத்து முதல் குறள். எனவே முதலும் ஈறும் இவ்வாறு அமைய அந்த அதிகார முற்றிலும் அறிவில்லாதவனால் உலக வாழ்வு எவ்வாறு பேய் வாழும் காடாக மாறும் என்று சுட்டிப் பின்னர் அங்கவியலிலே புல்லறிவாண்மை இல்லையாக வேண்டி, முன்னர் அரசியலில் காட்டிய நல்லறிவு தழைக்க நாட்டில் நல்லவர்—நாடாளுபவர் முயற்சி செய்ய வேண்டுமென வற்புறுத்துவர் வள்ளுவர்.

இவ்வாறு அறிவினைப் பற்றிச் சொல்லிய வள்ளுவர் அதன் திறனையும் தன்மையினையும் அதனை உடையவர் செயல் திறமையினையும் வேறு பல இடங்களில் விளக்கிக் கொண்டே செல்லுகின்றார். அவற்றைக் காண்பதன் முன், அறிவின் எல்லையை வள்ளுவர் தம் அறிவின் திறத்தால் எவ்வாறு காட்டுகிறார் என்பதைக் காணல் நலம் பயப்பதாகும். கருத்தொருமித்த காதல் வாழ்வே எல்லா உயிர்க்கும் இயைந்த வாழ்வு அன்றோ! அந்தக் காதல் வாழ்வினைப் பின் காமத்துப்பாலில் சுட்டி விளக்கும் வள்ளுவனார் அங்கே அறிவின் அளவிலா எல்லையினைக் குறிக்கின்றார். 'உயிர்தவச் சிறிதே காமமோ பெரிதே' என்றபடி அமைந்த அக் காமத்தைச் சுட்டுவதற்கென, அதனினும் பெரிதாக உள்ள அறிவையே வள்ளுவர் உவமையாகக் கொள்கிறார். மேலும் முந்திய உவமை வழியே அக் காதல் வாழ்வும் மேலே நாம் கண்ட நல்ல

அறிவு இன்றேல் சிறவாது என்பதையும் சுட்டாமல் சுட்டு கிறார். தனிமனித வாழ்வாகிய காதல் வாழ்வில் மனிதன் தன்னை மறக்கவும் கூடும்; தரணியை எண்ணாது ஒதுக்கவுங் கூடும் எனக் கருதிய வள்ளுவர் அங்கே அதனைத் துய்க்க அவனை ஆற்றுப்படுத்தி, அதேவேளையில் அதனினும் மேலாகிய அறிவு நிலை திரியாதிருக்கவேண்டிய அறநெறியினையும் விளக்குகிறார்.

> ' அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
> செறிதோறும் சேயிழை மாட்டு '
>
> (1110)

என்று புணர்ச்சி மகிழ்தலின் உச்சியில்—இறுதிப் பாட்டாக இதை வைத்துள்ளார். வைய வாழ்வாகிய காதலின்பத்தின் எல்லையில் இரண்டறக் கலந்து நிற்கின்ற அவர்கள், அதே வேளையில் உலகத்தோடு ஒட்ட ஒழுகும் கடமை உணர்வையும் அறிவையும் பெற வேண்டும் என்பது அவர் கருத்து. மேலும் இதில் அறிவின் எல்லை சுட்டப்பெறு கின்றது. இக் குறளுக்கு உரையாசிரியர்கள் 'அறிய அறிய முன்னைய அறியாமையைக் காண்டற்போல' என உரை எழுதிப் பின்னதற்கு விளக்கம் காண்பர். தொல்காப்பியப் பொருளதிகாரம் 146 சூத்திரத்திலும் நச்சினார்க்கினியர் இதே வகையில் உரை காண்கிறார். எனினும் குறள் உரை கண்ட காளிங்கர் 'அறியுந்தொறும் அறியுந் தொறும் மற்றது ஒழிந்த நன்னூலும் அவ்வாறு கற்று இனிது அறியப் பெறாமையாகிய விரும்புதல்' என்று கூறிக்கழிந்த அறியாமை மட்டுமன்றி மேலே காணப்பெறாது நிற்கின்ற அறியாமையினையும் சுட்டுகிறார். காதல் வாழ்வாம் உவமேயமும் அப்படியேயாம். இந்தக் குறள் களவொழுக்கத்தில் முதல் முதலாகத் தலைவன் தலைவியைக் கூடும் நிலையில் கூறப்பெறுகின்றது. எனவே அறியாமை இனித் தொடர்ந்து அவர்மாட்டுத் தான் பெறும் இன்பத்தினையே அது குறிப்பதாகும். அப்படியே அறிவு தன்னை அறிய அறிய இன்னும் அறியாத பெரு

நிலையில் உள்ளதையே உணர்த்துவதாகும். அன்றி முன் அறியாமையைப் பற்றி வியத்தல் இரண்டிடத்தும் பொருள் சிறவாததாகும். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காணுதல் ஏற்புடைத்தாகும் என எண்ணுகிறேன்.

ஆரம்பப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் பயிலும் ஒருவன்—தான் சட்டாம்பிள்ளையாய்—மாணவர் தலைவனாய் இருக்கும்போது அங்குள்ளவர்களில் தானே மெத்தப் படித்தவன்—உயர்ந்தவன் என்ற தருக்கினைக் கொள்வான். ஆனால் அடுத்து அவன் உயர்நிலைப் பள்ளியில் கால்வைத்து ஆறாம்வகுப்புப் பயிலத்தொடங்கி அறிவு வளரப்பெறும்போது தன்னை மேலே நிற்கின்ற பல மாணவர்களோடு ஒப்பிட்டு எண்ணித் தன் அறியாமைக்கு நாணுவான். அப்படியே அவன் பத்தாம் வகுப்போ பன்னிரண்டாம் வகுப்போ படிக்கும்போது—மாணவர் தலைவனாக நிற்கும்போது—தானே உயர்ந்தவன் என மறுபடியும் தருக்குக்கு உள்ளாவன். ஆனால் மறுபடியும் அவன் கல்லூரியில் கால்வைத்து முதல் படியில்—முதல் வகுப்பில் பயிலும்போது மேலே அங்குள்ள பல்வேறு வகை கல்விப் பிரிவுகளையும் அவற்றில் பயிலும் மேல் வகுப்பு மாணவர்களையும் காணும்போது, இன்னும் தான் அறிவு எல்லையைத் தொடக்கூட இயலாது நிற்கின்ற நிலையினையும் அதன் விரிந்த எல்லையினையும் வியந்து வியந்து போற்றுவான். எனவே அறிவு, அறியா நிலையில் அது விரிந்து செல்வதைக் காண இயலும்.

உலகில் கண்ணுக்குத் தெரியும் பொருள்களைக் காணும்போது, காண முடியாததைத் தன் கூரிய கண்ணால் கண்டு ஒருவன் தான் மிக அறிந்தவனாக நினைக்கிறான். அதே வேளையில் தன் கண்ணுக்கு எட்டாத தொலைதூர உணர்வினால் அறிவு விரிந்தது எனவும் உணர்கிறான். அவனுக்கு ஒரு சிறுதொலை நோக்கி கிடைத்தால் முன் தான் கண்டதைவிட அதிகமாகப்

பலவற்றைக் காணும் அறிவைப் பெறுவான். ஆனால் அதே வேளையில் இன்னும் கண்ணாலே காண முடியாத நெடுந்தூரம் அதிகமாக உள்ளமை அவனுக்குப் புலனாகின்றது. முன் தன் கண்ணால் ஐந்து கல் தொலைவு கண்டவன் சாதாரணத் தொலை நோக்கியால் ஐம்பது கல் காண்கிறான். (கல் என்பது எல்லையைச் சுட்டும் ஒரு சொல்லாகக் கொள்க). ஆனால் காணாததாக ஐந்நூறு கல் அவனுக்குத் தெரிகிறது. உடனே மற்றொரு பெருந் தொலை நோக்கி கொண்டு ஆராய ஐந்நூறு கல்லும் தெரிகிறது; ஆனால் தெரியாதது ஐந்தாயிரம் கல்லாக விரிகிறது. இப்படியே புதிது புதிதாகப் பலப்பல காணக் காண, காணாத நெடுந்தொலைவு விரிந்து பரந்து மிகப் பல வகையில் வளர்ந்துகொண்டே இருக்கிறது. வான வரம்பினை எட்டிப் பிடித்ததாக ஏமாக்கும் இன்றைய மனிதன் என்னதான் முயன்றாலும் என்றும் அண்ட கோளத்தை அளவிட்டோ அறுதியிட்டோ காண முடியாது. இதை விஞ்ஞானம் மெஞ்ஞானம் இரண்டும் மெய்ப்பிக்கின்றன. அறிவும் இத்தகையதே. எனவேதான் வள்ளுவர் 'அறிதோ றறியாமை கண்டற்றால்' எனக் கூறினார். இதனால் அறிவின் பரந்த நிலையினை ஒருவாறு நாம் அறிதல் கூடும். இப் பரந்த அறிவைப் பாரில் வாழ் மக்களோடு தொடர்புபடுத்தித்தான் அறிவுடைமை என்ற அதிகாரத்தின் பத்துக் குறளையும் வள்ளுவர் எழுதினார்.

இனி, இந்த அறிவுடையான் செயலே சிறந்ததாகவும் தெளிந்ததாகவும் தேவைக்கு ஏற்றதாகவும் அமையும் என்பதை வள்ளுவர் பலவிடங்களில் சுட்டாமல் இல்லை.

**'அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**
**நன்குடையான் கட்டே தெளிவு'** (513)

என்றும்,

**'அறிந்தாற்றின் செய்கிற்பாற் கல்லால் வினைதான்**
**சிறந்தானென் றேவற்பாற் றன்று'** (515)

என்றும் தெரிந்து வினையாடல் என்ற அதிகாரத்துள் தெரிந்து தெளிந்து செயலாற்றத் தகுதியுடையார் இந்த அறிவினையும் அதனோடு சார்ந்த அன்பு, தேற்றம் போன்றவையும் உடையவரே எனக் காட்டுவர். மேல் 513ஆவது குறளில் நான்கின் இன்றியாமையினைச் சுட்டிய ஆசிரியர், அந்நான்கனுள் சிறந்தது-உயர்ந்தது என்பதைக் குறிக்கவே 515இல் அறிவினை மட்டும் அறுதியிட்டுக்காட்டு கிறார். இதை அரசியலிலே அமைத்து, நாடு நாடாக வேண்டுமானால் நல்ல அரசு தேவை என்பதையும் அந்த நல்ல அரசுக்கு அறிவுடைமை வேண்டும் என்பதையும் முன்னே முறையாகச் சுட்டி, அரசின் செயற்பாடு களுக்கு இந்த அறிவே அடிப்படை என இந்த அதிகாரத்திலும் சுட்டுகிறார். அப்படியே பின் அங்க இயலிலும் 'தூது' என்னும் அதிகாரத்தில்,

> **' அறிவு உரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றும்**
> **செறிவுடையான் செல்க வினைக்கு '**
>
> (684)

எனக் காட்டுவர். எனவே எத்தகைய செயலாயினும் அறிவு இன்றேல் பயனில்லை என்பதை உணர்தல் வேண்டும். இதை வள்ளுவர் இன்னும் பல விடங்களில் சுட்டுவர். விரிப்பிற் பெருகும்.

இனி, இந்த அறிவு உலக வாழ்விற்கு இன்றியமையாத ஒன்று என்பதையும் அது அறத்தொடு சார்ந்த ஒன்று என்பதையும் அறத்துப்பாலில் துறவறத்தும் இல்லறத்தும் வள்ளுவர் தெள்ளத்தெளியக் காட்டுவதோடு, அறிவுடைமை அறத்திற்கேபயன்படவேண்டும்என்பதையும் அதுவே பல்வேறாகப் பாரித்துப் பரந்து கிடக்கும் அறிவு நெறிகளில் சிறந்தது என்பதையும் திட்டமாகப் புலப் படுத்துகின்றார் என்ற ஒன்றினை மட்டும் கண்டு அமைவோம்.

நம் சமய நெறியும் தத்துவ நெறியும் இன்றைய விஞ்ஞான நெறியும் உயிர்கள் அனைத்தும் சமம் என்றே உணர்த்துகின்றன. நாம் முதலிலேயே தொல்காப்பியர் காட்டிய உயிர் வளர்ச்சி புலன் அறிவு அடிப்படையில் அமைவதைச் சுட்டிக் காட்டியுள்ளோம். எனவே உயிரினம் வாழ வழி காண்பதே சான்றாண்மையும் அறிவும் அறமும் உடையார்தம் செயலாக அமைய வேண்டும். எவ்வுயிரும் 'பராபரம் சந்நிதியாகும்' என உணர்ந்து 'எவ்வுயிரும் தம் உயிர் போல் எண்ணி இரங்கும்' நிலை பெறுவதே மனிதனாகப் பிறந்து ஆறு அறிவும் பெற்ற பயனாகும். தம்மை ஒறுத்தார்க்கும் நலம் செய்யும் தன்மையை வள்ளுவர் பலவிடங்களில் சுட்டுகின்றார். அறிவு அந்த நெறியில் மனிதனை ஆற்றுப்படுத்தும் ஒன்றாக அமைகின்றது. அந்த அறிவுதான் அறிவு வகைகளிலெல்லாம் சிறந்த அறிவாகும். படிப்பாலும் பிறவற்றாலும் பெறுகின்ற—அறிவினுளெல்லாம் தலையாயது—சிறந்தது - வையத்தை வாழ வைப்பது அத்தகைய மெய்யறிவேயாகும். வாழும் உயிர்களின் நிலையறிந்து அவற்றை ஓம்பி - அவை நமக்குத் தீங்கிழைத்தாலும் மறந்து—அவை வாழத் தாம் வாழ நினைப்பதே நல்ல அறிவு என்பதை வள்ளுவர் இல்லற இயலிலே—அறத்துப் பாலிலே—தீவினை அச்சம் என்னும் அதிகாரத்திலே தெளிவாகக் காட்டிவிடுகிறார்.

**' அறிவினுள் எல்லாம் தலை என்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல் '**

(203)

என்பது அவர் வாக்கு. இதனால் அறிவின் நிலையும் திறனும் வகையும் பிறவும் பலப்பலவாக அமையினும், அவற்றிற்கெல்லாம் தலையாய அறிவு, தமக்குத் தீங்கு செய்தவருக்கும் பதில் தீமை செய்யாததுடன் அவர்கள் செய்த கொடுமைகளையும் மறந்துவிடல் என்னும் உயரிய

பண்பே ஆகும் என்ற உண்மையைத் தெளிவாகக் கூறி விட்டார் வள்ளுவர். எனவே இத்தகைய நல்ல பண்பு இலாதவரை அறிவுடையார் எனல் வேண்டா என்பது அவர் கருத்து.

இல்லற நெறி கருதி இவ்வாறு பிறர் செய்த தீமையை மறந்து அவர்களுக்கு மாறு செய்யாத ஒன்றினை அறிவினுள் சிறந்த அறிவாகச் சுட்டுகிறார் வள்ளுவர். துறவறவியலில் அதனினும் ஒரு படி மேலே சென்று இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில்,

**'அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய்போல் போற்றாக் கடை'**

(315)

எனக் குறிக்கிறார். மேலே இல்லறவியலிலே 'செறுவார்க்கும்' என்று உயர்திணையைச் சார்த்திச் சொன்ன வள்ளுவர், இங்கே அஃறிணையினையும் உட்படுத்திப் 'பிறிதின்' என்று கூறி விளக்குகிறார். எனவே எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் ஒத்து நோக்கி அவற்றிற்கு வரும் துன்பத்தினைத் தம் துன்பமாக எண்ணும் நல்லோரே அறிவுடையார் என்பது துணிவு. இதே துறவறத்தில் மெய்யுணர்தல் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' (355) எனச் சுட்டிக் காட்டியுள்ளார். இது நாம் முன்னே அறிவுடைமை அதிகாரத்தில் சுட்டிய 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்' என்ற குறளுக்கு ஒப்ப அமைகின்றதாயினும், முன் காட்டியது சொல்லால் காணும் திறனைக் குறிக்க, இது அப்பொருளின் முழுத் தன்மையினையும் காணும் திறனாக அமைகின்றது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது, வள்ளுவர் 'கற்றனைத் தூறும் அறிவு' என்று கூறினாராயினும் அது ஒன்றை மட்டும் அறிவாகக் கொள்ளவில்லை என்பதும் அக் கற்றலும் 'கற்பவை' யாக

அமையவேண்டும் என்பதும், அக் கல்வி அறிவு முதற்படியே என்பதும், அந்த அறிவின் நிலை வளர வளரப் பல்வகையாகப் பல்கிப் பெருகி எல்லையற்ற இறையருளைப் போன்று எல்லைக்கு அப்பாற்பட்டு விரியும் ஒன்று என்பதும், அதன் திறனையும் வகையையும் செயலையும் பயனையும் அறிவார் மிகச் சிலரே என்பதும், அப்படி அறியவல்லவரே, 'அறிவுடையார்' என்பதும், அவர்கள் அறிய அறிய இன்னும் அறியாப் பெருநிலையினை எண்ணி வியப்பர் என்பதும், அந்த அறிவுடையார் எல்லா உயிர் களையும் ஒத்து நோக்கிப் பிறர் துயர் தம் துயராக நினைத்து உண்மை உணர்ந்து, நல்லதையும் அல்லாததையும் பகுத்துணர்ந்து, நாடு வாழ நல்லதையே செய்து மாற்றாரையும் மதித்து அவர்க்கும் நலம் செய்து என்றும் எங்கும் இன்பம் நிலவ வழி காண்பவர் என்பதும் நன்கு புலனாகும்! அத்தகைய நல்லவர் நாட்டிலும் உலகிலும் அருகிய காரணத்தாலேயே யாண்டும் அல்லலும் அவதியும் மிக்குள்ளதென்பதைக் காண்கின்றோம்.

எனவே நாடும் நானிலமும் வாழ வேண்டுமாகையால் அத்தகைய நல்லறிவாளர் நாட்டில் வாழ—வளர—வழிகாட்ட வகை செய்ய வேண்டும். அத்தகைய நல்ல பண்பாளர்—அறிவாளர்—திருவாளர் கி. பழநியப்பர் அவர்தம் பவளவிழா நடைபெறுவதறிந்து மகிழ்கின்றேன். அவரைப் போன்ற பல நல்லறிவாளர் நாட்டில் தழைத்து நாட்டையும் நானிலத்தையும் வாழவைக்க முற்படுவாராக!

# 5. எது உரைநடை ?

உரைநடை என்பது என்ன? அதன் விளக்கம் யாது? உரைநடை என்பது தொடர் மொழி. உரை ஒரு சொல்; நடை ஒரு சொல். உரையானது நடந்து செல்லும் நெறியே உரைநடையாகின்றது. பல்வேறு சந்தங்களுக்கும் தாள அமைதிக்கும் ஏற்பப் பாவி நடக்கும் பாவினும் வேறுபடுத்த வேண்டி இதை உரைநடை என்று வழங்கினார்கள் எனக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். 'உரை' என்னும் சொல் தமிழில் நெடுங்காலமாகவே வழக்கத்தில் இருந்து வருகின்றது. உரை என்பது எழுத்துக்கள் வரிவடிவாய் அமைந்து ஒலி வடிவாய் அவற்றின் தன்மையை விளக்க வருவது என்றுதான் பலரும் பொருள் கொள்கின்றனர். உரைக்கப்படுவதால் உரையாயிற்று என்பர். அதாவது, வாயினால் ஒன்றைப் பற்றிப் பொருள் தோன்ற உரைப்பதே உரை எனக் கொண்டனர் எனலாம். எனினும், வெற்றொலியை இச்சொல் குறித்த காலமும் ஒன்று உண்டு போலும்! உரை என்பது வெறும் முழக்கத்துக்கும் வழங்கிய ஒரு சொல் எனக் காண்கிறோம். மேகங்கள் மலையுச்சியில் சூழ்ந்து இடித்துப் பேரொலி எழுப்புவதை இன்றும் கேட்கின்றோம். அந்தப் பேரொலியாகிய முழக்கத்தையும் பழங்காலத்தில் உரை என்றே வழங்கினார்கள். 'குன்றம் குமுறிய உரை' என்பது பரிபாடல் அடி.1 எனவே, அக்காலத்தில் ஒலியும் முழக்கமும் உரையாகப் பேசப்பட்டன என அறிகிறோம்.

'உரைக்கப்படுபவைவெல்லாம் உரையாயின், பாட்டும் வாய்திறந்து உரைக்கப் படுவதுதானே? அதையும் கொள்ள

1. பரிபாடல் 8 : 35

லாமோ?' எனின் அவ்வாறு வழக்காறு இன்மையின், கொள்ளுதல் பொருத்தமாகாது என்று முடிவு செய்தல் வேண்டும். சிலப்பதிகாரத்தை 'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று கூறுவதும் அது பற்றியேயாம். உரை, பாட்டிலும் வேறுபட்டது என்பதை இத்தொடர் நன்கு விளக்குகின்றதன்றோ? இனி உரை பாட்டிலும் வேறுபட்டதாயினும், அதையும் செய்யுளில் அடக்கலாம் என்பர் சிலர். அவர்தம் கருத்துக்கு ஏற்பவே ஆசிரியர் தொல்காப்பியரும் உரையினைச் செய்யுளினுள் அமைத்துள்ளமை நோக்கற்பாலது. செய்யப்படுவன வெல்லாம் செய்யுள். எனவே பாட்டாகச் செய்யப்படுவன பாட்டுச் செய்யுளானபடி, உரையால் செய்யப்படுவன வெல்லாம் உரைநடைச் செய்யுள் என்று கொள்ளல் பொருந்தும். சொற்குப் பொருள் கூறும் நூல்கள் 'செய்யுள்' என்னும் சொல்லுக்குப் பாட்டு, காவியம், உரை என்ற மூவகைப் பொருள்களும் உண்மையைக் குறிக்கின்றன.[1] உரைச் செய்யுள் (Prose Composition) என்னும் ஒரு பகுதியே உள்ளதாகச் சென்னைப் பல்கலைக் கழக அகராதி.[2] குறிக்கின்றது. எனவே, உரையும் ஒருவகைச் செய்யுள் தொகுதி எனக் கொள்ளலாம்.

உரை என்பது பொருளின் தன்மையை உள்ளவாறு உரைப்பதாகும். இதை விளக்க ஒரு சான்று பயன்படும். தட்டான் பொன்னுக்கு உரை காணும் வழக்கம் பல கட்டுப்பாடுகளுக்கிடையில், நம் நாட்டில் இன்னும் உள்ளதை அறிவோம். பொன் சிறந்ததா இல்லையா என்பதை—அதன் உண்மை நிலை, பண்பு, தரம் முதலியன இன்ன வகையன என்பதை—உரைத்துக் காண்பது நாடறிந்த ஒன்று. அதன் தன்மையை உணர்த்தும் கல்லுக்கு 'உரை கல்' என்றே பெயர் உண்டு அல்லவா? எனவே பொருள்களின் இயல்பை உள்ளது உள்ளவாறே

1. Tamil Lexicon, Vol. III, P. 1602
2. Tamil Lexicon. Vol. I, P. 452.

உலகுக்கு உணர்த்துவது உரையாகும். இதைத்தான் 'அடிப்படை மொழி' என்பர் ஆய்வாளர். கற்பனை கலவாததாய்—உணர்ச்சியோ, பிற உள்ள நெகிழ்ச்சி களோ, காய்தல் உவத்தல் என்ற வேறுபாடுகளோ கலவாததாய்—ஒரு பொருளின் தன்மையை உரையிட்டு உணரத்தக்க வகையில் காட்டுவதே உரை. (தட்டான் பொன்னை உரையிட்டுக் காட்டுவது போன்று) ஆனால் பாட்டோ இதற்கு நேர்மாறாக உணர்ச்சி, கற்பனை முதலியவற்றின் இடையிலே தோய்ந்து அணிநலம் முதலியன பெற்றுப் பாடுவோன் உள்ளத்தளவு உயர்வோ அன்றித் தாழ்வோ பொருந்தப் பொருளை விளக்குவ தாகும். இந்த உண்மையை மேலை நாட்டு அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். மொழி, இலக்கியம் இரண்டையும் வரையறுத்த ஆய்வாளர் எண்ணத்தை உணர்த்துவது மொழியென்றும் உணர்வை உணர்த்துவது இலக்கியம் என்றும் கூறுவர்.[1]

இவ்வாறு எழுத்துக்கு வரிவடிவம் கொடுக்கும் நிலையிலேயே 'உரை' உண்டாகியிருக்க வேண்டும் என்பது உண்மையன்றோ! உள்ளத்துத் தோன்றிய எண்ணத்தை மற்றவருக்கு உணர்த்த நினைத்த மனிதன் எண்ணி எண்ணி எழுத்தெழுத்தாக உச்சரித்து, சொல்லின் பின் சொல்லாக மெல்ல உரைத்திருப்பானன்றோ? எனவே முதலில் தோன்றியது உரை எனக்கொள்ளல் பொருத்தமானதாகும்.

பாட்டுக்கு அமைந்த இலக்கண வரம்பின்றி, மக்களால் எளிமையாக ஒளிவுமறைவு இன்றி எழுதவும் பேசவும் பயன் படும் ஒன்றே உரைநடையாகும். செய்யுளிலிருந்து உரை நடையைப் பிரித்துக் காட்டுவது எளிதாயினும் இன்னும் திட்டமாக இரண்டையும் வரையறுக்க இயலாது. ஏனெனில் உயர்ந்தநடையில் செய்யுள் இலக்கணத்தோடு கலவாமலே நல்ல ஓசைநயத்துடன் எழுதும் உரைநடையை

1. Winchester, P. 182

'உரைப்பாட்டு' என்று சொல்வதும் உண்டு. எனவே, செய்யுளிலிருந்து உரைநடையைப் பிரித்துக் காண்பதை விட்டு உரைநடை என்பதை உள்ளவாறு விளக்க முயலலாம். உரைநடை, என்பது, இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில், ஆழ்ந்த கருத்தோடு, செய்யுள் சந்தச் சேர்க்கை இன்றியே நல்ல ஓசை நயம் உடையதாகி, ஒளிவுமறைவு இன்றி உள்ளபடி உரை இட்டுக் காட்டும் வகையிலே நேரிய முறையில், கருத்துக்கும் காரணத்துக்கும் பொருத்தமானதாக (ஒன்றனைப் பற்றியோ, ஒருவனைப் பற்றியோ) விளக்கி உரைப்பதாகும்.

கட்டுக்கடங்காது பேசும் அல்லது எழுதும் சாதாரண எல்லா வசனங்களையும் உரை நடையாகக் கொள்வதாகாது. உரைநடை வாக்கியங்கள் இழுமென் மொழியால் நல்ல ஒழுகிசை நடையால், தொடர் நலமுடன் ஓசை உணர்த்தும் நெறியான், நன்கு வளர்ச்சியுற்ற தெள்ளிய நடையில் தெளிந்து செல்லுவனவாக அமைய வேண்டும்.[1] மொழிக்கு இன்றியமையாத பெயர் வினைகளுடன் சேரும் உரிச்சொற்களின் தகுதியும் அளவறிந்து அவற்றைச் சேர்த்து வழங்கும் முறையும் உரைநடையில் வரையறை செய்யப்பெறல் வேண்டும். தேவையற்ற சிலவற்றை விட்டொழித்தலும் உரைநடைக்கு இன்றியமையாதது. எனவே, உரைநடை என்பது செய்யுள் விதிகளுக்கு விலக்காய் நின்று இலக்கிய நலம் கெடா வகையில் மக்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உலகுக்கு எடுத்துக்காட்டப் பயன்படுவது என்று கொள்ளல் பொருத்தும்.[1]

உலக இலக்கிய வழக்கியல் அகராதி[2] உரைநடை என்பது சாதாரண சொற்கள் கொண்டு எளிமையில்

1. En. Britanica. Vol. 18, PP. 591 and 592.
2. Dictionary of world Literary Terms, P. 312.

உரைப்படுதென்றும், பாட்டு என்பது அதனினும் வேறுபட்டு எளிமையிலும் மாறுபட்டதென்றும் காட்டுகின்றது. இவ்வுரைநடை தமிழ்நாட்டிலும் தொல்காப்பியர் கால முதல் இருந்தது என்றாலும், அது எந்த வகையில் இயங்கிற்று என்பதை நாம் காண முடியவில்லை. என்றாலும், மேலை நாடுகளில் மிகவும் பழங்காலத்தி லிருந்தே உரைநடை தோன்றி வளர்ந்தது என்பதை அறிஞர் நன்கு காட்டுகின்றனர். மேலை நாட்டு மொழி களில் மிக்க பழமை வாய்ந்த கிரேக்க, இலத்தின் மொழி களில் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே உரைநடை வழக்கத்தில் இருந்தது என அறிகின்றோம். கிரேக்க மொழியில் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே உரைநடை இலக்கியம் இருந்ததாம்.[1] இலத்தீன் மொழியிலும் அவ்வாறே மிகவும் பழங்காலத்தில் (கி. மு. 70 அல்லது 60) உரைநடை இலக்கியம் இருந்தது எனக் காட்டுகின்றனர். அக்காலத்தில் உரைநடை கண்டவர் சிசரோ.[2] என்பவர். என்றாலும், ஆங்கில, ஜெர்மன் நாடுகளில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேதான் உரைநடைகள் தோன்றி வளர்ச்சி யுற்றன என்பர்.[3] கி. பி. 387இல் ஆப்பாட் என்பார் ஆங்கிலத்தில் உரைநடை எழுதினார். ஜெர்மன் மொழியில் கி. பி. 842இல் (The Age of Charlemagne) முதல் உரைநடை தோன்றிற்று.[4]

கதை வாயிலாக உரைநடையைக் காணும் ஹட்ஸன் அவர்கள் உரைநடையைப் பற்றி அதிகம் கூறவில்லை என்றாலும், இரண்டொரு கருத்துகளைத் தெளித்துச் சென்றிருக்கிறார். உரைநடையையும் நாடகத்தையும் ஒப்பிட்டுக் காட்டி, உரைநடை மிக எளிமையானது

1. En. Britanica, Vol. 12. P. 593
2. CICERO
3. En. Britanica, Vol. 18. P. 598
4. En. Britanica, Vol. 18. P. 598

என்கிறார்.[1] உரைநடைக் கதை நூல்கள் சிறியன வாயினும் பெரியனவாயினும், அமைப்பு, பாத்திரங்கள் நிலை, அவற்றின் பேச்சு முறை, செயலாற்றலின் காலமும் இடமும் கடந்த நிலை, நடைப்போக்கு, வாழ்க்கைக்குத் தேவையானவற்றின் உண்மையை உணர்த்தும் தன்மை ஆகியவற்றை முக்கியமாகக் கொண்டவையாக இருக்கவேண்டும் என்கின்றார்.[2] இவ்வாறு உரைநடை நூல்கள்—நாடகமாயினும், கதையாயினும், கட்டுரை யாயினும், வெறுஞ் சொற்களால் ஆக்கப்பட்டுப் பொருளற்ற முறையிலே செல்லாதனவாக, மக்கள் வாழ்வுக்கு ஏற்ற வகையிலே நல்ல பொருள் பொதிந்தன வாக, இனிமையும் எளிமையும் உடையனவாக, செம்மை நடையில் செல்வனவாக அமைய வேண்டும் என்ற உண்மையை அவர் மட்டுமன்றி வேறு மேலை நாட்டு அறிஞர் பலரும் வற்புறுத்தியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் இவ்வுரைநடை முன்தோன்ற நெடுங்காலத்துக்குப்பின் இவ்வுரைநடை போன்று அமைந்த சூத்திரங்கள்—நூற்பாக்கள்—தோன்றின. பின்னரே பாட்டுத் தோன்றிற்றுஎனல் பொருந்தும். பொதுவாகச் சூத் திரங்கள் உண்டான காலம் கிறித்துப் பிறப்பதற்கு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது ' என்பர் ஆய்வாளர்.[3] வடமொழிச் சூத்திரங்களும் ஏறக்குறைய அந்த நூற்றாண்டுகளில்தான் தோன்றியிருக்க வேண்டும். எனவே உரைநடையை அடுத்து இச் சூத்திரங்கள் தோன்றி

1. An Introduction to the Study of Literature, P. 130.
2. Ibid. 131
3. The General Period of Sutras (சூத்திரம்) extends from the sixth or Seventh Century B. C. to about the Second Century B. C. (Cambridge History of India—Vol. I. P. 227)

யிருக்க வேண்டும்.[1] தொல்காப்பியமும் ஏறக்குறைய இக்காலத்திற்குச் சற்றுமுன்பு தோன்றிய ஒன்று என்பது அறிஞர் பலரும் ஒருசேர ஏற்றுக்கொள்ளுகின்ற உண்மை யாகும். இனி, இத் தொல்காப்பியத்தின் செய்யுளியலில் உரையும் பாட்டும் உள்ள நிலைமை நம்மால் காண முடிகின்றது. மற்றும் இத்தொல்காப்பியத்தின் வழியே இதற்கு முன்னும் பல இலக்கிய நூல்கள் தோன்றி வாழ்ந்து வந்தன என்பதையும் உணரமுடிகின்றது. தமிழ் மொழியின் தொன்மை பல பேரறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற ஒன்றானமையால், இந்நாட்டுப் பிறமொழிகளைக் காட்டிலும் தமிழில் பழங்காலத்திலேயே உரையும், சூத்திரமும், பாட்டும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி வளர்ந்து வாழ, அவற்றைத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறி இலக்கண வரம்பினை உறுதி செய்தார் எனக் கொள்வது பொருத்தமானதாகும். எனவே உரைநடை பாட்டிலும் முந்தியது என்பது தேற்றம்.

மேலை நாட்டுப் பேரறிஞர்கள் தற்கால உரைநடை நூல்களை மூவகையாகப் பிரிக்கின்றார். அவைஅனைத்தும் சிறப்பாக உரைநடை இலக்கியங்களாகவே அமைகின்றன. வருணனை உரை,[2] விளக்கவுரை,[3] உணர்ச்சி உரை,[4] என்னும் மூன்று வகைகளே அவர் காட்ட விரும்புவன. ஒரு செயலையோ, ஒரு பொருளையோ, ஒரு மனிதனையோ

---

1. The Principle 'Dharmasutra'can hardly be dated from later than about 500 B. C. (History of Ancient India-By Prof. Tripathi in 'A History of Sanskrit Litsrature' P. 260).
2. Descriptive Prose
3. Explanatory Prose
4. Emotive Prose.

யற்றி ஆசிரியர் விளக்கி உரைப்பதே வருணனை உரையாகும். எவ்வாறு செயல்கள் நிகழ்கின்றன என்ற அறிவியல் ஆய்வுகளைக் கூறுவதும், திறனாய்வு முறைகளைக் காட்டுவதும் பொருளில் உள்ள சிறப்பியல்புகளை விளக்கிக் காட்டுவதும் விளக்க உரையாகும். துன்ப எல்லையிலோ, இன்பத்தின் பிடிப்பிலோ, மகிழ்ச்சிப் பெருக்கிலோ தம்மை மறந்தும் மீறியும் உரைப்பதே உணர்ச்சியுரை.

தமிழ் உரைநடை வளர்ந்தாலும் அதன் வரலாற்றைத் தொடர்ச்சியாக அறிய முடியவில்லை என்பதை எண்ணும் போது சற்றே வருத்தம் உண்டாகத்தான் செய்கிறது. எழுதப் பெற்ற, வரையறுத்த திட்டமான வரலாறு இல்லையாயினும் தமிழில் உரைநடை மிகப் பழங்காலத் தொட்டே தொடர்ந்து வாழ்ந்து வருகின்ற ஒன்று என்பதைக் காட்ட ஆதாரங்கள் உள்ளன. தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும் இருந்த உரைநடையை நம்மால் காண முடியாவிட்டாலும், அந் நூற்பாவாலும் அதன் உரைகளாலும், அவ்வுரையின் விளக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறிய, இன்றில்லாது அழிந்த சில நூற்பெயர்களாலும் (இராம சரிதமும், பாண்டவ சரிதமும், பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் போன்றன என்று தொல்காப்பிய உரையாசிரியர்களால் காட்டப் பெறுவன) உரை தொன்மை வாய்ந்ததே என உணர முடிகின்றது. மேலும் சங்க இலக்கியங்களுள் சில உரைநடையைப் போன்றே தனிச்சொல் பெற்றும் பெறாமலும் அமைந்து செல்வதையும் காண முடிகின்றது. கடைச்சங்க காலத்து இறுதி எல்லையில் தோன்றிய சிலப்பதிகாரத்திலேயே நம்மால் உரைநடையைத் தெளிவாகக் காண முடிகிறது. இதனாலேயே தொல்காப்பியச் சூத்திரத்துக்கு (செய்.228) உரை காண வந்த நச்சினார்கினியர் அதற்குச் சிலப்பதிகாரத்தையே மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப் போற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தில் உரை நன்கு போற்றப் பெறுகிறது என்றாலும், அடுத்த சில நூற்றாண்டுகளில், தமிழில் உரைநடை வழக்குப் பற்றிய விளக்கம் கிடைக்க வில்லை. எட்டாம் நூற்றாண்டினை ஒட்டிய 'இறையனார் களவியல் உரை'யே நமக்குச் சிறந்த உரையாகக் கிடைக் கிறது. அது பாட்டினும் கடு நடை உடையதாக உயர்தரத்ததாக உள்ளமை அறிவோம்.

அடுத்து, தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கும் பத்துப்பாட்டுபோன்ற இலக்கியநூல்களுக்கும் உரை கண்ட உரையாசிரியர்கள் தமிழ் உரைநடையினை வளர்த்தார்கள் எனலாம். பின் தொடர்ந்து உரைநடை தமிழில் வளர்ந்த தாயினும் இடையில் பலபல வேறுபாடுகளைப் பெற்றது.

இடைக்காலத்தில் 'மணிப்பிரவாளம்' என்ற வடமொழி பெரிதும் விரவிய உரை எழுதப்பெற்றது. நாலாயிரப்பிரபந்தஉரை அந்தவகையினதே. எனினும் அம் முறை இயற்கைக்கு மாறுபட்டமையின் அது வழக் கொழிந்தது. பிற்காலத்தில் பலநூல்களுக்கு உரைகளும் பல இலக்கியங்களுக்கு உரைநடை அமைப்பும் உண்டாயின. இடைக் காலக் கல்வெட்டுக்களும் உரைநடையை வளர்த்தன.

மேலைநாட்டவர் தமிழகத்துக்கு வந்தபோது உரை நடையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. பல உரைநடை நூல்கள் எழுதப்பெற்றன. விவிலிய நூல் உரைநடையில் மொழிபெயர்க்கப் பெற்றது. நாவல், நாட்குறிப்பு, சிறுகதை போன்றவை தோன்றின சென்ற நூற் றாண்டில் அரசாங்கப் பதிவேடுகளும், நாளிதழ் சிலவும் பிற கடிதப் போக்குவரத்துக்களும் தமிழ் உரைநடையில் அமைந்தன.

இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை மிகவும் வளர்ந்துள்ளது எனலாம். இதழ்கள், மலர்கள், நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள் மிகவும் மலிந்து உரைநடையில் வந்தன. அவற்றுள் சில வட மொழி அன்றி வந்த சில வேற்று மொழிகளை இடையிடை கலந்தன வாயினமையின் அவை வழக்கற்றுப் போகும் தன்மையிலே உள்ளன. நாம் முதலிலே கண்ட அமைப்பில் உள்ள தெள்ளிய, இனிய, பொருள் உரைக்கும் தமிழ் உரைநடையே—அதன்வழி வரும் உரைநடை நூல்களே காலத்தை வென்று வாழும் என்பது உறுதி.

# 2. அரசியலும் வரலாறும்

## 6. உலக நாடுகளில் தமிழர்

அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம் ஆரம்பித்த நாள் முதல் கூட்டத்தின்போது இன்றுதான் முதல்முதல் மழை பெய்து கொண்டிருக்கின்றது என்றார் திரு. பழநியாண்டி. நான் முதலில் தமிழ்நாட்டைக் கடந்து ஜெனிவா சென்றதும் மழையில்தான் தரை இறங்கினேன். பின், பாரிசிலும் தொடர்ந்து நான்கு நாட்கள் மழை பெய்து வெளியே செல்ல முடியாமல் இருந்தது. பின் இலண்டனில் மழையிலேதான் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்க நேர்ந்தது. அதுபோல அமெரிக்கா சென்றபோதும் மழையே. ஹாங்காங்கிலும் மழையிலேயே நனைந்து சென்றேன். ஆகவே, இறைவன் என் பயணத்தின்போது என் கூடவே கருணைமழையை அனுப்பிக்கொண்டிருந்தார் என்று நம்பி, அவரை நாள்தோறும் வழிபட்டு வருகின்றேன். எனவே இன்று மழை பெய்ததைப் பற்றி எனக்கு வியப்பில்லை.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள், நான் சென்ற பயணக் குறிப்புக்களை வைத்து சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவற்றில் சிலவற்றை இங்குக் கூற விரும்புகின்றேன். அயல் நாடுகளில் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்குப் பிரெஞ்சு மொழியை ஒட்டியும், ஆங்கில மொழியை ஒட்டியும் வகையான நல்ல தமிழ்ப் பாடங்களைத் தயாரிக்கலாம். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலச் செய்தி மடல்களையும் தமிழ் வெளியீடுகளையும் அங்கு அனுப்புதல் வேண்டும். தமிழ்க் கலாச்சரம் பற்றிய முனைவர் நம்பியாரூரன் தயாரித்துள்ள குறிப்புக்களை அச்சிட்டு அனுப்ப ஏற்பாடு செய்தல்

வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழக நூற்பட்டியலை மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் அனுப்புதல் வேண்டும். கற்பிக்க வேண்டிய பாடங்களை ஒலிப்பதிவு—ஒளிப்பதிவு செய்து நாடாக்களின் மூலம் அனுப்ப இயலும் என்னும் செய்தியைத் தெரிவிக்கலாம். இவற்றைப் பற்றி நான் உங்களுக்குக் கூறும் காரணம், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வழியேதான் நான் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டேன் என்பதே.

அமெரிக்க நாட்டிலே ஏழு பல்கலைக் கழகங்களில் தமிழ் உள்ளது. தென்கோடியிலிருக்கிற டெக்சஸ் (Texas) பல்கலைக் கழகம் தவிர, மற்ற ஆறு பல்கலைக் கழகங்களுக்கும் சென்றுவந்தேன். அவர்களில் சிலர் அழைப்பு அனுப்ப, அங்கு நடைபெறுகின்ற பணிகளையெல்லாம் கண்டுவர வேண்டும் என்று சொன்ன காரணத்தினால் தான் சென்று வந்தேன். செல்லும்போது நடுவில் ஐரோப்பிய நாடுகள் நான்கில் தங்கினேன். பின், திரும்பும் போது ஜப்பானுக்கும் சென்றேன். ஜப்பானில் தமிழ் இல்லாவிட்டாலும் தமிழைப் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. ஹாங்காங்கிற்கும் சிங்கப்பூர் நகருக்கும் சென்றுவந்தேன். மலேயாவிலிருந்தும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள்.

ஐரோப்பிய நாடுகளிலேயே நான் முதலில் சென்ற நாடு சுவிட்சர்லாந்து. அங்கு நாட்டு மொழிகள் மூன்று. அங்கே தமிழ் இல்லாவிட்டாலும் ஜெனிவா பல்கலைக் கழகத்தில்—பல்கலைக் கழகத்தின் புறத்தே உள்ள பொருட் காட்சிகளில் எல்லாம் தமிழர்களின் நாகரிகம் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. பொருட்காட்சியிலே மனித வளர்ச்சி பற்றியும், நிலவளர்ச்சி பற்றியும், மறைந்த லெமுரியா பற்றியும், மொகஞ்சோதாரா என்னும் இடத்தைப் பற்றியும் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

அதே போலக் கடிகாரத்தைப் பற்றிக் கடிகாரக் காட்சியிலே, நாழிகை வட்டில் எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளது என்பதைப் பற்றித் தனியாக நிறுவிக் காட்டிள்ளார்கள். அதில் நம் நாட்டு நாழிகை வட்டில் பற்றிய குறிப்பும் இணைந்துள்ளமை அறிந்தேன்.

பின் பாரிசில் நான்கு நாட்கள் தங்கியிருந்தேன், அங்கு ஈஸ்டர் விடுமுறை, ஆதலால் நான் எதிர்பார்த்த தமிழன்பர்கள் யாரும் வரவில்லை. பெரிய நூல் நிலைய மான பிரெஞ்சு நூல் நிலையத்திற்குச் சென்றேன். புதுச்சேரி விடுதலை அடைந்தபோது, அங்கிருந்து நிறையத் தமிழ் நூல்களைப் பாரிஸ் எடுத்துச் சென்று வைத்திருக் கிறார்கள். ஆனால் அவர்கள் அங்கே கொடுத்த நூற்பட்டியலில் தமிழ் நூல்கள் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. இரண்டு அகராதிகளைத் தவிர வேறு ஒரு நூலும் காணப்படவில்லை. மற்றவை எங்கே என்று கேட்டால் அவர்களுக்குச் சொல்ல வழி தெரியவில்லை.

பாரில் நகரில் நம் நாட்டுக் கோயில்கள் இருக்கின்றன. அங்கு நம் நாட்டு மரபுப்படி விழாக்கள் சிறப்பாக நடை பெற்று வருகின்றன. பாதாள இரயில்கள் இல்லை யென்றால் பாரிஸ், இலண்டன், நியூயார்க்கு போன்ற நகரங்கள் மிகவும் நிலைகெட்டுவிடும் என்றே கூறலாம். அவை இரண்டு நிமிடத்திற்கொரு முறை தங்கு தடையின்றி ஓடிக்கொண்டே இருக்கின்றன. ஒருநாள் பாதாள இரயிலில் நான் போய்க் கொண்டிருக்கும்போது, அன்பர் ஒருவர் 'நீங்கள் தமிழரா?' என்று தமிழிலே கேட்டார். வியப்புடன் திரும்பினேன். அவர் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர். சுதா என்னும் பெயரையுடைய அவர் எனக்கு இரண்டு நாட்கள் மிகவும் உதவியாக இருந்தார். அவர் தங்கியிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். மிகச் சிறிய அறை; அதற்கு நம் நாட்டு மதிப்பு ரூ. 3, 000/- வாடகை. அந்த அறையில் யாழ்ப்பாணத் தமிழர் ஐவர் தங்கியிருந்தனர்.

அந்த அறையில் திருவள்ளுவர் படம், பரந்த தமிழ் நாட்டுப் படம், பாரதிதாசனார் பாடல்கள் முதலியன இருந்தன. அவர் துணையினால் பாரிஸில் பிற பகுதிகளைச் சுற்றிப் பார்த்தேன்.

அடுத்து உரோமுக்கு வந்து போப்பாண்டவரை மிக அருகிலிருந்து பார்த்தேன். உரோம் நகரில் ஒரு தமிழ் ஒலிபரப்பு முறை இருக்கின்றது. இலண்டனில் இருப்பது பலருக்குத் தெரியும் பி. பி. சி. என்று; ஆனால் இது பலருக்கும் தெரியாது. அதனை நடத்துபவர் நம் ஊரைச் சேர்ந்த இராசன் என்பவர். அவர் ஒரு நேர்முகப் பேட்டிக்கு ஏற்பாடு செய்ய விரும்பினார். நேரமில்லாததால் குறிப்பு மட்டும் எழுதிக் கொடுத்தேன்.

அங்குள்ள சிற்பங்கள், அகழிகள், மதில்கள் ஆகியவற்றில் தமிழ்நாட்டுக் கட்டடக் கலையின் சிறப்பு உள்ளது. அங்குள்ள இடுகாட்டினைப் பார்த்தபோது அது எனக்குப் பழந் தமிழ் நாட்டு முறையை நினைவு படுத்தியது.

அங்கிருந்து இலண்டனுக்குச் சென்றேன். அங்கு இந்தியக் கிறித்துவ சங்கத்தில்தான் இரண்டு நாட்கள் தங்கியிருந்தேன். அதன் தலைவரும் செயலாளரும் தமிழ் நாட்டவர்களே. அங்கு இந்தியநாட்டு மாணவர்களுக்கு அருமையான தமிழ்நாட்டு உணவே தரப்படுகிறது. அவர்கள் நல்ல பயிற்சியும் பெறுகிறார்கள். தமிழ்ச் சங்கமும் உண்டு. அங்குள்ள தமிழர்களைத் தமிழ் வெறியர்கள் என்றே கூறலாம்.

அங்கே தமிழ்நாடு என்று பெயரிட்டு ஒரு படம் வரைந்திருக்கிறார்கள். திங்களிதழ் ஒன்றும் வெளியிடுகிறார்கள். திரு. வி. க. மலர் போன்ற பல மலர்களும் வெளியிடுகிறார்கள். மலர் ஒன்றில் பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்திரத்தின் பாடல்களைப் பாராட்டியுள்ளனர். அவரைப் பற்றித் தனியான கட்டுரை எழுதிப் படத்துடன் வெளியிட்டுள்ளனர். தமிழ் மரபினைக் காக்கவேண்டும்

என்று தமிழ் மொழியிலே பல கட்டுரைகள் எழுதி உரையிலே, பாட்டிலே விளக்கமாக வைத்துள்ளனர். புரட்சிப் பாவலர், அறிவியல் பாவலர் என்று மலர்கள் உள்ளன. இலண்டன் வானொலி நிலையத்தில் உள்ளவரும் தமிழர் தான். அங்கே தமிழ் ஒலி பரப்பப்பெறுகின்றது.

இலண்டன் பள்ளிக் கூடங்களில் தமிழ் கிடையாது. ஆனால் பல்கலைக் கழகத்தில் தமிழ் உண்டு. அங்குப் பள்ளிகளில் தமிழ் இல்லாததால் வாரந்தோறும் சனிக்கிழமையன்று தமிழ் மாணவர்களுக்கு ஓர் ஆங்கிலப் பள்ளியில் இடம் ஒதுக்கித் தமிழ் கற்றுக் கொடுக்கின்றனர். அங்குக் கற்றுத் தருபவர்களுக்கு அரசே நல்ல மானியம் கொடுக்கிறது. வருடத்திற்கு 14,000 பவுண்டு. இலண்டனில் பெரும்பாலான தமிழர்கள் சொந்த வீட்டிலிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கமே அவர்களுக்கு வழி செய்து தருகிறது. அங்கு எல்லாவிதமான வாழ்க்கை வசதிகளும்இருப்பதனால், சிங்கப்பூரிலிருந்து, அது விடுதலை பெற்றபோது, 2,000 பேர்—குறிப்பாகத் தமிழர்கள்—இலண்டனுக்குக் குடியேறியுள்ளனர்.

இலண்டன் நூல்நிலையத்தில் நிறையத் தமிழ் நூல்கள் உள்ளன. அதனைக் காட்டிலும், பொருட்காட்சியில் நமது பழங்காலத் தொல்பொருள் ஆய்வுகள், தமிழகத்தில் எழுதப் பெற்ற ஓலைச்சுவடிகள் எல்லாம் உள்ளன. தமிழகத்தில், வெள்ளத்தில் ஏடுகளை விடுகிறோம். அங்கு அவர்கள் நல்ல முறையில் அவற்றைப் பாதுகாத்து வருகின்றனர். அந்த அளவுக்குத் தமிழ்நாட்டில்கூடப் பழங்கால ஓலைச்சுவடிகள் கிடையா. இதைவிட நியூயார்க்கில் மிக அதிகமான ஓலைச் சுவடிகளையெல்லாம் நன்றாகவே பாதுகாத்துவருகின்றனர்.

சிலவற்றின் பெயர்களையெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். ஒருவேளை இவை நான் பார்க்காதவையாக இருந்திருக்கும்! ஒரு சில எனக்குப் புதியனவாகத் தென்

பட்டன. தமிழ் நாட்டில் தமிழுக்காக ஒரு தனி இயக்குநர் கிடையாது. ஆனால் இலண்டனில் தமிழுக்காக ஒரு தனி இருக்குநர் (துணை) இருக்கிறார். அவர் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர்.

பல்கலைக் கழகம் விடுமுறையான காரணத்தினால் நான் செல்ல முடியவில்லை. துணை இயக்குநர் நான் தங்கியிருந்த இடத்திற்கே வந்தார். ஒருநாள் மாலை மூன்று மணி முதல் ஏழு மணி வரை (நான்கு மணி நேரம்) பேசினோம். அவர் தமிழ்நாட்டில் தமிழ் எந்தெந்த வகையில் செயல்படுகிறது என்பதையும், தமிழ் நாட்டில் அவர்களுக்குத் தேவையானவற்றைப் பெற வந்தபோது, அவர்களுக்குச் சரியான ஒத்துழைப்பினைத் தரவில்லை என்பதையும் கூறிக் கண்ணீர் வடித்தார். தமிழுக்காகப் பள்ளிக்கூடங்கள் இல்லையென்றாலும் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கிறது என்று கூறினார்.

இலண்டனில், 'தமிழ்நாட்டு அமைச்சர்கள், தலைவர்கள், புலவர்கள் வருகிறார்கள், நாங்கள் சொன்னால் செய்வோம் என்பார்கள்; போனபின் பதில் கூடப் போடுவதில்லை' என்று வேகத்தோடு பலர் கூறுகிறார்கள். தமிழ்நாட்டு அனைத்துக் கட்சிகளும் இலண்டனில் உள்ளன. அங்கும் ஒற்றுமையில்லை.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து நியூயார்க்கில் ஒரு வாரம் தங்கினேன். அங்குப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கிடையாது. அங்கு ஓர் அருமையான பொருட்காட்சிச் சாலை இருக்கிறது. (Museum of Natural Science). அங்கு உயிர் வளர்ச்சி, நில வளர்ச்சி, பிற வளர்ச்சிகளைப் பற்றிப் பிற நாடுகளில் காணமுடியாத அளவிற்குப் பெரிய காட்சியைக் கண்டேன்.

நாம் பழங்காலத்தைப் பற்றிப் படித்த பல காட்சிகள் நித்ரிசனமாகக் காணப்படுகின்றன. உயிர்த்தோற்ற வளர்ச்சியைப் பற்றி அழகாகத் தேவையானவற்றைப்

(பெரிய அளவில்) பல பொருள்களைக் கொண்டு காட்டி யிருக்கிறார்கள். சிலர் உயிர் வளர்ச்சியில் ஓரளவு வளர்ந்த பிறகு 'கல்' (Fossil ) என்று குறிக்கிறார்கள். அதற்குப் பிறகு உயிர் வளர்ச்சியின் நிலையே மாறுபடுகிறது.

' புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி, முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் '

என்று மணிவாசகர் கூறியது அங்கு நிரூபிக்கப்பெறுகிறது.

நம்முடைய சென்னைப் பல்கலைக் கழக 125ஆவது ஆண்டு விழாவின் போது, தியாகராயர் கல்லூரியில் இருந்தேன் அப்போது உயிர் வளர்ச்சி பற்றித் திருவாசகத்தின் அடிப்படையில் ஒரு காட்சி வைத்திருந்தேன். திரு டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் அங்குப் பார்க்க வந்திருந்தார். அப்போது 'நடுவில் வரும் கல் என்பதற்கு என்ன பொருள்? எதுவும் புரியவில்லை' என்று கேட்டேன். அவர், 'This is the Fossil stage, you are perfectly right. Manickkavasakar also is right'' என்று கூறினார். இது, 'பாசில் என்னும் கல் நிலையைக் குறிப்பது; இது முற்றிலும் சரியே' என்றார்.

நியூயார்க்கில் உங்கள் மாணிக்கவாசகர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமன்று, இலக்கியத்திலே 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி' என்றெல்லாம் படிக்கின்றீர்கள். நில ஆராய்ச்சியைப் பற்றிய அதே பகுதியிலே, முதலில் தோன்றியது கல், பின்னால் தோன்றியது மண் என்று சான்றுகளுடன் விளக்கி யிருக்கின்றனர். வரலாறு காணாத காலத்துக்கு முன்னே

நம் மூதாதையர் சொன்ன சொல்லை விரிவாகக் காட்டியிருக்கிறார்கள். இமயமும், ஆல்ப்ஸ் மலையும் வளர்ந்து கொண்டிருந்த காலத்திலே, அப்போதிருந்த நிலப்பரப்பு அத்தனையும் காட்டப்படுகிறது. இமயம் ஆழ்ந்து, குமரிக் கோடு உயர்ந்திருந்த நம் பழந்தமிழ் நாட்டு நிலை நன்கு சித்திரிக்கப்பெறுகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அவற்றையெல்லாம் படியெடுத்துக்கொண்டு வந்து ஒரு நூல் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றேன்.

அதேபோல் மற்றொரு பக்கத்திலே தென் அமெரிக்க நாகரிகத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு நாகரிகம், தென் அமெரிக்க மாயா நாகரிகம் இரண்டும் ஒத்தன என்று நிறுவக்கூடிய சான்றுகள் பல உள்ளன. உருவ வழிபாடு, கோயில் அமைப்பு பிற அனைத்தும் தமிழ் நாட்டு மரபை ஒட்டியிருக்கின்றன. அமேசன் நதிக் கரையில் பல இடங்களில் சிவலிங்க உருவம் கிடைக்கின்றது என்கின்றனர் சிலர். ஆகவே தமிழ்நாட்டு மரபு அங்கு போற்றப்படுவதை அறிகின்றோம். தமிழாக இல்லா விட்டாலும் தமிழ் வேறு வடிவத்தில் காக்கப்படுகிறது.

அடுத்து நான் செல்ல வேண்டியது—பணியேற்கச் செல்ல வேண்டிய பல்கலைக் கழகம் பென்சில்வேனியா. இது பிலடெல்பியா தலைநகரில் உள்ளது. அங்குள்ள விடுதிக்கு அழைத்துச் சென்றார்கள். அந்த விடுதியில் எல்லா நாட்டு மக்களும் தங்கியிருந்த காரணத்தால் எல்லோரையும் வரவேற்கின்ற நிலையிலே—போற்றப் படுகின்ற நிலையிலே—அந்தந்த விடுதிகளில் வரவேற்புக் குறிகள் போடப்பட்டிருந்தன. அங்கே தமிழில் 'வணக்கம்' என்றும் போடப்பட்டிருந்தது. அந்தப் பெரிய விடுதியில் தமிழை மனத்தால் படிக்கின்றனர். தமிழ்நாட்டில், 'இருந்தமிழே' உன்னால் இருந்தேன், என்று கூறுகிறார்கள். ஆனால் அங்கே 'இரு தமிழே உனக்காக இருந்தேன்'

என்கின்றனர். அங்குப் பாடத்திட்டம் கிடையாது. அங்கு மாணவன் விரும்பிய பாடத்தை எடுத்துக்கொள்ளலாம். ஓர் அமெரிக்கர் சங்க இலக்கியத்தையும், மற்றொருவர் இடைக்கால இலக்கியத்தையும் தம் பாடமாக எடுத்துக் கொண்டுள்ளனர்.

அப் பல்கலைக் கழகத்தில் ஒன்பது முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் இருந்த சூரிய வணக்கத்தைப்பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார் ஒரு மாணவி. அதனை மதிப்பிடும்போது, அம் மதிப்பீட்டுக் குழுவில் நானும் இருந்தேன். அவர் அமெரிக்கப் பெண்ணாக இருந்தாலும் அவர் தமிழ்நாட்டு நல்லவருக்கு வாழ்க்கைப்பட்ட பெண்மணி. பி. ஏ வாக இருந்தாலும் எம். ஏ. வாக இருந்தாலும் மூன்று ஆண்டு களிலும் முடிக்கலாம், ஐந்து ஆண்டுகளிலும் முடிக்கலாம்; பத்து ஆண்டுகளிலும் முடிக்கலாம். தமிழ் நாட்டிலிருந்து எம். ஏ. படித்து முடித்த நெடுமாறான் என்னும் ஆங்கில ஆசிரியர் அங்கு சென்று தமிழ் எம். ஏ. பயின்று கொண்டிருக்கிறார்; தமிழ் கற்றுக் கொடுக்கிறார். அங்குத் தமிழாராய்ச்சியும் செய்கிறார்கள். திருமதி இராசம் அம்மையார் பேராசிரியராக இருக்கிறார். இப்படிப் பிலடெல்பியாவில் தமிழாராய்ச்சியும் தமிழும் நல்ல முறையில்வளர்ந்து கொண்டிருக்கின்றன.

அங்கே பிரஞ்சு, ஆங்கிலம், வடமொழி எது படித்தாலும் வேற்றுமொழி ஒன்றைப் படிக்கவேண்டும். அந்த வகையில் தமிழ் எடுத்துப் படிப்பவர்களும் இருக்கிறார்கள்.

தலைநகர் வாஷிங்டனில் தமிழ் கிடையாது. அந்நகரில் சமய சம்பந்தமாகப் பல கூட்டங்களுக்குச் சென்றிருந்தேன். அங்கே சங்கராச்சாரியார், மத்துவாச் சாரியார், இராமானுஜாச்சாரியார், வல்லபாச்சாரியார் போன்றவர்களின் சமயம் பற்றிப் பேசினர். ஆனால்

மெய்கண்டார் சைவ சித்தாந்தம் அவர்களுக்குத் தெரிய வில்லை. நான் விளக்கிச் சொன்னேன். எல்லா இடங்களிலும், நாட்டியம்—தமிழக நடனம்—கற்றுக் கொடுக்காத தென் இந்திய வீடுகளே இல்லை. ஓய்வு நேரத்தில் நாட்டியம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. எல்லாப் பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழி மாற்றி (Transliteration) கற்றுக் கொடுக்கிறார்கள். 'தமிழில் கற்றுக் கொடுத்தால் என்ன?' என்று கேட்டதற்கு, 'தமிழில்தான் இருக்கிறது. ஆனால் அதனை மொழி மாற்றிக் கற்றுக் கொடுக்கிறோம்?' என்றார்கள். இயற்றமிழ் வளராவிட்டாலும் இசையும் நடனமும் வளர்கின்றன.

பால்டிமோர் சென்றேன். அன்பர் பெரியசாமி அங்கே தமிழ் வளர்ப்பவர். அவர்களின் துணைவியார் கணவரைவிடத் தமிழ்ப் பற்று மிக்கவர். தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்கள், விழாக்கள், கோயில் திருவிழாக்கள், விரதங்கள் முதலியவற்றிற்கெல்லாம் விளக்கம் கேட்டார்கள். அதற்கு விளக்கம் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். விரும்புகிறவர்களுக்கு விளக்கம் கூறும் வாய்ப்பினைத் தமிழ்நாட்டு அரசாங்கம் தரவில்லை. அவர்தம் திங்களிதழிலே விளக்கம் எழுதும்படி கூறியுள்ளார்கள்.

பாஸ்டனில் தொழில் நுட்பக் கழகத் (M. I. T)தில் நூல் நிலையம் 24 மணி நேரமும் திறந்திருக்கிறது. மருத்துவம், பொறியியல் துறைகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் 70, 80 பேர் அங்கே இருக்கிறார்கள். எல்லா வகுப்புகளிலும் இந்திய மாணவர்கள் 500 பேருக்கு மேல் இருக்கிறார்கள் என்றனர். தமிழ்நாட்டில் பொறியியல் மருத்துவ விஞ்ஞான அறிவாளரைப் பயன் படுத்தத் தவறிவிட்டோம். அரசாங்கம் சரியாகக் கவனிக்காத காரணத்தால். அங்கே அமெரிக்காவில் அவர் களைப் பயன்படுத்துகிறார்கள்.

சிகாகோ பல்கலைக்கழகத்தில் புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களை மொழிபெயர்த்துள்ளனர். ஸ்தல புராணத்தை ஆராய்ச்சி செய்து பெரிய நூல் வெளி வந்துள்ளது. நம்மாழ்வார் பாடல்களில் நூறு பாடல்களை மொழிபெயர்த்துள்ளார்கள். அங்குத் தமிழ் வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன. தமிழ்ச் சங்கம் உண்டு. தமிழ்ப் பத்திரிகையும் நடத்துகிறார்கள். அவையாவும் தமிழ் வளர்ச்சியைக் காட்டுகின்றன. அங்கே நம் நாட்டைச் சேர்ந்த திரு. டாக்டர் இராமாநுசம் அவர்கள் தலைவராக உள்ளனர்.

விஸ்கான்சன் பல்கலைக் கழகத்திலும் ஹாவாயிலும் தமிழ் உள்ளது. அங்கெல்லாம் சென்று பார்வையிட்டேன். நூல்நிலையங்கள் நன்கு உள்ளன. விடுமுறையானதால் துறையில் உள்ளாரைக் காண முடியவில்லை. சிகாகோ பல்கலைக்கழகத்திற்கு நான் சென்றபோது 'பாஷாம்' என்ற பேரறிஞர்—வடமொழி, தமிழ் அறிந்த அவர் சிறப்புரை ஆற்றினார். நான் சென்ற நாளில் கீதை பற்றிய பேச்சு. சிகாகோவில் மட்டுமன்றி அமெரிக்காவில் எந்தப் பல்கலைக் கழத்திலும் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் தனியார் நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளன. எந்தத் தொழிலும் அரசாங்கத்துக்குக் கிடையாது. ரேடியோ, டெலிவிஷன், இரயில், விமானம் போன்ற எல்லாவற்றினையும் தனி நிறுவனங்களே பொறுப்பேற்றுள்ளன. பல நிறுவனங்கள் அங்குள்ளன. ஆனால் நிரந்தர வேலை கிடையாது. கடின உழைப்புக்கும் பயன் உண்டு, அவையே பல்கலைக் கழக ஆய்வாளரை ஊக்குவிக்கின்றன.

வாஷிங்டன் மாநிலத்தின் சியேட்டல் என்பது தலைநகர். அங்கு நம்நாட்டில் செய்யாத ஒரு நல்ல பணியைச் செய்கிறார்கள். அங்கே ஜப்பான் கம்யூட்டர் மூலமாகத் தமிழ் வினைச்சொற்களை மட்டும் எடுத்துக்

கொண்டு அகராதி தயார் செய்கிறார்கள் அதனை இயக்குபவர் ஜப்பானியப் பெண்மணி. அவருக்குத் தமிழும் தெரியாது; ஆங்கிலமும் தெரியாது. ஜப்பான் மொழி தான் தெரியும். அந்த மிஷினுக்கும் ஜப்பான் ஆங்கிலம் தான் தெரியும்; அதனைச் சரிப்படுத்தி, அதனைத் தமிழாக்கிக் கொண்டுவந்து தமிழிலே எழுதி, அவற்றிற்கு விளக்கமும் எழுதி, அதற்குத் தேவையான தமிழ்க் கோவையினையும் ஆங்கில உரைகளையும் கொடுத்திருக் கிறார்கள் அங்கே உள்ள தமிழ்த் துறையினர். சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஹேரால்டு சிப்மென் என்னும் துறைத் தலைவர்.

அங்கொரு அமெரிக்கர் தமிழ்நாட்டு உதகை (கூடலூர்) நாகரிகத்தை எல்லாம் பார்த்து ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதி டாக்டர் பட்டத்துக்குத் தந்துள்ளார். இருவர் இசையைப் பற்றி அறியத் தமிழ்நாட்டிற்கு வர இருக்கிறார்கள். நாட்டுப்புறம் காணலாம் என்று 80 மைல் தொலைவில் உள்ள கிராமத்திற்குச் சென்றேன். அங்குள்ளவரில் சிலர் அமெரிக்க இந்தியர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்கிறார்கள்.

கிராமத்தில் அவர்கள் வழிபடும் பெரிய பெரிய சிலைகள், தூண்கள் இருந்தன. இவை நம்முரை நினைவு படுத்துகின்றன. கோயில்களின் உள்ளே சென்று பார்த்தேன். கிராமங்களில் பழங்கால மரபு போற்றப் படுவது தெரிகின்றது. சான்பிரான்ஸிஸ்கோ நகரில் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் உள்ளது. அது உள்ள 'பர்க்கிலே' நகரில் ஜார்ஜ்ஹாட் என்ற அமெரிக்கர் கௌசல்யா என்னும் தமிழ்ப் பெண்மணியை மணந்துள்ளார். நல்ல தமிழ் அறிஞர்; சைவர். அவர்தம் வீட்டில் நடராசர், பிள்ளையார், முருகன் போன்ற சிலைகள் இருந்தன.

அக் கலிபோர்னியா பல்கலைக்கழக எல்லையில் 86 வயதான எமனோ என்பவர் இருக்கிறார். 'Etimological Dictionary' யைத் தமிழில் தொகுத்தவர் அவர். அவரைப் பார்க்க வேண்டும் என்று தொலைபேசியில் கூறினேன். 'நீங்கள் வராதீர்கள்' என்று சொல்லி அடுத்தநிமிடத்திற்குள் அவர் அங்கு வந்துவிட்டார். இவர் பாலி மொழிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைத் தற்போது ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். சிலப்பதிகாரமெல்லாம் அங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நல்ல தமிழை அங்குப் படிக்கிறார்கள். தமிழ்நாட்டில் தமிழைச் சாகடித்தாலும்கூட நிச்சயமாக அது வெளிநாட்டில் வாழும்.

அடுத்து உலகப் புகழ் பெற்ற ஹாலிவுட் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் சென்றேன். அங்குத் தமிழ் கிடையாது. தமிழர் நிறைய இருக்கிறார்கள். ஹாலிவுட் அழகாக இருந்தது. 'பத்துக் கட்டளைகள்' என்ற படத்தைப் பலர் பார்த்திருப்பீர்கள். ஏசுநாதர் அங்கே கடலைத் தாண்டிப் போனமை போல் நானும் கடலைத் தாண்டிச் சென்றேன். டிஸ்டினிலேண்டு பார்க்கவேண்டிய இடம்.

ஹாவாய் ஆதினத்தில் 5 நாட்கள் தங்கியிருந்தேன். அது அமெரிக்காவைச் சேர்ந்தது. அமெரிக்காவிலிருந்து 3000 மைல் தூரத்தில் உள்ளது. அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் நடுவில் உள்ளது. அங்குத்தான் சைவ சித்தாந்த மடம் உள்ளது. கோயிலுக்குள் நடுவில் நடராஜர், ஒரு பக்கம் விநாயகர், ஒரு பக்கம் முருகன், ஒரு பக்கம் அர்த்தநாரீஸ்வரர். மதுரையிலிருந்து குருக்கள் சென்று பூசை செய்கிறார்.

ஹாவாயில் தேவாரம், திருவாசகம் எல்லாவற்றையும் ஆங்கிலத்திலே கற்றுத் தருகிறார்கள். திருமூலர், திருவள்ளுவர் தம் பெருஞ்சிலைகள் வாயிலின் இரு பக்கங்களிலும் அணி செய்கின்றன. அங்கே வழிபாட்டில் தமிழ்ப் பாடல்களையும் பாட, நான் சொன்னபடி ஏற்பாடு செய்தனர்.

பிட்ஸ்பர்க்கில் வேங்கடவன் கோயில் உள்ளது. நம் திருப்பதியாகிய வேங்கடத்தைப் போன்றே உள்ளது. தமிழர் அண்மையில் கட்டியது. பல அமெரிக்கர் வந்து வழிபடுகின்றனர். நாலாயிரப் பிரபந்தப் பாடல்கள்—சிறப்பாக ஆண்டாள் திருப்பாவை நாள்தோறும் அங்கே பாடப்பெறுகின்றன. அமெரிக்க நாட்டில் எல்லா ஊர்களிலும் நம்நாட்டுக் கோயில்களும் வழிபாடுகளும் உள்ளன.

பின் ஜப்பான்-ஹாங்காங், மலேயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களையும் கண்டு வந்தேன். ஜப்பான் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழி பாடமாக இல்லையாயினும், அங்குள்ள வரலாற்றுப் பேராசிரியர் காரசிம்மா அவர்கள் வரலாற்றை நன்கு அறிந்தவர். சோழர் காலத்திய கல்வெட்டுகளை மூன்று பகுப்பாக அச்சிட்ட வல்லவர். தமிழகம் வந்து தமிழ்நாட்டு நாகரிகம், பண்பாடு ஆகியவை பற்றி ஆராய்ச்சி செய்பவர். அப் பல்கலைக்கழகத்தே தொல்பொருள் ஆய்வுத் துறையில் தமிழகத் தொல்பொருள் ஆய்வினையும் காண்கின்றனர். ஜப்பான் நாட்டு மக்களின் பழைய வீடுகள் நம் தமிழக வீடுகளைப் போன்றே உள்ளன. வருபவரை வரவேற்க வெளியே திண்ணை போன்ற அமைப்பு, விருந்துடனாயினும் தனியாகிலும் உண்ண பாய் அல்லது தடுக்கு இட்டு, கீழே உட்கார்ந்து உண்ணும் நிலை, பிற முறைகள் அனைத்தும் நம் தமிழ் நாட்டை நினைவூட்டுகின்றன. தமிழகத் தென் பகுதியில் எப்போதோ ஒருமுறை முத்துக் குளிக்கும் நிலை; இங்கே அன்றாட நிலையாக உள்ளது. ஜப்பானிய நாட்டின் உயர்கல்வி அதிகாரி (Joint director for Education) ஜப்பான் மொழி மட்டும் தெரிந்தவர். பிறமொழி—ஆங்கிலம் உட்பட ஒன்றும் தெரியாது. தமிழ்நாட்டில் தமிழ் மட்டும் அறிந்தவரை அந்த நிலையில் எந்த அரசாங்கமாவது இதுவரை நியமித்துள்ளதா? இனியாவது நியமிக்குமா?

ஹாங்காங்கில் தமிழர் பலர் வாழ்கின்றனர். தமிழ்ச் சங்கமும் உள்ளது. ஆயினும் தமிழ்பற்றிப் பேசி, வளர்க்கும் நிலை அங்கே இல்லை. பலர் அடிக்கடி தாய்நாடு வந்து செல்கின்றனர். வீடுகளில் தமிழ்தான் உண்டு. பல குழந்தைகள் தமிழ்நாட்டிலேயே கல்வி பெறுகின்றனர்.

மலேயாவில் பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்கின்றனர் மலேயாவை வளப்படுத்தியவர்களே தமிழர்தாம். தற்போது தமிழர் தொகை குறைகின்ற தென்றாலும் தமிழ் அங்கே பள்ளிகளிலும், பல்கலைக் கழகத்திலும் முக்கிய பாடமாக உள்ளது. பல்கலைக் கழகம் தொடங்கும் காலத்தில் இந்திய மொழித்துறையில் வேற்று மொழி இடம் பெற இருந்தபோதிலும், ஓமந்தூரார்—பக்தவத்சலம் அவர்கள் காலத்தில் தமிழே இருக்கவேண்டும் என முயன்று வெற்றியும் பெற்றனர். எனவே மலேயா பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை சுமார் பதின்மர் கொண்டு சிறப்பாகப் பணியாற்றுகின்றது. நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தமிழ் பயில் கின்றனர். எனினும் வளர்ச்சி அதிகம் என்று சொல்ல முடியாது. பல்கலைக் கழகத்திலே வகுப்புகளில் தமிழ் உள்ளதோடு ஆராய்ச்சியும் நடைபெறுகின்றமை போற்றற் குரியது. மலேயாவில் எல்லாப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் வாழ்கின்றமையின் அந்நாடு தமிழ்நாட்டினைப் போன்றே உள்ளது. தமிழுக்கென் அரசாங்கத்திலும் தனித்துறை அமைத்துச் செயலாற்ற ஏற்பாடுசெய்துள்ளனர். (இந்நிலை, நான் முன்னரே குறித்தபடி தமிழ்நாட்டிலும் இல்லாத ஒன்று)

மலேயா முழுவதும் முருகன் கோயிலும் பிற கோயில் களும், மாரியம்மன் கோயில்களும் நம் நகரத்தாராலும் பிறதமிழர்களாலும் கட்டப்பெற்று வழிபாடும் விழாக்களும் நடைபெறுகின்றன: சில விழாக்கள் தமிழ்நாட்டைக் காட்டிலும் சிறப்பாக நடைபெறுவதைக் கண்டார் அறிவர்.

தமிழ்நாட்டு மரபுப்படியே வீட்டு விழாக்கள் பலவும் கொண்டாடப் பெறுகின்றன.

சிங்கப்பூரில் எந்த நேரத்திலும் தமிழ் ஒலிபரப்பும் வானொலி உண்டு. தமிழர்க்கென்றே தொலைக்காட்சியிலும் தனி ஒளிபரப்பு உண்டு. சிறிய தீவாயினும் தமிழ்ப் பாடம் அமைக்க, தொகுக்க, வெளியிட, தேர்வு அமைக்கவெனத் தனியாகத் தமிழறிஞர் சேர்ந்த குழு ஒன்று உள்ளது. பள்ளியிலும் கல்லூரிகளிலும் தமிழ் உண்டு. கோயில்கள் பலப்பல; ஒரு திருமால் (சீனிவாசர்) கோயிலில் நான் சென்ற நாளில்—கோடை வசந்த உற்சவத்தின் கடைசி நாளில்—ஐந்து நாதசுரம், தவில் கொண்டு இறைவன் திருவுலா அமைந்தது. ஆண்டாள் சிறந்த முறையில் தனிச்சன்னதி அமைத்துப் போற்றப் பெறுகின்றார். திருமால் கோயிலை ஒட்டியே சிவன் கோயில் அமைத்து இரண்டிற்கும் வேறுபாடு இல்லா ஒருமை உணர்வை ஊட்டுகின்றனர். தண்டபாணிக் கோயிலும் தனியாக உண்டு. விழாக் காலங்களில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடி வழிபடுகின்றனர். அங்கும் தமிழ், தமிழ்நாட்டைக்காட்டிலும் சிறக்க வாழ்கின்றது.

மற்றும் பிஜித் தீவு போன்றவற்றிற்கும் தென் ஆப்பிரிக்க மொரிஷியஸ் போன்ற இடங்களுக்கும் நான் செல்லாவிடினும் அங்கிருந்து வரும் தமிழர்களுடன் இங்கும் நான் சென்ற நாடுகளிலும் பேசிய நிலையிலிருந்து சில உண்மைகளை உணர்ந்து கொண்டேன். (இலங்கையைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை) சில இடங்களில் தமிழ் அருகி வருகிறது. சிலவிடங்களில் மறையவும் தொடங்கியுள்ளது. எனினும் தற்போது ஆங்காங்கே பலர் தமிழை வளர்க்க—மக்களிடம் பரப்ப முயல்கின்றனர். அவ்வந்நாட்டு அரசாங்கமும் ஓரளவு முயற்சிக்கு ஆதரவு தருகின்றது. ஆம்! தமிழக அரசினைக்காட்டிலும் சில

அரசாங்கங்கள் அதிக ஆதரவு தருகின்றன என்கின்றனர். உலகில் உள்ள தமிழர்களையெல்லாம் ஒன்றுபடுத்தி, உலகெங்கும் தமிழ் ஓங்க வழிகாண வேண்டுவது தமிழக அரசின் தலையாய கடமையாகும். கோடிகளைக் கல்விக்கென வாரி வழங்கும் நம்மரசு ஓரிரு கோடிகள் இத்துறைக்கு உதவின் உலகம் எங்கணும் தமிழ் வாழும் என்பது உறுதி.

அத்தகைய நல்லஉணர்வு ஆளுபவர் உள்ளத்து அரும்ப வேண்டும் என்று வேண்டிக்கொள்வதன்றி நான் என் செய்யவல்லேன். 'இறைவா! ஆளுபவர் உள்ளங்களை— தமிழ் வாழ, தமிழர் உலகெங்கணும் வாழ—இந்த வகையில் ஆற்றப்படுத்துவாய்' என வேண்டி அமைகின்றேன்.

—1985

* * *

முன் பக்கத்தே மொரிஷியஸ் 'தீவினைப் பற்றிக்' குறித்துள்ளேன். அண்மையின்—1989 இறுதியில் அங்கே நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கென. தமிழக அரசினால் மாநாட்டுக்கு அனுப்பர் பெற்றவருள் நானும் ஒருவன். அங்கேயும் அடுத்த 'யூனியன்' தீவிலும் பல தமிழர்கள் ஒவ்வொன்றிலும் இலட்சத்துக்கு மேலும் வாழ்கிறார்கள். பெயர்களெல்லாம் தமிழ்ப் பெயர்கள்— கல்வி அமைச்சர் தமிழர்—ஊர்தோறும் தமிழ்க் கோயில்— கோயில் தோறும் தேவாரப் பாடல்கள். எனினும் தமிழ் 'படிக்க' தெரியாதவர் பலர்—பள்ளிகள் இப்போது தான் வளர்ந்து வருகின்றன. அங்குள்ளோர்தம் தமிழ் உள்ளமும் தமிழ் உணர்வும்' நன்கு போற்றுதற்குரியன. ஆயினும் படிக்கப் போதிய ஆரம்பத் தமிழ்ப் பாடநூல்கள் இல்லை. தமிழக அரசு நினைத்தால் இதைப் போக்கலாம். இங்குள்ள தலைவர்கள் சிலரிடம் இது பற்றிக் கூறினேன். வழி உண்டானால் அங்கே தமிழ் வளரும்—தமிழர் நலம் பெறுவர்—தமிழ் மணம் பெறும்.

# 7. அரசியல் – வள்ளுவரும் சங்க காலமும்

வள்ளுவர் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த தனிப்பெரும் புலவர். ஏறக்குறைய அதே காலத்தில்தான் மதுரையில் தமிழ்ச் சங்கம் நக்கீரர் தலைமையில் நடைபெற்றுவந்ததெனக் காண்கின்றோம். வள்ளுவர் வையம் வாழ அறநெறிகளை வரையறுத்து இலக்கண மரபின் நெறிநின்று, அறநூலாம் திருக்குறளை எழுதிய அதே காலத்திலும், சற்று முன் பின்னாகவும் சங்கப் புலவர்கள் அவ்வறநெறி பற்றி வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தினையும் அதன் புரவலர் களையும் தலைவர்களையும் பாடியுள்ளனர். ஈண்டு அந்த அறநெறியுள் நாம் காண இருப்பது அரசியல் நெறி பற்றியேயாகும்.

வள்ளுவர்தம் திருக்குறள் உலக நூலாகப் போற்றப் பெறுகின்றது. அன்றும் இன்றும் அந்நூல் உலக அறநெறி காட்டும் பெருநூலாக, எச்சமயத்தோரும் எந்நாட்டவரும் ஏற்றுக்கொள்ளும் பொது நூலாக இலங்குகின்றது. வள்ளுவர், வாழ்வின் பல்வேறு கூறுகளை நன்கு ஆராய்ந்து, கண்டு, தெளிந்து என்றென்றும் அவ்வாழ்வில் உயிர்கள் பற்ற வேண்டிய பல்வேறு அறநெறிகளைப் பற்றித் திட்ட வட்டமாகக் கூறியுள்ளார். சமுதாய வாழ்வின் செம்மை நலம் சிறக்க உள்ள நெறிகள் அத்தனையும் வள்ளுவரால் பேசப் பெறுகின்றன. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுப்புகளைக் காட்டி, அவற்றுள் உலக வாழ் வனைத்தையும் பூட்டிப் பொலிவு பெறச் செய்கின்றார். உலக மக்கள் வாழும் அறத்தாற்றினை-இல்லறம் துறவறம்

என்ற இருநெறிகளைக் காட்டிய வள்ளுவர், அடுத்து வரும் பொருட்பாலில் முதற்பகுதியாக இருபத்தைந்து அதிகாரங் களில் 'அரசியல்' பற்றிக் கூறுகின்றார். 25 அதிகாரங்களை அரசியலாகக் கொளினும், பொருட்பாலின் பிற பகுதி களாகிய அங்கவியல், ஒழிபியல் இவற்றிலுள்ள அதிகாரங் களும் பெரும்பாலும் அவ்வரசியல் வாழ்வை ஒட்டியே அமைகின்றன. எனவே, பொருட்பால் முற்றுமே அரசியலைச் சார்ந்ததெனக் கொள்ளினும் தவறாகாது.

வள்ளுவர் காலத்தில் முடியாட்சியே சிறந்திருந்தது என்பர் அறிஞர். இறை, அரசு போன்ற சொற்கள் வள்ளுவரால் எடுத்தாளப்பெறுகின்றன. அரசன், மன்னன், இறைவன் என்ற சொற்களும் எடுத்தாளப் பெறுகின்றன. எனவே முடியாட்சி அவர் காலத்தில் அமைந்தது எனக் கொள்வது பொருத்தமே. எனினும் அம் முடியாட்சி தனிக் கோனாட்சியாகவோ, சர்வாதிகார ஆட்சியாகவோ அமைந்தது எனக் கூறமுடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 'அரசியல்' பற்றி வள்ளுவர் கூறும்போது அதில் அரசுமுறை நடத்தும் நெறிகளைக் காட்டும் வள்ளுவர், 'சூழ்வார் கண்ணாக' அரசன் ஒழுக வேண்டிய நெறிகளை வற்புறுத்துகிறார். அமைச்சர், ஒற்றர், தூதுவர், ஐம்பெருங் குழுவினைச் சார்ந்த பிறர் உடனிருப்பதோடு பெரியார் தம் துணையும் உடன்சார வேண்டிய இன்றியமையாச் சிறப்பினையும் வற்புறுத்துகிறார். இன்றைய இங்கிலாந்து நாட்டின் அரச நிலையை ஒட்டி, அன்றைய தமிழக அரசியல் நிலை இருந்ததோ என எண்ணவும் இடம் உண்டாகிறது ஆண்டு, 'அரசி' செயல்துறைத் தலைமையில் இருப்பினும், நாட்டு மக்கள் நலனைக் கண்டு செயலாற்றும்—திட்டமிடும்—விதிவரம்பியக்கும் மக்கள் மன்றம் தானே முக்கியமானதாகின்றது. அப்படியேதான் அன்றும் தமிழக வேந்தர் பலரும், தாம் ஆளும் தலைமை பெற்றிருந்தாலும் அறிஞர், அமைச்சர், பெரியோர் இவர் தம் வழியே—அவர் கண்ணாகக் காட்டும் நெறியே—

நின்று செயலாற்றினார் எனக் கொள்ள வள்ளுவர் குறள் வழிகாட்டுகிறது. எனவே, குடியாட்சி முடியாட்சி இரண்டும் கலந்த ஒருவகை அரசியலே வள்ளுவர் காலத்து அரசியல் எனக் கொள்வதில் தவறு இல்லை.

கடைச்சங்க காலமாகிய வள்ளுவர் காலத்திய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவனவே சங்கப் பாடல்கள். அவற்றுள் பல நாடாளும் நல்ல மன்னர்களைப் பாராட்டிப் பரவுகின்றன. எனினும் அவை அனைத்தும் மன்னர், குடிவழி ஒழுகி, ஆன்றோர்கண்ணாக நின்று வாழ்ந்தனர் என்பதையே காட்டுகின்றன. மேலும் ஒரு குடியில் நல்லரசர் இல்லையாயின், அந்த நல்லவராய வல்ல அரசரைத் தேர்ந்தெடுக்கும் மரபு மக்கள்பால் இருந்தது என்ற உண்மையினைக் கரிகாலன் வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகின்றதன்றோ! மன்னர் பலர் 'குடிபழி தூற்றும் கோலால்' ஆள அஞ்சினர் என்பதற்குப் பெருமன்னனான பாண்டியன் நெடுஞ்செழியன் முதல் பலர் சான்றதாக உள்ளனர். அவர்தம் அச்சத்தின் வழி ஆய்ந்து பார்ப்பின் சமுதாயத்தைச் சார்ந்து வாழ்ந்தாலன்றி மன்னர்க்கு உய்வில்லை என்ற உண்மை புலப்படுகின்றதே! மக்களாட்சிக் காலந்திலே ஐந்தாண்டுக்கொருமுறைதான் ஆளுவோர் மக்களிடம் செல்லும் நெறியுள்ளது. ஆனால் அன்றைய மன்னராட்சியிலே அன்றாடம் மக்களிடம் செல்லும் நிலையினைக் காண்கின்றோம். இதனாலன்றோ,

> **" நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
> **மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் "**
>
> (புறம். 186)

என்று மன்னனை உயிராகவும் சமுதாயத்தை உடலாகவும் காட்டி, உயிருள்ளவரை அரசன் கடமை அன்றாடம் தன் உடலாகிய சமுதாயத்தை—உயிரினத்தை—உலகை ஓம்ப வேண்டுவது என்ற உண்மை உணர்த்தப் பெறுகின்றது. **"இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையரெனக்**

கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேரா' என்று பரிமேலழகர் கடவுள் வாழ்த்தில் இறைவனைப் பற்றிக் கூறிய தொடர், இந்த அரசனாம் 'இறைமாட்சி' யாளனுக்கும் பொருந்துவதாகும். அந்த இறைமைக் குணங்களையே வள்ளுவர் திருக்குறளிலும் சங்கப் புலவர்கள் எட்டுத் தொகையிலும் பத்துப்பாட்டிலும் விளக்கிக் காட்டுகின்றனர்.

திருவள்ளுவர் அரசியல் முதல் குறளிலேயே அரசனுக்கு இன்றியமையாது வேண்டப்படுபவை யாவை என்பதைத் திட்டமாக விளக்கியுள்ளார்.

> **"படைகுடி கூழமைச்சு நட்புஅரண் ஆறும்**
> **உடையான் அரசருள் ஏறு"**

(குறள் 381)

என்று காட்டுகின்றார். நாடு காக்கும் நல்ல படையே முதலிடம் பெறுகின்றது. இப் படையை உருவாக்க உதவும் குடிமக்களும், அவர்கள் குறையின்றி உண்டுவாழக் 'கூழும்' அவற்றை ஆக்கித் தரும் நல்லமைச்சும், அவற்றுடன் அரசனுக்கு உறுதுணையாம் நட்பும், இயற்கையாக அமையும் நல்லரணும் வள்ளுவரால் காட்டப்பெறுகின்றன. இவை ஒவ்வொன்றும் சங்க இலக்கியங்களில் பலவாறு பேசப்பெறுகின்றன. சங்க இலக்கியங்கள் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடிகளென அமைய, குறள் அவ் வாழ்வைச் சுட்டும் இலக்கண நூலாக அமைகின்றது. எனவே, குறள் சுட்டும் மரபும் தன்மையும் பிறவும் 'இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பும்' மரபை ஒட்டிச் சங்ககால வாழ்வினையும் அதன் அடிப்படையில் அமைந்த இலக்கியங்களையும் சார்ந்து நிற்கின்றன. எனவேதான் மேலே கண்ட 'ஆறு' பற்றி – ஓரடியில் வள்ளுவர் காட்டிய இன்றியமையாச் சிறப்புக்கள் பற்றி—சங்க இலக்கியங்கள் பல்வேறு இடங்களில் நன்கு பாராட்டிக் காட்டுகின்றன. சிறப்பாகப் புறப்பாடல் தொகுதிகளாகிய

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றில் படையும் பிறவும் பேசப்பெறுகின்றன. அக இலக்கியங்களாகிய அகநானூறு, நற்றிணை, கலித்தொகை முதலியவற்றிலும் உவமை முகத்தானும் பிற வகையிலும் இப்படை முதலியன நன்கு காட்டப்பெறுகின்றன. இவ்வாறே அரசனுக்கு அணியாய எல்லாப் பொருள்களும் தன்மைகளும் நலன்களும் சங்க இலக்கியங்களில் காட்டப்பெறுகின்றன எனலாம்.

எத்துணைச் சிறப்புக்கள் அமைந்திருப்பினும் கட்டிக் காக்கும் நல்ல படை இன்றேல், அரசன் செயலாற்ற முடியாது என்பதை உணர்ந்தே வள்ளுவர் படையை முன் வைத்தார். அப் படையமைப்பும் அதன் திறனும் பழங் காலத்தில் எவ்வெவ்வாறு இருந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் பலப்பல வகைகளில் எடுத்துக் காட்டுகின்றன. அனைத்தையும் சுட்டுவது காலம், இடம் இவற்றைக் கடப்பதாகும். எனவே, ஓரிரண்டு கண்டு அமைவோம்.

**"கடல்போற் றானைக் கடுங்குரல் முரசம்**
**காலுறு கடலின் கடிய உரற**
**எறிந்து சிதைந்த வாள்**
**இலை தெரிந்த வேல்**
**பாய்ந்தாய்ந்த மா**
**ஆய்ந்து தெரிந்த புகல்மறவர் "**

(பதிற். 69)

என்று கபிலர், செல்வக் கடுங்கோ வாழியாதன் படைச் சிறப்பைக் கூறி அப் படையால் பகைவரை வென்ற திறத்தினையும் பிற சிறப்பியல்புகளையும் பின்னர்க் கூறுகின்றார். இப் படையின் சிறப்பினை அடுத்த பாட்டினும் நன்கு காட்டுகிறார்.

சிற்றரசனாகிய அதிகமான் நெடுமானஞ்சியின் படையின் வளத்தையும் செயலையும் அவன் வீரச்

சிறப்பையும் வெற்றியையும் மாற்றாருக்குக் காட்டி, அவர்கள் அடி பணியாவிடின் உய்வில்லை என்பதை ஔவையார் தம் புறப்பாட்டால் நன்கு விளக்குகிறார். இதோ அவர் வாக்கு.

"போர்க்கு உரைஇப் புகன்று கழித்தவாள்
உடன்றவவர் காப்புடை மதில் அழித்தலின்
ஊனுற மூழ்கி உருவிழந் தனவே;
வேலே, குறும்படைந்த அரண்கடந்தவர்
நறுங்கள்ளின் நாடு நைத்தலின்

சுரைதழீஇய இருங்காழொடு
மடைகலங்கி நிலைதிரிந்தனவே;
களிறே, எழூஉத் தாங்கிய கதவம் மலைத்தவர்
குழூக் களிற்றின் குறும்பு டைத்தலின்
பரூஉப் பிணிய தொடி கழிந்தனவே;

மாவே, பரந்தொருங்கு மலைந்த மறவர்
பொலம் பைந்தார் கெடப் பரிதலின்
களன்உழந் தசைஇய மறுக்குளம் பினவே;
அவன்தானும், நிலந்திரைக்கும் கடல்தானை
பொலன் தும்பைக் கழல் பாண்டில்

கணைபொருத துளைத்தோ லன்னே!
ஆயிடை, உடன்றோர் உய்தல் யாவது தடந்தாள்
பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்குரித் தாகல் வேண்டின் சென்றவற்கு
இறுக்கல் வேண்டும் திறையே; மறுப்பின்

ஒல்வா னல்லன் வெல்போரான் எனச்
சொல்லவுந் தேறீ ராயின், மெல்லியல்
கழற்கனி வகுத்த துணைச்சில் ஓதி
குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இறும்பூ தன்றஃ தறிந்தா டுமினே!"

(புறம் 97)

என்று அழகாகத் திறம்பட அதிகன் படைச் செருக்கினையும் அவன் வீரத்தினையும் காட்டி அவனைப் பணிந்து திறையிடார் படும் பாட்டினையும் விளக்கியுள்ளார். இத்தகைய பாடல்கள் சங்க இலக்கியங்களில் பல உள. அவை அறிந்த ஆன்றோராகிய வள்ளுவர் இந்தச் சமுதாய வாழ்வின் நெறிகண்டே 'படை'யை முதற் கூறினார் எனக் கொள்ளுவர். உண்மையும் அஃதே.

இனி, குடிகளைப் பற்றியும் சங்க இலக்கியங்கள் பலவாக விளக்குகின்றன. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் குடிபுரந்த சிறப்பினைக் காக்கைபாடினியார் 'குழவி கொள்வாரின் குடிபுரந்து' (ஆறாம் பத்துப் பதிகம்) எனக் காட்டி, மன்னன் மக்களைச் சொந்தக் குழவி எனவே போற்றிப் பாராட்டும் திறத்தினை விளக்குகின்றார். வாழ்வில் குடி புரத்தலே சிறந்ததென்பதையும் அவர் பழி தூற்றலே மிகக் கொடியதென்பதையும் எண்ணியே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் வஞ்சினப் பாட்டில், தான் எழுவரை அடக்கி வெற்றி பெறவில்லையானால் 'குடி பழி தூற்றும் கோலே னாகுக' (புறம் 72) எனக் கூறியதனைக் காண்கின்றோம். அக்குடி மக்களையும் அவர் வாழும் உலகையும் மன்னன் உயிரென ஓம்பவேண்டும் என்ற உண்மையினையே,

> **" நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
> **மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
> **அதனால் யானுயி ரென்ப தறிகை**
> **வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே "**
>
> (புறம் 186)

என்று மோசிகீரனார் அழகுறக் காட்டுகின்றார்.

"கூழ்' என்னும் பொருளைப் பற்றிப் பாடாத புலவர் இல்லை. மக்கள் நல்லுணவு கொண்டு சிறக்க வாழும் வாழ்வினை விளக்காத பாடல் இல்லை எனலாம். வாழ்வு 'கூழ்' பற்றி நிற்பதன்றோ? கூழ் என்ற சொற்கு உணவு,

துய்க்கும் பொருள் எனப் பலவகையில் பொருள் சொல்லாம். எல்லாப் பொருள்களுக்கும் ஏற்ற வகையில் சங்கப் பாடல்கள் உள்ளன.

கோவூர் கிழார் கிள்ளிவளவனைப் பாடுங்கால் அவன் நகர் 'கொளக் கொளக் குறையாக் கூழுடை வியன்நகர்' (புறம் 70) எனப் பாராட்டுகின்றார். மேலும் உணவினை 'இருமருந்து' எனவே பாராட்டுகிறார்.

> " அடுதீ யல்லது சுடுதீ யறியாது
> இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன் "
> (புறம் 70)

என்று நல் லுணவாகிய 'கூழ்' நிலை காட்டுவதோடு, சுடுதீ அறியாச் செங்கோன்மையினையும் அவன் தன்மையினையும் உடன் காட்டிவிட்டார்.

அமைச்சர் பலர் அருகிருந்தே அரசியல் காரியங்கள் நடை பெற்றுவந்தன என்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்குச் சான்றுகாட்டி விளக்குகின்றன. தன் கோயிலையும் பெருஞ்செல்வத்தையும் வழங்கிய பெருஞ்சேரல் இரும்பொறைக்கு அரிசில் கிழார் என்னும் வேளாண் புலவர் அமைச்சுப் பூண்டார் என்பதைப் பதிற்றுப்பத்து (8-ஆம் பத்துப் பதிகம்) நன்கு காட்டுகின்றது. அடுத்துவரும் ஒன்பதாம் பத்தின் பதிகத்தால் 'மெய்யூர் அமைச்சியலில் மையூர் கிழான்' என்பார் அமைச்சராக இருந்தார் என்பதும் புலனாகின்றது. அரிசில் கிழார், மையூர் கிழார் போன்ற அறிவறிந்த நல்ல பெரியோர் அரசர்களுக்கு அமைச்சர்களாக இருந்து நாட்டை நல்வழியில் செலுத்திச் சென்றனர் எனக் காண்கிறோம். 'அமைச்சர்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் அதிகம் பயின்று வரவில்லையாயினும் 'சூழ்வாரரக' அவர் அமைந்தார். இதனால் அமைச்சரின் தூய்மையும் வாய்மையும் புலப்படுகின்றன.

நட்புப் பற்றியும் அந் நட்பின் வளத்தால் புலவர் புரவலர்களை எவ்வெவ்வாறு போற்றிப் பாட்டிசைத்தனர் என்பதையும் காண்கின்றோம். நட்பினைப் பற்றிப் பல அதிகாரங்கள் வள்ளுவர் கூறுவர். அத்தனைக்கும் விளக்கங்கள் சங்க இலக்கியங்களுள் காணலாம். ஒத்தார் மாட்டு மட்டுமன்றி, சாதாரண மக்களிடத்தும் அன்பொடு கலந்த நட்பின் நிலையில் மன்னர் வாழ்ந்தார் என்பதைப் பல புலவர்கள் காட்டுவர். 'கேண்மை' என்ற சொல்லும் இதற்குப் பயன்படுத்தப் பெறுகின்றது.

**" பெரிது ஆண்ட பெருங் கேண்மை**
**அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல் "**

(பொருநர் 229-30)

என்று கரிகாற் பெருவளத்தான் பண்பு பாராட்டப் பெறுகின்றது. அகப் பொருள் இலக்கியங்களுள் இக்கேண்மையாகிய நட்புப் பேசப்பெறுகின்றது. பெரியவர் நட்பினை,

**" தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை "**

(நற். 1)

என்று நல் உவமை வழியே பெரியோர் நட்பு காட்டப் பெறுகின்றது. மேலும் பல அகப்பாடல்களில் தலைவர் கேண்மை பேசப் பெறுகின்றது. வீட்டுத் தலைவர் கேண்மையில் நாட்டுத் தலைவர் கேண்மையை நாம் உணரலாம் என்ற அளவில் நின்று மேலே செல்லலாம்.

நல்லவர் நட்புப் பிரிக்கலாகாத ஒன்று என்பதைக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் இடையே இருந்த நட்பின் வளத்தால் (புறம் 215, 126) நன்கு உணரலாம்.

" கேட்டினும் உண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் "

(குறள் 796)

என்ற குறளுக்கு இலக்கியம் எனவே,

" செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே "

(புறம் 215)

என்ற கோப்பெருஞ்சோழன் அடிகள் அமைகின்றன அல்லவா!

நட்பொடு புணர்ந்து இருந்தார் இருபெருவேந்தரைக் (குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி) கண்டு மகிழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் அவர் நட்பு சிறக்கவேண்டுமென,

" ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்க நும்புணர்ச்சி "

(புறம் 58)

என வாழ்த்தினமை அறிகின்றோம். இதில் நட்பினை மாற்றும் ஏதில் மாக்களுக்கு எச்சரிக்கையும் விட்டுள்ளனரன்றோ!

இனி, அரண்பற்றிப் பாடிய பல சங்கப்பாடல்கள் நம்முன் உள்ளன. இயற்கை அரண், செயற்கை அரண் முதலியன சுற்றிச் சூழ, நாடும் நகரும் நனி சிறந்தன எனக் காண்கிறோம்.

வான்கண் அற்றவன் மலையே; வானத்து
மீன்கண் அற்றதன் சுனையே, ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன் "

(புறம் 109)

என்று கபிலர் பறம்பு நாட்டு மலைஅரணைக் காட்டுகின்றார்

" வாங்குவில் அரணம் அரணம் ஆக "

(முல்லை—42)

என்று நப்பூதனார் வீரர்தம் அரணைக் குறிக்கின்றார். 'கடிஅரண்', 'முற்றரண்' எனப் பலவிடங்களில் அரண் பற்றிய குறிப்புக்கள் உள்ளமை காண்கின்றோம். இனி மாற்றார்தம் அரண்களைக் கடந்து அவர்தம் நாடுகள் கவின்கெடச் செய்த அரசர் வீரத்தினைப் புறப்பாடல்களில் மட்டுமன்றி அகப்பாடல்களிலும் நன்கு காண்கிறோம்.

" நண்ணார்
அரண்தலை மதிலராகவும் முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன் "

(நற்.— 39)

என்ற நற்றிணை அடிகளும்,

" வானவரம்பன் அடல்முனைக் கலக்கிய
உடைமதில் ஓரரண் போல
அஞ்சுவரு நோயொடு துஞ்சா தோனே "

(அகம்—45)

என்ற அகப்பாட்டு அடிகளும் சான்றாக அமையும் என எண்ணுகிறேன்.

ஒரே குறட்பாவில் நின்று இதுவரை இத்துணைச் சான்றுகள் கண்டோம்; இந்தக் குறளில் வரும் ஆறும் அரசனுக்கும் அரசியலுக்கும் இன்றியமையாதவை ஆனமையின். இனி அரசியலொடு தொடர்புடைய பிறவற்றையும் காண்போம்.

இறைமாட்சிக்கு அடுத்துக் கல்வி, கல்லாமை, கேள்வி என்ற அதிகாரங்கள் அரசியலில் வருகின்றன. அரசர்களுக்குச் கல்வி இன்றியமையாதது என்ற அடிப்படையில் மட்டுமன்றி, நாட்டுக்கல்வி வளர்ச்சியில் முதலாவதாக

அரசன் கருத்திருத்த வேண்டும் என்ற உண்மையினையும் வள்ளுவர் இதன்வழியே உணர்த்துகிறார். நாடு நாடாக இலங்க வேண்டுமாயின், கல்வியும் அதன் வழி ஊறும் அறிவும் இன்றியமையாதானவன்றோ? கல்வியின் இன்றியமையாமையைக் காட்டிய வள்ளுவர், அதை 'உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுக்' கற்க வேண்டிய வகையினை வற்புறுத்துவர், இதே கருத்தினை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,

> " உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
> பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே "
>
> (புறம்—183)

என்ற வகையில் விளக்கி, அக் கல்வியால் உண்டாகும் சிறப்பினைப் பின்வரும் அடிகளால் விளக்கிக் காட்டுகிறார்.

> " பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
> சிறப்பின் பாலான் தாயுமனந் திரியும்
> ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக என்னாது அவருள்
> அறிவுடை யோனாறு அரசும் செல்லும்
> வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
> கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பா லொருவனும் அவன்கட் படுமே "
>
> (புறம்—183)

நாடாளும் நல்லவர் எப்படித் 'துலாக்கோல்' ஒத்து நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென்ற உண்மையினை வ்ள்ளுவர் 'செங்கோன்மை' முதற் பாட்டிலேயே விளக்கிக் காட்டுகிறார்.

> " ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்துசெய் வஃதே முறை "
>
> (குறள்—541)

என்பர் அவர். 'உயிரினும் சிறந்தார் கண்ணும் என்பார் யார் மாட்டும் என்று கூறினார்' என விளக்கம் தருகிறார் பரிமேலழகர். இக் கருத்தினைச் சங்கப் பாடல்கள் பல வலியுறுத்துகின்றன.

" வழிபடு வோரை வல் அறிதீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி "

(புறம்—10)

என்ற ஊன்பொதி பசுங்குடையார் பாட்டும்,

" அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால் நமர்எனக் கோல்கோடாது
பிறர்எனக் குணங்கொல்லாது...வாழிய "

(புறம்—55)

என்ற மதுரை மருதனிள நாகனார் பாட்டும் வலியுறுத்துகின்றன வல்லவோ? மேலும் பிறர் நோயினையும் தம் நோய் போல் ஒப்ப அறியும் திறனை,

" பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடன் "

(கலி—139)

என்ற கலிப்பாட்டும் நன்கு விளக்குகின்றதல்லவா? இன்னும் செங்கோன்மை தவறாத மன்னன் ஆளும் நாட்டில் பெயலும் விளையுளும் தொக்கு அமையும் என்ற உண்மையினையும், குடிதழீக் கோலோச்சும் மன்னவன் அடிநிற்கும் உலகம் என்ற உண்மையினையும் வள்ளுவர் காட்டும் வகையில் பல சங்கப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

" மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்

அதுநற் கறிந்தனை யாயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே ''

(புறம்—35)

என்ற வெள்ளைக்குடி நாகனார் பாடலின் அடிகளும் அப் பாடலின் பிற அடிகளும் அந்த இரு குறட்பாக்களின் கருத்துக்களை மட்டுமன்றி அரசியல் அதிகாரங்கள் பலவற்றில் அமைந்த கருத்துக்களையும் தொகுத் துரைக்கும் வகையில் அமைகின்றன. ''அறம் புரிந்தன்ன செங் கோலும்'', 'குடிமறைக்கும் கொற்றக்குடையும்'', ''நாடா வளமுடைநாடும்'', ''நல்லரசும்'' பிறவும் வெள்ளைக் குடி நாகனார் பாடலில் நன்கு காட்டப்பெறுகின்றன.

பெரியோரைத் துணைக்கோடலின் தேவையை—இன்றியமையாமையை வள்ளுவர் ஓர் அதிகாரத்தான் விளக்கி, மற்றுமொரு அதிகாரத்தால் சிற்றினம் சேரா நிலையையும் காட்டுகிறார். சங்க இலக்கியங்கள் பலவும் இவ்விரண்டினையும் சுட்டிக்காட்டுகின்றன.

'' தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல
வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றிய ''

(மதுரை 761—65)

நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடிய வரிகளில் பெரியாரைத் துணைக் கொண்ட அவன் குலச்சிறப்பு விளங்குகின்றதன்றோ? பாரி கபிலரையும், அதிகன் ஔவை யாரையும் அவ்வாறே பல மன்னர்கள் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரையும் துணையாகக் கொண்டு வாழ்ந்த வரலாற்று நிலை அறிந்த ஒன்றுதானே. அப்படியே

தாம் மட்டுமன்றித் தம் குடிமக்களும் சிற்றினஞ்சாரா வகையில் அரசுமுறை அறிந்து போற்றிய மன்னரும் அம் மன்னர்வழி ஒழுகிய குடிகளும் நம்முன் காட்சி தருகின்றனரே! அத்தகைய சான்றோராம் அறிஞர் முன் நின்று தடுத்த போர்களும் குடிப் பூசல்களும் பல உள்ளனவே?

'' இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர் ''

(குறள்—447)

என்ற குறள் அடிக்குத் 'தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணையாந் தன்மையை உடைமை' எனப் பரிமேலழகர் விளக்கம் தருகிறார். இந்த உரை வகையில் அல்லன செய்யுங்கால் இடித்துரைத்துத் திருந்திய புலவர்களையும் திருந்திய புரவலர்களையும் காண்கின்றோம். கண்ணகியைத் துறந்த பேகனைப் பரணர் இடித்துத் திருத்த, அவன் திருந்தியதோடு, யாரும் கெடுக்கா வகையில் நெடிது வாழ்ந்தான் என அறிகின்றோம். அப்படியே சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைக் கோவூர் கிழார் இடித்துரைத்து (புறம் 46) மலையமான் மக்களை விடுவித்ததும், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் அந்துவன் சேரனிடம் ''நோயிலனாகப் பெயர்கதில் அம்ம'' என்று கூறிப் பெருநற்கிள்ளியை அனுப்பியதும் நாடறிந்த வரலாறுகள் அல்லவா? இவ்வாறு பாட்டிலும் தொகையிலும் பலப்பல இடங்களில் தவறும் மன்னர்களும் வீரர்களும் பெரியார் துணைக்கோடலால் திருந்தி, புகழுற்று இன்றளவும் வாழ்கின்றார்கள் என அறிகிறோம்.

'' ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய் ''

(குறள்—69)

என்ற வள்ளுவர்- வாக்கிலும் ஒரு படி மேலாகச் சென்று காக்கைப்பாடினியார், வீரத்தொடு போரிட்டு மடிந்த மகனைக் கண்டு பெரிது மகிழ்ந்த தாயினத்தை எண்ணி,

**'' படுமகன் கிடக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே ''**

(புறம்—278)

என்று பாடுகின்றார்.

அப்படியே,

**'' எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு ''**

(குறள்—110)

என்ற குறளுக்கு ஆலத்தூர் கிழார் விளக்கம் தந்து (புறம் 34), குறளையே 'அறம்' எனக் காட்டி, ''அறம் பாடிற்றே ஆயிழை கணவ'' எனப் போற்றவில்லையா? இவை இரண்டும் அரசியலைச் சார்ந்த குறட்பாக் களின்றேனும் வீரச் செயலும் நன்றி உணர்வும் அரசர்கட்கு இன்றியமையாப் பண்புகளானமையின் ஈண்டுச் சுட்டிக் காட்டினேன்.

இனி,

**'' காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம் ''**

(குறள்—186)

என்ற குறள் கருத்தை ஒட்டிப் பல கருத்துக்கள் காணப் பெறுகின்றன. காட்சிக்கெளியனாக மட்டுமன்றிப், புலவர் வாய்ச் சொல்லுக்கிரங்கி, அவருக்குக் கவரி வீசிய காவலனையும் (புறம் 50) காணுகின்றோமே. ''இல்லோர் ஒக்கல் தலைவன்'' (புறம் 95) எனவும், 'சாந்துவரு வானி நீரினும் தீந்தண் சாயலன்'' (பதிற் 86) எனவும் மன்னர் போற்றப்படுகின்றனரே! மாற்றாருக்குக் கூற்றுவனாகவும் அதே வேளையில் மற்றவருக்கு எளிய

னாகவும் தோற்றமளிக்கும் மன்னரைப் பலர் பாடியுள்ளன ரன்றோ? ஒருசிலர் பகைவருக்குத் தண்ணளி செய்த சிறப் பினையும் காண்கின்றோம்.

**" பகைவர் ஆரப் பழங்கண் அருளி**
**நகைவர் ஆர நன்கலம் சிதறி**
**ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால் "**

(பதிற்—37)

என்று களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் காப்பியாற்றுக் காப்பியனாரால் பாராட்டப் படுகின்றன னன்றோ?

இனிக் கண்ணோட்டம் என்ற தன்மையைக் காண்போம்.

"கண்ணோட்டத் துள்ளது உலகியல்" என்று காட்டி வள்ளுவர் அக் கண்ணோட்டமே நாகரிகம் என்ற கருத்தில்,

**" பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர் "**

(குறள்—580)

என்று கூறுகிறார். "நாகரிகம் வேண்டுபவர்" என்பதற்கு "விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுபவர்" என விளக்கம் தருகிறார் பரிமேலழகர். உற்றார் என உளத்தால் நினைத்தவர் நஞ்சினையே கொடுப்பினும்,அவர் மேல் ஐயுறாது, அதை உண்டு வாழ்தல்—சாதலன்று— கண்ணோட்டம் என்பது வள்ளுவர் கருத்து. இதன்வழியே, வள்ளுவர் நம்பிக்கை அடிப்படையை நெகிழ்த்தலாகாது என்பதையும், ஐயந்தீர்க்கும் உபாயங்களான் ஆய்ந்து, 'தவறு செய்யமாட்டார்' என்று முற்றும் நம்பிய வரிடம் மறுபடியும் மன்னர் ஐயம் கொள்ளலாகாது என்பதையும் காட்டுவதோடு, அந்த எண்ணம்—திண்மை— சாகடிக்கும் ஆற்றலுடைய விடத்தினையும் பயனற்றுச் செய்துவிடும் என்ற உண்மையையும் விளக்குகிறார். பிறர் குற்றத்தைப் பொறுக்கும் பண்பினை இது குறிக்கும்

என்ற அளவே பரிமேலழகர் இக் குறட்பாவிற்கு உரை காணினும் இதனினும் மேம்பட்ட செம்மைப் பொருளில் இது சிறக்கின்றது எனலாம். இக் கருத்தினையே,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" (நற்—355)

என்ற நற்றிணை அடிகள் நன்கு விளக்குகின்றன. "நஞ்சும் உண்பர்" என்பதற்கு 'நஞ்சுண்டமைவர்' என்ற குறளின் தொடரே பாடமாக உண்டெனவும் சிலர் கூறுவர். எப்படியாயினும் குறளும், நற்றிணையும் இந்த உயர்ந்த பண்பினைச் சிறப்பாக மன்னர் மேலேற்றிக் கண்ணோட்டம் என்றஇந்தஅடிப்படையில் வாழ்ந்தாலன்றி உலகம் வாழாது என்று வரையறுத்துக் கூறிக் காட்டு கின்றனவன்றோ? "கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையால் உண்டிவ் வுலகு" (குறள்—571) என்பது உண்மையன்றோ?

இவ்வாறு இன்னும் அரசியலில் வரும் காலம், இடன், வலி முதலியனவற்றை அறிதல் பற்றியும், பிற தலைப் புக்கள் பற்றியும், அங்கஇயலிலும் பிறவற்றிலும் அரசரைச் சார்ந்து வரும் பண்புகள் பற்றியும் படைச் செருக்கு முதலிய அரசற்கு இன்றியமையாச் சிறப்புக்கள் பற்றியும் ஆராயப்புகின் எல்லையற்றுப் பெருகிக்கொண்டே போகும். ஆயினும் கால எல்லை கருதி இந்த அளவோடு அமையக் கருதுகின்றேன். வல்லார் பல்லோர் உள்ள அவையில் எல்லை மீறி, அவர்கள் அறிந்தவற்றை அளவுக்கு மீறிப் பேசிக்கொண்டிருத்தல் 'நாகரிக' மன்றே! எனினும் முடிக்குமுன் இவ் அரசியலுக்கே அடிப்படையான 'நாடு' பற்றி மட்டும் ஒரு சில கண்டு அமையலாம் எனக் கருதுகின்றேன்.

திருவள்ளுவர் 'நாடு' பற்றிக் கூறும்போது அங்கவியலில்,

" நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு "

(குறள்—739)

என்றும்,

" தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு "

(குறள்—731)

என்றும்,

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு "

(குறள்—734)

என்றும் கூறியுள்ளார். இத்தகைய நாட்டு நலன்களையெல்லாம் புறப்பாடல்கள் மட்டுமன்றி, அகப் பாடல்களிலும் நிரம்பக் காணலாம்.

" விசிபிணி முழவின் குட்டுவன் காப்ப
பசிஎன அறியாப் பணைபயில் இருக்கை
தடமருப் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு "

(அகம்—91)

என்று மாமூலனார் அகத்தில் காட்டியுள்ளார். பாரியொடு வதிந்த கபிலர் அப் பாரியின் நாடு மூவேந்தரால் எத்தனை நாட்கள் முற்றுகை இடப்பெறினும், நாடாவளம் வாய்ந்த தாகலின், அவர்களால் வெல்ல முடியாது எனக் காட்டு கிறார். பறம்பு நாட்டு இயற்கை நிலையை எண்ணிக் களி துளும்பிய உள்ளத்தொடு அவர்,

" உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க் கும்மே

**நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து**
**திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே ''**

(புறம்—109)

என்று காட்டி, மக்கள் கைவருந்திப் பெறுகின்ற பொருள் களோடு இயற்கைப் பொருள்களும் செறியும் நிலை உணர்த்தி ''நாடென்ப நாடா வளத்த'' என்ற நிலையை விளக்கிவிட்டார். இவ்வாறே, பல்வேறு புலவர்களும் தாம் தாம் பாடவந்த புரவலர்களைப் பாடும்போதும், மாற்றார் நாடுகள் நிலைகெட்டபோதும் அவரவர் நாடு களின் ஏற்றத்தைப் பாடியமை கண்டு தானோ வள்ளுவர் தன் நாட்டிற்கு இலக்கணம் வகுத்தார் என்று எண்ணத்தக்க வகையில் சிறப்பித்துள்ளார். விரிப்பிற் பெருகும்.

ஈண்டு வள்ளுவர் அரசியற் கருத்துக்களுடன் சங்க கால அரசியற்கருத்துக்கள் இயைந்துள்ளவற்றுள் ஒரு சில காட்டினேன். மன்னன் முறை செய்யும் திறன், அவனைச் சேர்ந்தொழுகுவார் செயல், அவன் நட்பு நெறி, ஒற்று, தூது பற்றிய விளக்கங்கள் அனைத்தையும் ஒப்பு நோக்கிக் காணின் அது ஒரு பெருநூலாக அமையும் எனக் கருதி இந்த அளவோடு அமைகின்றேன். எனவே, இக் கட்டுரை எடுத்த தலைப்பை முற்றக் காட்டியது எனக் கொள்ள இயலாது என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

இங்கு, இக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வாய்ப் பளித்த மதுரைப் பல்கலைக் கழகத்துக்கும், அதன் துணை வேந்தர் அவர்கட்கும், திருக்குறள் ஆய்வுத் துறைக்கும், இக் கருத்தரங்கின் செயலருக்கும் என் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். வணக்கம்

# 8. பல்லவர்கால வரலாறு

உலக நாடுகள் அனைத்தும் தத்தமக்கெனக் கடந்த கால வரலாறுகளைப் பெற்றிருக்கின்றன. சில நாட்டு வரலாறுகள் பழமை வாய்ந்தனவாகவும், சில காலம் கணிக்க முடியாதனவாகவும், சில இடையிடையே இருளடைந்த நிலையிலும் உள்ளமையை வரலாற்று ஆய்வாளர் நன்கு அறிவர். ஒருசில மறைந்த வரலாறுகளைப் பற்றியும் அவற்றின் அடிப்படையில் காணும் பண்பாடு, நாகரிகம், சமயம், பிறவாழ்வு நிலைகளைப் பற்றியும் தொல்பொருள் ஆய்வாளர்கள் அகழ்ந்து அறிந்து—ஆழ்ந்து உணர்ந்து உலகுக்கு உணர்த்துகின்றனர். இந்திய நாட்டுச் சிந்துவெளி நாகரிகமும் தமிழ்நாட்டுப் பழம் பெரு நாகரிகமும் அந்த அடிப்படையில் ஆய்வுக்கு நிலைக்களன்களாக அமைந்து, பலப்பல புதுப்புது உண்மைகளை நமக்கு உணர்த்தும் வரலாற்றுச் செல்வங்களாக அமைகின்றன. அந்த அடிப்படையில், வாழ்ந்து மறைந்த சின்னங்கள்—வடித்தெடுத்த சிற்பங்கள்—செதுக்கி வைத்த எழுத்துக்கள்—புதைத்து வைத்த தாழிகள் போன்றவை பலப்பல உண்மைகளை நமக்கு உணர்த்துகின்றன.

இந்த வகையில் தமிழகத் தொல்பொருள் ஆய்வு நிலையம் பல ஆண்டுகளாக நல்ல பணியாற்றி வருகின்றது. தற்போது அதன் இயக்குநராகிய திரு. நாகசாமி அவர்களும் நல்ல ஆராய்ச்சி செய்து தாமே சில நூல்களையும் வெளியிட்டுள்ளார். அத்துறையினர் பல்வேறு வகையில் முயன்று தமிழர்தம் பெருநாகரிகத்தை உலகுக்கு காட்ட முயல்கின்றனர். அம்முயற்சி பல வகையில் உருவாகிச் சிறக்கின்றது. அவற்றுள் ஒன்றே இன்றைய வகுப்பு

முறையும் அதன் அடிப்படையில் அமைந்த சிறப்பாய இன்றைய கூட்டமும் ஆகும். அவர்தம் முயற்சி வெல்க என வாழ்த்தி என் பணியைத் தொடங்குகிறேன்.

வரலாறு என்பது, மேலை நாட்டு அறிஞர்கள் காட்டியபடி வெறும் அரசர் பரம்பரையினையும் அவர்கள் அரண்மனை வாழ்வையும் ஆற்றிய போரையும் மட்டும் குறிப்பிடுவதாகாது. அது மக்கள் வாழ்வொடு பிணைந்த ஒன்றாகும். ஆயினும் இவை மாறுவதற்குப் பெரும்பாலும் அரசியலே காரணமாக அமைந்தமையின் வரலாற்றை அந்த அந்த அடிப்படையிலே கணக்கிடுவர். அந்த உண்மையில் பார்க்கும்போது தமிழ்நாட்டு வரலாற்றில்—மக்கள் வாழ்வில் உண்டான எத்தனையோ மாற்றங்களை நம்மால் எண்ணாதிருக்க முடியாது. அவற்றுள் ஒன்றே சங்க காலத்துக்கும் பல்லவர் காலத்துக்கும் இடையில் உண்டான பெருமாற்றம்.

சங்ககாலம் பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட முடிவின்படி கி. பி. முதல் நூற்றாண்டோடு முடிவடைவதாகும். அக்காலத்திய மக்கள் வாழ்விற்கும் ஏழாம் நூற்றாண்டில் அப்பர், சம்பந்தர் வாழ்ந்த கால மக்கள் வாழ்விற்கும் எத்தனையோ வேறுபாடுகளைக் காண்கின்றோம். ஏன் இந்த மாற்றம்?

இந்த நான்கைந்து நூற்றாண்டுக் காலத்தைத் தமிழக வரலாற்றை ஆராய்வோர் தமிழக இருண்ட காலம் என்றோ, களப்பிரர் இடையீட்டுக் காலம் என்றோ கூறுவர். தெளிந்த சமுதாய வாழ்வைக் காட்டும் சங்க காலத்துக்கும் ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட வரலாற்றை முற்றும் வரையறை செய்ய முடியாமையே இதற்குக் காரணம். ஏன் செய்யவில்லை? நாடு என்னாயிற்று?

கடைச்சங்க காலத்து இறுதி நிலையினையோ அன்றி முடிந்த நிலையினையோ நமக்கு விளக்குவனவே இரட்டைக் காப்பியங்கள். முடியுடை வேந்தர்கள் நிலை கெடும் காலமாக அது அமைந்துவிட்டது. சோழன் கரிகாற் பெருவளத்தானும் பாண்டியன் நெடுஞ்செழியனும் சிலப்பதிகார இறுதிக் காலத்திலே வரலாற்று வீரர்களாகி விட்டனர். சேரன் செங்குட்டுவனே தமிழ்நாட்டுச் சிறந்த மன்னனாக விளங்கினான். அவன் காலம் வரையில் தமிழ்நாட்டு இலக்கிய மரபு, வாழ்க்கை நெறி, சமய மரபு முதலியன ஓரளவு முறை தவறாத வகையில்—அதிக மாறுபாடுகள் இல்லாத வகையில் இருந்தன. அவன் காலத்திலேயே தமிழ்நாட்டுக்கு முற்றும் புதியனவாகிய சமயங்களும் வாழ்க்கை நெறிகளும் இடம் பெற்றுள்ளமையைக் காண்கின்றோம். அவன் காலத்துக்குப் பிறகே தமிழர் நாட்டு முடியுடை வேந்தர் மரபிலே மதிக்கக் கூடிய மன்னர் இலராயினர். ஆனால் அதே வேளையில் வடக்கில் சாதவாகனப் பேரரசும் அதைச் சார்ந்தும் தனித்தும் நின்ற பல சிற்றரசுகளும் தமிழ்நாட்டைத் தம் உரிமையாக்கிக் கொள்ள மறைமுகமாக முயன்று கொண்டிருந்தன. ஆந்திரரும் சாதவாகனரும் கங்கரும் வாகடகரும் களப்பிரரும் கடம்பரும் நாகரும் (Chuta nagar) பிறரும் ஒருவர்பின் ஒருவராகத் தனித்தும் சேர்த்தும் கி. பி. 2, 3, 4-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டின் எல்லையிலும் தமிழ்நாட்டிலும் தத்தம் கொள்கைகளையும் அவற்றையொட்டி ஆட்சியையும் புகுத்த நினைத்தனர். அப்படியே வடநாட்டுச் சமயத்தவர் பலரும் உள்ளே வந்தபோதிலும் அதுவரை ஆக்கம் செலுத்த முடியாதிருந்தமையின் உள்ளம் பொருமிக் கொண்டிருக்க, தடுக்க ஆளில்லாத காரணத்தால்—இக் காலத்தில் தாராளமாக நுழைந்தனர். அந்த அடிப்படையிலேதான் சமணமும் பௌத்தமும் வைதிகமும் பிற சமயங்களும் தமிழ்நாட்டில் புகுந்தன. 'ஒன்றே குலமும் ஒருவனே

'தேவனும்' என்ற உணர்வினையும், அடுத்துச் சைவம் வைணவம் என்ற இரு சமயங்கள் ஒன்றினை ஒன்று தாக்கா வகையில் இணைந்தும் சென்றமையைத்தான் சங்க காலத்தில் காண முடிகின்றது. ஆனால் செங்குட்டுவன் காலத்தை ஒட்டியும், அவனுக்கு அடுத்த சில ஆண்டுகளிலும் எழுந்த இலக்கியங்களில் சமயப் பூசல்கள் இடம் பெற்றமையைக் காண்கிறோம். அப்படியே பல்வேறு வகைப்பட்ட அரச மரபினர் தத்தம் முயற்சிக்கும் திறனுக்கும் தக்க வகையில் புகுந்தும் பிரிந்தும் நுழைந்தும் மாறியும்—ஏன்—நாட்டு மக்களை மாற்றியும் தத்தம் வாழ்வு, சமய நெறி முதலியவற்றை நிலைபெறச் செய்ய முயன்றனர். அக்கால நிகழ்ச்சிகளைக் அரச ஆதிக்கத்துக் காக ஏற்பட்ட போராட்டங்கள் என்பதைக் காட்டிலும் கொள்கை, சமயம், ஓரளவு மொழி இவற்றின் அடிப்படை யில் அமைந்த போராட்டங்கள் எனக்கொள்வது பொருத்த மாகும். இத்தகைய மாறுபாடுகளுக்கு இடையில் நாடு தன்னிலை கெட்ட காலத்தில் வந்தவருள் ஒரு மரபினரே பல்லவர் ஆவர். அவர் வருகை நாட்டில் உண்டாக்கிய மாறுதலைக் காட்டுவதே இன்றைய கூட்டத்தின் கருத்தாகும்.

தமிழ்நாட்டு வரலாற்று எல்லைக்கு முற்பட்ட காலந் தொட்டு ஆண்டுவந்த பழங்குடி மக்களாகிய மூவேந்தர் களும் அவரொடு வாழ்ந்த குறுநில மன்னர்களும் வள்ளல் களும் தத்தம் நிலைகுலைந்த காலத்திலேதான், தமிழ் நாட்டு மரபுக்கு முற்றும் மாறுபட்ட பல சமுதாய மக்களும் சமய மக்களும் அவர்தம் தலைவர்களும் அலையலையாகத் தமிழ்நாட்டில் புகுந்தனர். அதற்கு முன்பும்கூடப் பல வடநாட்டுப் பெரு மன்னர்கள் — அசோகன் உட்பட— தெற்கு நோக்கி வந்திருந்தாலும் அவர்கள் தமிழ்நாட்டு எல்லையுள் ஆட்சிக்காகவோ, கொள்கை அல்லது சமயம் பரப்பியோ உரிமை கொண்டாடி நுழைய முடியவில்லை.

ஆம்! அக்காலத்தில் எல்லாம் தமிழ்ச் சமுதாயமும் அவர் தம் மன்னரும் மாற்றாரை விரட்டி ஓட்டி நிற்கும் நிலையில் வாழ்ந்துவந்தனர். எனினும் கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கி இந்த நிலை மெல்ல மெல்லத் தளர, அந் நூற்றாண்டின் இறுதியில் தாயற்ற சேயெனத் தமிழ்நாடு நிலை தளர்ந்தது. இந்தக் காரணத்தாலேயே தமிழர் தம் பேரும் புகழும், சீரும் சிறப்பும், அறிவும் திறனும் பிற இயல்புகளும் கண்டு கருத்தழிந்த பலர் இந்நாட்டில் கால் வைத்தனர். அவ்வாறு வந்தவருள் பல்லவர் முக்கியமானவர்.

பல்லவர் வெளிநாட்டிலிருந்து வந்தவரே என்பதைப் பல பேரறிஞர்கள் முடிவு கட்டிக் கூறினார்கள் என்றாலும் ஒருசிலர் அவர்கள் தமிழ்நாட்டினரே என்று சாதிக்க நினைக்கின்றனர். இப் பல்லவரைப் பற்றி இன்றைக்குச் சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன் கல்வெட்டு, சிற்பம், ஓவியம், கலைநலம், சமய நெறி, இலக்கியம் முதலியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்த நல்லறிஞர்கள் சிறந்த வகையில் ஆய்வு நடத்தியுள்ளார். ஆயினும் அதற்குப் பிறகு கடந்த அரை நூற்றாண்டில் ஆய்கின்றவர்கள் யாவரும் முன் ஆய்ந்தவர் கொண்ட முடிவுகளை வைத்துக்கொண்டு, சொல்வதையே சொல்லிக்கொள்ளும் வகையில் சில நூல்களை வெளி யிட்டுள்ளனர். அக்கால ஆராய்ச்சி அறிஞர்களுள் திருவாளர்கள் வி. வெங்கையா, துப்ரெயில் துரை, சீனிவாச ஐயங்கார் டி. ஏ. கோபிநாத ராவ், ஏ. இலாங்குஸ்டு ஹுல்ஸ் போன்றோர் முக்கியமானவர்கள்? பல்லவர்தம் செப்பேடுகளில் உள்ள எழுத்துக்கள் சில வடநாட்டு வேந்தர்களாகிய சதகர்ணி, புலுமாயி போன்றோர்தம் எழுத்துக்களை ஒத்துள்ளன என அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

பல்லவர் தமிழ்நாட்டவரே என்று காட்டுவார் பல்லவம் என்பது கொடி என்றும், கொடியால் சுற்றப் பட்டமையின் பல்லவர் குடியின் முதல்வன் அப்பெயர் பெற்றான் எனவும் காரணம் காட்டுவர். தொண்டைமான் இளந்திரையனே அவன் என்பர். பத்துப்பாட்டில் பெரும் பாணாற்றுப் படைத் தலைவனே—அத் தொண்டைமானே இக்குலத்தின் முதல்வன் என்பர். அத்துடன் ஒரு சிலர் அவன் சோழ மன்னனுக்கும் வழுக்கிய வேற்றுப் பெண்ணுக்கும் பிறந்து பட்டத்துக்கு வந்தவன் என்பர். இது எப்படிப் பொருந்தும் என எண்ணிப் பார்க்க வேண்டும். பெரும்பாணாற்றுப்படை போன்ற பேரிலக் கியத்தின் தலைவன் எப்படித் தமிழ் அறியாத ஓர் அரசர் குடிக்கு முதல்வனாக இருக்கமுடியும்?

தொண்டைமான் இளந்திரையனைப் பற்றி இவர்கள் கூறும் கதைக்கும் பல்லவர் மரபுக்கும் சம்பந்தமே இல்லை. சோழ மன்னன் பீலிவளை என்ற நாக கன்னிகையைத் தொண்டைநாட்டில் கண்டு கூடிப் பிரியும் காலத்தில் மகன் பிறந்தால் அனுப்புமாறும் அவனை அரசனாக்கி வைப்பதாகவும் வாக்களிக்க, அப்படியே நாகநாடு சென்ற பீலிவளை தான் பெற்ற மகனை உற்ற பருவத்தில் கலத்தில் சோழநாட்டுக்கு அனுப்பினாள்; கடலில் கொடுங் காற்றால் கலம் கவிழ, இளந்திரைகளுக்கிடையில் இளவரசன் கடலை நீந்திக் கரையை அடைந்தான்; அதுபோது கடற்பாசிக் கொடிகள் அவனைச் சுற்றி இருந்தமையால் அக்கொடிகளால் அவன் பல்லவன் ஆக்கப் பட்டான் என்றும் கூறுவர். (பல்லவம் தமிழ்ப் பெயரன்று) திரைகளால் தரப்பெற்றவனே தொண்டைமான் இளந்திரையன் என்பர். எனினும் அவனைப் பாடிய பெரும்பாணாற்றுப்படையாகிய பெரு நூல் இது பற்றி ஒன்றும் குறிக்கவில்லை. மேலும் அவன் சிறந்த தமிழ் மன்னன். கொடியைப் பல்லவமாக்கி அதிலிருந்து மரபை

எப்படிக் காட்டமுடியும்? நாக நாடு என்பது தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடைபட்ட மணிபல்லவத் தீவினுக்கு அண்மையில் இருந்த தீவுகளில் சில. இதனை மணிமேகலை நன்கு விளக்கும். மணிபல்லவத்தில் இருந்த பீடிகை சம்பந்தமாக இரு நாட்டு மன்னர் போரிட்ட நிலையினை,

**" கீழ்நில மருங்கில் நாகநா டாளும்**
**இருவர் மன்னர் ஒருவழித் தோன்றி "**

(மணி. 8. காதை)

அப் புத்த பீடிகைக்கு உரிமை கொண்டாடினர் எனக் காட்டுகிறது. எனவே இன்றைய யாழ்ப்பாணத்தை ஒட்டிய தீவுகளில் சிலவே நாகநாடு என்பது தேற்றம். ஏனெனில் மணிபல்லவம் அன்றைய காவிரிப் பூம்பட்டினத்துக்கு முப்பது யோசனைத் தூரத்தில் தெற்கே இருந்த தீவு என்பதனை மணிமேகலை,

**" அந்தம் ஆறா ஆறைந்து யோசனை**
**தென்திசை மருங்கில் சென்றுதிசை உடுத்த**
**மணிபல்லவத் திடை மணிமேகலா தெய்வம்**
**அணியிழை தன்னை வைத்த கன்றது "**

(காதை—6. கடைசி வரிகள்,

எனக் காட்டுகின்றது. எனவே இதன் வழியே பல்லவர் தாய் வழியாக மாறுபட்டவர் என்பதனையும் பிராகிருதம் அறிந்தவர் என்பதனையும் காட்ட இயலாது. அந் நாக நாடும் தமிழ் மரபோடு கூடிய மக்களையும் மன்னரையும் கொண்ட நாடாக இருந்தது தேற்றம். இன்றும் அந் நாக நாட்டினை நினைவூட்டிக் கொண்டு மணிபல்லவத் தீவில் நாகதேவதை நாகம்மையாகப் பெருங்கோயில் கொண்டு, தமிழ் மரபுக்கு ஏற்பச் சிறப்பொடு பூசனைகளை ஏற்று இருந்து வருவதைச் சென்றோர் அறிவர். புத்த பீடிகையும், புத்தர் பள்ளமாகிய கோமுகிப் பொய்கையும் அத்தீவில் ஒரு பக்கம் இலங்கைவாழ் புத்த சமயத்தினருக்குப் புனித

இடமாக அமையும் அதே வேளையில், கடற்கரையை அடுத்த நாகம்மைக் கோயில் இலங்கைவாழ் இந்துக் களுக்குச் சிறந்த தூய்மைநிறை தெய்வ இடமாக அமை கின்றது. இத்தீவும் இதை ஒட்டிய சில தீவுகளுமே நாக நாடு எனக் கொள்ளல் பொருந்தும். எனவே இந்நாட்டுப் பீலிவளைக்குப் பிறந்த திரையனை எக்காரணம் கொண்டும் பல்லவர் குலத் தலைவனாக்க முடியாது. நல்ல வேளை இவர்கள் ஆய்வு, 'அழகிய பல்லவர் ஆண்டதால் தான் அத்தீவு மணிபல்லவம் என்று பெயர் பெற்றுச் சிறந்தது' என்னும் அளவிற்குச் செல்லாதது அமைதி தருகின்றது.

ஆம்! முதற் பல்லவர் தமிழ் மரபுக்கு மாறுபட்டவர் என்பதற்கு அவர்தம் பிராகிருத மொழிக் கல்வெட்டுகளே சான்று பகரும். மேலும் அவர்களே தங்களைப் பரத்துவாஜ கோத்திரத்தவர் என்று கூறிக் கொள்கின்றனர். (Pallavas of Kanchi) இக்கோத்திரம் தமிழ் மரபுக்கு ஏற்றதன்று. பல்லவர் முதலில் பிராகிருதப் பல்லவராக இருந்து, பின் சமஸ்கிருதப் பல்லவராகிப் பின் ஏழாம் நூற்றாண்டில் அப்பர் அடிகளால் மாற்றம் பெற்ற பிறகே தமிழ்ப் பல்லவராகித் தம் கல்வெட்டுக்களைத் தமிழிற் பொறித் துள்ளனர். எனவே பல்லவர் தமிழ்நாட்டவர் என்று கொள்வதோ சோழனுக்கு முறையற்ற வழியில் பிறந்த பரம்பரையினர் என்று கொள்வதோ பொருந்தாது.

சிலர் 'பல்லவர் தொண்டையர்' எனத் திருமங்கை ஆழ்வார் போன்றார் பாடியதைக் கொண்டும் கொடிக்கு வடமொழிப் பெயர் பல்லவம் என்றிருப்பது கொண்டும் இந்த உண்மையை நிலைநாட்ட முயல்வர். தொண்டை நாட்டை ஆண்டதால் அவர்கள் தொண்டையர் எனவும் தொண்டையர் கோன் எனவும் அழைக்கப் பெற்றார்களே யன்றி வேறன்று. 'Emperor of India' என்று ஆங்கில நாட்டு மன்னர் கூறப் பெற்றார் என்பதால் அவரை யாராவது

இந்தியர் என்று கூறமுடியுமா? கொடி வழியாக வந்தவராயின் அதன் தமிழ்ப் பெயரை விடுத்து, வேற்று மொழிப் பெயராகிய பல்லவர் என்று அவர்கள் தம்மை அழைத்துக் கொள்வார் என்று நினைப்பது எவ்வளவு பொருத்தமற்ற ஒன்று. எனவே, இவற்றால் அவர்களைத் தமிழகத்தைச் சார்ந்தவர் என்று கொள்ளல் கூடாது. மேலும் அவர்கள் தமிழ் மரபினராகவே — இளந்திரையன் வழியினராகவே இருந்திருப்பாராயின் தமிழ்நாடு அவர் தம் ஆட்சியில் நிலை கெட்டு, மொழி கெட்டு, மரபு கெட்டு, சமயம் மாறி, பிற வகையில் எல்லாம் இருட்டடிப்புச் செய்யும் வகையில் இருந்திருக்குமா என எண்ணிப் பார்க்கவேண்டும். மேலும் முதற் பல்லவர்தம் வாழ்வும் பிற தொடர்புகளும் பெயரும் பிறவும் வடநாட்டவரோடு தொடர்புடையனவாகவே அமைவதையும் மறக்க முடியாது. அவர்கள் வட இந்தியாவையோ தக்கணத்தையோ சார்ந்தவரா அல்லது ஒரு சிலர் நினைக்கும்படி 'பார்த்திய நாடு' என்ற ஒரு வெளிநாட்டில் இருந்து வந்தவரா என்பதில் ஐயமிருக்கலாம். அது பற்றிய கவலை நமக்கு இங்கே தேவையில்லை. அவர்கள் முற்றும் தமிழ் இனத்துக்கு வேறுபட்டவராகித் தமிழ்நாட்டின் வடக்கே இருந்து வந்தவரே எனக் கொள்வது பொருத்தமானதாகும்.

அவர்கள் வடக்கிருந்து வந்தவர்கள் என்பதற்கு அவர் தம் குகைக் கோயில்களும் சான்று பகரும் என்பர் சிலர். மராட்டிய நாட்டிலுள்ள அஜந்தா, எல்லோரா போன்றவற்றையும் பிற்காலப் பல்லவர்தம் குகைக்கோயில் களையும் ஒப்பு நோக்கின், வளர்ந்த அந்த மாரட்டிய நாட்டின் கலையுணர்வு பெற்ற பரம்பரையினருள் ஒரு சாரார் தெற்கு நோக்கி வந்தார்களோ எனக் கொள்ள இடமுண்டு. எனினும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் அத்தகைய குகைக்கோயில்கள் இல்லாமையாலும் வடக்குள்ளவையும் காலத்தால் பிற்பட்டவை எனக்

கொள்ள வேண்டி இருப்பதாலும் இக்கூற்றை அத்துணைப் பொருத்தமாகக் கொள்ள வழியில்லை. எனினும் அவர்கள் தமிழ்நாட்டில் வந்து சேர்ந்த வேற்று இனத்தவரே என்பதில் ஐயமில்லை.

பல்லவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. எனினும் அவர்கள் எப்போது காஞ்சிக்கு வந்தார்கள் என்பதைத் திட்டமாக வரையறுக்க முடியவில்லை. பல்லவர் வாழ்வின் இறுதி எல்லை, அபராஜிதரோடும் தமிழக வரலாற்றின் திருப்பு மையமான திருப்புறம்பியப் போரோடும் அறுதியிடக் கூடிய தெளிந்த நிலை காணப் பெறினும் அவர் தம் தொடக்க எல்லை திட்டமாக வரையறுக்க முடியாததாகவே உள்ளது. இதனாலேயே இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ முதல் நூற்றாண்டின் இறுதியிலோ வாழ்ந்த தொண்டைமான் இளந்திரையனை இவர்கள் முன்னோடியாகக் கொண்டு இடர்ப்படுகின்றனர். எனினும் இவர்களுடைய ஆய்வின்படி இவர்கள் வடக்கிருந்து வந்தவர் என்பதும், அவருள் முதலாவதாகக் காஞ்சியில் ஆண்டவன் பப்பதேவன் என்பதும், அம்மரபில் ஒருவனான விஷ்ணு கோபனே வடநாட்டுப் பெரு வேந்தனாகிய சமுத்திரகுப்தனின் அலகாபாத் தூணில் குறிக்கப்பெற்றவன் என்பதும் தெளிவாக விளங்குகின்றன. இந்த வழியில் நின்றே பல்லவர் காஞ்சியில் காலூன்றிய வரலாற்றைக் காண்போம்.

இப் பல்லலவர், சாதவாகனப் பேரரசின்கீழ் இருந்த காஞ்சியைச் சார்ந்த நாட்டினை அவர்களுக்குப் பிறகு கைப்பற்றி ஆளத்தொடங்கினர் என்று புதுவை துப்பரே அவர்கள் விளக்கியுள்ளார்கள். (History of the Institutions of Pallavas Ed. 1924—by. C. S. Subramani Iyer P. 6)

வேற்று நிலத்தவர் தமிழ் நாட்டில் அலையலையாகப் புக நேர்ந்த நாட்டு நிலையினையும் காலச் சூழலையும்

மேலே கண்டோம். அதே காலத்தில்தான் அண்டை நாடாகிய ஆந்திரத்தில் சாதவாகனப் பேரரசு வலிவுற்ற தாக ஆக்கப்பெற்றிருந்தது. அவருடன் ஒட்டியோ அடங்கியோ, வேறு வகையாலோ வடகிழக்கிலும் தென் மேற்கிலும், மேற்கிலும் பலப்பல சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். ஏறக்குறைய அதே காலத்தில்தான் களப்பிரர் என்பார் தமிழ்நாட்டின் மேல் படையெடுத்து வந்து வடபகுதியை வெற்றி கொண்டு ஆண்டனர் என்றும், சாதவாகனரோ அவர்தம் ஆணைவழிச் சிற்றரசரோ அவர்களை வடக்கே நெருக்க, அவர்கள் மேலும் தெற்கே சென்று பாண்டிய நாட்டைக் கைக்கொண்டு நாட்டு நிலையை மாற்றினர் என்றும் அறிகிறோம். அவ்வாறு அவர்கள் தெற்குநோக்கிச் செலலக் காரணமானவர்களைப் பல்லவர் எனக்கொள்ளல் பொருத்தமாகும். திரு. கிருஷ்ண சாமி ஐயங்கார் அவர்கள் அப் பல்லவரை வடமொழிப் பல்லவர் எனக் குறிப்பர். (Pallavar of Kanchi - Gopalan P. XXII) பிராகிருதப் பல்லவர் எனக் கொள்ளலும் தவறில்லை. வளர்ந்திருந்த சாதவாகனப் பேரரசின்கீழ் இருந்த வாரங்கல் காகேத்தியரும் மேலை நாட்டுக் கங்கரும் ஆந்திர எல்லையில் இருந்த பல்லவரும் தத்தம் ஆணையை வலுப்படுத்திக் கொள்ளப் பல வகையில் முயன்று ஓரளவு வெற்றி பெறவேதான் சாதவாகனப் பேரரசும் தளர்ச்சியுறலாயிற்று. அடங்கிய சிறுசிறு தொகுதியினராகி அவர் வழி ஆங்காங்கே சிற்றரசர்களாகவும் எல்லைக் காவலர்களாகவும் இருந்த அரச பரம்பரையினரும் அவரைச் சார்ந்தவரும் மெல்லத் தலை தூக்கித் தனி ஆட்சி அமைக்கத்தொடங்கினர். அந்த வழியிலேதான் நெல்லூர் குண்டூர் ஆகியவற்றை ஒட்டியோ அவற்றின் மேல் பகுதியை ஒட்டியோ வாழ்ந்த இந்த மரபினர் தம் எல்லையை விரிவாக்கிக்கொண்டு தாழ்ந்திருந்த தெற்குப் பகுதியை நோக்கி, காடு அடர்ந்த தொண்டை மண்டலப் பகுதியைக் கைப்பற்றி, வேங்கடத்தில் வாழ்ந்திருந்த

'புல்லி'யின் மரபினரை வென்று, காடு கொன்று நாடாக்கிக் காடவர், காடுவெட்டி என்ற பட்டங்களைப் பெற்று, இறுதியாகக் காஞ்சியையும் பற்றி ஆளத்தொடங்கினர் எனக் கொள்ளல் வேண்டும். எனவேதான் இவர்தம் பிராகிருதக் கல்வெட்டுக்கள் நெல்லூர்ப் பகுதியிலும் பிற வடக்குப் பகுதிகளிலும் இருக்கின்றன என வரலாற்று அறிஞர்கள் காட்டுகின்றனர். இதனாலேயே பின் வந்த பல மன்னர்—பல்லவரும் மற்றவரும்—கல்வெட்டுகளில் 'காஞ்சியைப் 'பல்லவேந்திரபுரி' எனக் குறித்துள்ளனர். ஏறக்குறைய இந்தக் காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முதற் பகுதியாக இருக்கலாம் எனக் கொள்ளுவதில் தவறில்லை. தொண்டைமான் இளந்திரையனுக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின் களப்பிரர் முதலியோர் ஒடுங்கிய இந்த நாளிலே பல்லவர் காஞ்சியுள் புகுந்தனர் என்று கொள்ளல் பொருந்துவதாகும். (Meenakshi P. 2)

இந்த முதற் பல்லவனைப் பற்றி கே. வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தமது 'பழந்தக்கணத்தில் வரலாற்றுக் காட்சிகள்' ('Historical Sketches of Dekkan என்ற நூலின் இரண்டாம் பகுதியில் (அவர் மகனாரால் அண்மையில் வெளியிடப்பெற்றது) இரண்டாம் பல்லவர்தம் மரபின் தோற்றத்தைக் குறிக்கும்போது தெளிவாகக் காட்டியுள்ளமை ஈண்டு எண்ணத்தக்கது

இந்த விளக்கத்தின்வழி பல்லவர் யார் என்ற உண்மை திட்டமாகத் தெளிவு பெற்றுவிட்டது. மேலும் இவரது நூலின் முதற் பகுதியிலேயே (1971-இல் வெளியிடப் பெற்றது) பல்லவர் வடக்குத் திசையில் யார் யாருடன் எவ்வெவ்வாறு இணைந்தும் பிணக்குற்றும் வேறுபட்டும் மாறுபட்டும் மெல்லத் தெற்கு நோக்கி வந்தனர் என்பதை விளக்கியும், அவர்தம் சமயம், மொழி முதலியவற்றைப் பற்றித் தொட்டும் காட்டியுள்ளார். (Sec. II Pallavas from P. 15) அவர்தம் எழுத்து மத்திய இந்திய எழுத்து

என்ற கொள்கையும் அதனை அவர்கள் முதன்முதலில் காஞ்சியில் வாழ்ந்த காலத்தில் கல்வெட்டுக்களில் பயன் படுத்தினர் என்பதனையும் சீன யாத்திரிகர் (Beal's Si-yu-ki P. 226) துணை கொண்டும் டாக்டர் பர்னல் (Dr. Burnall) துணை கொண்டும் காட்டியுள்ளார். இவற்றால் பல்லவர் வடநாட்டில் முளைத்தெழுந்த ஒரு மரபினர் எனக் கொள்ளுதலே பொருத்தமானதாகும்.

இவ்வாறு வடநாட்டு எல்லையிலிருந்து மெல்ல மெல்லக் காஞ்சியில் வந்து ஆண்ட பல்லவ மன்னர்களைப் பற்றிய ஆய்வினைப் பல அறிஞர்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நன்கு செய்துள்ளனர். அவ்வாராய்ச்சி களின் வழியே பல நூல்களும் வெளிவந்துள்ளன. அவற்றுள் அவர்கள் பல்லவர்களைப் பிராகிருதப் பல்லவர்கள் எனவும் வடமொழி அல்லது சமஸ்கிருதப் பல்லவர் எனவும் பிற்காலத்தவரைத் தமிழ்ப்பல்லவர் எனவும் பிரித்துள்ளனர் அவரவர் கல்வெட்டுகளில் அமைந்த மொழிகளின் அடிப்படையில் இப்பெயர்கள் அமைந்தன. இந்தப் பரம்பரையினர் தொடர்ந்து தந்தைவழி மகன் என வந்துள்ளனர் எனினும் இடையிடையே சில சிக்கல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் ஒன்று பிற்காலப் பல்லவருள் இரண்டாம் பரமேசுவரனுக்குப் பிறகு நந்திவர்மப் பல்லவ மன்னன் பட்டத்துக்கு வந்த வரலாறாகும். பரமே சுவரனுக்குப் பரம்பரை அற்ற காரணத்தாலோ அன்றித் தக்கவர் இல்லாத காரணத்தாலோ மக்கள் மாற்றுவழிப் பல்லவர் மரபிலே ஒருவரைத் தேடவேண்டி வந்தது. பல்லவர் வரலாற்றில் இந்த முறை ஒரு சிறந்த விளக்கமாக அமைகின்றது. பரமேசுவரன் தனக்குப் பின் இன்னார் என்று எழுதி வைத்தானா இல்லையா என்று சொல்ல முடியாது. அவனுக்குப்பின் அவனுடைய உரிமை மக்கள் அரசேற்கத் தக்கவர் இல்லையா என்பதும் தெரிய வில்லை. ஆனால் பல்லவ மல்லனை மக்கள் விரும்பி ஏற்ற நிலைதான் நோக்கத்தக்கது. மன்னர் ஆட்சி மரபு இருந்த

போதிலும். நாட்டில் அரசின்றி நிலைகுலைந்தபோது மக்கள் தம் மன்னரைத் தேர்ந்தெடுத்த முறையினை நமக்கு இவ்வரலாறு தெரியக் காட்டுகிறதன்றோ? சோழன் கரிகாற் பெருவளத்தான் ஆட்சிக்கு வந்ததாகச் சங்க காலச் செய்தி நமக்குக் கூறும் வகையில் இந்த வரலாறும் அமைகின்றது. நந்திவர்மனின் தந்தையாகிய இரணிய வர்மனும் அவனுடைய முதன் மூன்று மக்களும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க மறுத்த அதே வேளையில், பன்னிரண்டு வயதே நிரம்பிய நந்திவர்மன் விரும்பி ஏற்று வெற்றி கண்ட சிறப்பு பல்லவர் வரலாற்றின் சிறந்த பகுதியாகும் அவனுடைய செயல்திறனே பல்லவர் மரபினை நாட்டில் மேலும் ஒரு நூற்றாண்டிற்கு வாழ வைத்தது! இவ்வரலாற்றைத் திரு. கோபாலன் அவர்கள் 'Dynamic Revolution' என்ற தலைப்பில் காட்டியுள்ளமை பாராட்டற்குரியது.

சிம்ம விஷ்ணுவுக்கு முன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவர் முறைமுறையாக ஆண்ட மரபு நெறி நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்ட சிம்மவிஷ்ணுவுக்கு முன் சுமார் மூன்று நூற்றாண்டுகள் ஆண்ட அந்த மரபினரின் வரிசையை நம்மால் முற்றும் உணர முடியவில்லை. அவர்களே தொடர்ந்து அந்த நூற்றாண்டுகளில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்களா அன்றி வேற்று வேந்தர்களால் அடிக்கடி இடையீடுற்று இடம் மாற ஆண்டு வந்து மீண்டும்மீண்டும்தலையெடுத்தார்களா என்பதனைச் சிறந்த வரலாற்றாளரும் ஆய்ந்து உணர முடியவில்லை. அக்காலத்திய கல்வெட்டுக்களோ இலக்கியங்களோ பிற நாணயங்கள் முதலியனவோ வரலாற்று அடிப்படைப் பொருள்களை வகைப்படுத்தும் வகையில் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் பல்லவர் மரபு அந்த மூன்று நூற்றாண்டிற்கும் இடையில் தொடங்கி ஒன்பதாம்

நூற்றாண்டின் இடை வரையில் காஞ்சியின் எல்லையில் தொடர்ந்து நின்றது என்பதனை யாரும் மறுக்கவில்லை. எனினும் இடைக்காலத்தில் சோழர் தலை தூக்கினார் களோ என எண்ண வேண்டியுள்ளது, அதனைப் பின்னர்க் காண்போம்.

இந்த ஆறு நூற்றாண்டுகளில் காஞ்சியில் ஆண்ட மன்னர் வரலாறே பல்லவர் வரலாறாக அமைகின்றது. அக்கால மன்னர் வரிசையினையும் ஆண்ட வகையினையும் பிறவற்றையும் பல வரலாற்றறிஞர்கள் விளக்கமாகக் காட்டிச் சென்றுள்ளனர். எனவே அவற்றை மீண்டும் நான் இங்கே காட்ட விரும்பவில்லை. எனினும் ஒருசில அடிப் படைகளை மட்டும் தொட்டுக் காட்டிவிட்டு மேலே செல்ல நினைக்கின்றேன்.

முதற் பல்லவராகிய பிராகிருதப் பல்லவர் ஆட்சி காஞ்சியில் மட்டுமன்றி அதற்கு வடக்கேயும் கிருஷ்ணை ஆற்றங்கரை வரையிலும் பரவி இருந்ததென்பது தெளிவு! அவர்தம் கல்வெட்டுக்களும் பட்டயங்களும் ஆந்திர நாட்டில் உள்ளமை அறிகிறோம். அவருள் ஒருவனாகிய விஷ்ணுகோபனையே சமுத்திர குப்தனின் அலகாபாத்துக் கல்வெட்டு 'கிருஷ்ணை ஆற்றங்கரையில் ஆட்சி செய்த பல்லவன்' எனக் குறிக்கிறது. அவ்விஷ்ணுகோபன் நான்காம் நூற்றாண்டின் இடைக் காலத்தவன். அவனுக்கு முன் பப்பதேவன், சிவஸ்கந்த வர்மன், அங்குரன், வீரவர்மன் என்ற நான்கு முதற் பல்லவர் ஆண்டதாகக் குறிக்கின்றனர். பப்பதேவனே முதன்முதல் காஞ்சியைத் தலைநகராக்கிக் கொண்ட பல்லவனாவன். இளந் திரையனுக்குக் குறைந்தது 70 அல்லது 80 அல்லது 100 ஆண்டுகள் கழிந்து இந்நிகழ்ச்சி நிகழ்ந்திருக்கலாம் அந்த இடைக்காலமே முன் கண்ட களப்பிரர் ஆட்சிக் காலமாக இருந்திருக்கலாம். இவர்கள் காலத்திலேயே கோயில்களுக்குத் தானம் வழங்கிய மரபும் அவற்றைக்

கல்வெட்டில் குறிக்கும் மரபும் உண்டாகிவிட்டன இக்காலத்திய ஆட்சி முறை, மக்கள் வாழ்க்கை நெறி முதலியவை பற்றிய தகவல் ஒன்றும் திட்டமாக நமக்குக் கிடைக்கவில்லை. எனவேதான் இக்காலத்தை இருண்ட காலம் எனக் கொண்டனர் போலும். இக்காலத்தைக் கோபாலன் அவர்கள் கி. பி. 200 முதல் 350 வரை எனக் கொள்கின்றார்.

அடுத்து வரும் சமஸ்கிருதப் பல்லவர் காலத்தை அவர் கி. பி. 350 முதல் 600 எனக் கணக்கிடுவர். கி. பி. 600இல் மகேந்திரன் பட்டமேறிய பின் பல்லவர் தம் தெளிந்த வரலாறே நமக்குக் கிடைக்கிறதன்றோ!

சமஸ்கிருதப் பல்லவர் ஆட்சியில் முறையாக யார் பின் யார் வந்தார் என்பது காண முடியாத ஒன்றாக உள்ளது. எனினும் அக்காலத்திய கல்வெட்டு, செப்பேடு முதலியவற்றாலும் பிற யூகங்களாலும் விஷ்ணுகோபன் தொடங்கி மகேந்திரன் தந்தையாகிய சிம்மவிஷ்ணு வரையில் 19 அரசர்களை முறைப்படுத்தியுள்ளனர். இக்காலத்திலேயும் மற்றொரு நாக கன்னிகையின் மணமும் அவள் மகன் வழி அரசும் குறிக்கப் பெறுகின்றன. (Gopalan's Pallavas pp. 55, 56) நாம் முன்னரே அதுபற்றி ஆய்ந்து திட்டமான முடிவைக் கூறிவிட்டமையின் மீண்டும் அது பற்றி ஆராய வேண்டா. திரு. எஸ். கே. ஐயங்கார் அவர்களும் நல்ல வேளை இந்த நாக நாட்டரசியைச் சாதவாகனிரின் கீழ்ப்பட்ட ஒரு சிற்றரசர் பரம்பரையொடு சார்த்திக் கூறியுள்ளார்.

முதற் பல்லவர் காலத்தைப் போன்றே இக்காலத்திலும் உண்டான கல்வெட்டு, செப்பேடு போன்றவை அவர்தம் ஆட்சியையும் பிற இயல்புகளையும் வரையறுக்க நமக்குப் பெருந்துணை புரியவில்லை. இக் கல்வெட்டு, செப்பேடு களைப் பற்றியும் அவைதரும் பொருள்கள் பற்றியும் முன்னரே பலர் ஆய்ந்து வெளியிட்டுள்ளனர். இவற்றின்

வழி எத்தனையோ வகையில் அரசர் வரிசையைக் காட்டும் நிலையினையும் நம்மால் உணர முடிகின்றது. மேலும் இவற்றால் இவர்கள் தம் மரபினைப் பிரமதேவனிடத்தி லிருந்து வந்ததாகக் கூறிக் கொள்வதனையும் அறிகிறோம். அந்த மரபில் பல்லவன் என்ற பெயருடனேயே ஒரு மன்னவன் இருந்ததாகவும் காண்கின்றோம். (Vayalur List-Ep, Ind. Vol XVIII P. 151)

இம் மரபில் குமாரவிஷ்ணு I & II, ஸ்கந்தவர்மன் I & II, விஷ்ணுகோபன் (அலகாபத்துக் கல்வெட்டில் உள்ளவன் அல்லன்) சிம்மவர்மன், நந்திவர்மன் போன்றோர் முக்கியமானவனர்களாகின்றனர். இவர்களுக்கு இடையில் ஓர் இடைவெளி இருந்து சோழர் தலை தூக்கினார்களோ என்ற ஐயமும் எழ இடமுண்டு. (Ancient History of Nellore By Venkiah-Goplan Pallavas pp. 63 & 64) இக்கருத்தைச் சிலர் மறுக்க நினைத்தாலும் இதிலும் நியாயம் உண்டு என்று கொள்ள நம் தமிழக நிலை இடங் கொடுக்கின்றது. 'எண்தோள் முக்கண் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்தோன்' என்று ஆழ்வாரால் போற்றப் பெறுபவனும் புராண வரலாற்றில் ஏற்றங் கொண்டவனுமாகிய கோச்செங்கணான் என்னும் கோச் செங்கட் சோழ நாயனார் இக்காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். இவர் திருவானைக்காவில் இறைவனை வழி பட்ட தவத்தால் மன்னனாக, அவ்விறைவனுக்குத் தமிழ் நாட்டில் பெருங்கோயில் எடுத்தவன் என நாட்டுச் சமய வரலாறு கூறும் பெரிய புராணம் காட்டுகிறது. அவன் காலத்தில் எழுந்த கோயில்களையும் அவற்றை ஒட்டி எழுந்த பிற கோயில்களையும் பின் மகேந்திரன், நரசிங்கன் காலத்தில் வாழ்ந்த அப்பரும் சம்பந்தரும் வைணவ ஆழ்வார் ஆகிய திருமங்கையாழ் வாரும் பாடிப் பரவியுள்ளனர். காஞ்சியை உள்ளிட்ட பரந்த தமிழ்நாட்டில் அவன் இத்துணை விரிவாகச் சமயப் பணி செய்தான் என்றால், அது வேற்றுச் சமயத்தைச்

சார்ந்த பல்லவர் ஆட்சியில் இருந்திருக்க முடியாது. திரு. வெங்கையா அவர்கள் குறிப்பிடுவது போன்று, ஓரிரு தலைமுறைகள் பல்லவர் காஞ்சியை விட்டு, நெல்லூரில் தம் காலூன்றி இருந்த நாளிலேதான் சோழன் கோச்செங்கணான் சைவ, வைணவப்பெருங்கோயில்களைக் கட்டி முடித்திருக்க வேண்டும். பல்லவர் பலம் இல்லை யாகவே அவரது சமயத்தைச் சார்ந்தோறும் தடுக்க முடியாத நிலையில் தளர்ந்திருப்பர்.

எனினும் மறுபடியும் அப் பல்லவர் கை மேலோங்கிய காலத்தில் புதிதாக எழுந்த பெருங்கோயில்களைக் கண்ட சமணர்களும் அவர்கள் வழிநின்ற ஆறாம் நூற்றாண்டின் பல்லவ மன்னர்களும் நாட்டு மக்கள் நிலையறிந்து அவற்றைத் தகர்க்க முடியாதுபோக, அதற்கு மாறாகத் தம் சமயக் கோயில்களையும் மடங்களையும் ஊரெங்கும் கட்டிச் சமணத்தை வளர்த்தனர். இந்தப் போராட்டத்தின் இறுதிக் கட்டமே அப்பர் சம்பந்தர் வரலாற்றில் விளக்கப் பெறுவது. எனவே சமஸ்கிருதப் பல்லவர் காலத்தில் சில காலம் அவர்கள் தமிழ்நாட்டு எல்லைக்கு அப்பால் சென்றிருந்தார்கள் எனவும் அக்காலத்தில் கோச்செங் கணானும் ஓரிரு சோழரும் ஆண்டிருக்கக் கூடும் எனவும் கொள்வதே பொருத்தமானதாகும். எனவே வெங்கை யாவின் கூற்றை மறுக்கும் திரு கோபாலனின் ஆய்வும் (pp. 64, 65) இடையில் சோழர் ஆட்சி இருந்திருக்க முடியாது என்று காட்டும் முடிவும் பரிசீலனைக்கு உரியனவேயாம்.

இவ்வளவு தெளிவற்ற நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகே மகேந்திரவர்மன் கி.பி.600 இல் காஞ்சியில் பல்லவப் பெருமன்னனாக அரியணை அமர்ந்தான். அவன் காலந் தொட்டு அபராஜிதன் காலம் வரை (கி.பி.850) சுமார் இரண்டரை நூற்றாண்டுக் காலத்தில் தமிழக வரலாறு பல்லவர் ஆட்சியில்தெளிந்த நீரோடையாகப் புதுமைபூத்த

சோலையாகக் காட்சி அளிப்பதைக் காண்கின்றோம். அக்காலத்தில் நாட்டில் வாழ்ந்த பல்லவப் பேரரசுகளைப் பற்றி ஆய்வதினும் அக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களையே காண முடிகின்றது. கடைச் சங்க காலத்தில் தெளிந்த தமிழகத்தைக் கண்ட நமக்கு ஏழாம் நூற்றாண்டில் காணும் பல மாறுதல்களுக்குட்பட்ட தமிழகத்தை நினைக்கும்போது அந்த இடைப்பட்ட — இரு பல்லவர் ஆட்சிக்கிடையில் தமிழகம் பெற்ற மாறுதல்களை எண்ணாதிருக்க முடியுமா? எனவே இந்த மாறுதல்களைச் சிறிது கண்டு மேலே செல்வோம். தமிழ்நாட்டு மரபுக்கு முற்றும் மாறுபட்ட மன்னர் பரம்பரைகள் ஆள, முற்றிலும் மாறுபட்ட சமய நெறிகளும், வாழ்க்கை முறைகளும் பெரு வழக்காக மக்களிடையில் புக, நாடே ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதிய நாடெனுமாறு காட்சியளித்தது.

ஆட்சி முறையில் மாற்றம் பெரும்பான்மையாகக் காண முடியவில்லை. ஒரே பரம்பரையில் தந்தைக்குப் பின் மகன் என்ற மரபு காக்கப்பெறுகிறது. சங்க காலக் கரிகாலன் போன்று பல்லவ மல்லன் மக்கள் விருப்பப்படி அரசனாகும் மரபும் காணப்பெறுகின்றது. அரசர்களுக்கு இருந்த அமைச்சர் குழு முதலிய ஐம்பேராயமும் பிற சூழல்களும் பெரும்பாலும் மாற்றம் பெறாமலிருந்ததையும் காண்கின்றோம். அரசருடன் அரசியரும் அரசியலில் கலந்து பணி புரிவதையும் காண முடிகிறது. எனினும் பல்லவர் காலத்தில் சமயம் அரசியலில் பங்கு கொள்வதைக் காண முடிகிறது. சங்கால மன்னர்கள் சமயச் சார்புடையவர்களே ஆயினும் அரசியலில் அச்சமயத்தினைப் புகுத்தாது, 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற உணர்வில் அனைவரும் ஒன்றிக் கலந்து வாழ்ந்துவந்த மரபினை காண முடிகிறது. ஆனால் பல்லவர் காலத்திலோ சமயமே முக்கிய இடம் வகிக்க, அரசியல் அச்சமயத் தலைவர்களை ஒட்டியே நடை பெற்றதாகக் காண

முடிகிறது. மகேந்திரன் காலத்தில் காணும் இப்பெரு மாற்றத்துக்குக் காரணம் இடைப்பட்ட நூற்றாண்டுகளின் மாறுதல்களே ஆகும்.

சங்க கால இறுதியிலேயே சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டில் கால்கொண்டு மாற்றுக் கருத்துக்களை வளர்த்தன என்பதைக் காப்பியங்கள்வழி அறிய முடிகின்றது. அசோகர் காலத்திலேயே பௌத்தமும் இலங்கை வரையில் சென்று அங்கே பெரும் சமயமாக விளங்கியதாயினும், தமிழக மக்களிடை அது கால்கொள்ள வில்லை. சைவ வைணவர் சமய நெறிகளையும் கடவுளரையும் காட்டும் வகையில் எந்தச் சங்க இலக்கியங் களும் வேற்றுச் சமயங்களைச் சுட்டவில்லை. சமணம் முதன்முதல் சிலம்பிலும் பௌத்தம் முதன்முதல் மணி மேகலையிலும் பேசப்பெறுகின்றன. எனினும் அடுத்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் அவை இரண்டும் தமிழ் நாட்டுக்கே உரிய சைவ வைணவ சமயங்களிலும் மேம்பட்டு நின்று, அக்கால அரசியல் துணை கொண்டு ஓங்கி, தமக்குள்ளேயே மாறுபட்டும், போரிட்டும் இறுதியில் பௌத்தம் நிலை கெட, 7-ஆம் நூற்றாண்டில் சமணமே மேலோங்கி நின்றதைக் காண முடிகிறது. இந்த மாற்றுச் சமயப் போராட்டங் களுக்கு இடையில்தான் சைவமும் வைணவமும் கூடத் தமக்கே அதுவரையில் இல்லா வகையில் பல சடங்கு களையும் அவற்றை வளர்க்கக் கோயில்களையும் விரிவு படுத்திக்கொண்டன. எனவேதான் அந்த அடிப்படையில் சமய இலக்கியங்கள் தனியாக வளர ஆரம்பித்தன. சங்க இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படையும் பரிபாடலில் சிலவும் தவிர்த்து வேறெங்கும் இறைவனை முன்னிறுத்திப் பாடிப் பரிசில் வேண்டும் நிலை காண முடியாததன்றோ? ஆற்றுப்படையும் பரிபாடலும்கூடக் காலத்தால் சற்று பிந்தியவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

எனவே கடமையில் கருத்திருத்திக் கடவுள் உணர்வை நெஞ்சில்நிறுத்தி, தூய உள்ளத்தால்மக்கள்தொண்டாற்றிய தமிழகச் சமய நெறி, இந்தப் பல்லவர் காலத்திலே பல வகையில் மாற்றம் பெற்று வெறும் புறக்கோலங்களும் புகழுரையுமே சமயம் என்ற நிலையில் மாற்றம் பெற்றுள்ளது. இந்தச் சமயப் போராட்டத்துக்கு அடிப் படைக் காரணம் பிற சமயச் சார்புடைய பிற நாட்டு அரசர்களும் அவர்களுடன் ஆணையில் பங்கு கொண்ட பிற சமயத் தலைவர்களுமேயாவர். நாம் இவை பற்றி நன்கு அறிய முடியாவிட்டாலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாம் காணும் நாட்டு நிலை இதை நன்கு உணர்த்துகின்றதன்றோ?

பல்லவர் காலத்திய சமயம் பற்றிய கருத்தரங்கே இன்று தனியாக நடைபெற்றதால் நாம் நம் வரலாற்றுப் பகுதியில் அதிகம் ஆராயாது இந்த அளவோடு அமைந்து மேலே செல்வோம்.

மொழியிலேயும்கூட இந்தப் பல்லவர் காலம் பெரு மாற்றத்தைச் செய்துள்ளது. பல்லவர் கல்வெட்டுக்களே இதற்குச் சான்று பகரும். தமிழ் நாட்டையும் அதனைச் சார்ந்த எல்லைப் பகுதிகளையும் ஆண்ட பல்லவர்கள் தமிழிலன்றிப் பிராகிருதத்திலும் சமஸ் கிருதத்திலும் கல்வெட்டுக்களைப் பொறித்தார்கள் என்றால் அந்த ஆட்சியில் எப்படித் தமிழ் மொழி வளர்ந் திருக்க முடியும்? எனினும் பொதுமக்களும் தமிழகத்தின் சமயங்களாகிய சைவவைணவச் சார்புடைய மக்களும் தமிழ்மொழியைப் பலவகையில் போற்றிக் காத்தனர். அக் காலத்தில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார், திருமூலர் போன்ற சமயத் தலைவர்களும் பதினெண்கீழ்க் கணக்கில் உள்ள சில நூல்களின் ஆசிரியர்களும் தமிழ் இலக்கியங் களையும் சமய இலக்கியங்களையும் போற்றி வளர்த்தனர். எனினும் அவர்களும் காலச் சூழலிலும் பிற சமயக்

கொள்கைகளிலும் வேற்று முறைகளிலும் தம்மைப் பறி கொடுத்தவராகவே காண்கின்றனர். அவ்வளவு வேகமாக மாற்று நாகரிகமும் சமயங்களும் தமிழ்நாட்டில் ஊன்றத் தொடங்கிவிட்டன. சிலம்பின் காலத்திலேயே மாடலன் வழியே வைதிக சமயத்தின் வளர்ச்சியை அறிகிறோம். எனவே அந்த அடிப்படையில் பல்லவர் காலத்திய சமய இலக்கியங்கள் வளர்ந்துள்ளன. அந்த இலக்கியங்கள் தூய தமிழ் நடையை விட்டுப் பிற மொழிகளையும் பின்பற்றின. சமயமும் சாதியும் போரிடத் தொடங்கி அவற்றைக் கடவுள் நெறிக்கு வழி காட்டும் எல்லைக் கற்களெனக் காட்டும் பாடல்களைக் காண்கிறோம். எனவே இந்தப் பிற மொழிப் பல்லவர் ஆட்சியில் சமய அடிப்படையில் வேற்று மொழிகளும் கொள்கைகளும் பரவலாயின, 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்', 'ஆரியமும் தீந்தமிழும் ஆயினான் காண்' என்று ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டின் ஒரு மொழிக் கொள்கை மாறி இரு மொழிக் கொள்கை நிலைபெறத் தொடங்கிற்று. தமிழ் மக்கள் தமிழுக்குச்சமமாக மற்றொரு மொழியையும் தங்கள் வாழ்விடைக் கொள்ள வழி வகுத்த காலம் இப் பல்லவர் காலமேயாகும். இந்தக் கொள்கையைத் தமிழர்கள் வெறுக்காது ஏற்றுக் கொண்டதைக் கண்ட வேற்று மொழியாளர் ஒரு படி மேலே சென்றனர். அதனால்தான் நாட்டில் மொழி அடிப்படையில் — அந்த மொழிவழிச் சாதி அடிப்படையில் சண்டைகள் தோன்றி இன்றுவரை வளர்ந்துவந்துள்ளன. இரண்டும் சமம் என்ற அப்பர் கொள்கையினையே சமயக்கண் கொண்டன்றி மொழிக்கண்கொண்டுஒத்துக்கொள்ளாதநிலையில், வேற்று மொழியாளர் தமிழினும் தம் மொழியே உயர்ந்தது என்றும் கடவுளுக்கு அம்மொழியே உகந்தது என்றும் அம் மொழி பேசுவோரே உயர்ந்தவர் என்றும் வாதிடவும் செயல்படவும் தொடங்கினர். இத் தொடக்கத்துக்கு வித்திட்ட காலம் இப்பல்லவர் காலம். அதனாலேயே

ஆழ்ந்த சமயப்பற்றுள்ள சேக்கிழாரும் 'அர்ச்சனை பாட்டே யாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று இறைவனே சுந்தரருக்குக் கட்டளை இட்ட தாகப் பாடுவர். அப்பரும் 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்று பாடுகிறார் எனினும் இந்தப் போராட்டம் இன்றும் தீரவில்லை. இந்த மொழிப் போராட்டம் தீர்ந்தாலன்றி—தமிழ்நாட்டில் வாழ்வார் தம்மைத் தமிழராகக் கொண்டு, தமிழே சிறந்த மொழி எனக் காட்டி இணைந்து வாழ்ந்தாலன்றி உய்வு இல்லை.

இவைமட்டுமன்றிச் சமுதாயத்திலும் எத்தனையோ மாறாட்டங்கள் இப் பல்லவர் காலத்தில் நிகழ்ந்திருப்பதை நம்மால் காண முடிகின்றது. மக்கள் உடல் உழைப்பும் கடமையும் உள்ளவராகத் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக' வாழ்வதுதான் மெய்ம்மை வாழ்வு என்றிருந்த நிலை மாறி, வெறும் ஆரவாரமும் மாற்று நிலைகளும் பெருக அவற்றின் துணை கொண்டு சோம்பி வாழும் வாழ்வினை மேற்கொண்டு விட்டார்கள் என்றுணர முடிகிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவன் வாக்குக்கு ஏற்ப வாழ்ந்த சமுதாயத்தில் சாதிகளும் பிற வேறுபாடுகளும் ஆட்சி புரியலாயின. 'செய்தொழில் வேற்றுமை யான்' நின்ற வேறுபாடு மாறி, பிறப்பால் வேறுபாடு காட்டும் காலமாக மாறிய நிலையைப் பார்க்கின்றோம். சுந்தரர் காலத்தே 'அந்தணர் வேறோர் அந்தணர்க் கடிமை யாதல் இல்லை' என்று வழக்காடும் அளவுக்கு ஒரு சாதிக்கு ஒரு நீதி என்ற கொள்கை இந்த முதற் பல்லவர் காலத்தில் வளர்ந்ததுதான். அதனாலே தான் சேக்கிழார் பாடும்போதுகூட, தமது பெரிய புராணத் தலைவர்களைச் சாதிகள் குறித்துக் காட்டு கின்றார். அத்துடன் அவ்வச் சாதிக்கு இன்னின்ன தொழில்கள் என்ற ஒரு கட்டுப்பாடும் உண்டாகி இருப்பதறி கிறோம். எனினும் இந்தச் சாதி வேற்றுமை கற்றார்

மாட்டு அதிக வேறுபாட்டினைக் கற்பித்து மாறுபாட்டை உண்டாக்கவில்லை என்பதை அப்பர் சம்பந்தர் திருநீல கண்ட யாழ்ப்பாணர் போன்றார் வாழ்விலிருந்து அறிந்து கொள்கிறோம்.

ஆட்சிமுறையில் வரி விதிப்பு முதலியவை பற்றிய மாற்றங்கள் சிலவற்றை நம்மால் காண முடிகிறது. எனினும் பிற்காலப் பல்லவர்கள் காலத்தில்தான் நாட்டு ஆட்சியின் நல்ல இயல்புகளையும் முறைகளையும் பரக்கக் காண்கிறோம். தமிழராகவே ஆன சிம்மவிஷ்ணுவின் பரம்பரையினர் ஓரளவு வேற்று மக்கள் வாழ்வின் அடிப்படையில் நின்றார்களேனும், பெரும்பாலும் தமிழர்கள் என்று தம்மை நினைந்து, தமிழ்ச் சமுதாய நெறியிலேயே தம் அரசியலையும் வாழ்வியலையும் அமைத்துக்கொண்டார்கள் எனக் காண்கிறோம். எனினும் அந்த இருண்ட காலமாகிய முற்காலப் பல்லவர் காலத்தில் உண்டான சில சமுதாய மாறுதல்கள் தமிழ் மக்களிடம் வேரூன்றி நிலைத்து, இன்றளவும் அவர்களை விட்டு நீங்காமல் வாழ்கின்றன என்பது தேற்றம். இனி இந்த ஆய்வினை விட்டுப் பிற்காலப் பல்லவர் கால வரலாற்றைக் காண்போம்.

சிம்மவிஷ்ணுவின் பரம்பரையினராய மகேந்திரன் தொடங்கி இரண்டாம் பரமேசுவரன் வரையிலும் ஆண்ட அரசர் காலத்தில் நாடு சமயப் போராட்டங்களுக்கு உள்ளாகித் தெளிநிலை பெற்றமை காண்கிறோம். அதற்கு முன் வந்த பல மன்னர் பரம்பரையினர் சிதைந்தும் மாறியும் பிறழ்ந்தும் உழந்தும் தமிழ் மக்களோடு தம்மையும் உறவுபடுத்திக் கொண்டு, தமிழராகவே மாறி விட்டனர். அவர்தம் பரம்பரையினர் இன்றும் அம்மரபுப் பெயர்களைச் சிதைந்தும் உறழ்ந்தும் கொளக் கொண்டு முற்றிய தமிழர்களாக மாறிவிட்டனர். அப்படியே ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாறிய பல்லவரும் தமிழ்

உணர்வு பெற்றுத் தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற பல செயல்களைச் செய்தார்கள் எனக் காண்கிறோம். இரண்டாம் பரமேசுவரனுக்கு அடுத்து வந்த இரணியவர்மனின் பரம்பரையினரான நந்திவர்மப் பல்லவன் தொடங்கி அபராஜிதன் வரையில் நாட்டை ஆண்ட வரலாறு தெளிந்த நீரோடை போன்றே அமைகின்றது. எனவே அக்கால எல்லையிலமைந்த அரசர்களைத் தனித் தனியாக எடுத்து ஆய்வதோ அன்றிச் செயல்களை அறுதியிடுவதோ ஈண்டுத் தேவை இல்லை என எண்ணுகிறேன். அவர்களைப் பற்றி எல்லாம் முன் ஆய்ந்த வரலாற்று அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். எனவே அந்த உண்மைகளை நானும் இங்கே திருப்பிச் சொல்வது தேவையற்றது.

இப்பல்லவர் காலத்துக்கும் முற்காலப் பல்வலர் காலத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு, இப்பல்லவர் காலத்திய சமுதாய வரலாற்றினை ஓரளவு விளக்கிக் காட்டி என் பணியை முடித்துக் கொள்ள நினைக்கிறேன். அக்காலத்திய சமயம், இலக்கியம், கலை ஆகியவை பற்றி ஆராயத் தனித் தனியாக அறிஞர் கூட்டங்கள் இன்று நடைபெறுகின்றமையின் அவற்றுள் புகுந்து துருவி ஆராயவேண்டிய தேவையும் இல்லை என்று கருதுகிறேன். எனவே மேற்போக்காகப் பல்லவர் கால வரலாறு நமக்குக் காட்டும் ஒரு சில உண்மைகளைக் கண்டு அவற்றால் தமிழ் நாடு பெற்ற பயன்களையும் மாறுதல்களையும் பிறவற்றையும் காட்டல் போதுமானதாகும்.

தமிழ்நாட்டில் முதற் பல்லவர் ஆட்சி மாற்றங்களைச் செய்தது என்றால் பிற்காலப் பல்லவர் ஆட்சி அம் மாற்றங்களை மாற்றி நிலைத்த பல பணிகளையும் செய்துள்ளது. மகேந்திரன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாறிய உடனே நாட்டில் பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று.

சிம்மவிஷ்ணுவாகிய அவன் தந்தையின் பெயரை ஒட்டி அவனை வைணவ சமயத்தைச் சார்ந்தவனாகக் கூறினும் அது ஆராய்தற்குரியது. அப்படியே அவன் மகனான நரசிம்மன் காலத்தில் அக்காலப் பாண்டியநாட்டில் உள்ளுக்குள் புகைந்திருந்த பெருங்கிளர்ச்சி கூன்பாண்டியனுடைய சமய மாற்றத்தால் வெளியே கிளர்ந்தெழுந்து நாட்டில் பெரு மாற்றத்தை உண்டாக்கிற்று. ஒரு நாட்டு மக்களின் அடிப் படைப் பண்பாட்டிற்கு மாறுபட்ட எந்தக் கொள்கையும், அவ்வப்போது ஆணை அளித்தல், பிற வகை உதவிகள் முதலியவற்றால் ஓங்குவது போலக் காணப்படினும், கால வெள்ளத்தில் எதிர் நிற்காது மறையும் என்பதைத்தான் இந்த ஏழாம் நூற்றாண்டின் வரலாறு காட்டுகின்றது. இந்த உண்மையை உணர்ந்தமையால் தான் மேலை நாட்டிலிருந்து தமிழகத்தில் தம்சமயம் பரப்ப வந்த பாதிரியார்கள் தம்மை நடை, உடை, பாவனைகளால் மட்டும் அன்றிப் பெயர், வாழிடம் ஆகிய பிறவகைகளாலும் தமிழராகவே மாற்றி கொண்டனர். வரலாறு உணர்த்தும் இந்த உணமையை இன்னும் சிலர் நாட்டில் புரிந்து கொள்ளாமையாலேதான் இன்னும் பல சண்டைகளும் மாறுபாடுகளும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

பல்லவர் காலத்தில் சமய மாறுபாடு உண்டானமை உண்மையேயாயினும் அம் மாறுபாடு வேறுபாடற்ற சங்க காலச் சமய நெறியினை வழங்கத் தவறிவிட்டது. வைதிகத்தொடு பிணைந்த பிறிதொரு கலவைச் சமயமே தமிழகத்தில் கால் கொண்டது. அத்துடன் புதுப்புது விதமான கடவுளரும் வழிபடு முறைகளும் புகுந்தன. விநாயகர் வணக்கம் இக்காலத்தில் ஏற்பட்டதேயாகும். சைன சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவராகிய பரஞ்சோதியார் வாதாபியை வென்று அங்கிருந்தவற்றுள் பல பொருள்களைக் கொண்டு வந்தமை போன்று பிள்ளையாரையும் உடன் கொண்டு வந்தார். அதனாலேயே 'வாதாபி கணபதிம் பஜே' என்ற வணக்கப்

பாடலும் உருவாயிற்று. விநாயகர் வழிபாடு இன்றும் மேலைச் சாளுக்கியர் ஆண்ட மராட்டியப் பகுதிகளிலும் பம்பாயிலும் பிறவிடங்களிலும் மிகச் சிறந்த முறையில் விரிந்த வகையில் கொண்டாடப் பெறுவதறிகிறோம்.

பரஞ்சோதியார் விநாயகரை ஏன் கொண்டுவந்தார்? அதனை அரச மரத்தின் கீழ் ஏன் நிறுவினார்? அரச மரத்துக்கும் விநாயகருக்கும் உள்ள தொடர்பு என்ன? பௌத்த சமயக் காலத்திலே தமிழ்நாட்டில் புத்தரை அருளாளராக அரச மரத்தடியில் அவருடைய பேருருவங்களை நிறுத்தி வழிபட்டனர். அடுத்து வந்த சமணர்களும் தம் சமயத் தலைவர்களை, மக்கள் மனமறிந்து, அதே நிழலில் நிறுவி வழிபட்டிருக்கக் கூடும். அசோகு அவருக்கு அருந்துணையாக அமைந்த தன்றோ! அதே வேளையில் வாதாபியில் விநாயகரின் பேருருவைக் கண்ட பரஞ்சோதியார் இந்த விநாயகர் பேருருவை அரச மரத்தின் கீழ் நிறுத்தின் மக்கள் மன நிறைவு பெறுவர் எனக் கணித்து இங்கே கொண்டு நிறுவி விட்டார். மக்கள் அன்று மன நிறைவு பெற்றதோடு, என்றும் அவ்விநாயகரையே முதல் வழிபடு கடவுளாகக் கொண்டுவிட்டனர். எனவே பரஞ்சோதியார் அரசியல் வெற்றி மட்டுமன்றித் தம் சமயக் கொள்கையிலும் வெற்றி பெற்றுவிட்டார் என்பதை இவ்வரலாறு காட்டுகிறது. இப் பிள்ளையாரைப் பற்றித் தமிழ் இலக்கியத்திலேயே முதன்முதல் பரஞ்சோதியாரின் காலத்தவரான ஞானசம் பந்தர்தாம் பாடுகின்றார்.

இவ்வாறு சமய அடிப்படையில் எத்தனையோ மாற்றங்கள் நடைபெற்றன. அவற்றுள் பெரும்பாலானவை இன்றளவும் வாழ்கின்றன. கலையுலகில் பிற்காலப் பல்லவர் செய்த புரட்சியே பெரும் புரட்சி ஆகும். யாரும் நினைத்தறியா வகையில் குகைக் கோயில்களைப் பல வகையில் வளர்த்து, கற்கோயில்களை அமைத்து

அக்கோயில்களில் நிலையான கல்வெட்டுக்களையும் எழுதி, உலகப் புகழ் பெற்றுவிட்டார்கள். தமிழ்நாட்டில் முதன் முதல் கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் உண்டாக்கி வரலாற்றுக்கு வழிகோலிய பெருமை இப் பல்லவரையே சார்ந்ததாகும். எனவே தமிழகத்தில் தெளிந்த வரலாற்றுக்கு அடிப்படை வகுத்த இப் பல்லவரை நாம் என்றென்னும் போற்றக் கடமைப்பட்டவராகின்றோம்.

கலை உலகில் இவர்கள் செய்த மாற்றங்கள் தாம் எத்தனை! வண்ணக் கலவைகள் ஆயிரம் ஆண்டுகள் கழியினும் அழியாதிருக்கும் வகையில் அமைத்துத் தீட்டிய சித்திரங்களை இன்றும் போற்றுகிறோம். மாமல்லபுரத்தின் எழில் மிகுந்த சிற்பங்களை எந்நாட்டவரும் வைத்தகண் வாங்காது பார்க்கும் ஒரு நிலையினைக் காண்கிறோம். கயிலையின் காட்சியையும் வைகுண்டத்தின் காட்சியையும் காஞ்சியில் அமைத்ததோடு, அக்கோயில் களில் என்றும் கண்டு மகிழும் சித்திரக் காட்சிகளையும் வரலாற்றுக் காட்சிகளையும் வடித்த பல்லவர் திறன் போற்றற்குரியதாகும். பல்லவ மல்லன் ஆட்சிக்கு வந்த வரலாற்றை வைகுந்தப் பெருமாள் கோயில் சுவர்கள் அல்லவோ இன்றும் நம்மோடு பேசி விளக்கிக் கொண்டிருக்கின்றன? 'கல்லும் சொல்லாதோ கவி' என்ற பாட்டின் அடியும் இவர் வடித்தெடுத்த கல்வெட்டுக் களைப் பற்றி எழுந்த அடியாகவன்றோ கொள்ள வேண்டும்? பல்லவர் சென்ற இடமெல்லாம் அவர்தம் கைவண்ணத் திறனும் அத்திறன் வளர்ச்சி அடைந்த வகையும் கொண்டன்றோ இன்றைய வரலாற்றாசிரியர்கள் அவரவர் காலத்தையும் அக்காலத்தை ஒட்டிய நாட்டு வரலாற்றையும் கணக்கிடுகிறார்கள்? இப்படி ஒரே சமயத்தில் கலையையும் வரலாற்றையும் பிணைத்து வளர்த்த அவர்தம் பெருமையைப் பேசாதிருக்க முடியுமா?

பிற்காலப் பல்லவர் காலத்தில் தமிழ் இலக்கியமும் இலக்கணமும் நன்கு வளர்ந்தன எனக் கொள்ளலாம். 'நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்ற மரபு வாக்கியப்படி, நந்திவர்மனின் தமிழ் உணர்வை உலகு நன்குணர்ந்துள்ளது. இன்றுவரையில் வாழ்ந்து சிறந்தனவாகப் போற்றப்படும் சைவ இலக்கியங்களில் ஏழு அல்லது எட்டுத் திருமுறைகளும் வைணவ நாலாயிரத்தின் பெரும் பகுதிகளும் இக்காலத்தில் எழுந்தனவன்றோ? இதனாலன்றோ அத்தெய்வ நெறி பாடும் இலக்கியத்தில் பல்லவர் இடம் பெற்றுச் சாகாவரம் பெற்று வாழ் கின்றனர்? பல்லவருக்கு மாறுபட்டவரைத் தம் இறைவன் மறுக்கம் செய்து பல்லவரை வாழவைக்கவேண்டும் என்ற உணர்வைச் சுந்தரர்,

" உரிமையால் பல்லவர்க்குத் திரைதொடா
மன்னவரை மறுக்கம் செய்யும்
பெருமையால் புலியூர் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே "

என்று பாடி இறைவன் பல்லவர் வாழ வழி வகுத்தவன் என்பதைக் காட்டுகின்றாரன்றோ? 'பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி' என்று தேவார அடியவர்கள் காஞ்சியை நினைக்கும்போதே அதைப் பல்லவனூர் என்றே போற்றிப் புகழ்கின்றனரே! வைணவ ஆழ்வார்களும் இவர்தம் தொண்டுகளைப் பாடிப் பரவியதை முன்னரே கண்டோம். இன்னும் எத்தனையோ காணலாம்.

ஆயினும் பல்லவர் காலச் சமயம் பற்றிக் காணத் தனிப் பிரிவே இருக்கும் இறைய ஆய்வு நிலையில் அது பற்றி அதிகம் சொல்ல வேண்டா.

சமய இலக்கியங்கள் அன்றிப் பாரத வெண்பா போன்ற இலக்கியங்களும் தண்டி அலங்காரம் போன்ற இலக்கணங்களும் உண்டான காலமும் இப் பிற்காலப் பல்லவர் காலமே.

அவர் காலத்தினை 'இலக்கியப் பிரிவு' தெளிவாகக் காட்டும். எனவே மேலே செல்லுகிறேன்.

சமுதாய வாழ்விற்குப் பல்லவர் செய்த தொண்டு மிக அதிகமானதாகும். அவர்கள் பெயருள் ஒன்றாகிய 'காடு வெட்டி' என்பதற்கு ஏற்ப அன்று தொண்டை நாட்டில் முற்றியிருந்து காடுகளையெல்லாம் வெட்டி, நாடாக்கி மக்களைக் குடியேற்றி வாழவைத்த பெருமை இப் பல்ல வருக்குண்டு. 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிய' பண்டைச் சோழனாகிய கரிகாற்பெரு வளத்தானுக்குப் பிறகு, தொண்டைநாட்டைப் பொறுத்த வரையில் பல்லவரே அப்பெரும் பணியைச் செய்தனர். அவர்கள் பெயராலேயே திரையன் ஏரி, மாமண்டூர் ஏரி, மகேந்திர தடாகம் போன்ற பல நீர்த் தேக்கங்கள் அமைந்துள்ளன. அவை அவர்கள் செய்த அரும்பணி களையும் அவற்றின்வழி மக்களின் உணவுப் பிரச்சினைக்கு உரிய தீர்வினைக் கண்ட அவர்களின் உயர்வினையும் நமக்கு நினைவூட்டுகின்றன. இப் பாசன வசதி பற்றியே டாக்டர் மீனாட்சி அவர்கள் தனிப்பகுதி (Ch. VII-water Supply and Irrigation) எழுதி அவர்தம் இத்தகைய செம்மைத் தொண்டினை நன்கு விளக்கியுள்ளார்கள். இவ்வாறு ஏரிகள் அமைத்ததோடு அமையாது, பல்லவர்கள் அந்த ஏரிகளுக்கு நீர் வருவாய்க்காகப் பல கால்வாய்களையும் வெட்டுவித்தார்கள் என்றறிகிறோம். சில இன்னும் உள்ளன. இந்தப் புது நீர்ப்பாசன வசதிகளுக்காக மக்களிடம் வரி வசூலித்து நாட்டை மேலும் வளப்படுத் தினார்கள் எனவும் அறிகிறோம். சங்க காலத்துக்குப் பின் மங்கிக்கிடந்த தொண்டைநாட்டைப் பல வகையில் செப்பம் செய்த அதே வேளையில், அத்திருத்தப் பணிகளுக் கெல்லாம் பல வரிகளையும் இட்டு வசூல் செய்து நாட்டு வளத்தைப் பெருக்கிய பல்லவர் சமுதாயப் பணியை எல்லா வரலாற்றாசிரியர்களும் போற்றுகின்றனர்.

உத்திரமேரூர் ஏரி வற்றியபோது வண்டலை வாரியும், வற்றாதபோதும் படகுகள் கொண்டு வண்டலை வாரியும் அதனைக் கரையில் இட்டுக் கரையைப் பலப்படுத்திய நந்திவர்மன் இன்றைய 'P. W. D.' துறைக்கு வழிகாட்டியாவான் (Historical Sketches of Ancient Dekhan Vol. II P. 14)

இவ்வாறு வளம்படுத்திய பகுதிகளில் சிலவற்றை அக்கால வைதிக நெறிக்கேற்பப் பல்லவ மன்னர்கள் பிரமதேயமாகவும் தேவதானமாகவும் பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் அளித்தனர் எனக் காண்கிறோம். இவர்கள் காட்டிய வழியிலேதான் பிற்காலத்திய சோழர்கள் பெருமளவில் தானங்களைச் செய்து அவற்றை வரியிலா நிலங்களாக்கினர். மக்களினத்துள் வேறுபாடு வளர்க்கும் இந்த முறை, சமுதாய வாழ்வில் காலத்தால் மறைக்கப்படும் என்ற வரலாற்று உண்மைக்கு ஏற்ப இக்காலத்தில் முற்றும் நீக்கப்பெற்று, வேறுபாடற்ற நிலையில் அவை இன்று மக்களிடையில் வழங்கப் பெறுவதைக் காண்கிறோம்.

பல்லவர் காலத்தில் நாணயங்கள் புழக்கத்தில் இருந்தமை அறிகிறோம். அப்படியே அளவைகளுக்கும்—முகத்தல், நிறுத்தல் அளவைகளுக்கும் பல்வேறு வரையறைகள் இருந்தன எனக் காண்கிறோம். இவை யாவும் நாட்டுக்குப் புதியன அல்லவேனும் ஓரளவு இடைக்காலத்தில் சிதைந்த நிலையில் இவர்களால் செப்பம் செய்யப்பெற்றனவெனக் கொள்ளலாம்.

பல்லவர் ஆட்சிமுறையைப் பற்றியும் நீதி வழங்கிய நெறி பற்றியும் நாட்டுப் பிரிவுகளைப் பற்றியும்கூடப் பல அறிஞர்கள், கிடைத்த சான்றுகளைக் கொண்டு நன்கு ஆய்ந்துள்ளனர். அவற்றின்வழிப் பல்லவர் நாட்டைச் செம்மையாகப் பகுத்தும் நேரிய வழியில் நீதி வழங்கியும் மக்கள் வாழ்வின் அடிப்படை உணர்ந்தும் செயலாற்றினர்

கள் என அறிய முடிகிறது. நாட்டைப் பல கோட்டங்களாப் பிரித்துப் பெரும்பாலான அதிகாரங்களை அம்மக்களிடமே விட்ட பெருமை பல்லவர்களுடையதே. இன்றைய மாநிலச் சுயாட்சிக் கோரிக்கையை மறுப்பவர்க்கு இப் பல்லவர் கால ஆட்சி வரலாறு ஒரு சிறந்த பாடமாக அமையும் என நம்புகிறேன்.

வெற்றி பெற்ற பெருமன்னர்கள் தத்தம் பெயரால் மண்டலங்களையும், ஊர்களையும், நாடுகளையும்—ஏன்—ஏரிகளையும் அமைத்தமை எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும். இன்றும் இந்தக் கொடு நோய் ஆள்வார் யாராயினும் அவர்களை விடவில்லை. இடைக் காலத்திலும் பெருமன்னர்கள் ஆகிய இராசேந்திரன் போன்றாரையும் இந்நோய் பற்றியமை அறிகிறோம். ஆயினும் வரலாறு அது தவறு என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இப் பல்லவர் அன்று வைத்த பெயர்கள் எல்லாம் இன்று எங்கே உள்ளன? பல பெயர்களே இன்றி மறைந்தன. சில சிதைந்து நிலைகெட்டன. மாமல்லபுரமும், திரையன் ஏரியும் மகாபலிபுரம் எனவும் தென்னேரி எனவும் வழங்கப்படுதல் இதற்குச் சான்றாகும். அப்படியே நாடுகளுக்கு அவர்கள் வைத்த பெயர்கள் மாறி இயற்பெயர்களே நிலைத்தமை காண்கிறோம். பிற்காலத்தில் புகழுக்காக உண்டான கங்கைகொண்ட சோழபுரம் நிலைகெட, தொண்டால் அமைந்த தஞ்சையும் பெரிய கோயிலும் இன்றளவும் புகழ் பெற்று வாழ்கின்றன அல்லவா? அண்மையில் 'டால்மியாபுரம்' கல்லக்குடியாக மாறிய கதையும், அத்தகையதே. யாரும் தங்கள் பெயரால் எதையும் அமைக்க ஒருப்பட மாட்டார்கள். பேரும் புகழும் பெற்று வரலாற்றில் வாழ்கின்ற அத்தனை பெருமக்களும் தம்மை மறந்து தம் நாமம் கெட்டுப் பணியாற்றியவர்கள் என்பதையும் உணரவேண்டும். இவ்வுணர்வைப் பல்லவர் காலத்திய வரலாறு நமக்கு ஊட்டும் என நம்புகிறேன்.

பல்லவர் மக்கள் வாழ்வின் அடிப்படையான கல்வியை ஓம்பத் தவறவில்லை. 'கல்வியே கரையில்லாத காஞ்சி மாநகர்' என்று அக்காலத்தில் வாழ்ந்த அப்பராலேயே காஞ்சியும் கல்வியும் இணைந்து போற்றப்பட்டமை அறிகிறோம். அக்காலத்திய காஞ்சியில் கற்ற அறிஞர் பலர் வடநாட்டில் நெடுந்தொலைவில் இருந்த நாளந்தாப் பல்கலைக் கழகம் போன்ற இடங்களில் முக்கியப் பொறுப் பேற்றுச் சிறந்த அறிவியல் விற்பன்னர்களாக இருந்ததைக் காண முடிகிறது. மேலும் அக்காலத்தில் காஞ்சிபுரம் வந்த சீன யாத்திரிகராகிய யுவான்—சுவாங் இக் கல்விசேர் காஞ்சியைப் பாராட்டிய நிலையும் எண்ணத்தக்கதாகும். எனவே மக்கள் வாழ்வின் கண் எனப் போற்றும் கல்வியைப் பிற்காலப் பல்லவர் நன்கு போற்றிப் புரந்தனர் என அறியலாம். அப்படியே மக்களை நோயணுகா வகையிலும், அணுகின் தீர்க்கும் நெறியிலும் பல நல்ல ஏற்பாடுகளைச் செய்து மக்கள் நலம் போற்றியும் பல்லவர் திறம்பட ஆண்டனர் எனக் காண்கிறோம்.

இத்துணை வகையில் உள்நாட்டில் அமைதி காத்த அதே வேளையில் புறப்பகைகளுக்கு அஞ்சாது அவர்களைப் புறமுதுகிடச் செய்த பெருமையும் பல்லவரைச் சார்ந்த தாகும். பெருமன்னன் ஆகிய ஹர்ஷனைத் தோற்கடித்த சாளுக்கிய மன்னனாகிய புலிகேசியைத் தோற்கடித்த தோடு, அவன் தலைநகரைக் கைப்பற்றிய பெருமை நரசிம்மவர்மனையும் அவன் படைத்தலைவராகிய பரஞ்சோதியாரையும் சார்ந்ததன்றோ? பல்லவ மன்னருள் போரற்று அமைதியில் வாழ்ந்தவர் ஓரிருவரே உள்ளனர் எனலாம். எனவே அவர்கள் ஆண்ட காலத்தில் எல்லாம் புறப் பகைகளாகிய மாற்றாரைப் புறங் கொடுத்தோடச் செய்ததோடு, நாட்டு அகப் பகைகளாகிய அறியாமை, பிணி, வறுமை முதலியவற்றைப் போக்கிப் பல்லவர் செம்மையை நாட்டில் நிலை நாட்டினர் எனக்

கொள்ளலாம். அதனாலேயே ஆயிரமாயிரம் ஆண்டுகள் கழித்தும் அவர்தம் புகழ் ஓங்கி உயர்கின்றது. தம் ஆணையின் கீழ்ப்பட்ட மக்களின் கருத்தையும் நெறியையும் மொழியையும் பண்பாட்டையும் சமய உணர்வையும் பிற நல்லியல்புகளையும் மதித்துப் போற்றிய பிற்காலப் பல்லவர் தமிழ்நாட்டு வரலாற்றில் என்றென்னும் அழியாத நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்களுக்குமுன் ஆண்ட அவர்கள் முன்னோர் தமிழ் நாட்டில் இருந்துகொண்டே அம் மக்கள் வாழ்வுக்கு ஒவ்வாத பலவற்றைச் செய்துவந்தமையால்தான் அவர் தம் பெயர்களைக்கூட அறிய முடியாத வகையில் மெல்ல மெல்ல மறைந்தனர் — மறைகின்றனர். பல்லவர் வரலாறு கற்றுத் தரும் இந்த நல்ல பாடத்தை அறிந்து செம்மையாக நாடாள்வார் உலகில் நல்ல சிறப்புற்றுக் கால வெள்ளங் கடந்த புகழ் பெற்று வாழ்வார். அல்லாதார்...?

பல்லவ மன்னர் தொட்ட பல பணிகள் இன்றளவும் நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளன. இனியும் தொடர்ந்து நடைபெற வாய்ப்பும் உண்டு. நாடு நாடாக வேண்டுமானால் அதனை நாடாக்கும் பொறுப்பு எக்காலத்தும் ஆள்வோரைச் சார்ந்தது என்பதை உணர்த்தும் வகையில் பல்லவர் ஆட்சி அமைந்திருந்தது. மேலும் தமிழக வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றப்பெறும் பிற்காலச் சோழர் காலத்துக்குப் பல வகைகளில் பல்லவர் காலம் வழிகாட்டியாக அமைந்தது. சங்க காலத்துக்குப் பிறகு உண்டான நினைக்க முடியாத பெருமாற்றத்துக்குப் பிறகு ஏழாம் நூற்றாண்டில் பிற்காலப் பல்லவர் வரலாறு ஆகிய உதய சூரியன் தோன்றியிரா திருந்தால், தமிழக வரலாறு மட்டுமன்றித் தமிழர்தம் வாழ்வு, வளன், பண்பாடு, அனைத்தும் எப்படி எப்படியோ உரு மாறி இருக்கும். பிற்காலப் பல்லவர்

நாட்டு மக்கள் உளமறிந்து, தம்மை உளத்தால் தமிழராக்கிக் கொண்டு, நமது தமிழ் நாட்டுச் சமயம், இலக்கியம், பண்பாடு இவற்றைக் காவாது அவர்தம் முன்னோர் போல வேற்று வழியில் சென்றிருப்பாரே யானால், பிற்காலச் சோழர்தம் எழுச்சிக்கும் அரசுக்கும் இடமே இருந்திருக்க முடியாது. எனவே எங்கோ சென்ற தமிழகத்தை அதன் நேரிய வழியில் திருப்பிய பெருமை பிற்காலப் பல்லவர்களுக்கும் அக்காலத்தில் வாழ்ந்த சமய, இலக்கியப் பேரறிஞர்களாகிய அப்பர், சம்பந்தர் போன்றார்க்கும் உரியதாகும். எனவே இப்பல்லவர் காலம் இத் தமிழக வரலாற்றின் ஒரு திருப்பு மையம் என்று கொள்ளலாம்.

நான் மேலே கூறிய இக்கால வரலாற்றை இந்த நூற்றாண்டின் தொடக்கம் தொடங்கி ஆய்ந்தவர் பலர். இன்று இந்த அரங்கிலேயே பல கோணங்களில் ஆய இருக்கின்ற அறிஞர்கள் பலர். எனவேதான் நான் அக்கால நிலையில் வாழ்ந்த அரசர்களையும் அவர்தம் ஆக்க அழிவுப் பணிகளையும் போர் முறைகளையும் சுட்டிக் காட்டாது, அவர்கள் சமுதாயத்தொடு கொண்ட தொடர்பின் நிலையினையும் அதன் வழி உருவாகிய பணி களையும் என் தலைமை உரையில் சுட்டிக்காட்டினேன். இதில் கூறிய ஒரு சில முடிவுகளை நீங்கள் அப்படியே ஏற்று கொள்ளவேண்டும் என்று நான் கூறமாட்டேன். இவை பற்றிய சிந்தனைகளைக் கிளறவே இவற்றைச் சுட்டிக் காட்டினேன். அறிஞர்கள் மேலும் ஆராய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முடிக்குமுன் இத் தொல்பொருள் ஆய்வுக் குழுவிற்கும் தமிழக அரசுக்கும் சில சொல்ல நினைக்கிறேன். கல் வெட்டுக்கள் பற்றியும் தொல் பொருள் பற்றியும் தமிழகத்தில் போருக்கு முன் நடைபெற்றது போல் மிகுந்த அளவில் தற்போது ஆய்வு நடைபெறவில்லை என

நம்புகிறேன். காரணம் எதுவாயினும் இத்துறையில் கருத்திருத்தாத நிலை வருந்தத்தக்கதே. நல்ல வேளை யாகத் தற்போது பொறுப்பேற்றுள்ள இயக்குநர் இக்குறைகள் இல்லா வகையில் பல துறைகளில் இத்தொல் பொருள் ஆய்வினை மேற்கொள்வதோடு, அவற்றைப் பொது மக்களுக்கு உணர்த்தும் வகையில் நூல்களாகவும், இத்தகைய வகுப்புகள், கருத்தரங்குகள், மாநாடுகள் வாயிலாகவும் விளக்கி வருகின்றனர். இத்துறையில் செய்ய வேண்டுவன பல. புகார் நகரம் இருந்தமையை நிலைநாட்டும் பல உண்மைகள் அகழ் பொருள்கள் வழியே தற்போது காட்டப்பெறுகின்றன. சற்றே ஆழ்ந்து ஆய்வு செய்யும் துறை செயலாற்றின் நாம் கனவாக எண்ணும் எத்தனையோ சங்க கால வாழ்க்கை நிலைகள் உண்மைகளாக்கப் பெறும். மொகன்ஜெதாரோ ஹாரப்பா போன்ற நாகரிகங்கள் பண்டைத் தமிழர் நாகரிகம் அன்று என்பாரும் தென்னிந்திய நாகரிகமே பிற நாகரிகங்களுக்கு அடிப்படை இல்லை என்பாரும் வாய் மூடி மௌனியாகும் வகையில் பலப்பல பழமை பற்றிய புதிய உண்மைகள் வெளியாகலாம். அப்படிக் கால எல்லையில், நம் தமிழகத்தில் உண்டான மாறுதல்களையும் அவற்றின் வழியே கலை, நாகரிகம், பண்பாடு, சமயம், வாழ்வு இவற்றில் ஏற்பட்ட மாறுதல்களையும் திட்டவட்டமாக நிறுவ முடியும். இவற்றைக் கற்பனையாகக் கூறவில்லை. காரண அடிப்படையிலேயே கூறுகிறேன். இவ்வாறு வரலாறு காணாத கால எல்லைக்கு முற்பட்டு—இடை விடப்பட்ட பகுதிகள் இல்லையென்னுமாறு—இன்றுவரை தெளிந்த தமிழக வரலாற்றை உருவாக்க முடியும். அந்த நிலை உருவாயின் உண்மையில் தமிழினம் உலகில் உயர்ந்த நெறிபோற்றிய—ஆக்கத் திறன் படைத்த இனம் என்பதை உலகோர் உணர்வர். தமிழ்நாட்டு வரலாறு பற்றிய பல நூல்கள் தற்போது கிடைக்கவில்லை. அவற்றை மறுபடி அச்சிட்டு உலவவிட வேண்டுவது இத்துறையின் கடமை

யாகும். இந்த ஆக்க நிலைக்கு ஒல்லும் வகையில் செல்லும் வழியெல்லாம் செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசுக்கு ஒரு வார்த்தை. எத்துணையோ திட்டங்களில் எண்ணற்ற கோடி ரூபாய்களைச் செலவிடும் அரசாங்கம் இத்துறையில் கருத்திருத்த வேண்டும். இன்று இந்தியாவிலேயே—ஏன்—உலகிலேயே தமிழினம் தனித்த சிறப்பினை உடையது என்ற பெருமைக்குத் தமிழர்தம், பழையதினும் பழையதாய்ப் புதியதினும் புதியதாய் அமைந்த சமுதாய அடிப்படையே காரணம் ஆகும். இதைக் கொண்டுதான் இன்றும் தமிழ்நாடு மொழி முதலிய வகைகளில் பிற மாநிலங்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. எனவே இவை செம்மையாக்கப்பெற வேண்டுமாயின் இவற்றுக்கு அடிப்படையான தொல்பொருள் ஆய்வில் அதிகக் கருத்திருத்த வேண்டும். இத்துறையை விரிவுபடுத்தி, பல துறைகளில் பல பலப் வகைகளில் ஆய்வினை வளர்த்து உலகுக்கு மறைந்து கிடக்கும் எண்ணற்ற உண்மைகளைப் புலப்படுத்த வேண்டும். நமது ஒருசில இலக்கியங்களைக் கண்டு வியக்கும் உலகம் உண்மையில் நம் பழமை நன்கு விளக்கப்படுமாயின் நம்மை மிகமிகப் பாராட்டும். இந்த அடிப்படையிலேதான் ஆங்கில ஆட்சிக் காலத்தில் பல்வேறு துறைகளில் பணியாற்ற வந்த மேல் நாட்டவர் இத்துறையில் கருத்திருத்தினர். அந்த மேலை நாட்டுப் பெரியவர்தம் உலையா முயற்சி இன்றேல் சிந்துவெளி நாகரிகமும் தென்னிந்திய நாகரிகமும் உலகுக்குத் தெரிய வழியில்லை அல்லவா? இனி இந்தப் பொறுப்பனைத்தும் தமிழக அரசினைச் சார்ந்ததாகும். ஆனால் அதற்கு ஒரு குறுக்கீடு உண்டு. என்ன? இத்துறையின் பெரும் பகுதி மத்திய அரசாங்கத்தில் இருப்பதுதான். அதனாலன்றோ பெரிய கோயில் அமைத்த இராசராசன் உருவச் சிலையைத் தமிழக அரசு விரும்பினும், அவன் அமைத்த அக்கோயிலி

லேயே வைக்க முடியாத சங்கடமான நிலை உண்டா கின்றது. மாநிலசுயாட்சி கோரும் தமிழக அரசு, முதலில் இதில் சுயாட்சி கோரி இத்துறையை முற்றும் தனதாக்கிக் கொள்ளவேண்டும்.

தமிழக அரசின்கீழ் இத்துறை வருவதற்கு அடிப்படை ஒன்று. வரலாற்று அடிப்படைக்குரிய கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயில்களில் உள்ளன. கோயில்களோ மாநில ஆட்சியில் உள்ளன. எனவே அவற்றைப் பற்றி எழும் ஆய்வுகளும் இந்த அரசுக்கே உரிமையாக இருத்தல் தானே முறை. வேண்டுமாயின் இத்துறை வளர மத்திய அரசிடம் மானியம் பெறலாம். இத்துறைக்கெனவே தனி அமைச்சகமும் ஆய்வகமும்கூட அமைக்கலாம். இத்துறை தமிழர் வாழ்வை உலகுக்கு உணர்த்துவது மிகமிக இன்றியமையாதது. இன்றைய தமிழக அரசாங்கமும் இந்த உண்மையை அறியாத அரசாங்கம் அன்று. அறிந்தது என்ற அடிப்படையிலேயே இந்த வேண்டுகோளை அவர்களுக்கு விடுக்கிறேன். எனவே விரைவில் இந்தத் துறையினை மாநில அரசுக்குக் கொண்டுவருவதோடு, இதன் வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்தையும் தளராது செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கோ உழன்று கிடந்த என்னை இத்துறைக்கு வலிய ஈர்த்து, இத்துறையினர் ஆற்றும் பெரும்பணியில் 'அணிலின் பணியாக' என் பணியையும் ஏற்று, எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த தொல்பொருள் ஆய்வுத் துறையினர்க்கும் — சிறப்பாக அதன் இயக்குநர் திரு. நாகசாமி அவர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

# 9. உலகத் தோற்றமும் லெமூரியா நாடும்

மாண்புமிகு மொளரிசியசு நாட்டின் கல்வி அமைச்சர் அவர்களே! மாண்புடை திரு. மகாலிங்கம் அவர்களே! மற்றுமுள்ள பெரியோர்களே! வணக்கம். உலகத்தமிழ் மாநாட்டின் மூன்றாம் நாளாகிய இன்று தொடக்கக் கட்டத்தில் நிற்கின்றோம். 'குமரிக்கண்டம்' பற்றிய ஆய்வு இங்கே நடைபெறவுள்ளது. அக் குமரிக்கண்டத்தின் தோற்ற அழிவுக்கு முன் நம் உலகமும் அண்டகோளமும் அதைச் சுற்றிய பிறவும் அமைந்த நிலையினை இங்கே அறிஞர்தம் கட்டுரைக்குத் தோற்றுவாயாகச் சொல்லலாம் எனக் கருதுகிறேன்.

**' தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு**
**சூழ்கலை வாணர்களும் இவள்**
**என்று பிறந்தவள் என்றுண ராத**
**இயல்பினளாம் எங்கள் தாய் '**

என்று இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பாரதி நம் தாய்நாட்டின் தொன்மையை எண்ணி எக்காளமிட்டுப் பாடுகிறான். ஆம்! இப் பரந்த பாரத நாட்டின் — சிறந்த தமிழ்நாட்டின் தொன்மை அறுதியிடப் பெறாதது. இந்தக் கருத்தினையே ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமான் அழகுறக் காட்டுகின்றார்.

பஞ்சபூதச் சேர்க்கையால் ஆகியது இவ்வுலகம். விண், காற்று, நெருப்பு, நீர், மண் எனும் ஐவகையன்றி வேறெதுவும் உலகில் இல்லை. இவற்றில் ஐந்து பூதமும்

அடங்கியுள்ளன. நீரில் நான்கும் நெருப்பில் மூன்றும் காற்றில் இரண்டும் விண்ணில் ஒன்றும் முறையே அடங்கி உள்ளன. இதையே மாணிக்க வாசகர்,

'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி'

எனப் போற்றித் திருஅகவலில் இறைவன் மேல் ஏற்றிக் கூறுகின்றார். இந்தப் பஞ்ச பூதச்சேர்க்கையாகிய உலகம் என்று தோன்றிற்று என்று கணக்கிட முடியாத வகையினை அப்பரடிகள், அம் மண் (பிருதிவி) தலங்களான திருவாரூரிலும் காஞ்சியிலும் எண்ணிப் பார்க்கிறார். (இன்றும் ஈரிடத்தும் இறைவன் புற்றாகவும் மணல் இலிங்கமாகவும் இருப்பதை யாவரும் அறிவர்) எண்ணம் பாட்டாக வருகின்றது.

'ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவம் ஆன நாளோ
கருவனாய்க் காலனை முன் காய்ந்த நாளோ
காமனையும் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் விண்ணும் மண்ணும் தெரிந்த நாளோ!
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகம்
திருவினான் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாகக் கொண்ட நாளே!'

என்றும்,

"திசையெட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாகக் கொண்ட நாளே"

என்றும் பாடி, அந்த மண்ணும் அதன் மூலமாகிய விண்ணும் தோன்றிய நாள் எண்ணிக் காண முடியாத ஒன்று எனக் குறிக்கின்றார். அப்படியே காஞ்சியில், கச்சி மயானத்தில் நின்று,

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே

என்று 'மைப்படிக் கண்ணாள்' எனத் தொடங்கும் தாண்டகத்தில் ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லா இறை நிலையின் தொன்மையினை எண்ணிப் பாராட்டுகின்றார். எனவே நம் தமிழகமும் அதைச் சார்ந்திருந்த குமரிக் கண்டமும் காலத்தால் அறுதியிட முடியாத மிகப் பழங் காலத்தில் தோன்றின என அறிதல் வேண்டும்.

இந்தப் பஞ்சபூதச் சேர்க்கையினால் உண்டான இயற்கையினை - உலக நிலையினைப் பாரதியார் 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்' என்று பாராட்டு கிறார்.

'சித்தினை அசித்தொடு இணைத்தாய்—அதில் சேரும் ஐம்பூதத்தின் வியன் நிலை அமைத்தாய்; அத்தனை உலகமும் வண்ணக்களஞ்சியம் ஆகப் பலப்பல உலகுகள் அமைத்தாய் என்று ஐம்பூதச் சேர்க்கையாலே — சித்தும் அசித்தும் சேர்ந்ததாலே உண்டான அண்ட கோளத்தினையும் உலகினையும் பாராட்டிப் பாடி, அவற்றைத் தந்த இறைவனை வணங்குகிறார். இதுபற்றி விரிவான விளக்கத்தினை என் 'வையைத் தமிழ்' நூலில் தந்துள்ளேன். (பக் 70—73)

பாரதி விண்ணை வண்ணக் களஞ்சியம் என்கின்றான்; ஆம்! சில சிவப்பு, சில நீலம், சில வெண்மை—சூரியனோ ஏழு நிறம் கொண்டவன்; இப்படி விண்மீன்களும் உலகங்களும் அண்ட கோளத்தில் உலவுகின்றனவே! இத்தகைய வண்ண உலகங்களில் சித்தினை அசித்தொடு இணைத்து—உயிரோடு உடலினை இணைத்து, பல உலகங் களில் வாழ விடுகின்றான். நம் சூரிய மண்டலத்தில் பல கோள்கள்—கோளங்கள். இன்று நாம் கண்டவை ஒன்பதோ பத்தோ! அப்படியே எத்தனையோ சூரியர்கள்!—நாம் கண்டவை, 'துவாத ஆதித்தர்'—பன்னிரண்டு சூரியர்கள்,

இன்னும் ஆராய ஆராய எத்தனை எத்தனை உலகங்களோ நம் ஆய்வில் புலனாகும்!

வள்ளுவர் 'அறிதோறறியாமை கண்டற்றால்' என்று காமத்துப்பாலில் காட்டிய உவமை இந்த ஆய்வு உலகுக்கும் பொருந்தும். நாம் ஐந்து கல் தொலைவினைக் கண்டபோது காணாதது ஐம்பது கல்லாக இருந்தது. ஐம்பதைக் கண்ட பின் காணாதது ஐந்நூறு—ஐந்நூறு கண்ட பின் ஐயாயிரம் — ஐயாயிரம் கண்ட பின் ஐம்பதாயிரம் — ஐம்பதாயிரம் கண்டபின் காணாதது ஐந்து லட்சம் கல் தூரமாக நின்றது. இப்படியே விண்ணொளியினை ஆராய ஆராய அது விரிந்துகொண்டே — அறியாத எல்லை விரிவாகிக்கொண்டே போகிறது. இவை தோன்றிய கால எல்லையும் தெரியாது. அண்மையில் ஓர் அறிவியல் ஆய்வாளர் அண்ட கோள எல்லையினை அடுத்த நூற்றாண்டில் கண்டுவிடலாம் எனச் சில ஆண்டுகளுக்கு முன் எழுதியதைப் படித்தேன். ஆனால், நான் திட்டமாகக் கூறுவேன்—என்றென்றும் அண்ட கோள எல்லையினை மனிதனால் அறுதியிட முடியாது. இது நான் கூறிய கூற்று அன்று; நல்ல பெரியவர்கள் கண்ட முடிவு.

மாணிக்கவாசகர் இந்த அண்டகோளத்தின் ஒரு பகுதியில் அமைந்த உலகங்களை — உருண்டைகளை எண்ணிப் பார்க்கிறார்; அவரால் அளவிட முடியவில்லை. ஓர் உவமையாலே ஓரளவு சுட்டிக்காட்டுகிறார். ஒரு குடிசை—அதில் கூரையில் ஒரு துவாரம்—அதன் வழி சூரியன் ஒளி விழுகிறது. அந்த ஒளிக் கீற்றில் எத்தனை எத்தனையோ தூசுகளைக் காண்கிறோம். அவற்றை எண்ண முடியவில்லை. கண்ணுக்குத் தெரிவன பலகோடி—காணாதன இன்னும் பலப்பல. இதைக்காட்டி இது போன்று அளவிட முடியாத உருண்டைகளை உடையதே அளவிட முடியாத அண்டகோளம் என்கிறார்.

**' அண்டைப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி**

**......................................**

**இல்நுழை கதிரின் துன் அணுப் போல**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன '**

என்பன அவர்தம் திருவண்டப் பகுதியின் அடிகள். எனவே இத்தகைய விரிந்த அண்டப் பகுதியின் ஒரு சிறு துகளே நம் உலகம்—பரந்த கால எல்லையிலே இதன் வாழ்வு ஒரு நொடியே! இந்த உலகத்தில் தான் ஊழி ஊழியாகப் பலப் பல உண்டாக, அவற்றுள் ஒன்றோ சிலவோ அழிய, அழிந்த ஒரு பகுதியே 'குமரிக்கண்டம்' எனப் பெறுகிறது.

இவ்வுலகம் உண்டான கால எல்லையை உணர முடியாது. தற்போது சில ஆய்வாளர்கள் தோற்ற எல்லையை அறுதியிடுகின்றனர். இதில் உயிரினம் தோன்றி அறுபது கோடி வருடங்கள் ஆயின என்கின்றனர். எனவே அதற்கு முன்பல கோடி ஆண்டுகள் இவ்வுலகின் ஆயுளில் கழிந்திருக்க வேண்டுமன்றோ! ஆம்! தோன்றிய நாளில் இருந்ததுபோன்ற உலகில் இன்று நாம் இல்லை. அதில் ஒரு மாற்றமே 'குமரிக் கண்டம்.'

இவ்வுலக வாழ்விலும் அண்ட கோளப் பிறபகுதிகள் வாழ்விலும் ஐம்பூத அடிப்படையில் எண்ணற்ற ஊழிகள் தோன்றியிருக்க வேண்டும். அவற்றால் இடம் மாறிய கோளங்கள் பல — உருமாறிய உருண்டைகள் பல—மறைந்தன பல—சிதைந்தன பல—தோன்றின பல; இப்படி அண்ட கோளத்தின் நிலத்தினை மாற்றிய ஊழிகள்—ஐம்பூத ஊழிகள் பலப்பல. இவற்றை எண்ணிப் பார்த்த பரிபாடல் ஆசிரியர் கீரந்தையார் இவற்றை இறைவன் செயலாகக் காட்டி நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

**' தொல்முறை இயற்கையின் மதியொடு**
**.................மரபிற்றாக**
**பசும் பொன் உலகும் மண்ணும் பாழ்பட**
**விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**

கருவளர் வானத்து இசையில் தோன்றி
உருவ அறிவாரா ஒன்றன் ஊழியும்
முந்து வளி கிளர்ந்த ஊழ் ஊழ் ஊழியும்
செந்தீச்சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத்து ஊழியும்
நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டங் கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோல மொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின், முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா
ஆழி முதல்வ நிற் பேணுதும் தொழுது

(2ஆம் பரிபாடல் — 1. 19)

இதில் ஐவகை ஊழியினைக் காட்டி, அவற்றின் விரைந்த கால எல்லையினைக் காட்டி, அவற்றிற்கெல்லாம் மூல காரணமாய் நின்ற மூர்த்தியினை எண்ண வைக்கிறார் ஆசிரியர். இதில் நெய்தல், கமலம், ஆம்பல், சங்கம், வெள்ளம் என்பன மனிதன் செய்குறிவழிக் கண்டறியாத கால எல்லை — ஒவ்வொன்றும் கோடி கோடி ஆண்டு களுக்கு அப்பாற்பட்டன. எனவே இந்தக் கணக்கிட முடியாத கால எல்லையில் — ஊழிகள் பல கழிய அவற்றில் விடப்பட்ட நிலத்தில்தான் நாம் வாழ்கிறோம். இந்த நிலையில் அண்மையில் மறைந்த பகுதியே 'குமரிக் கண்டம்'.

வடமொழி வாணர்கள் இவற்றைப் பல்வேறு 'மனு அந்தரங்களாக' அறுதியிடுவர். வைவஸ்தம் — மன்மந்தரம் எனப் பலவகையில் கணக்கிடுவார்கள். ஆக ஊழிகள் பல.

இவற்றுள் கடைசிப் பேரூழி 12,000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது என்று இன்றைய ஆய்வாளர்கள் கணக்கிடுகின்றனர். அந்தப் பேரூழியிலும் அதற்கடுத்த சில ஊழிகளிலும் அழிந்ததே குமரிக் கண்டம்!

இந்த உலகில் மனிதன் கடைசியாகத் தோன்றியவன். அதற்கு முன் முதலாவதாக நீரில் உயிர் தோன்றிற்று. அறுபது கோடி ஆண்டுகளுக்கு முன் உயிர் தோன்றி வளர்ந்த வகையில் பல மேலை நாட்டு அறிஞர் இன்று ஆய்ந்துவருகின்றனர். அவ்வுயிர்த்திரள் அணுவுக்குச் சிறியதாய் 'அணுவைச் சத கூறிட்ட கோனி'னும் சிறிதாய்ப் பல கோடி ஆண்டுகள் பரிணாம வளர்ச்சியில் கழிய, பின் நீரில் உயிர் தோன்றிற்று. பின் பல கோடி ஆண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கழிய நீரிலும் நிலத்திலும் ஆமை போன்ற உயிரினம், பின் நிலப்பன்றி, பின் விலங்கும் மனிதனும் கலந்த நரசிம்மன், பின் வஞ்சக மிருக உணர்வோடு கூடிய வாமனன், பின் பழி உணர்வுடைய மனிதன் (பரசுராமன்), பின்நிறைநலமுடைய மனிதனாகிய இராமன் என நின்று, மறுபடியும் இன்றை ஆக்கப்பொருள்களை அழிவுக்குப் பயன்படுத்தும் பரசுராமன் — அவன் இளையவன் கண்ணன் — கடைசியாக பேரூழியில் உலகம் அழியக் காட்டும் கல்கி என இவ்வுயிர்த் தோற்ற வளர்ச்சியை — பரிணாம வளர்ச்சியைத் தசாவதாரமாகக் காட்டுவர் பெரியோர். மாணிக்க வாசகர் இந்த வளர்ச்சியினை,

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான் '

எனக் காட்டுவர். இதில் யாவும் சரியாக இருப்பினும்,

மனிதப் பிறவிக்கு முன் 'கல்' எப்படி அமையும் என்று பல நாள் நான் உண்ணியதுண்டு. இதுபற்றிப் படம் வரைந்து 30 ஆண்டுகளுக்கு முன் நடந்த சென்னைப் பல்கலைக்கழக 125-ஆம் ஆண்டுவிழாவின் கண்காட்சியில் வைத்தேன்.

அனைத்தையும் பார்த்துக்கொண்டு வந்த பேரறிஞர் துணைவேந்தர் ஆ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் இதையும் பார்த்தார். நான் அவரிடம் இந்தக் 'கல்' நிலை பற்றி கேட்டேன். அவர் அது முற்றிலும் உண்மையென்றும் அது பாறைப்படிவமாகிய 'Fossil' என்றும் கூறி என்னை வாழ்த்தினார். (It is perfectly alright; it is the Fossil stage—Said Dr. A. L. Mudaliar) 1985-இல் நியூயார்க் நகரில் உள்ள பெரும் பொருட் காட்சிச் சாலையில் இந்த விளக்கம் அப்படியே விளக்கிக் காட்டப் பெற்றது (ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் பக். 135, 136) கண்டு வியந்து மூன்றாம் நூற்றாண்டிலே இதை உணர்ந்து பாடிய மணிவாசகரைப் போற்றி வணங்கினேன். அண்மையில் வெளிவந்த உருசியா நாட்டு (Russia) அறிஞர் V. P. Alaxeu எழுதி மாஸ்கோ புரோகிரசிவ் பதிப்பகத்தார் வெளியிட்ட 'The origin of the Human race (Traslated into English by H. Campwell geiy Iston) என்ற நூலில் இப் பாறைப் படிவம் பற்றிப் பல பக்கங்கள் விளக்கமாக எழுதி, மனித வாழ்வோடு அதைப் பிணைத்திருக்கிறார். இது பற்றிய அவர் ஆய்வு முப்பது லட்சம் ஆண்டுகள் வரையில் செல்கிறது.

'Fossilised forms of man is oldest ancestors. Human Society is regarded as a definite social and natural state in the development of all matters of Universe, comparable with the preceeding stages of evelution of matter and its form of motion (p. 61) என்பது அவர் கருத்து.

இவ்வாறு பரந்த அண்ட கோளத்தில் அமைந்த ஓர் உருண்டையான நம் உலகம் தோன்றிய நாள்தொட்டு எத்தனை எத்தனையோ மாற்றங்கள் அடைந்துள்ளன. அவற்றுள் ஒன்றே மறைந்த குமரிக்கண்டம். இதோ நாம் கூடியுள்ள இந்த 'மொரிசியசு' தீவினை உள்ளடக்கிய கிழக்கே ஆஸ்திரேலியா தொடங்கி மேற்கே மடகாஸ்கர், தென் ஆப்பிரிக்கா வரையில் பரந்துகிடந்த குமரிக் கண்டத்தைப் பற்றியே இன்று மாண்புமிகு மகாலிங்கம் அவர்கள் வழியே கேட்க இருக்கின்றோம். அந்தப் பழம் பெரு நாட்டின் ஒரு பகுதியாகிய இந்த மண்ணில் நிற்கின்ற பெருமிதத்தோடு எனது தலைமை உரையினை முடித்துக்கொண்டு அவர்களைத் தம் ஆய்வுக் கட்டுரையினைப் படிக்க உங்கள் அனைவர் சார்பிலும் வேண்டிக் கொள்கிறேன்.

(பின் மாண்புமிகு மகாலிங்கம் அவர்கள் குமரிக் கண்டம் பற்றிய விரிவான ஆங்கிலக் கட்டுரையினைப் படித்து முடித்தார்கள்.)

முடிவாக அவர்கள் கருத்தினை ஒட்டி இரண்டொன்று சொல்லி அமைகின்றேன். குமரி அழிவு பற்றிச் சிலம்பின் அடிகளைக் காட்டினார்கள்.

**'வடிவே லெறிந்த வான்பகை பொறாது**
**பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கை இமயமும் கொண்டு**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி !**

என்ற மதுரைக் காண்டத் தொடக்க அடிகளைச் சுட்டிக் காட்டினார்கள். இது பொய்யாக இருக்குமோ எனச் சிலர் ஐயுறலாம். ஆயினும் இளங்கோவடிகள் பொய் சொல்லவில்லை என்பது என் கருத்து. இதே தலைப்பில் இவ்வடிகளுக்கு முன் வந்தசில அடிகளில்—புகார்க் காண்ட இறுதி அடிகளில் 'இளங்கோ' கூறியுள்ள 'முறஞ்

செவிவ்வாரணம் முன் சமம் முறுக்கிய புறஞ்சிறை வாரணம்' என்னும் பகுதி முற்றிலும் உண்மை என்பதை விளக்கியே 'இளங்கோவடிகள் பொய் சொல்லவில்லை' என்ற கட்டுரையை அன்றைய நாளிதழ் ஒன்றில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நான் வெளியிட்டேன்.

'யானையைக் கோழி வெல்லுமோ' என்பதே கேள்வி. வென்றது 'என்பதே முடிவு. அந்த நாளில் நாளிதழில் திட்ட வட்டமாக வெளிவந்த செய்தியே இது. 'செக்' நாட்டிற்கு இந்தியாவில் இருந்து ஒரு விமானத்தில் யானையை ஏற்றிச் சென்றனர். விண்ணில் பறந்து போது, யானை மதம் பிடித்து அங்கும் இங்கும் அசைய விமானமே நிலைகுலையும் நிலை ஏற்பட்டது. அப்போது பக்கத்தில் இருந்த கூடையிலிருந்து வெளிவந்த ஒரு சேவல் பறந்து யானையின் மத்தகத்தில் உட்கார்ந்தது. உடனே யானை அடங்கி நின்றது. அனைவரும் அதிசயித்தனர். பின் சேவலை அகற்ற மறுபடியும் யானை மதத்துடன் ஆடிற்று. மறுபடி சேவலை ஏற்ற அது அடங்கிற்று' இது பொய் அன்று. அவ் விமான எண், நாள், செல்லுமிடம் அனைத்தும் நாளிதழில் (இந்து என எண்ணுகிறேன்) வந்தன. இது பற்றிய என் கட்டுரையும் என் தொகுப்பு நூல் ஒன்றில் உள்ளது. அதில் பத்திரிகையின் பெயர்—நாள் அனைத்தும் உள்ளன. வேண்டுபவருக்கு அதன் படி அனுப்பவேன்.

எனவே இளங்கோவடிகள் கூற்றும் நில ஆய்வாளர் முடிவும் குமரிக்கண்டம் இருந்தது என்பதையும் அது ஒன்றுக்கு மேற்பட்ட கடல் கோள்களால் அழிவுற்றது என்பதையும் நிலை நாட்டுகின்றன. அண்மையில் உரிமை பெற்ற இச்ரவேல் நாடு இயேசுவின் வாழ்வினை ஒட்டிய பல இடங்களை ஆராய முற்பட்டுப் பலவற்றைக் கண்டுள்ளது. நம் நாடும் அந்த வகையில் குமரிக்கண்டத்தைப் பற்றி அகழ்வாய்வு செய்யின் நிச்சயம் உடன் பலன் கிட்டும். செய்வார்களா? குமரிக்கண்டம் பற்றியும் அதுபற்றிய பல

விளக்கங்களையும் அறிஞர் பலர் காட்டியுள்ளனர். உலக நாடுகள் பலவற்றிலிருந்து இங்கே கூடியுள்ள பேரறிஞர்களாகிய நீங்கள் அனைவரும் தத்தம் நாடு சென்றபின் பல்வேறு வகைகளில் ஆராய்ந்து இதன் உண்மை விளக்கங்களையும், அதன் பங்காக இருந்து இன்று வாழும் தமிழகத்தின் தனிச் சிறப்பினையும் கணித்து, வடித்து அடுத்த மாநாட்டில் கொண்டுவந்து தெளிய வைக்க வேண்டுமெனக் கேட்டு, அனைவரையும் வணங்கி விடை பெறுகின்றேன்.

*வாழ்க தமிழ்; வளர்க தமிழினம்!*

## எனது வேட்கை

முன்னொரு நாள் உலகமெலம் முகிழ்த்து நின்ற
மொழியென்று வல்லுநர்கள் மொழியும் செல்வி
உன்மைந்தர் இன்றிங்கே நின்றே போற்ற
உயர்வழியே தனைக்காண உழைப்போம் அன்னாய்
பொன் பெற்று நின்றாலும் அன்றி மற்றிப்
புவியாவும் உடன் சேர்ந்து புரண்டிட் டாலும்
என் பெற்ற தமிழ்த்தாயே உன்னைப் போற்றி
இன்பநிலை தனை அடைய எண்ணினேனே. (1)

மூவுலகும் சன்மானம் எனவே ஈந்து
முதலான பெரும் பதவி முன்னின் றாலும்
காவலனாய் நின்றிடவே கணித்திட் டாலும்
கற்பகக்கோன் தன்பதமே தந்திட்டாலும்
யாவுலகும் என் அடிக் கீழ் நின்றிட் டாலும்
இவையெல்லாம் எண்ணாது எந்தாய் உன்றன்
பூமலராம் தமிழ்ப்பாதம் போற்றல் செய்யும்
பொற்றொழிலே நற்றொழிலாய்ப் போற்று வேனே. (2)

சங்கமிருந் தாராய்ந்து புலவ ரெல்லாம்
தாயேநின் பெரும் புகழைத் தரணிக் கீந்தார்
பொங்குபெரு வங்க மிசை போகி அந்நாள்
பொருள் வளர்த்த வணிகருமே பொருளாக் கொண்டார்
எங்குமுன தின்மொழிலே இனிமை யாக
இயைந்திருந்த அந்நாளே யாக இந்நாள்
மங்களமாய்க் கண்டுதமிழ் வாழ்வு போற்றி
மண்மீதில் வாழ்கின்றேன் மகிழ்வாய் அன்னாய்! (3)

கண்டனைய தமிழ் மொழியே எங்கும் ஓங்கிக்
கருத்துடைய உலகமொழி யாக நிற்கக்
கொண்டஒரு வேட்கைதனை முடிப்ப தல்லால்
குறைஒன்றும் எங்களுக்கு இல்லை அன்னாய்!
வண்டிசையில் தீங்குழலில் மகிழ்வில் இன்பில்
மலர்பொருளில் உட்பொருளாய் மன்னி நின்றாய்!
அண்டிடுவோர் இன்பநலம் பெறுவ தன்றி
அருகிருப்போர் அவருடனே அன்பு சேர்வர்! (4)

உன்வளர்ச்சி உன்னுவதே என்றன் இன்பம்;
உன்புகழைப் பாடுவதே என்றன் வேட்கை;
மன்னவரும் அடிபடிந்து போற்றச் செய்து
மன்னுலகில் உன் பெருமை நிலவ வைப்போம்;
உன்இனிமை கேட்பதுவே உவகை எந்தாய்
உயர்விதன்மேல் உண்டேயோ? உலகையெல்லாம்
உன்தமிழாய் ஆக்குமொரு நன்னாள் இங்கே
உற்றிடுதல் காணுவதே உளத்து வேட்கை! (5)

*(1939-இல் தமிழ்க் கலையில் வந்தது)*

## அ. மு. ப. அவர்களின் 90 நூல்களில்

### தற்போது கிடைப்பவை

| | | |
|---|---|---|
| கொய்த மலர்கள் | 8 | 00 |
| தொழில் வளம் | 15 | 00 |
| எல்லோரும் வாழவேண்டும் | 7 | 00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | 10 | 00 |
| மலைவாழ் மக்கள் மாண்பு | 16 | 00 |
| பல்கலைக்கழகச் சொற்பொழிவுகள் | 20 | 00 |
| வையைத் தமிழ் | 8 | 00 |
| கங்கை கரையில் காவிரித் தமிழ் | 10 | 00 |

### புதியவை

| | | |
|---|---|---|
| ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் | 36 | 00 |
| திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் | 12 | 00 |
| வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும் | 20 | 00 |
| தமிழர் வாழ்வு | 16 | 00 |
| ஓங்குக உலகம் | 16 | 00 |
| கவிதையும் வாழ்க்கையும் (மறுபதிப்பு) | 20 | 00 |
| வரலாற்று புதையல் | 4 | 00 |

### ஆங்கில நூல்கள்

| | | |
|---|---|---|
| Ancient Temples of Tamil Nadu | 30 | 00 |
| Historical Studies of Thevaram | 12 | 00 |